2885

॥ श्रीः ॥

श्रीमते रामानुजाय नमः ॥

श्रीमत्कृष्णसूरये नमः ॥

பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திமாலா மலர் 7

பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை

அருளிச்செய்த

திருவாசிரியம்

பெரிய திருவந்தாதி

வ்யாக்யானங்கள்.

—:[ப்ரமாணத்திரட்டுடன் கூடியது.]:—

[பதவுரையுடனும் அரும்பதவுரையுடனும் கூடியது.]

—:**:—

பதிப்பாசிரியர்:—

K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

—:**:—

விலை ரூ: 1—10—0

தபால் கூலி (புக்-போஸ்ட் மூலம்) அணா 2.

2885

RAJA SERFOJI'S S... RECEIVED 8 - AUG 19.. THE TANJORE

॥ श्रीः ॥

श्रीमते रामानुजाय नमः ॥

श्रीमत्कृष्णसूरये नमः ॥

பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திமாலா மலர் 7

பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை

அருளிச்செய்த

திருவாசிரியம்

பெரிய திருவந்தாதி

வ்யாக்யானங்கள்.

—:[ப்ரமாணத்திரட்டுடன் கூடியது.]:—

[பதவுரையுடனும் அரும்பதவுரையுடனும் கூடியது.]

—:*:*:—

பதிப்பாசிரியர்:—

K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

—:*:*:—

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர், திருச்சி.

விலை ரூ. 1—10—0

தபால் கூலி (புக்-போஸ்ட் மூலம்) அணா 2.

நம்மாழ்வார் திருநக்ஷத்திரத் தனியன்

वृषमे तु विशाखायां कुरुकापुरिकारिजम् ।
पाण्ड्यदेशे कलेरादौ शठारिं सैन्यपं भजे ॥

வ்ருஷபே து விஶாகாயாம் குருகாபுரிகாரிஜம் ।
பாண்ட்யதேஶே கலேராதௌ ஶடாரிம் ஸைந்யபம் பஜே ॥

நம்மாழ்வார் வாழித்திருநாமம்

ஆனதிருவிருத்தநூறருளினான் வாழியே
ஆசிரியமேழுபாட்டளித்தபிரான் வாழியே
ஈனமிலந்தாதியெண்பத்தேழீந்தான் வாழியே
இசைகொள் மறையாயிரநூற்றிரண்டுரைத்தான் வாழியே
வானணியும் புகழ்மிக்க நாவீறன் வாழியே
வைகாசிவிசாகத்தில் வுந்துதித்தான் வாழியே
சேனையர்கோன் அவதாரம் செய்தவள்ளல் வாழியே
திருக்குருகைச்சடகோபன் திருவடிகள் வாழியே.

மேதினியில் வைகாசி விசாகத்தோன் வாழியே
வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தோன் வாழியே
ஆதிகுருவாய்ப் புவியிலவதரித்தோன் வாழியே
அனவரதஞ்சேனையர்கோன் அடிபணிவோன் வாழியே
நாதனுக்கு நாலாயிரமளித்தான் வாழியே
நம்மதுரகவிவணங்கு நாவீறன் வாழியே
மாதவன் பொற்பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே
மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே.

பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்திரத் தனியன்.

सकलद्राविडाम्नायसारव्याख्यानकारिणम् ।
श्रावणे रोहिणीजातं कृष्णसंज्ञमहं भजे ॥

ஸகலத்ராவிடாம்நாயஸாரவ்யாக்யாநகாரிணம் ।
ஶ்ராவணே ரோஹிணீஜாதம் க்ருஷ்ணஸம்ஜ்ஞமஹம் பஜே ॥

வாழித்திருநாமம்.

தண்மை சிங்கம் ரோகிணி நாள் தழைக்கவந்தோன் வாழியே
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே
புன்மை தவிர் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே
பூதூர் எதிராசர்தாள் புகழுமவன் வாழியே
மன்புகழ் சேர் சடகோபர் வளமுரைப்போன் வாழியே
மறை நாலின் பொருள்தன்னைப்பகுத்துரைத்தான் வாழியே
அன்புடன் உலகாரியர்தம் அடியிணையோன் வாழியே
அபயப்ரதராஜர் தாள் அனவரதம் வாழியே.

K7
MAHARAJAH SERFOGI'S SARAS... THE T... TANJORE
2885

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் க்ருஷ்ணஸமாஶ்ரயே நம:

முகவுரை

" நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்—அன்புடைய
சாற்று திருநாமங்கள்" என்றார் மாமுனிகள் உபதேசரத்தினமாலையில்.

பெரிய பெருமாள் பொங்கும் பரிவாலே பராங்குசனை நம்மாழ்வார் என்றே எப்போதும் அழைப்பர். திருவத்யயநோத்ஸவத்துக்கு வரும்படி ஆழ்வாருக்குத் திருமுகம் அனுப்பும் போதும் 'நம்மாழ்வார்' என்ற திருநாமமிட்டே அனுப்புவர். ஒரு சமயம் அர்ச்சையிலெழுந்தருளியிருக்கும் பெருமாளும் ஆழ்வாரும் யாதருச்சிகமாக ஓரிடத்தில் சந்தித்தபோது "நம்முடைய ஆழ்வார்! நம்மருகே வாரும்" என்று தம்முடைய திவ்யஸிம்ஹாஸனத்திலே வைத்துக்கொண்டு முத்தின் சட்டையும் வட்டப்பணை முதலான வரிசைகளையும் ப்ரஸாதித்துத் தம்மையே ஒக்க அருள்செய்தார் என்கிற ஐதிஹ்யமும் உண்டு. "நஞ்சடகோபனைப் பாடினையோ என்று நம்பெருமாள் விஞ்சிய வாதரத்தால் கேட்ப" என்று கம்பநாட்டாழ்வார் பாடியிருக்கிறார். நாதமுனிகளும், அவரை யோகத்தினால் ஸாக்ஷாத்கரித்து, த்வயம் முதலாகத் திருவாய்மொழியீறாகவுள்ளவற்றை உபதேசம் பெற்றதினால் நம் ஆழ்வார் என்று அபிமானித்தார். ஆளவந்தாரும் "ந: குலபதே:" [நம்முடைய குலபதியினுடைய] என்று அருளிச்செய்தார். இவைகளினால் இவருக்கு ப்ரபந்நஜநகூடஸ்தர் என்னும் திருநாமமும் வழங்கிவருகிறது. கொள்வாருமுண்டோ என்று படுகாடுகிடக்கும் க்ருபாதிக்யத்தை உடையவன் கோயிலரங்கன். "பாடினான் அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்கிறபடி அருள்மாரியாக அருளிச்செயலமுதத்தைப் பொழிந்தவன் அருள்மாறன். "படைத்தான் கவி" என்று தம்மைத்தாமே பேசிக்கொண்டார் திருவாய்மொழியில். திருவிருத்தத்தில் "திருமாலவன் கவி" என்று தம் பிரபந்தத்தின் பெருமையையும் பாடினார்.

" நமோ வாசே யா சோதிதா யாச அநுதிதா (अनुदिता) தஸ்யை வாசே" என்று வேதபுருஷன், உதித்த வேதத்துக்கும், உதிக்கப்போகிற வேதத்துக்கும் நமஸ்காரம் செய்தார். தமிழ் மறை உதிக்கப்போவதைப் பண்டைமறை இப்படிப் பேசிற்று. ஸம்ஸ்க்ருதவேதமோ

தான்தோன்றி. அடியற்றிருக்குமதே அதன் ஏற்றம். தான்தோன்றியாக இராமல் நம்மாழ்வாரால் நான்கு பிரபந்தங்களாக அருளிச்செய்யப்பட்ட ஏற்றம் தமிழ் மறைக்குண்டு. "வேதம் தமிழ் செய்த மாறன்" என்றும், "ஸடாரே: உபநிஷதாமுபகாநமாத்ரபோக:" என்றும் நாதமுனிகளும், "யம் ஸம்ஸ்க்ருதத்ராவிடவேதஸூக்தை:" என்னும் பட்டரும் இவை தமிழ்மறைகள் என்பதை அருளிச் செய்திருக்கிறார்கள். ஆசாரியர்கள் இதற்கு அபௌருஷேயத்வமும் உண்டென்று அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். ஆழ்வார் மூலமாக இந்நான்கு பிரபந்தங்களும் உலகிற்கு வெளியிடப்பட்ட படியால் "குருகூர்ச் சடகோபன் பண்ணிய" என்று சொல்லத்தட்டில்லை. பண்டை வேதத்தைச் சிலரே அதிகரிக்கலாம். ஆழ்வார் அருளிச் செயல்களுக்கு ஆகாதாரில்லை. ஸமஸ்க்ருத வேதம் கல்லும் மண்ணும் கலந்த கட்டிப் பொன் போன்றது. இத்தமிழ்வேதம் பணிப்பொன் போன்றது. பண்டை மறையில், அந்தந்த அதிகாரிகளுக்குத் தகுந்தபடி ச்யேநயாகாதிகள், தேவதாந்தர ஸ்தோத்ரங்கள் முதலானவையும் இங்குமங்கும் காணப்படும். இப்பிரபந்தங்களிலோ பரப்ரஹ்மஸப்த வாச்யனான ஸ்ரிய: பதியின் ஸ்வரூப ரூபகுணங்களைப் பேசும் பேரின்பம் விளைக்கும் பாசுரங்களே நிறைந்திருக்கும். மறந்தும் புறந்தொழா மாந்தர்கள் மனத்திற்குகந்ததான பரதத்வ நிர்ணயத்தைப் பராங்குசன் "ஒ ஓ உலகினதியல்வே" முதலான பல பாசுரங்களில் பண்ணியிருக்கிறார். இக்காரணங்களால் இவருடைய பிரபந்தங்களே சுடர் மிகு சுருதி என்று ஆசாரியர்கள் அறுதியிட்டிருக்கிறார்கள்.

திருவாசிரியம் யஜுர்வேதஸாரம் என்றும், பெரிய திருவந்தாதி அதர்வணவேதஸாரம் என்றும் பெரியோர்களால் பேசப்படுகிறது. இவ்விரு பிரபந்தங்களுக்கும் பெரியவாச்சான்பிள்ளையொருவரே வியாக்கியானம் செய்தருளியிருக்கிறார். அவருடைய வாசாமகோசரமான பெருமைகளில் சிறிது நம்மால் பலவிடங்களில் உணர்த்தப்பட்டது. "உண்டோ வைகாசி விசாகத்துக் கொப்பொரு நாள்" எனப்பட்ட ஆழ்வார் திருநக்ஷத்ர தினத்தன்று இவ்விரு பிரபந்தங்களும் வெளியானது ஆழ்வாருடைய க்ருபாபலமேயாகும்.

பராங்குச திருவவதாரஹூ 5058

கர வருஷம் — இங்ஙனம்,

வைகாசி விசாகம். — தொண்டரடிப்பொடி

கி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

திருவாசிரியத்தனியன் வ்யாக்யாநம்.

———:(-):———

அருளாளப்பெருமாளெம்பெருமானாருளிச்செய்த

தனியன்.

காசினியோர் தாழ்வாழக் கலியுகத்தே வந்துதித்து,
ஆசிரியப்பா வதனலரு மறைநூல் விரித்தானைத்,
தேசிகனைப் பராங்குசனைத் திகழ்வகுளத் தாரானை,
மாசடையா மனத்துவைத்து மறவாமல் வாழ்த்துதுமே.

பதவுரை:—காசினியோர் தாம்—இப்பூமியிலுள்ள மனுஷ்யர்கள், வாழ—உய்யும்பொருட்டு, கலியுகத்தே—கலியுகத்தில், வந்து—(பரமபதத்தில் நின்றும்) வந்து, உதித்து—அவதரித்து, ஆசிரியப்பா அதனல்—ஆசிரியப்பா என்னும் பாட்டுக்களாலே, அரு மறை நூல்—சிறந்த வேதமாகிற சாஸ்த்ரத்தை, விரித்தானை—பரப்பியவரும், தேசிகனை—(எல்லாருக்கும்) ஆசார்யரும், திகழ் வகுளத்தாரானை—விளங்காநின்றுள்ள மகிழம்பூமாலையை அணிந்தவருமான, பராங்குசனை—நம்மாழ்வாரை, மாசு அடையா—அழுக்கற்ற, மனத்து வைத்து—மனஸ்ஸிலே வீற்றிருக்கச் செய்து, மறவாமல்—மறவாதபடி, வாழ்த்துதுமே—மங்களாசாஸநம் பண்ணக்கடவோம்.

அவதாரிகை:—(காசினியோர் தாம்வாழ) திருவாசிரியமாகிற திவ்யப்ரபந்ததர்சியாய், தேசிகராயிருக்கிறவரை நிர்மலமான ஹ்ருதயத்திலே வைத்து விஸ்ம்ருதியின்றிக்கே நிரந்தர மங்களாசாஸநம் பண்ணுங்கோளென்கிறது.

வ்யாக்யாநம்:—(காசினியோர் தாம்வாழ) கண்டதுக்கு மேல் ஒன்றறியாத பூமியிலுண்டான மனுஷ்யர் ஜீவிக்க. (கலியுகத்தேவந்துதித்து) (1) "कलौ पुनः पापरताभिभूते-भक्तात्मना- स उद्बभूव" (கலௌ புந: பாபரதாபிபூதே - பக்தாத்மநா - ஸ உத்பபூவ) என்கிறபடியே ஜ்ஞானத்துக்கு அடைவில்லாத கலிகாலத்திலே யுகவர்ணக்ரமாவதாரமென்னலாம்படி ஆழ்வாரவதரித்தருளினாராயிற்று. (வந்துதித்து) லோகாந்தரத்தில் நின்றும் இங்கே வந்துதித்தாரென்னுமது தோற்றுகிறது.

* "முன்னே வந்துதித்து" என்னுமாபோலே. † வகுளபூஷண பாஸ்கரோதயமிறே. மேலே "வகுளத்தாரானை" என்றிறே இருக்கிறது.

அவதரித்துச்செய்த கார்யமின்னதென்கிறது மேல் (ஆசிரியப் பாவதனாலருமறைநூல் விரித்தானை) என்று. தமிழுக்கு அநேகம் பாக்கள் உண்டாயிருக்கவும் ஆசிரியப்பாவாலேயாயிற்று திருவாசிரியம் செய்தருளினது. அருமறைநூல் விரிக்கையாவது:- அரிய வேத மாகிற சாஸ்த்ரத்தை விஸ்த்ருதமாக்கி அதுவே நிரூபகமாம்படியானவரை. அருமறை நூலை ‡ வண்டமிழ் நூலாக்கினவரை. (தேசிகனைப் பராங்குசனை) வேதார்த்த தர்சியான பராங்குச தேசிகரை. (திகழ்வகுளத்தாரானை) விளங்காநின்ற திருமகிழ்மாலையைத் திருமார்பிலேயுடையவரை. "தண்டுளவத்தாரானை" என்னுமாபோலே. "தாமம்துளவோவகுளமோ" என்னக்கடவதிறே. (மாசடையா மனத்துவைத்து) § "மாசற்றார் மனத்துளானை" என்றும், || "தெளிந்தவென் சிந்தையகங்கழியாமே" என்றும், நிர்மலமான மனஸ்ஸிலே வைத்து. "வண்குருகைக் கோனும் நம்முடை குடிவீற்றிருந்தார்" என்னும்படி ஸஹ்ருதயமாக வைத்து. பரமஹம்ஸராகையாலே மாநஸபத்மாஸநத்தேயிறே இருப்பது. (வகுளத்தாரானை மாசடையா மனத்துவைத்து) ○ "நாட்கமழ் மகிழ்மாலை மார்வினன் மாறன் சடகோபன்" என்னுப்படியான ஆழ்வாரை. ● "சடகோபனைச் சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் பெரியவர் சீர்" என்னும்படி ஸ்ரீபாஸ்ரயமாக பாவித்து பக்திபண்ணி வைத்து.

(மறவாமல்வாழ்த்துதுமே) விஸ்ம்ருதியின்றிக்கே இவ்விருப்புக்கு மங்களாசாஸநம் பண்ணுவோம். அவரும். [] "ஊழிதோறூழி யோவாது வாழியவென்றுயாம் தொழவிசையுங்கொல்" என்னுரிறே.

இத்தால்:—ஆழ்வார் திவ்யமங்களவிக்ரஹமே ஸ்ரீபாஸ்ரயமென்னுமத்தையும், மங்களாசாஸந விஷயமென்னுமத்தையும் சொல்லிற்றாயிற்று.

திருவாசிரியத் தனியன் வ்யாக்யாநம் முற்றிற்று.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

---

* உபதேசரத்-7. † சடகோபாஷ்டகம்-4. ‡ திருவாய் (4-5-10). § திருமாலை-22. || திருவாய் (9-2-4). ○ திருவாய் (4-10-11). ● இராமாநுஜநூ-18. [] திருவாசிரி-4.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த

திருவாசிரியவ்யாக்யாநம்.

அவதாரிகை.

திருவிருத்தத்தில், ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபரூப குணவிபூதிகளைக் காட்டிக் கொடுக்கக்கண்டு அவனுடைய நித்யவிபூதியோகத்தையும் லீலாவிபூதியோகத்தையும் அநுஸந்தித்து, நித்யவிபூதியிலுள்ளார் நிரதிசயாநுபவமே யாத்ரையிருக்கிறபடியையும், அதுண்டறுக்கைக்கீடான ஆரோக்யத்தையுடையராயிருக்கிறபடியையும், இவ்வருகுள்ளார் கர்மபரதந்த்ரராய், இதர விஷயங்களிலே ப்ரவணராய், தண்ணிதான தேஹயாத்ரையே போகமாயிருக்கிறபடியையும் அநுஸந்தித்து, ப்ராதாக்களிலே சிலர் ஜீவிக்க ஒருவன் குறைய ஜீவிக்கப்புக்கால் தன் குறையை யநுஸந்தித்து வெறுக்குமாபோலே, ஸர்வேச்வரனோடே நித்யாநுபவம் பண்ணுகிறவர்களோடொக்கத் தமக்கு ப்ராப்தி யுண்டாயிருக்கச் செய்தேயும் தாமத்தை இழந்திருக்கிறபடியை அநுஸந்தித்து, "இதுக்கடி தேஹஸம்பந்தம்" என்று பார்த்து, இத்தைக்கழித்துக்கொள்ளலாம் வழி தப்பக்கலிலொன்றுங் காணாமையாலே "இந்த ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினோட்டை ஸம்பந்தத்தை யறுத்துத் தரவேணும்" என்று அவன் திருவடிகளிலே தம்முடைய தசையை விண்ணப்பம் செய்தார். இது பின்னை முதற்பாட்டுக்குக் கருத்தன்றோ வென்னில், முதலிலேயும் இப்பாசுரத்தை யருளிச்செய்து, முடிவிலேயும் * "அழுந்தார் பிறப்பாம் பொல்லாவருவினை" என்று உபக்ரமோபஸம்ஹாரங்கள் ஏகரூபமாயிருக்கையாலே இப்ரபந்தத்திற்குத் தாத்பர்யமுமதுவே. தாம் நினைத்த போதே தம்முடைய அபேக்ஷிதம் கிடையாமையாலே பிறந்த ஆற்

---

* திருவிருத்தம்-100

ருமையை ஆவிஷ்கரித்தபடி நடுவில் பாட்டுக்களடைய. ஸர்வேஸ்வரனுக்கு இவரபேக்ஷிதம் சடக்கெனச்செய்யப்போகாது; அதுக்கடி:- ஶரதல்பத்திலேகிடந்த ஸ்ரீபீஷ்மரைக்கொண்டு நாட்டுக்குச்சிறிது வெளிச்சிறப்பைப்பண்ணிக் கொடுத்தாற்போலே, இவரையிடுவித்துச்சில ப்ரபந்தங்களை ப்ரவர்த்திப்பித்து ஸம்ஸாரத்தைத் திருத்த நினைத்தவனுகையாலே. இங்கே வைக்கலாம்படியல்ல இவருடைய த்வரை. “இவர் தாம் நிர்ப்பந்தம் பண்ணுகிறதும் அவ்வருகே போய் நம்முடைய குணானுபவம் பண்ணுகைக்காகவிறே; இவை தன்னையநுபவிப்பிப்போம்” என்று பார்த்துத் தன்னுடைய ஸ்வரூப ரூபகுணவிபூதிகளைக் காட்டிக்கொடுக்க, தேஹத்தினுடைய தண்மையை யநுஸந்திப்பதற்கு முன்பு காட்டிக்கொடுத்தது இவையேயாகிலும் “அவ்வருகேபோய் அநுபவிப்பதுமோரநுபவமுண்டு” என்று தோற்றுதபடி ஒரு வைசத்யத்தைப் பிறப்பிக்க, அவற்றிலே அங்யபரராய் அநுபவிக்கிறார். ஸ்வரூபரூப குணங்களென்றிறே அடைவு; ஸ்வரூபத்தைவிட்டு ரூபத்திலே இழிந்து அநுபவிக்கவேணுமென்கிறாராயிற்று. தான் துவக்குண்டிருப்பதும் இதிலேயாகையாலே. இனி இவ்வஸ்து தான் நேர்கொடுநேரே அநுவவிக்கவொண்ணாதபடி முகத்திலே அலையெறிகையாலே கிண்ணகத்திலிழிவார் மிதப்புக்கொண்டிழியுமாபோலே “உபமாந முகத்தாலே யிழிந்து அநுபவிக்கவேணும்” என்று பார்த்தார். ஸர்வதாஸாம்யமில்லாதொரு வஸ்துவாகையாலே பகவத் விஷயத்துக்குபமாநமாகச் சொல்லலாவது தானில்லை; ஆனாலும் அல்பஸாத்ருஶ்யமுள்ளதொன்றைப்பற்றி யிழியவேணுமிறே. ஒருமரகதகிரியையாயிற்று உபமாநமாகச் சொல்லுகிறது. அதின் பக்கல் நேர்கொடுநேர்கொள்ளலாவதொன்றில்லாமையாலே அது தன்னை சிக்ஷித்துக்கொண்டு இழிகிறார். ஸ்வரூபத்தை விட்டு ரூபத்தைப்பற்றினவோபாதி ரூபந்தன்னையும் விட்டு உபமாநத்திலே இழிந்து அது தனக்கொப்பனை தேடியெடுத்துப் பேசுகிறார்.

1\. செக்கர்மா முகிலுடுத்து மிக்க செஞ்சுடர்ப்
பரிதிசூடி, அஞ்சுடர்மதியம் பூண்டு,
பலசுடர் புனைந்த பவளச்செவ்வாய்,
திகழ்பசுஞ் சோதிமரதகக்குன்றம்,
கடலோன் கைமிசைக் கண்வளர்வதுபோல்,

பீதகவாடைமுடி பூண்முதலா,
மேதகுபல் கலனணிந்து, சோதி
வாயவுங் கண்ணவுஞ் சிவப்ப, மீதிட்டுப்
பச்சைமேனி மிகப்பகைப்ப,
நச்சுவினைக் கவர்தலை யரவினமளியேறி,
எறிகடல் நடுவு ளறிதுயிலமர்ந்து,
சிவனயனிந்திர னிவர்முதலனைத்தோர்,
தெய்வக்குழாங்கள் கைதொழக்கிடந்த,
தாமரையுந்தித் தனிப்பெருநாயக,
மூவுலகளந்த சேவடியோயே.

பதவுரை:—சேக்கர் மா முகில் உடுத்து—சிவந்த பெரிய மேகத்தை அரையிலே கட்டி, மிக்க செம் சுடர்—மிகவும் சிவந்த கிரணங்களையுடைய, பரிதி சூடி—ஸூர்யனை சிரஸ்ஸிலே தரித்து, அம் சுடர்—அழகிய(குளிர்ந்த) கிரணங்களையுடைய, மதியம் பூண்டு—சந்திரனை அணிந்து, பல சுடர்—(நக்ஷத்திரங்களாகிற) அநேக தேஜஸ்ஸுக்களை, புனைந்த—தரித்துள்ளதாய் பவளம் செம் வாய்—பவளம்போன்ற சிவந்த இடங்களையுடையதாய், திகழ் பசும் சோதி—விளங்கும்படியான பச்சை நிறத்தையுடையதான, மரதக குன்றம்—மரதகமலையானது, கடலோன் கை மிசை—கடலுக்கதிபனான வருணனுடைய(திரைகளாகிற) கையின் மேலே, கண் வளர்வது போல்—நித்திரை செய்வது போல், பீதகவாடை—பீதாம்பரம், முடி—கிரீடம், பூண்—கண்டி, முதலா—முதலான, மே தகு பல்கலன் அணிந்து—பொருந்தி தகுதியாயிருக்கிற பல ஆபரணங்களையும் அணிந்து, சோதி வாயவும்—ஒளிவிடாநின்றுள்ள திருப்பவளமும், கண்ணவும்—திருக்கண்களும், சிவப்ப—சிவந்திருக்கும்படியாகவும், மீதிட்டு—மிக அதிகமான, பச்சை மேனி மிக பகைப்ப—பசுமைநிறமானது மிகவும் போட்டியிடும்படியாகவும், நச்சு வினை—(எதிரிகளை அழிக்கையில்) விஷத்தைப் போன்ற வ்யாபாரங்களையுடையனாய், கவர் தலை—கவிழ்ந்திருந்துள்ள தலைகளையுடையனான, அரவு அமளி—ஆதிசேஷனாகிற படுக்கையில், ஏறி—எறி, எறி கடல் நடுவுள்—அலையெறியும்படியான கடலின்நடுவே, அறி துயில் அமர்ந்து—ஜகத்ரக்ஷணசிந்தையாகிற யோகநித்ரையை அடைந்து, சிவன் அயன் இந்திரன் இவர் முதல்—சிவன், பிரமன், இந்திரன் இவர்கள்

முதலான, அனைத்தோர் தேய்வ குழாங்கள்—எல்லா தேவர்களுடைய கூட்டங்களும், கை தொழ—கைகூப்பி வணங்கும்படி, கிடந்து—பள்ளி கொண்டிருப்பவனும், தாமரை உந்தி—(எல்லா உலகத்தின் உத்பத்திக்கும் காரணமான) நாபீகமலத்தையுடையவனும், தனி பெரு நாயக—ஒப்பற்ற ஸர்வாதிகனாயிருப்பவனுமான எம்பெருமானே! மூ உலகு அளந்த—மூன்று உலகங்களையும் அளந்த, சேவடியோயே—திருவடிகளை உடையவனே!

வ்யா:—முதற்பாட்டு—(செக்கர்மாமுகிலுடுத்து) ஆனையைக்கண்டார் "ஆனை, ஆனை" என்னுமாபோலே, அநுபவஜநிதப்ரீதி உள்ளடங்காமையாலே ஏத்துகிறார். ஶ்யாமமான நிறத்துக்குப்ரபாகமான சிவப்பை யுடைத்தாய், கொடுக்கும் கொய்சகமும் வைத்துடுக்கலாம் படியானவளவையுடைத்தாய், ஸௌகுமார்யத்துக்குச் சேர்ந்து குளிர்ந்திருக்கிற முகிலை அரையிலே பூத்தாற்போலே உடுத்து. (மிக்க செஞ்சுடர் பரிதிசூடி)(2) "दिवि सूर्यसहस्रस्य भवेत् युगपदुत्थिता" (திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய பவேத்யுகபதுத்திதா) என்று சொல்லுகிறபடியே, ஸஹஸ்ரகிரணங்களென்றாற்போலே ஒரு ஸங்க்யை யுண்டிறே ஆதித்யனுக்கு; அப்படி பரிச்சிந்நகிரணனன்றிக்கே அநேகமாயிரம் கிரணங்களையுடையானொரு ஆதித்யன் வந்துதித்தாற்போலேயாயிற்று திருவபிஷேகமிருப்பது. மிக்க சிவந்திருந்துள்ள கிரணங்களையுடைய பரிதியைச்சூடி. (அஞ்சுடர்மதியப்பூண்டு) தன்னுடைய ஸ்வாபாவிகமாயிருந்துள்ள ப்ரதாபத்தாலே யொருவருக்குங் கிட்டவொண்ணாதபடி யிருக்கிற ஆதித்யனைப் போலன்றிக்கே சீதளமான கிரணங்களையுடையனாய், குறைதல் நிறைதல் மறுவுண்டாதலின்றிக்கே வைத்தகண்வாங்காதே கண்டிருக்கவேண்டும்படியான அழகையுடைய சந்த்ரனைப்பூண்டு. (பலசுடர்புனைந்த) மற்றும் பல நக்ஷத்ராதிகளையும் பூண்டு. (பவளச்செவ்வாய்) பவளமாகிற சிவந்த வாயையுடைத்தாய். உபமேயத்தில் வந்தால், பவளம் போலே சிவந்தவதரத்தையுடையனா யென்றாகிறது; இங்கு பவளம் போலே சிவந்த இடங்களையுடைத்தாயென்றாகிறது. (திகழ் பசுஞ்சோதி மரதகக் குன்றம் கடலோன்கைமிசைக் கண் வளர்வதுபோல்) தனக்கிவ்வருகுள்ளவை யெல்லாம் கீழாம்படி மிகைத்து உஜ்வலமாகா நின்றுள்ள ஶ்யாமமான தேஜஸ்ஸையுடைத்தான மரதககிரியானது கடலுக்கி

பதியான வருணனுடைய திரைக்கையிலே கண்வளர்வதுபோல். சாய்வதுபோலென்ன அமைந்திருக்க உபமானத்திலும்கூசி (கண்வளர்வது போல்) என்கிறார். திருமலைநம்பி எம்பெருமானாருக்கொருவரை யடையாளஞ்சொல்லுகிறவிடத்திலே "பொன்னாலே தோடுபண்ணியிடவொண்ணாதபடியான காதையுடையராயிருக்குமவரையறிந்திருக்கையுண்டோ?" என்றாராம். (பீதகவாடை) "செக்கர்மா முகிலுடுத்து" என்கிறது. (முடி) "செஞ்சுடர் பரிதிசூடி" என்கிறது. (பூண்) "அஞ்சுடர் மதியம்பூண்டு" என்கிறது. இவை தொடக்கமாக. (மேதகுபல்கலனணிந்து) "பலசுடர் புனைந்த" என்கிறத்தை. (மேதகு) ஸ்வரூபாநுரூபமென்னுமப்படியாயிருக்கை. மேவித் தகுதியாக என்றுமாம். கீழ்ச்சொன்னவை முதலாகத் தகுதியாயிருந்துள்ள பல ஆபரணங்களையுமணிந்து. அவன் விபூதியைப் பரிச்சேதிக்கிலும் பரிச்சேதிக்கப் போகாததாயிருக்கை. பாஷ்யகாரர் அநேக § பூஷணங்களை யருளிச்செய்து பின்னையும் ஆதி சப்தத்தாலே தலைக்கட்டுமாபோலே "பல்கலன்" என்று தலைக்கட்டுகிறார். (3) "नूपुराद्यपरिमित दिव्यभूषण" (நூபுராத்யபரிமிததிவ்யபூஷண) என்பரிறே. (சோதிவாயவுங் கண்ணவுஞ்சிவப்ப) த்ருஷ்டாந்தத்திலே யொன்றைச்சொல்லி இங்கே இரண்டைச்சொல்லுவானென்னென்னில், அதுக்காகவிறே சிவந்த விடங்களென்றது. (மீதிட்டு) கீழ்ச்சொன்னவற்றாலும் அவற்றை நெருக்குகிறதன்னாலும் ஒன்றையொன்று ஸ்பர்த்தித்து ஶ்யாமமான நிறம் மிகவுமுஜ்ஜ்வலமாக; அவற்றையடைய நெருக்கியுள்ளேயிட்டுக் கொள்ளப் பார்த்ததான அத்தையுமழித்து ப்ரஸரிக்க. (நச்சுவினை) * "வாய்ந்தமது கைடபரும் வயிறுருகி மாண்டார்" என்கிறபடியே தனியிடத்திலும் எதிரிகளாய் வருவாரும் முடியும்படியான நச்சுத்தொழிலை யுடைத்தாயிருக்கை. (கவர்தலை) பலதலைகளையுடைத்தாய். ஸ்வஸ்பர்சத்தாலேபணைத்ததென்றுமாம். ப்ரஜையை மடியில் வைத்திருக்குந் தாயைப்போலே. பெரியபெருமாளை மடியிலே வைத்திருக்குந் தாய்தானும். ஆநந்தாழ்வான் திருக்கோட்டியூருக்கு நடந்தவிடத்திலே பட்டரைக் கண்டு அவர் திருமேனியிலே இப்படி செய்தாரும். ஆண்டாளுக்கு முந்துற ஒரு பிள்ளையுண்டாய் அவனையிழக்க, "அங்ஙனே செய்ய

§ குணங்களை என்றுபாடாந்தரம். * மூன்றாம்திருவ (66).

வொண்ணாது, இவன் ஜீவிக்கவேணும்" என்று எம்பெருமானார் பெரியபிராட்டியாருக்குநீராட்டி "மஞ்சணீர்குடித்த பிள்ளையாக வளர்க்கவேணும்" என்று காட்டிக்கொடுத்தருளினாராயிற்று. அந்த வாஸனையாலே "பெரிய பிராட்டியார் மகன்" என்றுதான் பட்டரை அநந்தாழ்வான் சொல்லுவது. (அரவினமளி) நாற்றம், குளிர்த்தி, மென்மைகளையுடையனான திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலேஏறி. படுக்கையிலே யேறுகிறவிது தன் பேறாகவிருக்கையாலே, நம்பெருமாள் ஆறுகால் சிவிகையை ஸாதரமாகப்பார்த்து ஏறியருளுமா போலே பெரியவாதரத்தோடே யாயிற்று ஏறியருளுவது. அமளி—படுக்கை. (ஏறிகடல்நடுவுள்) ஸ்வஸந்நிதாநத்தாலே அலையெறிகிற கடலிலே. (அறிதுயிலமர்ந்து) அறிவேவடிவாக வுடைத்தாயிருந் துள்ள நித்ரையிலே பொருந்தி. அல்லாதார்க்கு முதல் தன்னிலே யொன்று தோன்றாதே நெஞ்சிருண்டிருக்கும்; சக்ஷுராதிகரணங் களாலே பதார்த்த தர்சநம் பண்ணிப்போதுபோக்குவர்கள். அக்கண் தன்னையுஞ் செம்புளித்தாலுள்ளோடு புறம்போடு வாசியற விருண் டிருக்கும். இவன்தான் திருக்கண்கள் செம்புளித்தால் ப்ரகாசமுள்ளே யுறைந்திருக்குமத்தனை. ஜகத்ரக்ஷணசிந்தைபண்ணுதல், த்யேயவஸ்து தனக்குப் புறம்பில்லாமையாலே ஸ்வாநுஸந்தாநம் பண்ணுதல், திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்தருளினாலிருக்கும்படி. (சிவனயனிந்திர னிவர் முதலனைத்தோர் தெய்வக்குழாங்கள் கைதொழ) நாட்டுக் காஶ்ரயணீயராக ப்ரஸித்தரானவர்கள் தாங்கள் பக்நாபிமாநராய்த் தொழா நிற்பர்கள். ப்ரஹ்மாதிகள் தொடக்கமாக அநேக தேவதா ஸமூஹமானது தங்களிறுமாப்பைப்பொகட்டு, சாய்ந்தருளின அழகிலே தோற்று எழுத்துவாங்கி நிற்பர்கள். இவர்களிப்படியே தொழா நின்றால் அவன் செய்வதென்னென்னில், (கிடந்த) கடலிலே இழிந்த கொக்குத்திரள்கள் விக்ருதமாங்காட்டில் அக்கடலுக்கொருவாசி பிறவாதிறே. ஏகரூபமாகச் சாய்ந்தருளுமாயிற்று. "சிலர் தொழா நிற்கக்கிடந்தோம்" என்கிற துணுக்கும் பிறவாதாயிற்று ஐஶ்வர்யச் செருக்காலே. இவர்க்குமிரண்டும் ஸ்வரூபாந்தர்க்கதமாயிற்று. (தாமரையுந்தி) ஸகல ஜகதுத்பத்தி காரணமான திருநாபிகமலத்தையுடையனாய். இப்படி யிருப்பாரவ்வருகாரேனுமுண்டோ வென்ன, (தனிப் பெருநாயக) இத்தால் அவ்வருகில்லை யென்னுமிடத்தைச்சொல்லு

கிறது. அவ்வருகில்லையாகில் தன்னோடொக்கச் சொல்லலாவாருண் டோவென்னில் (தனி) அத்விதீயநாயகன். புறம்பேயுஞ்சிலரை நாய கராகச் சொல்லக்கடவது ஔபசாரிகம். (4) "रुद्रं समाश्रिता देवा रुद्रो ब्रह्माणमाश्रितः। ब्रह्मा मामाश्रितो राजन्! नाहं कञ्चिदुपाश्रितः॥" (ருத் ரம் ஸமாஶ்ரிதா தேவா ருத்ரோ ப்ரஹ்மாணமாஶ்ரித:, ப்ரஹ்மா மாமாஶ் ரிதோ ராஜந் நாஹம் கஞ்சிதுபாஶ்ரித:) என்றாற்போலே ஆபேக்ஷிகமான ஐஶ்வர்யத்தையுடையராயிறே இவர்களிருப்பது. இவ்வருகுள்ளார்க் கெல்லாம் தான் நிர்வாஹகனாயிருக்கிறவோபாதி தனக்கவ்வருகொரு நிர்வாஹகனையுடையனல்லாத அத்விதீயபரதேவதை. நிமித்தோபாதாந ஸஹகாரிகளும் தானேயென்கை. (மூவுலகளந்த) தன்பக்கல் வந் தநுபவிக்கமாட்டாதார்க்கு அவர்களிருந்தவிடத்திலே சென்று அநு பவிப்பிக்கும். (சேவடியோயே) இழந்தவிழவை மீட்டு ரக்ஷியாதே காதுகனானேயாகிலும் விடவொண்ணாதபடியாயிற்று திருவடிகளின் போக்யதையிருக்கிறபடி. கண்ணழிவற்றவழகையும் குணங்களையும் அநுபவித்தார். 1.

2. உலகு படைத்துண்ட வெந்தை, அறைகழல்
சுடர்ப் பூந் தாமரை சூடுதற்கு, அவாவா
ருயிருருகி யுக்க, நேரிய காத
லன்பி லின்பீன் றேறல், அமுத
வெள்ளத் தானாம் சிறப்புவிட்டு, ஒருபொருட்
கசைவோ ரசைக, திருவொடு மருவிய
இயற்கை, மாயாப் பெருவிற லுலகம்
மூன்றி னொடுநல் வீடு பெறினும்,
கொள்வ தெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே.

பதவுரை:—உலகு படைத்து—(எல்லா) உலகங்களையும் ஸ்ருஷ் டித்து, உண்ட—(ப்ரளயகாலத்தில்) விழுங்கிய, எந்தை—என்ஸ்வா மியாகிய எம்பெருமானுடைய, அறை கழல்—சப்தியாநின்றுள்ள வீரக் கழலையுடைய திருவடிகளாகிற, சுடர் பூ தாமரை—ஜ்வலிக்கும்படி யான அழகிய தாமரைப்பூவை, சூடுதற்கு—அணிவதற்காக, அவா— ஆசையினால், ஆர்—நிறைந்த, உயிர் உருகி உக்க—ஆத்மாவானது உருகிவிழ, நேரிய காதல்—(அதனால்) உண்டான (பக்திரூபமான) அன்பென்ன, அன்பில்—(பக்தியினாலுண்டான பரமபக்திரூபமான)

ப்ரீதியிலுள்ள, இன்பு—இனிமை என்ன, (இவைகளிலுள்ள), ஈன் தேறல் அமுத வெள்ளத்தானும்—இனிமையின் வைலக்ஷண்யமாகிற அமுதக்கடலில் மூழ்கியிருக்கும்படியான, சிறப்பு விட்டு—மேன்மையை விட்டு, ஒரு பொருட்கு—கீழான புருஷார்த்தத்திற்காக, அசைவோர்—அலைவுறுபவர்கள், அசைக—அலையட்டும்; திருவோடு மருவிய—ஐஸ்வர்யத்துடன் கூடிய, இயற்கை—ஸ்வபாவத்தோடும், மாயா பெரு விறல்—அழியாத மிகுந்த பலத்தோடும், உலகம் மூன்றினோடு—மூன்றுலகங்களோடும் கூட, நல் வீடு பெறினும்—மேலான புருஷார்த்தமான மோக்ஷத்தைப் பெற்றாலும், தெள்ளியோர்—தெளிந்த ஜ்ஞானத்தையுடைய பெரியோர்களுடைய, குறிப்பு—அபிப்ராயம், கோள்வது—(இவைகளைப்) பெறுகைக்கு, எண்ணுமோ—நினைக்குமோ?

அவ:—இரண்டாம் பாட்டு. (5) "आदित्यवर्णं तमसः परस्तात्" (ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்) என்று கொண்டு த்யேயமாகச் சொல்லுகிற வஸ்துவினுடைய விக்ரஹவைலக்ஷண்யஞ் சொன்னார் முதற்பாட்டில்; அந்த த்யேய வஸ்துவின் பக்கல் பிறக்கும் பரபக்தி தொடங்கி ப்ராப்யாந்தர்க்கதமாகயிருக்கையாலே தத்விஷயபக்தியே யமையுமென்கிறது இண்டாம் பாட்டில். முதற்பாட்டில் வடிவழகும் மேன்மையும் நீர்மையுஞ்சொல்லிற்று; அவை கர்மஜ்ஞானங்களினுடைய ஸ்த்தானேயாய் நிற்க, அநந்தரம் பிறக்கும் பரபக்தி பரஜ்ஞாந பரம பக்திகளைப் பெறும்பேற்றுக்கவ்வருகில்லாத ப்ராப்யங்களென்கிறார். ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்த்தாநத்திலவனுடைய வடிவழகும் மேன்மையும் நீர்மையுமாக, அநந்தரம் பிறக்கும் பரபக்த்யாதிகளையிறே உத்தேச்யமாகச் சொல்லிற்று. அந்த ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்த்தாநத்திலே நிற்கிறவற்றை அநுபாஷிக்கிறார், "உலகுபடைத்துண்ட வெந்தையறை கழல் சுடர் பூந்தாமரை" என்கிற விவ்வளவிலே.

வ்யா:—(உலகுபடைத்துண்ட) (6) "बहु स्यां" (பஹு ஸ்யாம்) என்கிறஸங்கல்பமாத்ரத்தாலே ஸவ்யதிரிக்தஸமஸ்தவஸ்துக்களையுமுண்டாக்கி, உண்டான விவற்றுக்குப் ப்ரளயாபத்துவர, இவற்றையடைய வயிற்றிலேவைத்து ரக்ஷித்துப்பண்ணின வ்யாபாரத்தாலே கண்ணழிவற்ற மேன்மை சொல்லுகிறது. (எந்தை) ஸ்வாமித்வப்ரயுக்தமான மேன்மையை யுடையுனயிருந்து வைத்து, எத்தனையேனும் தம்மைத்தாழ நினைத்திருந்தபடியாலே, தம்மை விஷயீகரித்தவத்தால்

வந்த நீர்மை சொல்லுகிறார். "மூவுலகளந்த" இதினுடைய எல்லை தாமாக நினைத்திருக்கிறார். (அறை) த்வநியா நின்றுள்ள வீரக்கழலை யுடைத்தாய், அத்யுஜ்ஜ்வலமாய் நிரதிசய போக்யமாயிருக்கிற திருவடிகளை. இத்தால் அழகு சொல்லுகிறது. (தாமரைசூடுதற்கு) தாமரை போலே யிருக்கிற திருவடிகளென்றவாறே (7) "कदा पुनः" (கதா புந:) என்னவேண்டியிருக்குமிறே. (சூடுதற்கவாவாருயிர்) அத்தலையில் வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்தால் அவன்பக்கல் ருசிபண்ணியல்லது நில்லானிறே சேதநன். (சூடுதற்கவாவாருயிர்) சூடுகையிலே அவாவி யிருக்கிற, ஆருயிர் – ஆசைப்படுகிற வாத்மவஸ்து. (உருகியுக்க) அத்தலையில் வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்தவாறே அச்சேத்யமான ஆத்மவஸ்து த்ரவத்ரவ்யமாய் ஓரவயவியாக்கிக்காண வொண்ணாதபடி மங்கித்தாயிற்று. (நேரியகாதல்) அந்த அவாவானது விலக்ஷணமான தொரு ஸங்கத்தையும் பிறப்பித்தது (8) "सङ्गत्सञ्जायते कामः" (ஸங்காத்ஸஞ்ஜாயதே காம:) அந்தஸங்கந்தானொரு அன்பைப்பிறப்பித்தது. (9) "ध्रुवा स्मृतिः" (த்ருவா ஸ்ம்ருதி:) இத்யாதிகளை நினைக்கிறது. விஷயம் குணாதிகவிஷயமாகையாலே அந்த அன்பிலே ஓரின்புண்டு- இனிமை; அதென்பட்டது? அதுதானினிதாயிருக்குமிறே. து:க்காத்மகமான விஷயத்தைப்பற்றி வந்ததன்றிக்கே (10) "सुसुखं कर्तुमव्ययं" (ஸுஸுகம் கர்த்துமவ்யயம்) என்கிறபடியே ஸ்மர்த்தவ்ய விஷயத்தினுடைய ரஸ்யதையாலே இதுதானே ரஸிக்குமிறே. அதுதானென் போலே வென்னில், (ஈன்தேறல்) அம்ருதஸமுத்ரத்தில் கடைந்தவம்ருதம்போலே போக்யமாயிருக்கும் விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தாலே. அதுதான் (11) "आनन्दमयः" (ஆநந்தமய:) என்கிற விஷயத்தைப்பற்றிவருகையாலே ஒருபஸாகரமாயிருக்குமிறே; விலக்ஷண விஷயமாகையாலுமிவனுடையருசியாலும் ஒருகடலிலேஏகாகி விழுந்தாற் போலேயிருக்குமிறே. (அமுதவெள்ளத்தானும்) இன்பவெள்ளத்திலே உளனாகையாகிற. (சிறப்புவிட்டு) இந்தப் பரமபக்திகளை யுடையனாகையாகிறதிறே ஐஸ்வர்யம். அத்தைவிட்டு, (ஒருபொருட்கு) இத்தைவிட்டாலினிப்பெற நினைப்பது இவ்வருகேசிலவையிறே. அவையாசிறன — தர்மார்த்தகாமமோக்ஷங்களில் சொல்லுகிறவையிறே; அவற்றையொன்றாக நினைத்திராத அநாதரந்தோற்ற ஒருபதார்த்தமென்கிறார். (அசைவோரசைக) அவைதானிது போலே ஸுலபமா

யிராது. யத்நித்துப் பெறவேண்டுமதாய், பெற்றால் ப்ரயோஜநமல்ப மாயிருக்கும். அவற்றுக்காசைப்படுவார் அங்ஙனே க்லேசப்படுக. (12) "क्लेशोऽधिकतरः" (க்லேஶோதிகதர:) என்கிறபடியே நிரூபித்தால் து:க்காத்மகமென்றாலும் நாட்டிலே சிலபுருஷர்கள் அவற்றை விரும்பா நின்றார்களேயென்ன; அறிவுகேடர்படியோ நான் சொல்லுகிறது? புத்திமான்களிவற்றை ஸ்வீகரிப்பதாகமநோரதிப்பார்களோ? (திரு வொடு இத்யாதி) ஐஶ்வர்யம் நிலைநின்று அதுதானே யாத்ரையாயிருப் பது. இத்தாலும் பலமில்லையிறே போக்தாவுக்கு சக்திவைகல்யமுண் டாகில். அவனுமொருநாளுமழியாத மிடுக்கை யுடையனானது ஐஶ்வர் யந்தான் ப்ராதேசிகமாவதன்றிக்கே த்ரைலோக்யமும் விஷயமாவது, இத்தோடேயடுத்து. (நல்வீடு பெறினும்) நல்வீடென்று - உத்தம புருஷார்த்தத்தைச் சொல்லுகையாலே, நடுவில் கைவல்ய புருஷார்த் தத்தைச்சொல்லிற்றாகிறது. இதுதான் பெறகடவதென்றிருக்கையன் றிக்கே இதிலே தோள்மாறும்படியானாலும். (கொள்வதெண்ணுமோ) இவை ஸ்வீகரிக்கக் கடவதான மநோரத ஸமயத்திலேதானுண்டோ? ஐஶ்வர்யம் அஸ்த்திரமாகையாலே கழியுண்டது; ஆத்மலாபம் பரிச் சிந்நமாகையாலே கழியுண்டது; பகவத்புருஷார்த்தம் ஆசைப்பட்ட வுடம்பை யொழிய வேறோருடம்பைக் கொண்டு போயநுபவிக்கும தாகையாலே கழியுண்டது; அவ்வுடம்போடே யிருக்கச்செய்தே பெறக் கடவதான பரபக்த்யாதிகளோடிவை † யொவ்வாதே நிற்கிறவிடம் விசாரவிஷயமோ? ஆனாலுஞ் சிலபேர் நினையாநிற்கிறார்களே யென் னில், (தெள்ளியோர் குறிப்பு எண்ணுமோ) ஸாராஸாரவிவேகம் பண்ணியிருப்பார்க்கு மநோரதத்துக்கு விஷயமல்ல; ஸாராஸார விவேகஜ்ஞர் நல்லதுக்கும் தீயதுக்குந் தாமிட்டுப் பிறந்திருப்பார்கள். (13) "सारासारविवेकज्ञः गरीयांसः" (ஸாராஸாரவிவேகஜ்ஞ: கரீயாம்ஸ:) "கூடுமாசை" இத்யாதி. 2.

3. குறிப்பில் கொண்டு நெறிப்பட, உலகம்
மூன்றுடன் வணங்கு தோன்று புகழாணை,
மெய்பெற நடாய தெய்வம் மூவரில்
முதல்வ னாகிச், சுடர்விளங்ககலத்து
வரைபுரை திரைபொரு பெருவரை வெருவுற,
உருமுர லொலிமலி நளிர்கடற் படவர

† (பா) ஒவ்வாதென்றவிடம்.

வரசுஉடல் தடவரை சுழற்றிய, தனிமாத்
தெய்வத் தடியவர்க் கினிநா மாளாகவே
இசையுங்கொல், ஊழிதோ றூழி யோவாதே

பதவுரை:—மூன்று உலகம்—மூன்று லோகங்களும், நெறி பட—நல்வழியில் செல்லும்படியாக, குறிப்பில் கொண்டு—திருவுள்ளத்தில் நினைப்பவனாய், உடன் வணங்கு—(அம்மூவுலகங்களும்) ஒருபடிப்பட்டுத் தொழுகையாகிற, தோன்று புகழ்—(ச்ருதி) ப்ரஸித்தமான புகழையுடையவனாய், ஆணை மெய் பெற நடாய—தன் ஆணையை சரிவர நடத்துமவனாய், தெய்வம் மூவரில்—ப்ரஹ்மா, ருத்ரன், இந்த்ரன் என்னும் மூவரிலும், முதல்வன் ஆகி—மேலானவனாய், சுடர் விளங்கு—அகலத்து—(ஆபரணங்களின்) ஒளியையுடைத்தான திருமார்பையுடையனாய், வரைபுரை திரை—மலைபோன்ற அலைகள், பொரு—மோதாநின்றதாய், பெருவரை வெருவு உற—பெரிய பர்வதங்கள் நடுங்கும்படியாக, உருமு உரல் ஒலி மலி—இடியின் முழக்கம் போன்ற கோஷமானது மிகுந்திருப்பதான, நளிர் கடல்—குளிர்ந்த ஸமுத்ரத்தை, படம் அரவு அரசு—படங்களையுடைய ஸர்ப்பராஜாவாகிய வாஸுகியினுடைய, உடல்—சரீரத்தை, தடம் வரை சுழற்றிய—மிகப்பெரிய (மந்தர) மலையில் சுற்றிக்கடைந்தவனாய், தனி மாத் தெய்வம்—ஒப்பற்றபரதேவதையாயுள்ளவனான எம்பெருமானுக்கு, அடியவர்க்கு—தாஸபூதர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, இனி நாம்—இனி நாங்கள், ஊழிதோறூழி—ஒவ்வொருகல்பங்களிலும், ஓவாது—இடைவிடாமல், ஆளாக—அடியவர்களாம்படி, இசையுங் கோல்—(எம்பெருமான்) இசைந்திடுவானோ?

அவ:—மூன்றாம்பாட்டு. (குறிப்பித்யாதி) முதலிட்டிரண்டு பாட்டில், அதில் முதற்பாட்டில் அவன் வடிவழகைப் பேசியநுபவித்தார்; இவன் றன்னைப்பெற்றநுபவித்துக் கொண்டிருக்குமிருப்பில் அவன் விஷயமாகப் பண்ணும் பக்தியே இனிதென்றாரிரண்டாம் பாட்டில்; இப்பாட்டில் பக்திபண்ணும் விஷயத்துக்கெல்லை யெவ்வளவென்னில், அவன் தொடங்கி, ததீயசேஷத்வ பர்யந்தமாகவென்கிறது.

வ்யா:—(குறிப்பில் கொண்டு நெறிப்பட உலகம் மூன்றுடன் வணங்கு தோன்று புகழாணை மெய்ப்பெற நடாய தெய்வம் மூவரில்

முதல்வன்) என்று—இவனோடே அந்வயித்தல். (நெறிப்படக் குறிப்பில் கொண்டு) (6) "बहु स्यां" (பஹு ஸ்யாம்) என்று ஸங்கல்பிக்கிறபடியே அரும்பும்படி திருவுள்ளத்திலே கொண்டு. ஸ்வவ்யதிரிக்தஸமஸ்த வஸ்துக்களும் நெறிப்படும்படியாக—வழிபடும் படியாகத் திருவுள்ளத்திலே கொண்டு என்றுமாம். இப்படி நெறிப்படுவார் சிலராய் சிலரன்றிக்கே யிருக்கையன்றிக்கே, (உலகம் மூன்று) தன்னையொழிந்தாரடையத்தன்னையாஶ்ரயிக்கும்படியாக. அது தன்னில் அந்யோந்யமாஶ்ரயிப்பாரும் ஆஶ்ரயணீயருமாகிற வைஷம்யமுண்டேயாகிலும் தன்னளவிலே வந்தால் எல்லாரு மொக்கக்கூடித்திருவடிகளிலே ஆஶ்ரயிக்கும்படிக்கீடாக. (உடன்வணங்கு) தனித்தான போதாயிற்று அவாந்தரவிஷயமுள்ளது. இவன்பக்கலிலே எல்லாரும் கூடித் திருவடிகளிலே யாஶ்ரயிப்பார்கள். இத்தால் வந்தப்ரஸித்தி கிடந்தவிடம் தெரியாதபடி யொருமூலையிலே யடங்கிக்கிடக்குமோ வென்னில், (தோன்றுபுகழ்) ஶ்ருதிப்ரஸித்தர். (ஆணைமெய் பெறநடாய) ஆஜ்ஞையைப்பத்தும் பத்தாகநடத்தா நிற்பானுமாய். (தெய்வம் மூவரில் முதல்வனாகி) அன்றிக்கே, இவர்களும் தன்னோடு ஸமாநராய் "அவனோ ஈச்வரன்? இவர்களோ ஈச்வரர்கள்?" என்று கண்டார்க்குஇவர்கள்பக்கலிலேயும் ஈச்வரத்வசங்கை பண்ணும்படியிறே தானிவர்களுக்குக் கொடுத்துவைக்குந்தரம். ஆகையாலே "நடாயதெய்வம்மூவர்" என்று இவர்களோடே அந்வயிக்கவுமாம். (மூவரில்முதல்வனாகி) தன்னை யொழிந்த விருவரளவில் அவர்களுடைய சரீரத்துக்கும் ஆத்மாவுக்கும் நியாமகனாய், அஸாதாரண விக்ரஹத்தோடேநின்று அதுக்கு நியாமகனாய் அன்றிக்கே இந்த்ரனையுங்கூட்டி மூவரென்னவுமாம். (சுடர்விளங்ககலத்து) ஆபரணசோபையை யுடைத்தான திருமார்பை யுடையனாய். அன்றிக்கே சந்த்ரஸூர்யர்களாலே விளங்காநின்றுள்ள ஆகாசத்தில் பாழ் தீரும்படியாக வென்னுதல். (வரைபுரையித்யாதி) அவன் ஆஶ்ரிதார்த்தமாகச் செய்யுஞ்செயல்களிலிதொன்றுமமையாதோ இவனே ஆஶ்ரயணீயனென்னுமிடத்துக்கு? (வரைபுரை திரை) மலையோடொத்த திரை. அவை மலையும் மலையுந் தாக்கினாற்போலே தன்னில்தான் பொருகிறபோது. (பெருவரைவெருவுற) குலபர்வதங்கள் நடுங்க. (உருமுரலொலி) அப்போது உருமுஇடித்தாற்போலேயிருக்கிற த்வநியானதுமிக. (நளிர்கடல்) பொறியெழக்கடையச்செய்தேயும் அவனுடைய

ஒரு நலிவின்றிக்கேயிருக்கையில் ஸ்வஸ்பர்சத்தால் வந்த ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் படத்தைவிரிக்கிற, அரவரசுண்டு — வாஸுகி, அதினுடைய உடலைச்சுற்றி. (கடலை) கடலைக்கண்செறியிட்டாற்போலேயிருக்கும் மந்தரபர்வதத்தைக் கொடுபுக்குநட்டு. (சுழற்றிய) கடல் கலங்கிக் கீழ்மண்கொண்டு மேல்மண்ணெறிந்து அம்ருதம் படுமளவும்செல்ல. தொட்டார்க்கெல்லாம் நான் கடைந்தேனென்று சொல்லலாம்படி தானே சுழன்று வரும்படியாகவாயிற்று கொடுக்குவைத்த நொய்ப்பர். (தனிமாத்தெய்வர்) அத்விதீயபரதேவதை. இப்படி அத்விதீய பரதேவதைக்காளாகவோ ஆசைப்படுகிறதென்னில், (அடியவர்க்கு ப்ரயோஜநாந்தரபரரான தேவதைகளுக்காகத் தன்னுடைய உடம்பு நோவக் கடலைக்கடைந்து அம்ருதத்தைக்கொடுத்த மஹோபகாரத்தையநுஸந்தித்து அவன் நீர்மையிலே தோற்றெழுதிக்கொடுத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, (இனிநாம்) ஆத்மஸத்தை யுள்ளவன்று தொடங்கி பாகவதசேஷமாய்ப்போருவது ப்ராப்தமாயிருக்க, கர்மத்தாலே "நான்" என்றும் "என்னது" என்றும் போந்தோம்; இனி சேஷித்த காலமாகிலுமிவ்வஸ்து பாகவதசேஷமென்னுமிடத்தையவன் காட்ட அவன் ப்ரஸாதத்தாலேகண்ட நாம். அவர்களோடொப்பூணாய் ஒத்ததரமாகவோ வென்னில், (ஆளாக) சேஷபூதராக. அவர்களுக்குமாளாய் 'நான், எனக்கு' என்றிருக்கும் இருப்புங்கலந்து செல்லவோவென்னில், (ஆளாகவே) ஆளாந்தரமன்றிக்கே சேஷத்வமே வடிவாக. (இசையுங்கொல்) அவன் * ஆள்பார்த்துழிதருவானாகையாலே இவ்வர்த்தத்திலிவனை இப்போதாக இசைவிக்கவேண்டா, "இவர் எப்போதோ?" என்று ப்ரார்த்திக்கிறாராகையாலே இவர்க்கிசைவுண்டு. "இசையுங்கொல்" என்பானென்னென்னில்; பாகவதசேஷத்வமாகையாகிறது கூடுவதொன்றல்லாமையாலே கூடாதவர்த்தமிங்ஙனே கூடவற்றோ? என்கிறார். இதுதான்சிலகாலமாய்க்கழியவொண்ணாது. (ஊழிதோறூழி) கல்பந்தோறுமாகவேணும். அதுதன்னிலும், (ஓவாதே ஒருக்ஷணமுமிடைவிடாதேயாகவேணும். அவாப்தஸமஸ்தகாமனாய், ஸ்ரிய: பதியாய், § அயர்வறுமமரர்களதிபதியான ஸர்வேஶ்வரன் ஸம்ஸாரிகளுடைய ரக்ஷணத்துக்காகத் தன்னைப் பேணாதே இங்கே வந்தவதரித்தவிடத்து துஷ்ப்ரக்ருதிகளான சிசு

* நான்முகன் திருவந்தாதி (60) § திருவாய் (1—1—1).

பாலாதிகள் அது பொறுக்கமாட்டாமே முடிந்துபோமாற்போலே, இப்போது பாகவதர்களுடைய பெருமையறியாதே "இவர்களும் நம்மோடொக்க அந்நபாநாதிகளாலே தரியாநின்றார்களாகில் நம்மிற் காட்டில் வாசியென்" என்று ஸஜாதீயபுத்திபண்ணி ஸம்ஸாரிகள் அநர்த்தப்படுகிறபடி. ‡(கண்டு) அவதரித்த ஸர்வேச்வரன் இதர ஸஜாதீயனுமன்றிறே இவர்களும் ஸம்ஸாரிகளோடு ஸஜாதீயராவது. 3.

4. ஊழிதோ றூழி யோவாது வாழிய
வென்றுயான் தொழவிசை யுங்கொல்,
யாவகை யுலகமும் யாவருமில்லா,
மேல்வரும் பெரும்பாழ் காலத்து, இரும்பொருட்
கெல்லா மரும்பெறல் தனிவித்து, ஒருதா
ஞகித் தெய்வ நான்முகக் கொழுமுளை
யீன்று, முக்கணீச ஞெடுதேவு பல நுதலி,
மூவுலகம் விளைத்த வுந்தி,
மாயக்கடவுள் மாமுத லடியே.

பதவுரை:—யாவகை உலகமும்.—எவ்வகைப்பட்ட லோகங்களும், யாவரும் இல்லா—எவ்வகைப்பட்ட ப்ராணிகளும், இல்லா—இல்லாதவாறு, மேல் வரும்—முன்னமே கழிந்துபோன, பெரும் பாழ் காலத்து—மிகவும் நீண்ட, (உலகம்) அழிந்துகிடந்த (ப்ரளய) காலத்திலே, இரும் பொருட்கு எல்லாம்—எண்ணற்றஜீவராசிகளுக்கெல்லாம், பெறல் அரும்—அடைவதற்கு அரியனாய், தனி ஒரு வித்து—ஒப்பற்றவனாய், ஸஹாயமற்றவனான, காரணவஸ்துவாக, தான் ஆகி—தானே நின்று, தெய்வம் நான்முகன்—தேவதையாகிய பிரமனென்னும், கொழுமுளை—பூர்ணமான அங்குரத்தையும், முக்கண் ஈசனோடு—மூன்று கண்களையுடைய ருத்ரனுடன், பல தேவு—பல தேவதைகளையும், ஈன்று—ஸ்ருஷ்டித்து, நுதலி—(இவர்களை ஸ்ருஷ்டி, ஸம்ஹாரங்களுக்காக) ஸங்கல்பித்து, மூ உலகம்—மூன்று லோகங்களையும், விளைத்த—படைத்த, உந்தி—திருநாபியையுடையனாய், மாயன்—ஆச்சர்யசக்தியுக்தனாய், கடவுள்—பரதேவதையாய், மா முதல்—பரமகாரண பூதனான, எம்பெருமானின், அடி—திருவடிகளை, ஊழிதோறூழி—கல்பங்கள்தோறும், ஓவாது—இடைவிடாமல், 'வாழிய'—'வாழவேண்டும்', என்று—என்று, யாம்—நாம், தொழ—(மங்களாசாஸநம் செய்து) துதிக்க, இசையும் கொல்—ஏற்படுமோ?

‡ குண்டலிதாக்ஷரங்கள் ப்ரக்ஷிப்தம்.

அவ:—நாலாம் பாட்டு. (ஊழிதோறூழி) கீழ்ப்பாட்டில் பக்தி பண்ணும் விஷயத்துக்கு எல்லை எவ்வளவென்னில், ஸர்வேஶ்வரன் தொடங்கி ததீயஶேஷத்வபர்யந்தமாக அநுஸந்திக்கை என்றது. அப்படிப்பட்ட அநுஸந்தாநத்தை உடையராயுள்ளார் பரிமாறும் பரிமாற்றம் இருக்கும்படி என்னென்னில்,(ஊழிதோறூழியோவாது, வாழிய என்று "அடியோமோடும் நின்னோடும்பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு" என்றாயிற்றிருப்பது. பெரியாழ்வார் "பல்லாண்டு" என்று ஆண்டாக்கி, அது தன்னைப் பலவாக்கி, ஆயிரமாக்கி, அது தன்னைக் கோடியாகப் பெருக்கி மங்களாஶாஸநம் பண்ணுகிறார்; இவர் அவ்வளவமையாமல் முதலிலே கல்பத்தை விவக்ஷித்து அது தன்னை மேல்மேலெனப் பெருக்குகிறார்.

வ்யா:—(ஊழிதோறூழி) கல்பந்தோறும் கல்பந்தோறும். அது தான் நித்யாக்நி ஹோத்ரமாகவொண்ணாது; (ஓவாது) ஒரு க்ஷணமும் இடை விடாதே. இத்தால், மேலெல்லாம் கூடிச் செய்யப்புகுகிறதென்னென்னில், "வாழிய" என்னுமித்தனை. ஸர்வேச்வரனுடைய ஶேஷித்வத்தை உபக்ரமித்துத் ததீயஶேஷத்வத்தளவும் செல்ல அநுஸந்தித்து, அந்த ஶேஷத்வகாஷ்டா ப்ராப்தியைக்கொண்டு அவன் திருவடிகளுக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறது நித்யமாய்ச் செல்லவேணும். (யாம்) (14) "आयुराशास्ते" (ஆயுராஶாஸ்தே) என்று கண்டதடைய "எனக்கு" என்று போந்த நாம். இப்போது அது தவிர்ந்து, (தொழ) தொழுகையாகிறது—மங்களாஶாஸநம் பண்ணுகையாயிற்று. (இசையுங்கொல்) எனக்கென்று போந்த அது தவிர்ந்து உனக்கென்கையாகிறது நெடுவாசியிறே, கூடாத இப்பேற்றோடே கூடுவார்க்கு. இப்படி ப்ரார்த்திக்கிறது அவனுடைய எந்தசெயலை அநுஸந்தித்தோ வென்னில், (யாவகையித்யாதி) முன்பேயுள்ளதொரு வஸ்துவுக்கு ஒரு குணதாநம் பண்ணினவளவன்றிக்கே முதலிலே அழிந்து கிடந்த வஸ்துவை அடிதொடங்கி உண்டாக்கி நமக்குப் பண்ணின மஹோபகாரத்துக்கு. (யாவகை உலகமும்) இங்கனிட்டு மூன்று லோகம் கழிந்து மேலே ஒரு லோகம் குடிவாங்கக்கடவதாய், அவ்வருகொன்று குடியிருக்கக் கடவதாயிருப்பதொரு ப்ரளயம் உண்டிறே; அப்படியன்றிக்கே எவ்வகைப்பட்ட லோகங்களும்—அன்றிக்கே, (யாவருமில்லா) எல்லாருமொக்க லயிக்கச் செய்தே

மார்க்கண்டேயாதிகள் "நித்யத்வம்" என்றிலவாரும் முண்டிறே. அங்ஙனுமொருவரின்றிக்கே. (மேல்) மேலென்றது-பண்டென்றபடி. (வரும்) என்றது, போனவென்றபடி. பண்டு போன. (பெரும் பாழ் காலத்து) கர்ஷகன் உவர்த்தரையை உவர்கழிய நீர்நிறுத்துமாபோலே, விளைகைக்கு இவற்றினுடைய துர்வாஸநையை அழிக்கைக்காக ஒரு ப்ரஹ்மாவினுடைய ஆயுஸ்ஸித்தனையும் அழித்திட்டுவைக்குமாயிற்று. (இரும்பொருட்கெல்லாம்) தேவமநுஷ்யாதி ரூபமாய், அஸங்க்யேயமாய், அசித் ஸம்ஸ்ருஷ்டங்களுமான ஜீவவஸ்துக்களுக்கெல்லாம். (அரும்பெறல்) இவ்வளவில் வந்து முகம் காட்டுவானொருவனைக் கிடையாதிறே. ஆகையால் பெறுதற்கரிய - (தனிவித்தொருதானுகி) நிமித்தோபாதாந ஸஹகாரி காரணத்ரயமும் தானேயாய். "வித்து" என்கையாலே, காரணவஸ்துவென்கை. "தனி" என்கையாலே, (15) "एको ह वै" (ஏகோ ஹ வை) என்று அத்விதீயனென்கை. அன்றிக்கே, எங்களை உண்டாக்கவேணுமென்று அபேக்ஷிக்கைக்கொருவரில்லை என்கை. "ஒரு" என்கையாலே, இதுக்கு ஸஹகாரிகள் ஒருவருமில்லை என்கை. (தானுகி) கார்யரூபமான ப்ரபஞ்சத்துக்கெல்லாம் வேண்டும் காரணகணமெல்லாம் தானேயாய். இப்படி அண்டஸ்ருஷ்டியளவும் தானே உண்டாக்கி இவ்வருகுஉள்ளவற்றை உண்டாக்குகைக்காகக் கோயிலுக்கு ஸ்ரீமதுரகவிதாஸரை நிர்வாஹகராக விட்டாற்போலே, ப்ரஹ்மாவை இப்பாலுள்ள ஸ்ருஷ்டிக்காக உண்டாக்கினுன். (தெய்வ நான்முகன்) இதர ஸஜாதீயனுன சதுர்முகனுகிற. (கொழுமுளையீன்று) இவ்வருகில் கார்யவர்க்கத்தையடைய உண்டாக்குகைக்கீடான ஶக்தியையுடைய ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவனொருவனுமே மூன்று கார்யமும் செய்யமாட்டானே, அதற்காக (முக்கணீசனித்யாதி) ஸம்ஹாரகனுன ருத்ரனேடே கூட மற்றும் கார்யத்துக்கு வேண்டும்தேவதைகள் பலரையும் உண்டாக்கி. இவைபலரும் தேவைக்கெல்லாம் அவன் பண்ணின வ்யாபாரமென்னென்னில்; (நுதலி) (6) "बहु स्यां" (பஹு ஸ்யாம்) என்று ஸங்கல்பித்து. "நுதலி" என்றது-கருதி என்றபடி. (மூவுலகம் விளைத்த) கீழும் மேலும் நடுவுமான லோகங்களை உண்டாக்கிற்று அவன் திருவுந்தியாயிற்று. அவனையொழியவேதானே இவையடைய உண்டாக்கிற்றாயிற்றுதிருவுந்தி. திருவுந்தி என்னெருபத்மமாய், அதடியாகவாயிற்று லீலாவிபூதியடைய உண்டாக்கிற்று. (மாயக்கடவுள்) ஆஶ்சர்ய ஶக்தியுக்தனுன பரதேவதை. (மாமுதல்) பரமகாரணமான மாயக்கடவுளென்று

தல்; மாயக்கடவுளானவனுடைய மாமுதலடியென்னுதல். ஆஸ்சர்ய ஶக்தியுக்தனை பரதேவதையான பரமகாரணபூதனனவனுடைய திருவடியென்னுதல்; "மாயக்கடவுள்" என்று அவனுடைய பரம ப்ராப்யமான திருவடிகளென்னுதல். (அடியே வாழியவென்று யாம்தொழ இசையுங்கொல்) "உன்சேவடி செவ்விதிருக்காப்பு" என்கிறபடியே. 4.

5. மாமுத லடிப்போ தொன்றுகவிழ்த் தலர்த்தி,
மண்முழுது மகப்படுத்து, ஒண்சுட ரடிப்போ
தொன்று விண்செலீஇ, நான்முகப் புத்தேள்
நாடுவியந் துவப்ப, வானவர் முறைமுறை
வழிபட நெறீஇ, தாமரைக் காடு
மலர்க்கண்ணொடு கனிவா யுடையது
மாய், இரு நாயிரு யிரம்மலர்ந் தன்ன,
கற்பகக் காவு பற்பல வன்ன,
முடிதோ ளாயிரந் தழைத்த,
*நெடியோய்க் கல்லது மடியதோ வுலகே.

பதவுரை:—மா முதல்—(பரமகாரணனை உனனுடைய, அடி—திருப்பாதமாகிற,ஒன்றுபோது—ஒரு(சிவந்ததாமரைப்)பூவை, கவிழ்த்து அலர்த்தி—கவிழ்த்துப்பரப்பி, மண்முழுதும் அகப்படுத்து—பூமிப்பரப்பையெல்லாம் கைப்பற்றியும், ஒண்—அழகிய, சுடர்—தேஜஸ்ஸை யுடைய, போது—புஷ்பம் போன்றதான, ஒன்று அடி—மற்றொரு திருவடியை, நான்முகன் புத்தேள்—பிரமனாகிற தேவதையின், நாடு வியந்து உவப்ப—லோகமானது அதிசயப்பட்டு, மகிழ்ச்சியுறவும், வானவர்—(அவ்வுலகத்திலுள்ள) தேவதைகள், நெறீ இ—சரியான வழியில் செலுத்துகையை, முறை—முறையிடுகிற, முறை—சாஸ்திரவழிப்படி, வழிபட—வணங்கும்படியும், விண்—ஆகாசத்தில், செலீ இ—செலுத்தியும், தாமரை காடு—தாமரைப்பூக்கள் நிறைந்த காடு, மலர்—புஷ்பித்தாற் போலிருக்கிற, கண்ணொடு—திருக்கண்களோடு கூட, கனி வாய் உடையதுமாய்—பழம்போன்ற (சிவந்த) திருபவளத்தையுடையவனாய், இரு—பரந்த (அநேகமான கிரணங்களையுடைய), ஆயிரம் நாயிறு—ஆயிரம் ஸூர்யர்கள், மலர்ந்தன்ன—உதித்தாற்போலேயிருக்கிற, முடி பற்பல—பல கிரீடங்களையும், கற்பகக் காவு அன்ன—கற்பகவநம் போலிருக்கிற, தழைத்த—ஓங்கிவளர்ந்துள்ள, ஆயிரம் தோள்—ஆயிரத் திருத்

* நெடியோய்க்கல்லதடியதோ என்று பாடாந்தரம்.

தோள்களையும் உடையவனாய், நெடியோய்க்கு அல்லதும்—எல்லாருக்கும் மேலானவனாய் விளங்குகிற எம்பெருமானையொழிந்த மற்றெவர்க்கும், உலகு—இவ்வுலகமாகமானது, அடியதோ—அடிமைப்பட்டதோ?

அவ:—ஐந்தாம் பாட்டு. (மாமுதலடியித்யாதி) "மாமுதலடியே வாழியவென்று யாம் தொழ இசையுங்கொல்" என்றார் கீழ்; நமக்கு மங்களாசாஸநம் * பண்ணப்புக்க உமக்குக் கருத்தென்னென்னில்; உறங்குகிற ப்ரஜைக்குத் தானறிந்தபடி ஹிதம் பார்க்கும் தாயைப் போலே நீ பண்ணின உபகாரம் அறிவைக்கடி ஒருவருமின்றியே இருக்க, அழிந்து கிடந்தவற்றையடைய உண்டாக்கி, † உண்டானவற்றுக்குக் காவலாக திக்பாலாதிகளை அடைத்துவிட்ட அநந்தரம், சிறியத்தைப் பெரியது நலியாதபடி நீ நாட்டுக்காவலாக நிறுத்தின இந்த்ரன், ‡ ஒரு ஆஸுரப்ரக்ருதியான மஹாபலிகையிலே ராஜ்யத்தைப் பறிகொடுத்துக் கண்பிசைய, "முதலிலே இவற்றை உண்டாக்கினோம், அநந்தரமாக இவற்றுக்குக் காவலாக திக்பாலாதிகளைக் கையடைப்பாக்கி நோக்கினோம், ஆகில், இனி அவைபட்டது படுகிறன" என்று கைவாங்கி இராதே ஸ்ரிய:பதியானஉன்னை அழித்து இரப்பாளனுக்கிக்கொடுத்து, இட்டு வளர்ந்த கையைக்கொண்டு இரந்து, இந்த்ரன் கார்யம்செய்து தலைக்கட்டின செயலொன்றையும் அநுஸந்தித்தால் உனக்கன்றிக்கே மற்றையார்க்கோ மங்களாசாஸநம் பண்ண § வகுப்பது என்று இந்த ப்ரஸங்கத்திலே திருவுலகளந்தபடி ப்ரஸ்துதமாக அத்தைப்பேசி அநுபவிக்கிறார்.

வ்யா:—(மாமுதலடிப்போதொன்று கவிழ்த்தலர்த்தி) * [நின்றதோர் பாதம் நிலம்புதைப்ப] திருவுலகளந்தருளுவதாக நின்றபோது நின்ற திருவடி அந்நிலையில் ‖ "ஒண்மிதியில் புனலுருவியொருகால் நிற்ப" என்கிறபடியே ஆவரண ஜலத்துக்குட்பட்டத்தை அடைய தன் கீழே இட்டுக் கொண்டது. வளர்ந்த திருத்தோள்கள் வ்யாபித்து திக்குகளை அளந்து கொண்டன; * [அன்று கருமாணியாய்] ஸ்ரிய: பதியான நீ "உண்டு" என்றிட்ட போதோடு "இல்லை" என்று மறுத்த போதோடு வாசியற ப்ரீதியோடே போம்படியான இரப்பிலே தகணேறின வடிவை உடையையாய்க் கொண்டு இரந்து உன்படி ஒரு

* (பா) பண்ண அடுப்பது. † (பா) உண்டாக்கினவற்றுக்கு. ‡ ஒரு என்ற பதம் க்வாசித்கம். § (பா) அடுப்பது. * முதல் திருவ (61). ‖ திருநெடுந்தா-5

வர்க்கும் தெரியாதபடி மறைத்து வர்த்திக்கிறவனே! நீ இச்செயல் செய்தது இந்த்ரனொருவனுடைய அபேக்ஷிதம் செய்கைக்கன்றிறே; "ஆரேனுமாகத் தன் திருவடிகளிலே தலை சாய்த்தார்க்காகத் தன்னை அழியமாறியும் கார்யம் ‡ செய்வானொருவன்" என்று உன்படியை அநுஸந்தித்து ஆஸ்ரிதர் மார்விலே கைவைத்து உறங்குகைக்காகச் செய்த செயலிறே இது. கீழ்ச்சொன்னபடியே "மாமுதலடிப்போது" என்று பரமகாரணமானவனுடைய திருவடியென்னுதல்; அன்றிக்கே "மாமுதலடிப்போது" என்று திருவடி தனக்கேயாய், சேஷபூதரடைய வந்து சேருவது திருவடிகளிலே ஆகையாலே அவர்களுக்குப் பரமப்ராப்யமான திருவடி என்னுதல். "அடிப்போது" என்றது, அடியாகிற செவ்விப்பூ என்றபடி.|| (அடி-திருவடி) திருவடியாகிற செவ்விப்பூவை. (கவிழ்த்தலர்த்தி) திருவடியைப் பரப்பி எல்லாவற்றையும் அளந்து கொள்ளுகிறவிடத்தில் சிறியதின் தலையிலே பெரியது இருந்தால் சிறியது நெருக்குண்ணக்கடவது; அப்படியே திருவடியின் கீழ்ப்பட்ட பதார்த்தங்கள் நெருக்குண்டதில்லையோ என்னில், ஒருசெவ்வித் தாமரைப்பூவைக் கவிழ்த்தலர்த்தினால் அதினுள் அல்லிக்குள்ள நெருக்கிறே திருவடியின் கீழ்ப்பட்ட பதார்த்தங்களுக்குள்ளது. *"ஒண்மிதி" என்னக்கடவதிறே. (மண்முழுதுமகப்படுத்து) *"புனலுருவி" என்கிறபடியே ஆவரண ஜலத்துக்குட்பட்டதடையத் தன் கீழே இட்டுக்கொண்டு. இதுவாகில்இத்திருவடி செய்தது,மற்றைத் திருவடி செய்ததென்னென்னில், (ஒண்சுடரடி) * "ஒருகாலும் காமருசீர் †" என்று தொடங்கி மேல் சொல்லுகிறபடியே மேலுள்ள லோகங்களடைய அளந்துகொண்டது. (ஒண்சுடரடிப்போதொன்று) மநுஷ்யர்களெல்லார்க்குமுள்ள துர்மாநம் இந்த்ராதிகளில் ஓரொருவர்க்கும் உண்டாயிருக்கும்; அப்படிப்பட்டவர்களை அடைய பக்நாபிமாநராக்கிக்கொள்ளுகையாலே வந்த புகரையுடைத்தாயிருக்கை. அழகிய சுடரையுடைய செவ்விப்பூவாகிய ஒரு திருவடி. (விண்செலீஇ) விண்ணையடைய

---

‡ (பா) செய்யுமொரு ஸர்வேஸ்வரன். || குண்டலிதம் க்வாசித்கம்.
* திருநெந்தா (5). † "அவுணனுள்ளத்தெண்மதியும் கடந்தண்டமீது போகி இருவிசும்பினூடுபோயெழுந்து" என்று இதுவரையில் ப்ரதீகம் சில ஸ்ரீகோசங்களில்.

வ்யாபித்தது. எவ்வளவிலே சென்றதென்னில், (நான் முகப்புத்தேள் நாடுவியந்துவப்ப) சதுர்முகனுகிற தேவதையினுடைய லோகமான இத்தைக்கண்டு வியப்பதும் செய்தது. "அந்நீர்மை ஏதிப்பாயததொரு மேடுதேடிப் போந்தோமானேம், நீர்மை இங்கே வந்தேறுவதே? இதோர் ஆஶ்சர்யமிருந்தபடியென்!" என்று விஸ்மயப்படுவதும் செய்தது. "திருவடிகளுக்கு ஆகாதாரில்லையாகாதே, அவன் உளனுக்க நாமல்லோம் என்று அகலப்பார்த்தாலும் அகலவிரகின்றிக்கே இருந்ததி! இதொரு அலப்யலாபம் இருந்தபடியே!" என்று உகப்பதும் செய்தது. அவ்வளவில் ப்ரஹ்மா செய்ததென்னென்னில், ‡[குறை கொண்டு நான்முகன் குண்டிகை நீர்பெய்து] நினைவின்றிக்கே இருக்கத் திருவடி கையிலே வந்திருந்தவாறே அலப்யலாபத்தாலே தடுமாறிச் சுற்றிலே பார்த்தான்; அவ்வளவிலே தார்மதத்வம் நெகிழ்ந்து நீராய்க்குண்டிகையிலே புக்கிருந்தது; அத்தைக்கொண்டு திருவடியை விளக்கினன். அவ்வளவில் "இது நமக்கு நல்லவிடம்" என்று சிவன் தன் தலையை மடுத்தான். (16) "पावनार्थं जटामध्ये दधार शिरसा हरः" (பாவநார்த்தம் ஜடாமத்யே ததார ஶிரஸா ஹர:) என்று தன்னுடைய ஶுத்த்யர்த்தமாக ஜடையிலே தரித்தான். (16) "योग्योऽस्मीत्यवधारणात्" (யோக்யோஸ்மீத்யவதாரணாத்) திருவடிகளுக்கு யோக்யரல்லாதாரில்லை என்று பார்த்தான். (16) "वर्षायुतान्यथ बहून् न मुमोच तथा हरः" (வர்ஷாயுதாந்யத பஹூந் ந முமோச ததா ஹர:) என்கிறபடியே கற்சரக்கு வந்தால் விடுவாரில்லையிறே. கிடையாதது கிடைத்தவாறே "விடேன்" என்று தலையிலே வைத்துத் திருவடியைக் கட்டிக்கொண்டு நெடுங்காலம் நின்றான். §[சதுமுகன் கையில் சதுப்புயன்றாளில் சங்கரன் சடையினில் தங்கி] என்றிறே கங்கைக்கு வரலாறு சொல்லுவது. முந்துற ப்ரஹ்மாவின் கையிலே இருந்து, பின்னை ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே தங்கி, அநந்தரம் ருத்ரன் தலையிலே வந்து விழுந்தது. இத்தால் ப்ரஹ்மாதான் பெற்றதென்னென்னில் *[தாணிநிமிர்ந்தளப்ப நீட்டியபொற்பாதஞ்சிவந்ததன் கையனைத்து மாரக்கழுவினுன்] அநேகம் கைகளைப் படைத்தத்தாலுள்ள ப்ரயோஜநம் †பெறும்படி திருவடியை விளக்கப்பெற்றான். *[குறைகொண்டு] தன்னுடைய வறு

---

‡ நான். திருவ (9) § பெரியாழ்-திரு (4-7-3) † பெறும்படி என்று சில ஸ்ரீகோசங்களில் பாடமில்லை.

மையை முன்னிட்டுக் கொண்டு * [குண்டிகைநீர்பெய்து மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி] வேதத்தில் அநுகூலமான வாக்யங்களைக்கொண்டு மங்களாசாஸநம் பண்ணி. * [கறைகொண்ட] "இவன் அவிவேகத்தாலே விளைவதறியாமே அநர்த்தரூபங்களாயிருக்குமவற்றைச் செய்யாநின்றான், இனி இதனோத்த அமங்களங்கள் வாராதொழிய வேணும்" என்று விஷமப்ரஜைகள் மேலே தீர்த்தத்தைக்கொண்டு "விநீதனாக வேணும்" என்று தெளிக்குமாபோலே ருத்ரன் ஜடையிலே விழும்படி கழுவினான். இதுவாகில் அவன் செயல், ‡ அவ்வவ லோகத்திலுள்ள தேவதைகள் செய்ததென்னென்னில், (வானவர் முறைமுறைவழிபடநெறீ இ) தேவர்கள் நெறிபட்டு பகவத் ஸமாஶ்ரயணம் பண்ணும்படியைச் சொல்லுகிற சாஸ்த்ரங்களின் வழியே திரளாக ஆஶ்ரயிக்க; திருவனுக்கன் திருவாசலில் திரள்திரளாகப் புக்குத் திருவடி தொழுமாபோலே ஸமாராதந விதியின்படியே வழிபட்டாஶ்ரயிக்க. அவ்வளவிலவன் செய்ததென்னென்னில், (தாமரைக்காடு இத்யாதி) ஆரேனுமாகத் தன் திருவடிகளிலே தலையை வைத்தால் ஆதித்ய ஸந்நிதியில் தாமரைபோலே திருக்கண் செவ்வி பெறுமாயிற்று. தாமரைக் காடலர்ந்தாற்போலே இருக்கிற திருக்கண்ணோடே கனிந்த வாயையுமுடைத்தாயிருப்பதுமாய். (இருநாயிறு இத்யாதி) நாமிங்கு காண்கிற ஆதித்யனைப் போலன்றிக்கே அநேகமாயிரம் கிரணங்களையும் கீழ்ச்சொன்ன விசேஷங்களையுமுடையராயிருப்பார். ஆயிரமாதித்யர்கள்சேர உதித்தாற்போலேயாய். § பலவான கற்பகச்சோலை போலேயுமாய், இப்படியிருக்கிறதேதென்னில் (முடிதோளாயிரம் தழைத்த) ஞாயிறாயிரம் மலர்ந்தாற்போலே இருக்கிறது திருவபிஷேகம். பலவகைப்பட்ட கற்பகச்சோலை போலே இருக்கிறது அநேகமாயிரமாய்ப் பணைத்த திருத்தோள்கள். (நெடியோய்க்கு) இப்படி தன்னை அழியமாறி இரந்து அவன் கார்யம் செய்து தலைக்கட்டச் செய்தேயும், தன்னை விஞ்வலித்துடனே கிடந்தவன் முடியவிழ்த்தவனைப்போலே அநுதபித்து, "மஹாபலிபோல்வார் நலிவதற்கு முன்னே முற்கோலி நோக்கப்பெற்றிலோம், பறிகொடுத்தோம், பிற

---

‡ (பா) அவன் லோகத்திலுள்ள. § இங்கு கற்பகக்காவு பற்பலவென்று ப்ரதிகம் சில ஸ்ரீகோசங்களில் காண்கிறது.

பாடாரானும்" என்று || நோக்கி லஜ்ஜித்து ஒன்றும் செய்யாதானாய்த் தன் குறையை நினைத்திருக்குமவனாயிற்று. (நெடியோய்க்கல்லதுமடிய தோவுலகே) இப்படி ஸர்வரக்ஷகனான தன்னையொழிய ஜகத்து மற்றும் சிலர் காற்கீழே கிடந்ததோ? * மங்களாசாஸநம் பண்ண. எல்லாரையும் ஆஶ்ரயிப்பித்துக் கொள்ளுகிறவர்கள் தலைமேலே காலை வைத்த உனக்கு மங்களாசாஸநம் பண்ண அடுக்குமோ? உன் காலின் கீழே துகையுண்டவர்களுக்கு மங்களாசாஸநம் பண்ண அடுக்குமோ? சொல்லிக்காண். 5.

6. ஓ ஓ உலகினதியல்வே, ஈன்றோளிருக்க
மணைநீராட்டிப், படைத்திடந்துண்டுமிழ்ந்
தளந்து, தேர்ந்துலகளிக்கும் முதற்பெரும்
கடவுள்நிற்பப், புடைப்பலதானறி
தெய்வம்பேணுதல், தனாது
புல்லறிவாண்மை பொருந்தக்காட்டிக்
கொல்வனமுதலாவல்லன முயலும்,
இனையசெய்கையின்புதுன்பளித்
தொன்மாமாயப் பிறவியுள் நீங்காப்
பன்மாமாயத்தழுந்துமா நளிர்ந்தே.

பத:—உலகு—இப்பூமண்டலத்தை, படைத்து—(ஆதியில்) உண்டாக்கி, இடந்து—(வராஹாவதாரகாலத்தில் அண்டபித்தியிலிருந்து) குத்தி எடுத்து, உண்டு—(ப்ரளயகாலத்தில்) அமுதுசெய்து, உமிழ்ந்து—(அவாந்தரஸ்ருஷ்டிகாலத்தில்) வெளிப்படுத்தி, அளந்து—(த்ரிவிக்ரமாவதாரகாலத்தில் திருவடிகளால்) அளந்து, தேர்ந்து—(அதற்குமேல் ரக்ஷணோபாயத்தைச்) சிந்தைசெய்து, அளிக்கும்—ரக்ஷிக்கும்படியான, முதல் பெரும் கடவுள்—ஆதிகாரணனும் பரதேவதையுமான ஸ்ரீமந்நாராயணன், நிற்ப—(ஆச்ரயணீயனாக) இருக்க, (அவனை விட்டு), புடை—(அவனுடைய) விபூதியாகச்சொல்லப்பட்டனவாய், பல—பலவகைப்பட்டனவாய், தான் அறி தெய்வம்—(ஆச்ரயிக்கும்) தான் அறிந்த(சில) தேவதைகளை, பேணுதல்—(ரக்ஷகனாக) ஆதரிக்கை, தனாது புல் அறிவு—தன்னுடைய கீழான புத்தியை. ஆண்மை பொருந்த

|| (பா) என்று நோக்கிற்று. * இங்கு, சிலர் காற்கீழேகிடந்தவர்களிலே சிலர்க்கு மங்களாசாஸநம் பண்ண அடுக்குமோ என்று கோசாந்தரங்களில் பாடம் காண்கிறது.

சாட்டி—பெரியோர்கள் (மனத்தில்) படும்படிக் காண்பித்து, ஈன்றோள் இருக்க—பெற்றவள் இருக்கும்போது, (அவளைக் கவனியாமல்), மணை நீராட்டி—(அசேதநமான) மணைக்கு நீராட்டுவது போலிருக்கிறது; செய்கை—(அத்தேவதைகளின்) செய்கைகள், கொல்லைமுதலா—ஹிம்ஸிக்கை முதலிய, அல்லன முயலும்—செய்யத்தகாத காரியங்களைச்செய்கையாகிற, இனைய—இப்படிப்பட்டதன்மையையுடையவை. அளி—(அத்தேவதைகள் அளிக்கும்) பலமாவது, துன்பு—துக்கத்துடன் கூடிய, இன்பு—ஸுகமாகும்; (ஆகையால் அத்தேவதைகளை ஆச்ரயிக்கை) தொல்—அநாதியாய், மா—பெரியதாய், மாயம்—ஆச்சர்யகரமான, பிறவியுள்—ஸம்ஸாரத்தில் நின்றும், நீங்கா—நீங்குகையன்றிக்கே, பல் மா—பலவாய் பெரியதாய், மாயத்து—(மோஹத்தை உண்டாக்கக் கூடிய) சப்தாதிவிஷயங்களில், நளிர்ந்து—நன்றாக, அழுந்துமா—அழுந்துகைக்கு இடமாகும். உலகினது இயல்வு—லோகத்தின் ஸ்வபாவம், ஒ ஒ—என்னே!

அவ:—ஆறும்பாட்டு. (ஒ ஒ வுலகு) இவற்றினுடைய ஸத்தையை ஸார்த்தமாக உபாதாநம் பண்ணி ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டித்த அநந்தரம் "இனிமேலவை பட்டதுபடுகிறன" என்றிராதே, சிறியத்தைப் பெரியது நலிந்து மஹாபலி போல்வார் பருந்திருஞ்சிறைப்போலே அபஹரிக்க, ஸ்ரிய:பதியானவன் தன் மேன்மைபாராதே தன்னை அழித்து ரக்ஷித்தசெயலை அநுஸந்தித்து, சேதநராயிருப்பார்க்கு, இவனுக்கு மங்களாசாஸநம் பண்ணி வர்த்திக்கவிறே செய்யவடுப்பது, சென்றார் கீழே. "இவர்கள் தாங்கள் சேதநராகைபின்பு, இதிலே ஒருப்படா தொழிவார்களோ?" என்று லௌகிகரைப் பார்த்தார்; அவர்கள் வருந்திக் கைவிடுவது இவனொருவனையுமேயாய், விருப்புகைக்கும் இவனையொழிந்தவையாகவமைந்து, "நான்" என்றும் "என்னது" என்றும், பகவத் வ்யதிரிக்தரை ரக்ஷகராகத் தேடியும் போருகிறபடியைக் கண்டு இதிருந்தபடியென், (17) "एकस्मिन्नप्यतिक्रान्ते मुहूर्ते ध्यानवर्जिते। दस्युभिर्मुषितेनेव युक्तमाक्रन्दितुं भृशं" (ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே। தஸ்யுபிர்முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும் ப்ருசம்) என்கிறபடியே பகவத்த்யாநத்திற்கு விச்சேதம் பிறந்தால் அதுக்குப் பரிஹாரமாகத் திருநாமஸங்கீர்த்தநம் பண்ணுகை, சீரிய தநம் அபஹ்ருதமானால் எல்லாருமறியக் கூப்பிடுமாபோலே கீழ்ப்பிறந்த விச்சேதத்திற்குக் கூப்பிடக்கடவதிறே; அப்படித் தங்களிழவுக்குக் கூப்பிடவேண்டியிருக்க, அவர்கள் அது தானுமறி

யாதே இருக்க, அவர்களிழவு பொறுக்கமாட்டாமை தாம் §"ஓ! ஓ!" என்று கூப்பிடுகிறார்.

வ்யா:—(ஓ ஓ) இருந்தாரிருந்தவிடங்களிலே செவிப்படும்படி கூப்பிடுகிறார். (உலகினதியல்வே) ஒரு விபூதியாகத் தன்னை அநுபவிக்கிற அநுபவத்துக்கு விச்சேதமின்றிக்கே செல்லுகிறாப்போலே இதொருவிபூதி தன்பக்கல் வைமுக்யம் பண்ணும்படி வைப்பதே! இதொரு லோகத்தினுடைய ஸ்வபாவமே! நீரிங்ஙனே "ஓ!" என்றிட்டு நெடுவாசிபடக் கூப்பிடுகைக்கு லோகமாகத் தான் செய்ததென்னென்னில், என்றோளிருக்க மண்ணீரோட்டி இராநின்றார்கள். உற்பத்திக்கு முன்னேயுண்டாக்குகைக்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணி, பின்னை கர்ப்பத்திலே தரித்து ப்ரஸவ வேதனையை அனுபவித்து, அநந்தரம் தண்ணியதரையிலே இட்டுக்கொடு துவண்டு நோக்கினால், அறிவு பிறந்து பண்ணின உபகாரத்தை ஸ்மரிக்குமளவானவாறே அவளை விட்டு, ஒரு உபகாரமும் பண்ணவுமறியாதே இவன் பண்ணின உபகாரத்தை ஸ்மரிக்கவுமறியாதே இருப்பதொரு அசித் பதார்த்தத்தைக் கொண்டாடுவாரைப்போலே வகுத்த விஷயத்தை விட்டு அப்ராப்த விஷயத்தை ஆதரியாநின்றார்கள். நீர் "என்றோள்" என்று தாயாக நினைக்கிறதுதானாரை என்னில் (படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து தேர்ந்துலகளிக்கும் முதற்பெருங் கடவுள்) இவையடங்கலும் போகமோக்ஷசூந்யமாய்த் தமோபூதமாய் அசித்கல்பமாயிழந்துகிடக்கிறபோது இவற்றினுடைய தசையைக் கண்டு "ஐயோ!" என்றிரங்கி (6) "बहु स्यां" (பஹு ஸ்யாம்) என்று ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டமான அநந்தரம் ப்ரளயங்கொள்ள, நீருக்குஞ் சேற்றுக்கு மிறாயாத மஹாவராஹமாயெடுத்து, திரியப்ரளயம் வருமென்று முற்கோலி வயிற்றிலே வைத்து, உள்ளே இடந்து தளராதபடி வெளிநாடு காணவுமிழ்ந்து, எல்லை நடந்து மீட்டு, இப்படி ஸர்வவித ரக்ஷணங்களையும் பண்ணச்செய்தே, பின்னையும் தன்னை விஸ்வஸித்து அருகே கிடந்தவனை மடிதடவினவனைப்போலே அநுதபித்து ஒன்றுஞ் செய்யாதானாய் மேன்மேலன ரக்ஷணோபாயங்களைச் சிந்தித்து, ஒருவரை இருவரையன்றிக்கே வரையாதே எல்லாரையுமொக்க ரக்ஷிக்கிற அத்விதீய பரதேவதையானவன். "ஆரோ வருவார்" என்று (18) "आशया यदि वा रामः" (ஆசயா யதி வா ராம:) என்கிறபடியே அவஸர ப்ரதீக்ஷனாய் நிற்க. ✻ இவ்வோ உபகாரங்களைப்

§ (பா) "ஓ என்று என்று" ✻ (பா) இவ்வுபகாரங்களை

பண்ணிற்றிலனாகிலும் ஆஶ்ரயிக்கைக்கு மூட்டுப் பொறுக்கும் அத்வி தீய பரதேவதை இவனல்லதில்லை. யயாதி ஸாதநாநுஷ்டாநம் பண்ணி ஸ்வர்க்கத்திலே இந்த்ரனோடு அர்த்தாஸநத்திலே இருக்கச் செய்தே, "கர்மபூமியில் புண்யக்ருத்துக்களார்" என்று அவனைக் கேட்க, ஒரு தேவதை முன்பே பொய்சொல்லிற்றாக வொண்ணா தென்று 'நான் வர்த்தித்த காலத்தில் என்னை யெல்லார்க்கும் மேலாகச் சொல்லுவார்கள்" என்ன, "ஆத்மப்ரசம்ஸை பண்ணினாய், "த்வம்ஸ" என்று பூமியிலே விழும்படி சபித்தானென்று. இவ் விடத்தை பட்டர் வாசித்துப்போந்தகாலத்திலே "இந்த்ரன் தன்னை ஆஶ்ரயித்துப்பெற்ற உத்கர்ஷமாயிருக்க அர்த்தாஸநத்திலே யிருந் தது பொறுக்கமாட்டாமை 'ஆத்மப்ரசம்ஸை பண்ணினாய்' என்றொரு வ்யாஜத்தையிட்டுத் தள்ளினானாயிருந்தது. இது தான் வேதோப ப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான மஹா பாரதத்திலே எவ்வர்த் தத்தினுடைய விசதமாக ருஷி யெழுதினான்" என்று கேட்க, "தான் தன்னோடொக்க உத்கர்ஷத்தைக் கொடுக்கவல்லதுவும், அத்தைப் பொறுக்கவல்லதுவும் பரதேவதையானபின்பு ஆஶ்ரயிக்கப்படுமது வும் பரதேவதை; அல்லாதார் ஆஶ்ரயணீயரல்லர் என்னுமிடம் ப்ரகாசிக்கைக்காக" என்றருளிச்செய்தார். அவனை விட்டால் சுருக்கமொழிய அவனோடு தோள்தீண்டியாயிருப்பாரை யாஶ்ரயிக்கப் பெறினுமாமிறே. (புடைப்பலதானறிதெய்வம் பேணுதல்) ஒரு புடை களிலே-அர்த்தவாதித்து அவனுடைய விபூதியைப் பேசுகிறவிடத் திலே, அவனுடைய உத்கர்ஷத்துக்காக இவ்வருகே சிலருக்குச் சில மினுக்கஞ்சொல்லுமே; அத்தைக்கொண்டு கிடந்தவிடமறியாமேயொ துங்கிக் கிடந்தவற்றை யாயிற்று ஆதரிப்பது. அதுதன்னிலும், ஒரு தேவதையே இவனுடைய ஸர்வாபேக்ஷிதங்களையுங் கொடுக்கமாட் டாதே. ஒருவனைப் பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தைக் கொடுக் கிறானன்றே. அது வேண்டில் (19) "गतिमिच्छेज्जनार्दनात्" (கதிமிச் சேத் ஜநார்த்தநாத்)என்னக்கடவதிறே. ஆக, விபூதி காமனாகில் ஒன்றனைப் பற்றுவான், புத்ரகாமனாகில் ஒன்றனைப் பற்றுவான், பசுகாமனாகில் ஒன்றனைப்பற்றுவான் என்றிங்ஙனே ஒன்றுக்கொருவராய்ப்பலராயிருக்கும். (தானறி தெய்வம்) ப்ரமாண ப்ரஸித்தமாயிருப்பதொன்றன்றே; ரஜோ குணத்தாலும் தமோகுணத்தாலும் மிக்கிருக்கிறதானறியும்தெய்வத்தை யாயிற்று பற்றுவது. (பேணுதல்) அவை தனக்கென்னவொரு உத்கர்ஷ

மில்லாமைபாலே, மொட்டைத்தலையனை §"பனியிருங்குழலன்" என்று கவிபாடுவாரைப்போலே ஆஸ்ரயிக்கிற இவனுக்கே பரமாயிற்று, அத் தேவதைகளுக்கு ஈஸ்வரத்வம் ஸம்பாதித்துக்கொடுக்கையும். (தனது) இவன் சொன்னபோதாக அவை ஆச்ரயணீயங்களாகிறனவுமல்ல; இவன் றன் அங்கே சில பெற்றானுகிறானுமல்லன்; இத்தால் பலித்ததாயிற்று விசேஷஜ்ஞர்க்குத் தன்னறிவில் குறைவைப் ப்ரகாசிப்பித்தானுமித் தனை; (தனது புல்லறிவாண்மை பொருந்தக் காட்டி) தன்னுடைய ஜ்ஞானத்தில் அல்பதையை விசேஷஜ்ஞர்க்குத் தேறப்படி தெரிவிப் பித்து. பலம்பெறும்போது பரதேவதையை ஆஸ்ரயித்துப்பெறவேணு மே, ஆஸ்ரயிக்குமிடத்தில் (20) "निदिध्यासितव्यः" (நிதித்யாஸிதவ்ய:) என்றும், (5) "तमेवं विद्वानमृत इह भवति। नान्यः पन्थाः" (தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி, நாந்ய: பந்தா:) என்றும் உபாஸந வாக்யங் களிற் சொன்னபடியே காரணவஸ்துவை உபாஸிக்கிறதன்றிறே. (கொல்வன முதலாவல்லன முயலுமினையசெய்கை) "ஆட்டை அறுத் துத்தா, ப்ரஜையை அறுத்துத்தா" என்பன சிலவும், நிஷித்த த்ரவ்யங் களைக் கொண்டு பரிமாறவேண்டுவன சிலவும் இவையாயிற்று செயல் கள். ஆஸ்ரயணங்கள் தானே நரகமாயிருக்கதே! இப்படி ஆஸ்ரயித் துப் பெறும் பலத்தைப் பார்த்தால் அதுபெறுமதில் பெருதொழிகை நன்றாயிருக்கும்; (இன்பு துன்பளி) ஸுகது:க்கமிச்ரமான பலத்தை யாயிற்று தருவது. நிஷ்க்ருஷ்டஸுகமான மோக்ஷம் அவற்றுக்கில் லையே. ஆகச்செய்ததாயிற்றென்னென்னில், தன்னோடொத்திருப் பானொருவனாய், பவோபகரணபூதனாய், நித்யஸம்ஸாரியாயிருப்பா னொருவனை ஆஸ்ரயித்துப் பலம் பெறப்பார்த்தவிது தான் நித்யஸம் ஸாரியாகைக்குக் க்ருஷிபண்ணினுயிற்று; (தொன்மாமாயப் பிறவி யுள் நீங்கா வித்யாதி) பழையதாய் காரணமாயிருக்கிற மாமாய முண்டு—இம்மாயை, "இது ஒருவரால் கடக்க வொண்ணாது" என்று அவனருளிச்செய்த ப்ரக்ருதி; இப்ரக்ருதி ஸம்பந்த நிபந்தநஜந்மங் களிலே புக்குமீளவிரகின்றிக்கே, பலவகைப்பட்டிருக்கிற மாமாய முண்டு—சப்தாதி விஷயங்கள், அவற்றிலே, (நளிர்ந்தழுந்துமே) எடுத் ததனையும் தரையளவு மழுந்தாநின்றன. (உலகினதியல்வே) வகுத்த விஷயத்தைப்பற்றி நிஷ்க்ருஷ்ட ஸுகத்தைப்பெறப்பாராதே சேதநர் அப்ராப்தவிஷயத்தை யாச்ரயித்து அநர்த்தத்தைப் பெறப் பார்ப்பதே! இதென்ன படுகொலை என்கிறார். 6.

§ பனியிருங்குழலன்—குளிர்ந்தும் பரந்துமிருக்கிற மயிரையுடையவன்.

7. நளிர்மதிச்சடையனும்நான்முகக்கடவுளும்,
தளிரொளியிமையவர்தலைவனுமுதலா,
யாவகையுலகமும் யாவருமகப்பட,
நிலம்நீர்தீகால்சுடரிருவிசும்பும்,
மலர்சுடர்பிறவும்சிறிதுடன்மயங்க,
ஒருபொருள்புறப்பாடின்றிமுழுவது
மகப்படக்கரந்து, ஓராலிலைசேர்ந்தவெம்
பெருமாமாயனையல்லது,
ஒருமாதெய்வம்மற்றுடையமோயாமே.

பதவுரை:—நளிர் மதி சடையனும்—குளிர்ந்த சந்த்ரனை தலையில் தரித்துள்ள ருத்ரனும், நான் முகம் கடவுளும்—நாலுமுகங்களையுடைய பிரமனும், தளிர் ஒளி—தளிர்போனற (அழகிய) தேஜஸ்ஸையுடைய, இமையவர் தலைவனும் முதலா—தேவர்களின் அதிபனான இந்த்ரனும் இவர்கள் முதலான, யாவகை உலகமும்—எல்லாவிதமான லோகங்களும், யாவரும் அகப்பட—எல்லா சேதநர்களும் உட்பட, நிலம்—பூமியும், நீர்—ஜலமும், தீ—அக்நியும், கால்—காற்றும், சுடர்—தேஜஸ்ஸினால், இரு—வியாபிக்கப்பட்டுள்ள விசும்பும்—ஆகாசமும், மலர் சுடர்—மலர்ந்தகிரணங்களையுடைய சந்த்ரஸூர்யர்களும், பிறவும்—மற்றுமுள்ள வஸ்துக்களும், உடன்—ஒரே காலத்தில், சிறிது—(வயிற்றில்) ஏகதேசத்தில், மயங்க—வஸிக்கும்படி, ஒரு பொருள்—ஒருவஸ்துவும், புறப்பாடு இன்றி—வெளிப்படாதபடி, முழுவதும்—எல்லாவற்றையும், அகப்பட—உள்ளே இருக்கும் வண்ணம், கரந்து—(உண்டு வயிற்றிலே) மறைத்து, ஓர் ஆலிலை—ஒரு ஆலினிலைமேல், சேர்ந்த—நித்ரை செய்யுமவனாய், எம்—என்னுடைய ஸ்வாமியாய், பெரு—பெரியனாய், மா—அளவிட்டறியமுடியாதவனாய், மாயனை அல்லது—ஆச்சர்யசக்தியுக்தனான ஸ்ரீமந்நாராயணனை ஒழிய, மற்று—வேறான, மா—பெரிய, ஒரு தெய்வம்—ஒரு தேவதையை, யாம்—நாம், உடையமோ—(ஆச்ரயணீயராக) உடைத்தாவோமோ?

அவ:—ஏழாம்பாட்டு. (நளிர்மதி இத்யாதி) "சேதநரெல்லாருக்கும் செய்யவடுப்பது-அவனுக்கு மங்களாசாஸநம் பண்ணுகையாயிருக்க இதரதேவதைகளை ஆச்ரயித்து ஸம்ஸாரபந்தம் வர்த்திக்கும்படி பண்ணாநிற்பர்கள், இதென்ன படுகொலை, இவ்வநர்த்தமென்னால் பொறுக்கப் போகிறதில்லை" என்றார் கீழ்; "அல்லாதார் செய்தபடி

செய்கிறார்கள்; நாம்மூந்துறமுன்னம் § இவ்வநர்த்தத்தைத் தப்பப் பெற்றோம்" என்று உகக்கிறாரிதில். நாட்டார் கண்டார் காலிலே குனிந்து திரியாநிற்க, நமக்கு முந்துறமுன்னம் தேவதாந்தரஸ்பர்சமின்றிக்கே இருக்கப்பெற்றோமே, இந்தலாபமே அமையாதோவென்று ஸ்வலாபத்தைப்பேசி இனியராகிறார். "அவன் ஸர்வபதார்த்தங்களையும் வயிற்றிலேவைத்து நோக்குகிறபோது நம்மோடொக்க அவன் வயிற்றிலே புக்குப் புறப்பட்டவர்களிலே சிலரை ஆச்ரயித்து, பலத்துக்கு அவர்கள் கைபார்த்திருக்கையாகிற இப்புன்மையின்றிக்கேயொழியப்பெற்ற இதுவே அமையாதோ?" என்று ப்ரீதராய், அல்லாதப்ரபந்தங்களை அந்தாதியாக்கிக் கொண்டுபோந்த இவர், இத்தை அந்தாதியாக்கமாட்டாதே உகப்புக்கிதுக்கு மேற்பட இல்லாமையாலே இவ்வநுபவத்தோடே தலைக்கட்டுகிறார். "நளிர்மதிச் சடையனும்" என்று தொடங்கி யாவகையுலகமும் யாவருமகப்பட வாயிற்றவனுண்டது, தன்னோடொக்கச் சிறையிருந்தவர்களிலே சிலரை ஆச்ரயித்துப் பெறுவதொரு பலமுண்டோ?

வ்யா:—(நளிர்மதிச்சடையனும்) ஸாதக வேஷந்தோற்ற ஜடையைத்தரித்துக் கொண்டிருக்கச்செய்தேயும் தார்மாநத்தாலே "ஸாதக ப்ரதாநன்" என்று தோற்றும்படி தாழை மடலைக்கீறித் தலையிலே வைப்பாரைப்போலே குளிர்ந்த சந்த்ரனை ஜடையிலே தரித்தருத்ரனும். (நான்முகக் கடவுளும்) அவன்றனக்குங்கூட ஜநகனாய் ஸ்ருஷ்டிக்கு உறுப்பாக நாலுமுகத்தையுடையனாயிருக்கிற சதுர்முகனாகிற தெய்வமும். இவர்களிருவருமிரண்டு கார்யத்துக்குக் கடவராயதிகாரிகளாயிறே இருப்பது; குசவனையும் புறமடக்கியையும்போலே. (தளிரொளியித்யாதி) போகப்ரவணராகையாலே அப்ஸரஸ்ஸுக்களை மெய்க்காட்டுக்கொண்டு வடிவைப்பேணி தேவர்களுக்கு நிர்வாஹகனாயிருக்கிற இந்த்ரன் தொடக்கமாக எவ்வகைப்பட்ட லோகங்களையும், அவ்வவ லோகங்களிலுண்டான எல்லாச் சேதநரையும் தப்பாமே. (நிலநீரித்யாதி) அவர்களெல்லார்க்குங்காரணமாயிருக்கிற பூதபஞ்சகமும். "சுடரிருவிசும்பும்" என்றது-உண்டாமிடத்தில் மற்றை நாலுக்கு முன்னே † உண்டாமதாகையாலும், அழியுமிடத்தில் அவையழிந்தாலும் தான் சிறிதுகாலம் ‡ நின்றழியுமதாகையாலும் வந்தபுகரைப் பற்ற. (மலர்சுடரித்யாதி) சந்த்ர ஸூர்யர்களும் மற்றுமுள்ள மநுஷ்யாதிகளும் இவையடைய. (சிறிதுடன் மயங்க) சிறியதாய்க்கொண்டு உடனே மயங்க. சிலபேருக்கிடச்சொல்லி உண்பார்பலருண்டானால் சோறுமட்டமாமாபோலே, ரஹஸ்யமாய்க்கொண்டு நாநாவாய் புகுகிற பதார்த்தங்கள் அளவுபடும்படியாகவாயிற்று தன்வயிற்றிலேவைக்கிறபோது பாரிப்பின்பெருமை. இவையடங்க அல்பமாகக்கொண்டு ஒன்று ஒன்றைவிடாதே தன் பக்கலிலே கசை. அன்றிக்கே, "சிறிதுடல்

§ (பா) இவ்வர்த்தத்தைப்பெற்றோமென்று. † (பா) உண்டாய்.
‡ (பா) நின்றழியும்படி தாழ்க்கையாலும்.

மயக்க” என்று பாடமாய், ஓராலந்தளிரினுள்ளடங்கின வடிவிலே கலச. “உடன், உடல்” என்கிறவிடத்தில் நகர லகரங்களுக்கொரு விரோதமில்லை. (ஒருபொருள் புறப்பாடின்றி முழுவதுமகப்பட) ஒருபதார்த்தமும் பிறிகதிர்படாதபடி எல்லாவற்றையும்; (கரந்து) ப்ரளயம்வந்தால் முன்புற்றைக்காட்டிலும வயிற்றை இளைத்துக்காட்டலாம்படி ஒரு விக்ருதியின்றிக்கே இருக்கை. (ஓராலிலை சேர்ந்த எம்பெருமாமாயனையல்லது) இவற்றை இப்படி வயிற்றிலே வைத்துத் தான் முகிழ்விரியாதே பசையிருப்பதொரு ஆலந்தளிரிலே கண்வளர்ந்த நம்முடைய ஆச்சர்யசக்தியுக்தனையொழிய. * [பாலன் றனதுருவாயேழுலகுண்டு] (21) “यशोदास्तनन्धयमत्यन्तं विमुग्धं’ (யசோதாஸ்தநந்தயமத்யந்தம் விமுக்தம்) என்னும்படி முக்தமான வடிவையுடையனாய், ஸகலலோகங்களையும் வயிற்றிலே வைத்து. * [ஆலிலையின்மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர்] § “ஆலின் மேலோரிளந்தளிரிற் கண்வளர்ந்தவீசன்” என்கிறபடியே முகிழ் விரியாதஆலந்தளிரிலே சரிக்கைக்கு ஒரு யசோதாதிகளின்றிக்கே இருக்க நீ கண்வளர்ந்தநளினவற்றை “மெய்” என்று ஆப்தரான ருஷிகள் எழுதாநின்றார்கள். (22) “कथं न्वयं शिशुश्शेते लोके नाशमुपागते। शाखायां वटवृक्षस्य पल्लवे तु शुचिस्मितः” (கதம் ந்வயம் சிசுச்சேதே லோகே நாசமுபாகதே। சாகாயம் வடவ்ருக்ஷஸ்ய பல்லவேது சுசிஸ்மித:) என்றாயிற்று அவர்களெழுதுகிற பாசுரம். *[ஆலன்று வேலைநீருள்ளதோ] அவ்வால்தான் அன்று மண்ணைக் கரைத்துப் பொகட்ட ஜலத்திலே யுள்ளதோ? நிராலம்பநமான ஆகாசத்திலேயுள்ளதோ? அன்றிக்கே, கார்யாகாரங்குலைந்து கரந்து கிடக்கிற மண்ணிலேயுள்ளதோ? * [சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு] பருவம் நிரம்புவதற்கு முன்னே ஏழுபிராயத்திலே ஒருபடிப்பட மலையைத் தரித்துக்கொண்டு நின்ற நீ சொல்லு. இதுவுமோராச்சர்யமிறே; இதுவுஞ் சொல்ல வேணும், அதுவுஞ் சொல்லவேணும். இவை மூன்றும் விஸ்மயமா யிருப்பன சில அகடிதங்களாயிருந்தன. “அவன் பின்னை இவர்களுக் குச் சொன்ன உத்தரமேது” என்று பட்டரைக்கேட்க, “அவன்று ணும் ‘ஆழ்வார் வந்தால் கேட்கக்கடவோம்’ என்று நினைத்திருந்தான் காணும்” என்ன, பின்னையும் ‘நீ ஸர்வாதார பூதனுமித்தனை போக்கி உன்னை யொழியப் புறம்பேயொன்றுக்கொன்று ஆதாரமாக வல்ல தொன்றுண்டோ?’ அன்று அவன் ஸர்வாதாரபூதனாயிருக்கிறபடியைக் கண்டு இதோராச்சர்யமே! என்று விஸ்மிதராகிறார்” என்றருளிச்செய்

* முதல் திருவ—79. § பெரிய திருமொழி (2—10—1).

தார். இப்படிப்பட்ட ஆச்சர்ய யோகத்தைச் சொல்லுகிறது, (பெருமா மாயன்) என்று. அவனை யொழியப்புறம்பே கால்காணித்தெய்வமுடையோமோ நாம்? "முந்துற ரக்ஷிக்கிறேன்" என்று பச்சை இடுவித்துக்கொண்டு, சிலநாள்கழிந்தவாறே வடிவைக்காட்டி "நானுமுன்னைப் போலே, ஸாதகன்காண்" என்று சொல்ல அவனை விட்டாற்போலே, எடுத்துக் கழிக்கைக்குத் தானொரு தேவதையுண்டோ நமக்கு? மார்க்கண்டேயனை "ரக்ஷிக்கிறேன்" என்று சொல்லிப் பச்சையிடுவித்துக்கொண்டு அநந்தரம் ஜடையைக்காட்டி "நானு முன்னைப்போலே ஸாதகன், ஒருதலையைப்பற்றிக் காணிருப்பது; என்னையாஸ்ரயியுங்கோள் என்று பிறர்சொல்லும் வார்த்தையை 'மெய்' என்று விஸ்வஸித்திருக்கும்படி ப்ரமித்தாயாகாதே, பொறு, உனக்காச்ரயணீய ஸ்தலங்காண்" என்று கொடுபோய் ஸர்வேச்வரனைக்காட்டிக் கொடுத்தானிறே. (23) "ब्रह्माणं †नीलकण्ठं च याश्चान्या देवतास्स्मृताः। प्रतिबुद्धा न सेवन्ते यस्मात् परिमितं फलम्" (ப்ரஹ்மாணம் நீலகண்டஞ்ச யாச்சாந்யா தேவதாஸ்ஸ்ம்ருதா:। ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத்பரிமிதம் பலம்) ப்ரஹ்மாவையும் ருத்ரனையும் அல்லாத தேவதைகளையும் அறிவுடையராயிருப்பார் ஆச்ரயியார்கள்; அதுக்கடியென்னென்னில், பரமபுருஷார்த்தலக்ஷணமோக்ஷத்திலே இவனுக்கபேக்ஷையுண்டானால் அவர்களது கொடுக்கமாட்டார்களே. அவர்களுக்குமோக்ஷப்ரதத்வமில்லாமையாலே; இனி இவ்வருகே சிலவற்றையிறே கொடுப்பது; அவை அல்பமிறே; அவை அவனிவனுக்குக் கொடுக்கவுமாய், இவனவனுக்குக் கொடுக்கவுமாயிறே இருப்பது.

(24) "स्कन्दरुद्रमहेन्द्राद्याः प्रतिषिद्धास्तु पूजने" (ஸ்கந்தருத்ரமஹேந்த்ராத்யா: ப்ரதிஷித்தாஸ்து பூஜநே) * "திருவடிதன்நாமம் மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்னக்கடவதிறே, பர்த்தாவின்பக்கல் ஆநுகூல்யமற்றிருக்க, பர்த்ரந்தரபரிக்ரஹம் பண்ணு தொழிகையிறே இவள் அவனுக்காகையாகிறது; பகவத்ப்ராவண்யம் க்ரமத்திலே பிறக்கவுமாம், இவனுக்கு முந்துற வேண்டுவது-தேவதாந்தர ஸ்பர்சமறுகையிறே; இதுண்டானால் யோக்யதை கிடக்குமிறே. 7.

—ஆழ்வார் திருவடிகளே சரணம்.—

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்,

திருவாசிரிய வ்யாக்யாநம் முற்றிற்று.

† (பா) शितिकण्ठं (ஶிதிகண்டம்) * நான்முகன் திரு. 68.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

தனியன் வ்யாக்யாநம்.

எம்பெருமானரருளிச்செய்த

பெரிய திருவந்தாதித்தனியன்.

முந்துற்ற நெஞ்சே முயற்றி தரித்துரைத்து
வந்தித்து வாயார வாழ்த்தி‡—சந்த
முருகூரும் சோலைசூழ் மொய்பூம் பொருநல்
குருகூரன் மாறன்பேர் கூறு.

பதவுரை:— முந்துற்ற நெஞ்சே— (ஆழ்வாரை ஸமாச்ரயிக்க என்னைக்காட்டிலும்) முன் செல்லும் மனமே!, முயற்றி—'முயற்றி' என்று ஆரம்பித்துள்ள திவ்யப்ரபந்தத்தை, தரித்து—(புத்தியிலே) தரித்து, உரைத்து—(வாயாலே) சொல்லி, வந்தித்து—(ஆழ்வாரை) வணங்கி, வாயார வாழ்த்தி—வாய் ஓயும்வரை மங்களாசாஸநம்பண்ணி, முருகு ஊரும்—தேன் பெருகும்படியான, சந்தம் சோலை—சந்தன மரங்களையுடைய சோலைகளாலே, சூழ்—சூழப்பட்டதாய், மொய்—நீர் நிறைந்ததும், பூ—அழகியதுமான, பொருநல்—தாம்ரபர்ணி நதியை யுடையதான, குருகூரன்—திருநகரிக்கு ஸ்வாமியான, மாறன் பேர் கூறு—நம்மாழ்வாருடைய திருநாமத்தை அநுஸந்தித்துப் போரு.

அவ:—(முந்துற்ற நெஞ்சித்யாதி) இது-பெரிய திருவந்தாதித் தனியனாகப் பெரியோர்களாலே அநுஸந்தித்துக்கொண்டு போருமதா யிருக்கும்; ஆகையால் இதுவும் அந்த சப்தத்தை அநுவதித்தாயிற் றிருப்பது. (முந்துற்ற நெஞ்சே முயற்றி தரித்து) "முயற்றி சுமந் தெழுந்து முந்துற்ற நெஞ்சே" என்றது முன்பின்னாயிருக்கிறது.

வ்யா:—(முந்துற்ற நெஞ்சே) என்னிலும் ஆழ்வார் விஷயத்திலே முற்பட்டிருக்கிற மநஸ்ஸே! ஆழ்வார் திருவுள்ளம் ஆழ்வாரிலும் எம்பெருமான் திருவடிகளிலே முற்பட ஆழங்காற்பட்டிறேயிருப்பது * "என்னெஞ்சென்னை நின்னிடையேனல்லேனென்று நீங்கி - நாண்

---

‡ வாழ்த்தியே - என்றிருந்தால் வெண்டளைக்குப் பொருந்தும்.
* திருவாய்(8-2-10).

மலர்ப்பாதமடைந்தது" என்றும், (a) "என்னெஞ்சினாருமங்கேயொழிந்தார்" (b) "என்னெஞ்சினாரைக்கண்டாலென்னைச்சொல்லி" என்றும், (c) "காரூருவம் காண்டோறு நெஞ்சோடும் கண்ணனார் பேருருவென்றெம்மைப்பிரிந்து" என்றும், (d) "தம்முடைய பின்னே திரிந்துழலும் சிந்தனையார்" என்றும், (e) "என்னெஞ்சினார் தாமேயணுக்கராய்ச் சார்ந்தொழிந்தார்" என்றும் முந்துற்ற நெஞ்சானபடியைத் தாமே முதலித்தருளினார்; அப்படியாயிற்று-ஆழ்வார் விஷயத்திலும் மதுரகவிப்ரப்ருதிகளான மஹாத்மாக்கள் மநஸ்ஸிருப்பது.

(முயற்றிதரித்து) (f) "முயல்கின்றேனுன்றன் மொய்கழற்கன்பை" என்கிறபடியே உத்ஸாஹத்தையுடையையாய், "முயற்றி சுமந்து" என்றத்தை முயற்றி தரித்தென்கிறது. அன்றிக்கே, "முயற்றி" என்கிற திவ்யப்ரபந்தத்தை, புத்திஸ்த்தமாம்படி தரித்து, பின்பு வாசிகமாகவநுஸந்தித்து என்றுமாம். (உரைத்து) (g) "என்னிலைமை யுரைத்து" என்னுமாபோலே (h) "இட்டமாமகிழ்மாலை தந்திடிலிந்த மாலையையெல்லாம் செப்பொத்த கொங்கைமேல் செழும் சந்தனக் குழம்பு பொறுக்குமோ ஆழ்வாரே" என்றாற்போலே என் தசையைச் சொல்லி. (வந்தித்து) திருவடி தொழுது. (முயற்றி தரித்துரைத்து வந்தித்து) ஸம்பந்தாநுஸந்தாநத்தோடே வந்தித்து. ப்ரபந்தவக்தாவானவரைப் ப்ரணாமம்பண்ணி. (i) கருவண்ணம் முதலான வடையாளங்களைத் திருந்தக்கண்டு (j) "இறங்கிநீர் தொழுதுபணியீர்" என்னுமாபோலே ஸகலகலாபூர்ணமான சந்த்ரமண்டலம்போலேயிருப்பதாய், (k) "ஒண்ணுதல்" என்று ஊர்த்த்வ புண்ட்ரமண்டிதமான திருமுகமண்டலத்தையும், (l) நாட்கமழ் மகிழ்மாலை மார்வையும், ஜ்ஞாநமுத்ராமுத்ரிதமான திருக்கைமலரையும், பத்மாஸநோபவிஷ்டமான பதயுகங்களையும் கண்டு தொழுது, அநந்தரம் (வாயார வாழ்த்தி) (m) "அவன் புகழேவாயுபகாரம் கொண்டவாய்ப்பு" (n) "கண்ணன் தாள் வாழ்த்துவதே கண்டாய் வழக்கு" (o) "வாழ்த்தி

(a) திருவாய் (7-3-4). (b) திருவிரு (30). (c) பெரிய திருவ (49). (d) பெரிய திருவ (50). (e) பெரிய திருவ(7). (f) கண்ணிநுண் (10). (i) திருவாய் (6-1-7). (j) திருவாய் (6-1-3). (k) திருவிரு (50). (l) திருவாய் (4-10-11). (m) பெரியதிருவ(39). (n) பெரியதிருவ(12) (o) பெரிய திருவ (84).

பவனடியை" (p) "அடியேனுக்கும் போற்றமினே" என்கிறபடியே வாய்படைத்தப்ரயோஜநம்பெற(1) "प्रत्यक्षे गुरवः स्तुत्याः" (ப்ரத்யக்ஷே குரவஸ் ஸ்துத்யா:) என்று (q) நாவினுல் நவிற்றின்பமெய்தும்படி ஸ்தோத்ரம் பண்ணி.

இனி அவ்வளவில் நில்லாதே அவர் திருநாமத்தை யிங்கேவந்து சொல்லுதல், அவர் ஸந்நிதியிலே சொல்லுதல் என்னும்படியைச் சொல்லுகிறது (சந்தமுருகூருமித்யாதியாலே). (சந்தமுருகூரும் சோலைசூழ்) முருகு-தேன். (r) "ஆரப்பொழில் தென்குருகை" என்கிறபடியே மகரந்தப்ரவாஹத்தையுடைய சந்தநச்சோலையாலே சூழப்பட்டிருப்பதாய். (மொய்பூம்பொருநல்) மொய்பூம் பொருநலாற்றையுடைய. (குருகூரன் மாறன் பேர் கூறு) ஸம்ருத்தமாய் ஸாரஸமான நிர்மலஸலிலத்தையுடைய திருப்பொருநல் தீரமான திருநகரியாழ்வார் திருநாமத்தை ஸத்தைபெறும்படி சொல்லு. (குருகூரன் மாறன்பேர்கூறு) குருகூர்ச்சடகோபனென்று கூறு. (s)"குருகூர்நகரான்....மாறன்" (s) அடிக்கண்ணிசூடியமாறன்" (t) "பைம்பூம் பொழில் சூழ் குருகூர்நகர் காரிமாறன் சடகோபன்" என்ருரிறே. (u) "நான்கூறும்" என்று (v) குருகூர்ச்சடகோபன் (v) குடக்கூத்தவம்மானை (w) நாராயணன் நாமங்களைக் கூறினாற்போலே. (x) "நாமம்பராங்குசன்" என்னும்படியான நாமத்தைக்கூறு. "நம்மாறன்" என்று பாடமாகில் நம்மாழ்வாரென்ருகிறது. (பேர் கூறு) (y) "பேரென்னை" என்று தாமும் பேசும்படியான பேரைக்கூறு. நாடெல்லாம் கையெடுக்கும்படி கூறு. (z) "எண்டிசையுமறிய வியப்புகேன்" என்னும்படி ப்ரஸித்தமாகச்சொல்லு. இத்தால்-(2) "गुरोर्नाम सदा जपेत्" (குரோர் நாமஸதாஜபேத்) என்கிறபடியே ஆழ்வார்ப்ரபந்தத்துக்கு முன்னே அவரபிமாநமநுஸந்தேயமென்றதாயிற்று.

பெரிய திருவந்தாதித்தனியன் வ்யாக்யானம்
முற்றிற்று.

பிள்ளைலோகம் ஜீயர்திருவடிகளே சரணம்.

(p) திருவாய் (6-1-5). (q) கண்ணிநுண் (2). (r) இராமாநுசநூ(20) (s) திருவிரு (100). (u) பெரிய திருவ (46). (v) திருவாய் (2-5-11) (w) திருவாய் (5-9-10). (z) கண்ணிநுண் (7)

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்த

பெரிய திருவந்தாதி வ்யாக்யாநம்.

श्रीमत्कृष्णसमाह्वाय नमो यामुनसूनवे ।
यत्कटाक्षैकलक्ष्याणां सुलभः श्रीधरस्सदा ॥

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே ।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதரஸ்ஸதா ॥

அவதாரிகை.

ஸமஸ்தகல்யாண குணாத்மகனான ஸர்வேஸ்வரன் நிர்ஹேதுகமாக * "இமையோர் தலைவா" என்று பேசலாம்படி தன்னுடைய ஸ்வரூப ரூப குணங்களையும் விபூதிகளையும் காட்டிக்கொடுக்கக்கண்டு, தன்னை அநுபவிக்கைக்கு அநுகூலமான தேசத்தையும், அநுகூலமான ஜ்ஞாநவ்ருத்ததேஹங்களையுமுடையராய், ஸதாநுபவம் பண்ணுகிற நித்யஸூரிகளையும்கண்டு, தமக்கவர்களோபாதி அவன் பக்கலுள்ள ப்ராப்தியையுமுணர்ந்து, இவ்வநுபவத்துக்கு ப்ரதிகூலமான ஜ்ஞாந வ்ருத்ததேஹங்களைத் தாமுடையராயிருக்கிறபடியையும், ப்ரதிகூலமான ஸம்ஸாரத்திலே தாமிருக்கிறபடியையுமுணர்ந்து, "த்வதநுபவ விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யறுத்துத்தரவேணும்" என்றார் திருவிருத்தத்தில். நூறு பாட்டுக்குமிதுவே அர்த்தமாக வேணும். * "இந்நின்றநீர்மையினியாமுறாமை" என்று உபக்ரமித்து இது கற்றவர்களுக்குப் பலமாக † "அழுந்தார் பிறப்பாம் பொல்லா வருவினை, மாயவன் சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே" என்று உபஸம்ஹரிக்கையாலும், (*) "அடியேன் செய்யும் விண்ணப்பம்" என்றுபக்ரமித்து † "விண்ணப்பஞ்செய்த" என்று தலைக்கட்டுகையாலும். அபேக்ஷித்தபோதே செய்யப்பெறாமையாற் பிறந்தவாற்றாமையாலே சொல்லிற்றின நடுவிற்பாட்டுகள். தான் நினைத்த கார்யங்கள் தலைக்கட்டுகைக்காக ஸ்ரீபீஷ்மர் ஶரதல்பராய்க் கிடக்க அவரைக்கொண்டு நாட்டுக்கு தர்மங்களைச் சொல்லுவித்தாற்போலே, இவரைக்கொண்டு திருவாய்மொழி பர்யந்தமாகப் பாடுவித்து நாட்டை வாழ்

* திருவிருத்த-1. † திருவிருத்தம்-100

விக்கவேணும்" என்று இவரை வைத்துக்கொண்டிருந்தான். இவர்க்குத் தான் சேஷியாய், இவர் சேஷபூதராய், விரோதி நிவ்ருத்தி பண்ணுவானும் தானேயாகில் வைஷ்ணவர்களைத் தலைமக்களாகச் சொல்லுவானென்னென்னில்; வைஷ்ணவர்கள் இவனைப்பெறுகைக்கு உபகாரகர்களாகையாலும், ‡"பேராளன் பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரிகிலேன்" என்று பாசுரசையில் ப்ராப்யராகையாலும், (3) "बोधयन्तः परस्परं" (போதயந்த: பரஸ்பரம்) என்று வ்ருத்தமான ஸம்ஶ்லேஷத்துக்கு உசாத்துணையாவர்களாகையாலும், வைஷ்ணவர்களைத் தலைமக்களாகச் சொல்லிற்று. திருவாசிரியத்தில் - தான் நினைத்த கார்யம் தலைக்கட்டுகைக்காக ப்ரக்ருதிஸம்பந்தமறுத்திலனாகிலும் நின்ற நிலையிற் காட்டில் சிறிதுவிசேஷம்பண்ணிக்கொடாவிடில் தரிக்குமவரல்லாமையாலே, ப்ரக்ருதிஸம்பந்தமற்றார் அநுபவிக்கும் தன்னுடைய ஸ்வரூபகுண விபூதிகளை ப்ரக்ருதியோடே யிருக்கச் செய்தே அநுபவிக்கலாம்படி ஜ்ஞாநவைசத்யத்தைப் பண்ணிக் கொடுக்க அநுபவித்தார். திருவந்தாதியில் - இதர விஷயங்கள், அநுபவிக்கும்போது ஒன்றன்றிக்கே, அநுபவித்தாலும் "இன்னதநுபவித்தோம்" என்று சொல்லுகைக்குமொன்றன்றிக்கே யிருக்கும்; பகவத் விஷயம் - அநுபூதாம்சந்தோற்றுதே அநுபாவ்யாம்சம் பெருத்திருக்கும். ஆகையாலே "முயற்றி சுமந்து" என்று தொடங்கி நின்ற நிலையிலே "மொய்கழலே யேத்தமுயல்" என்று தலைக்கட்டுகையாலே விஷயாநுரூபமாக அபிநிவேசம் பெருகுகிறபடி சொல்லுகிறது. *

அரு:—ப்ரக்ருதி ஸம்பந்த நிவ்ருத்தி மாத்ரமென்பானேன், பின்னையுமர்த்தாந்தரங்களுமுண்டேயென்ன; அருளிச்செய்கிறார் (நூறு பாட்டுக்கும்) இத்யாதி "இதுவே" என்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன அருளிச்செய்கிறார் (இந்நின்ற நீர்மை) இத்யாதி. ஆத்யந்தமிதுவேயானால் நடுவில் ப்ரதிபாத்யமேதென்ன அருளிச்செய்கிறார் (அபேக்ஷித்த) இத்யாதி. இத்தனை செல்லாமையுடையவரை வைப்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (தான் நினைத்த கார்யங்கள்) இத்யாதி. நின்ற நிலையாவது - முதல் தொடங்கி முடிய அநுபவியா நிற்கச்செய்தேயும் அபிநிவேசம் பெருகி "ஏத்த முயல்" என்று பின்னையுமுத்யோகமறாமல் நின்ற நிலையென்றபடி.

---

‡ பெரியதிருமொ (7-4-4).

1. முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே
இயற்றுவா யெம்மொடு நீகூடி,—நயப்புடைய
நாவீன் துடைகிளவி யுட்போதிவோம், நற்பூவைப்
பூவீன்றவண்ணன்புகழ்.

பதவுரை :—முயற்றி சுமந்து—(அடிமை செய்கையிலே) உத்ஸாஹத்துடன் ஊன்றி, எழுந்து—கிளர்ந்து எழுந்து, முந்துற்ற நெஞ்சே—(என்னிலும்) முற்பட்ட நெஞ்சமே!, நல்—விலக்ஷணமான, பூவைப் பூ ஈன்ற — காயாம்பூவிலே உள்ள, வண்ணன் — நிறத்தையுடைய ஸர்வேச்வரனுடைய, புகழ் — கல்யாணகுணங்களை, நயப்புடைய—ம்ருதுவாயிருப்பதாய், நா ஈன்—நாவினால் உண்டாக்கப்பட்டதாய், துடை கிளவியுள்—அழகிய சப்த ஸந்தர்ப்பங்களையுடையதான சொல்லினுள், போதிவோம்—கொள்வோம்; எம்மோடு — என்னுடன், நீ கூடி—நீ சேர்ந்து, இயற்றுவாய்—துதிப்பாயாக.

அவ :—முதற்பாட்டில்; நெஞ்சுக்கு ஒரு நல்வார்த்தை சொன்னாற்போலே இது இவரையுங்கூடாதே முற்பட "என்னையுங்கூட்டிக் கொண்டு போகவேணுங்காண்" என்கிறார்.

வ்யா :— (முயற்றி சுமந்து) அடிமை செய்கையிலே யொருப்பட்டு (4) "प्रागेव तु महाभागः" (ப்ராகேவ து மஹாபாக:) பெருமாளுக்கு மாவுரி கொடுத்தன்றோ இளையபெருமாளுக்குக் கொடுத்தது, இவரை (4) "प्रागेव" (ப்ராகேவ) என்பானென்னென்னில் (5) "दीप्तमग्निमरण्यं वा यदि रामः प्रवेक्ष्यति। प्रविष्टं तत्र मां देवि" (தீப்தமக்நிமரண்யம் வா யதி ராம: ப்ரவேக்ஷ்யதி। ப்ரவிஷ்டம் தத்ர மாம் தேவி) என்றிளைய பெருமாளுக்கிருக்கும்படியாலே சொல்லிற்று. பெருமாள் "பித்ருவசநபரிபாலநம் பண்ணவேணும்" என்று மரவுரி சாத்தினார்; அவருடுக்கப்புகுகிறாரென்றுடுத்தவர்படி, அது வேறொன்றன்றோவென்கிறது. (4) "महाभागः" (மஹாபாக:) (6) "अहं सर्वं करिष्यामि" (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்று ப்ரதிஜ்ஞைபண்ணினபடியே எல்லாவடிமையும் செய்யலாப்படி திருவபிஷேக விக்நம்பிறக்க பாக்யம்பண்ணினவர். (4) "सौमित्रिः" (ஸௌமித்ரி:) (7) "सृष्टस्त्वं वनवासाय" (ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய) என்று சொன்னவள் வயிற்றிலே பிறந்தவர். (4) "मित्रनन्दनः" (மித்ரநந்தந:) "பெருமாளைப் பிரியாதே அடிமை செய்யவேணும்" என்ற அநுகூல

வர்க்கமெல்லாம் "நாம் செய்யபெற்றிலோமே யாகிலும் இளைய பெருமாள் எல்லாவடிமையுஞ் செய்யப்பெற்றாரிறே" என்னும்படி அநுகூலவர்க்கத்தையுகப்பிக்குமவர். (4) **पूर्वजस्यानुयात्रार्थे द्रुमचीरैरलङ्कृतः"** (பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமசீரைரலங்க்ருத:) பெருமாள் பின்னே ஸேவித்துப் போகைக்காக மரவுரி சாத்தி, அத்தாலே அலங்க்ருதரானவர். பெருமாள் அபிஷேகந் தவிருகைக்கு மரவுரி சாத்தினார்; இவர் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு முடிசூடுகைக்கு மரவுரி சாத்தினார். (எழுந்த) விஸ்த்ருகமாய். 'முற்பட்ட நெஞ்சே (8) "**अग्रतस्ते गमिष्यामि**" (அக்ரதஸ்தே கமிஷ்யாமி) என்னும்படியே முற்பட்ட நெஞ்சே! (இயற்றுவாயெம்மொடு நீ கூடி) க்ருதஜ்ஞமாக வேணுங்காண். பார்த்தபடி அழகிது, பிற்பட்டவென்னையும் கூட்டிக்கொண்டு போ. (நயப்புடைய) நீரும் நானுங்கூடிச்செய்யப்புகுகிறதென்னென்ன, அங்குத்தைக்கடிமை செய்வோமென்கிறார். (நயப்புடைய) * "என்னால் தன்னைப்பதவியவின்கவிபாடிய" என்னுமா போலே. கவிக்கு நயப்புடைமையானது நாயகனுக்கு மூன்பில்லாத நீர்மை இக்கவியாலேயுண்டாகை. (நாவின்) நீயும் வேண்டாவென்கிறார். உத்பத்திக்கு நீயும் வேண்டா நானும் வேண்டா, நெஞ்சிலே யூன்றியநுபவிக்கைக்கு நீயுண்டாகவமையும். நெஞ்சின்றிக்கே கவி பாடப்போமோவென்னில்; நெஞ்சினுடைய ஸ்தாநத்திலே ஸர்வேஶ்வரன் நின்று கவிபாடுவிக்குமென்றுகருத்து. (துடைகிளவி) அழகிய ஸந்தர்ப்பத்தையுடைய சொல்லு. நெஞ்சு கன்றிச்சொல்லாமையாலே சொல்லில் வெட்டிமையின்றிக்கேயிருக்கை. (உட்போதிவோம்) (9) "**यतो वाचो निवर्तन्ते**" (யதோ வாசோ நிவர்த்தந்தே) என்று வேதாந்தங்கள் வாச்யத்தையடைந்து நிலைநில்லாமையாலே மீளும்; இங்கு வாச்யம் வாசகத்தைவிட்டுப்போகமாட்டாது. (நற்பூவையித்யாதி) வாசகத்துக்கு எட்டுமதன்றேன்கிறது. (நற்பூவை) உபமாநம் உபமேயத்துக்குப் போராமையாலே உபமாநத்தையும் சிக்ஷிக்கிறது. (பூவின்றவண்ணன்) பூவைப்பூ காட்டுகிற நிறத்தையுடையவன். பூவைப்பூவைக்காட்டுகிற நிறத்தையுடையவனென்றுமாம். (10) "**गोसदृशो गवयः गवयसदृशो गौः**" (கோஸத்ருசோ கவய: கவயஸத்ருஶோ கௌ:) என்னுமாபோலே. (புகழ்) திவ்ய தேஹகுணங்களை

---

* திருவாய் [7-9-10]

யும், திவ்யாத்மகுணங்களையும். (நற்பூவைப் பூவீன்றவண்ணன் புகழ் நயப்புடைய நாவின் துடைகிளவியுட்பொதிவோம்.) 1.

அரு :- முதற்பாட்டு. (சொன்னற்போலே) சொன்னவுடனே. நெஞ்சு அடிமையிலே யொருப்பட்டது எப்படி யிருக்கிறதென்ன (ப்ராகேவது) இத்யாதி. ப்ரவேசிப்பராகில் என்று பவிஷ்யத்தாகவும், "ப்ரவிஷ்டம்" என்று அங்கே ப்ரவேசித்தேனாக அறி என்று பூதமாகவும் சொன்ன இளையபெருமாள் நினைவைப்பற்ற என்றபடி. து சப்தத்தைப்பற்ற அருளிச்செய்கிருர் (பெருமாள்) இத்யாதி. தாபஸவேஷமாக மரவுரி சாத்துகை அலங்க்ருதமாமோ வென்ன, அருளிச்செய்கிருர் (பெருமாள் அபிஷேகம்) இத்யாதி. [க்ருதஜ்ஞமாக] - என்னாலேயன்றோ உனக்கு இது உண்டாயிற்று, என்னைமறவாதேகொள் என்றபடி. "இயற்றுவாய்"-நடப்பாய். நெஞ்சானது "நான் வேண்டாவோ" என்ன, அருளிச்செய்கிருர் [நெஞ்சிலே யூன்றி] இத்யாதி. கவிக்கழகேதென்ன அருளிச்செய்கிருர் [நெஞ்சுகன்றி] இத்யாதி. "கிளவி". சொல்லு. உள் பொதிகை - சொல்லுக்குள்ளே அடக்குகை. ஈன்ற - பூவாதல், வண்ணமாதல்; பூ - வண்ணத்தைக்காட்டுதல், வண்ணம் - பூவைக்காட்டுதல்.

2. புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம்
இகழ்வோம் மதிப்போம் மதியோம்—இகழோம், மற்
றெங்கண்மால் செங்கண்மால் சீறல்நீ தீவினையோம்.
எங்கண்மால் கண்டாயிவை.

பதவுரை :—புகழ்வோம்—(உன்னைத்) துதித்தோமாகில், பழிப்போம்—(அது உன் கல்யாணகுணங்களுக்குத் தகுதியாயிராதாகையால்) பழித்தவர்களாவோம்; புகழோம்—துதியோமாகில், பழியோம்—(உனது குணங்களுக்கு என் வாக்தோஷஸ்பர்சமில்லாமையால்) நிந்தியாதவர்களாவோம். மற்று—மேலும், மதிப்போம்—நினைத்தோமாகில், இகழ்வோம்—நிந்தித்தவர்களாவோம். மதியோம்—நினையோமாகில், இகழோம்—நிந்தியாதவர்களாவோம். எங்கள் மால்—எங்கள் பக்கல் வ்யாமோஹத்தையுடையவனாய், செம் கண் மால்—சிவந்த திருக்கண்களையுடையவனாய், நீ—அபரிச்சேத்யனான நீ, சீறல்—கோபியாதே கொள்; இவை—உன் ஸ்தோத்திரத்தில் ப்ரவர்த்தித்தல் நிவ்ருத்தித்தல் ஆகிய இவை, தீவினையோம்—கொடும்பாவிகளான, எங்கள்—எங்களுடைய, மால் கண்டாய்—ப்ரமங்கிடாய்!

அவ :— இரண்டாம் பாட்டில்; (புகழ்வோம்) "நாவின் துடைகிளவியுட் பொதிவோம்" என்று வாச்யத்தை விளாக்கொலைகொள்ளக்

கடவோமென்றவிவர் (9) "यतो वाचो निवर्तन्ते" (யதோ வாசோ நிவர்த்தந்தே) என்று வேதங்கள் நின்ற நிலைக்கும் அவ்வருகேயானுர் (11) "मह्यं नमोस्तु कवये" (மஹ்யம் நமோஸ்து கவயே) என்கிருர். கவிசொல்லுகையாவது-விஷயத்துக்குள்ளதுஞ்சொல்லி விஷயத்துக் கில்லாததுமிட்டுச் சொல்லுகையிறே; உள்ளதொன்றுஞ்சொல்லப் போகாத விஷயத்திலே கவிபாடப்புக்க நமக்கு நமஸ்காரமென்னுமா போலே. முற்பட இவர் புகழவிழிந்ததென்; இப்போது "பழி" என்று மீளுகிறதென்னென்னில்; இரண்டுப் வஸ்துவைலக்ஷண்யத் தாலே. கல்லது கண்டால் "எனக்கு" என்னக்கடவது; வைலக்ஷண் யத்தை அநுஸந்தியா "அவனுக்கதிசயத்தைப்பண்ண" என்றிழிந்த தாம். தம் சொல்லாலே நிறங்கெடுப்படி பண்ணுகிருமென்று மீளுகிருர்.

வ்யா:—(புகழ்வோம் பழிப்போம்) அவ்விஷயத்தைப் புகழப் பார்த்தோமாகில் பழித்தோமாவோம். (புகழோம் பழியோம்) "புகழ்வோம்" என்றதினுலே இவ்வர்த்தம் ஸித்தியாதோவென்னில்; அந்வயத்திற் காட்டில் வ்யதிரேகத்தாலே சொன்னுல் அர்த்தத்துக்கு ஒரு ஸ்தைர்யமுண்டென்று சொன்னுர். (இகழ்வோம் மதிப்போம்) நெஞ்சாலே நினைத்தோமாகில் அவ்வஸ்துவை இகழ்ந்தோமாவோம். (12) "मनः पूर्वो वागुत्तरः" (மந: பூர்வோ வாகுத்தர:) என்று மநஸ் ஸாலே நினைத்தத்தையன்றே வாக்கு சொல்லுவதென்கிற ந்யாயத் தாலே "புகழ்வோம் பழிப்போம்" என்கிறத்தாலே ஸித்தியாதோ வென்னில், நெஞ்சாலே நினைத்த பாபங்களுக்கே ப்ராயஸ்சித்தம் பண்ணவேண்டும்படியாலே நினைத்தோமாகிலுமவ்வஸ்துவை யழித் தோமாவோமென்கிருர். (மதியோமிகழோம்) நினைத்திலோமாகில் இகழ்ந்திலோமாவோம். (மற்று) என்கிறது - "புகழோம்" என் கிறதிற் காட்டில் "இகழ்வோம்" என்றதினுடைய பிரிவைக்காட்டு கிறது. மற்றிகழ்வோமென்றபடி. (எங்கண்மால்) இகழப்போகாத படி தம்முடைய பக்கலிலே வ்யாமுக்தனானபடி. (செங்கண்மால்- எங்கண்மால்) (13) "यथा कप्यासं" (யதா கப்யாஸம்) என்று ச்ருதி ஸித்தமாய் ஐஸ்வர்யஸூசகமான கண்ணையுடையவனுய் அபரிச் சேத்யனானவன், என் பக்கலிலே வ்யாமுக்தனுனன். (சீறல்) "நம் வைலக்ஷண்யத்தை யறியாதே, இவரிழிவதே" என்று தம்

பக்கலிலே சீறிஞறைக்கொண்டு சீருதேகொள்ளென்கிருர். அன்றியே, தாம் புகழப்புக்கவாறே பசியர் "உண்ண" என்று இலையகலப் படுக்குமாபோலே தன் குணங்களைக் கேட்கப் பாரிக்கப்புக, தாம்மாறின வாறே சீறினதுக்கு "சீருதேகொள்" என்றுமாம். (தீவினையோம்) நீயுகந்தபடி பரிமாறப்போகாத பாபியோம். விஷயவைலக்ஷண்ய மறியாதே புகழவிழிந்த பாவியோமென்றுமாய். (எங்கண்மால் கண்டாயிவை) வைலக்ஷண்யத்தைக் கண்டிழிவது "அயோக்யன்" என்றகல்வதாகிறவிவை எங்களுடைய ப்ராந்திகளிறே.

அரு:- இரண்டாம் பாட்டு. (அவ்வருகே) - வேதம் சில பேசி "நிலமல்ல" என்றது; இவருத்யோகத்திலே "நிலமல்ல" என்கிருரென்றபடி - புகழ்ந்தோமோ, பழித்தோமென்றபோதே புகழாவிட்டால் பழிக்கவில்லையென்றது தன்னடையே வாராதோ, சாப்தமாகச்சொல்லவேணுமோவென்று சங்காபிப்ராயம். "இகழ்வோம் மதிப்போம்" - மதித்தோமே, இகழ்ந்தோமானுல், (மற்றிகழ்வோம்) என்றது - வேருயிருக்கிற - இரண்டாம்படியான இகழ்வோமென்றதைக்காட்டுகிறது. எங்கண்மாலானவன் செங்கண்மாலானுனென்ருய், சிவப்பாலே சீற்றமாய், அவன் சீருதேயிருக்கச் சீறிஞனாகப்ரமித்துச்சொல்லுகிருராதல்; அன்றிக்கே - பாட்டுக்கேட்கவிருந்தவன் பாடாவிட்டவாறே சீறிஞதல். 2.

3. இவையன்றே நல்ல விவையன்றேதீய
இவையென் றிவையறிவனேலும்—இவையெல்லாம்
என்ஞலடைப்பு நீக்கொண்ணு திறையவனே
என்ஞல் செயற்பாலதேன்.

பதவுரை:— இவையன்றே நல்ல—நினையாமையாகிற இவையன்ருே நல்லவை, இவையன்றே தீய—நினைத்தலாகிற இவையன்ருே தீயவை; என்று—என்கிற, இவை இவை—இந்த இந்த தன்மைகளை, அறிவனேலும்—அறிந்தேனேயாகிலும், இவையெல்லாம்—தீயவையும் நல்லவையுமாகிற இவ்வஸ்துக்களையெல்லாம் என்ஞல், அடைப்பு நீக்கு—பற்றவும் விடவும், ஒண்ணது—முடியாது; இறையவனே—எம்பெருமானே! என்ஞல்—அடியேஞல், செயற்பாலது என்—செய்யத்தகுந்தது என்ன இருக்கிறது?

அவ:—மூன்ரும் பாட்டில்; (இவை) ப்ராந்தியாலன்றிறே புகழவிழித்தது, ஜ்ஞாநத்தாலேயிறே; ஆனலடியிலே "நமக்கு நிலமன்று" என்று மீளவேண்டாவோவென்ன; அசித்வ்யாவ்ருத்தியாலும்

அர்த்தாநுஸந்தாநம் பண்ண க்ஷமனுக்கிவைக்கையாலும், "நன்று தீது" என்றறிவன்; அசித்ஸம்ஸர்க்கத்தாலும் பாரதந்த்ர்யத்தாலும், சாபலத்தாலும், அநுஷ்டாநக்ஷமனன்று.

வ்யா:—(இவையன்றே நல்ல) "புகழோம்பழியோம், மதியோம் மிகழோம்" என்கிற இவை நல்ல. (இவையன்றேதீய) "புகழ்வோம் பழிப்போம்" என்கிற இவை பொல்லாது. (இவையென்றிவையறிவனேனும்) இவையிப்படியென்று பரிச்சேதித்தறிந்தேனேனும். (இவையெல்லாம்) த்யாக பரிக்ரஹாதிகளெல்லாம். (என்னாலடைப்பு நீக்கொண்ணாது), என்னால் பரிக்ரஹிக்கவும் போகாது, த்யஜிக்கவும் போகாது. (இறைவனே) பரிக்ரஹிக்கவும் த்யஜிக்கவும் இது தன்னரசு நாடோ? (என்னுறசெயற்பாலதென்) (14) "कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन" (கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந) (15) मां नमस्कुरु" (மாம் நமஸ்குரு) என்று நீயருளிச்செய்ய என்னுற் செய்யப்படுவதுண்டோ?

அரு:—மூன்றும் பாட்டு. § மூலத்திலே அர்த்தமாக்கி அறிகைக்கும், அறிந்தால் மீளப்போகாமைக்கும் ஹேதுவருளிச்செய்கிறார் (அசித்வ்யாவ்ருத்தி) இத்யாதி. இவ்விடத்துக்குத்தரம்-கிட்டாமை நல்லது, கிட்டுகை தீயது. அவனே பற்றுவிக்கிறவனும் விடுவிக்கிறவனுமொழிய இவனுற் செய்யத்தக்கதில்லையென்னுமத்தை யருளிச்செய்கிறார் (கர்மண்யேவாதிகார:) இத்யாதி. 3.

4. என்னில் மிகுபுகழார் யாவரே, பின்னையும்மற்
றெண்ணில்மிகுபுகழேன்யானல்லால்,—என்ன
கருஞ்சோதிக் கண்ணன் கடல்புரையும், சீலப்
பெருஞ்சோதிக்கென்னெஞ்சாட்பெற்று.

பதவுரை:—என்ன—என்னுடையவனாய், கரும் சோதி கண்ணன்—கரிய நிறத்தையுடைய க்ருஷ்ணனாய், கடல் புரையும் சீலம்—கடலை ஒத்திருக்கும் தன்மையையுடையவனாய், பெரும் சோதிக்கு—பெரிய தேஜஸ்ஸையுடையவனான உனக்கு, என் நெஞ்சு—என்னுடைய மனஸ்ஸானது, ஆள் பெற்று—அடிமையாயிற்று; மற்று எண்ணில்—ஆராய்ந்து பார்த்தால், மிக புகழேன் யான் அல்லால்—அதிகமான புகழையுடையவன் நானேயல்லது, பின்னையும்—அதற்கு மேல்,

§ இங்கு க்ரந்தம் பதிதமாகக் காண்கிறது.

என்னில்—என்னைக்காட்டிலும், மிகு புகழார்—மேலான கீர்த்தியை யுடையவர், யாவரே—வேறு யாருளர்?

அவ:—நாலாம் பாட்டில்; (என்னில்) "'நானணையில் அங்குத் தைக்கு அவத்யாவஹம், அகலில் அங்குத்தைக்கு நிறமுண்டாம்' என்று நீர் சொன்னதுக்கு ஸ்தாநமறிந்திலீர்; ப்ரயோஜகத்திலழ கிது; நீர் சொன்னபடியை மாறி நிற்கவேணும்; நீரகன்றீராகில் 'அதிக்ருதாதிகாரமவ்விஷயம்' என்று நம்மை நச்புவாரில்லை; நீர் பற்றினீராகில் 'இவர்பற்றின விஷயமெல்லார்க்கும் பற்றலாம்' என்று நம்மைப் பற்றுகையாலே நமக்கு நிறமுண்டாம்" என்றருளிச்செய்ய, பற்றி ஹ்ருஷ்டராகிறார்.

வ்யா:—(என்னில் மிகுபுகழார் யாவரே) என்னிற்காட்டில் மிக்க புகழையுடையாரெவரென்றுமாம். ஆச்ரயத்தில் மிஞ்சின புகழையுடையார் எவரென்னவுமாம். அலாபத்தில் * "சீல மில்லாச் சிறியனேலும் செய்வினையோ பெரிதால்" என்று சொல்லு மாபோலேயிறே பேற்றிலுஞ் சொல்லுவது. (பின்னையும் மற்றெண் ணில் மிகபுகழேன் யானல்லால்) ஆச்ரயத்திலடங்காத புகழையுடை யேன்யானேயன்றோ? (என்னகருஞ்சோதியித்யாதி) தன் வடிவை எனக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணி ஸுலபனுய் அளவிறந்த சீலத்தை யுடைய ஸர்வேச்வரனுக்கதிசயத்தைப்பண்ணப்பெற்றிருக்கிற என் னிற் காட்டில் மிக்க புகழையுடையாரார்? 4.

அரு:—நாலாம்பாட்டு. ஸ்தாநம் - நிலையாய், த்யாகஸ்வீகாரத் தினுடைய மர்மமறிந்திலீரென்றபடி. (ப்ரயோஜகத்திலே)-மேலெழப் பார்த்தால்; அகலுகை நல்லதுபோலே தோற்றுமத்தனை. மாறிநிற்க-அகலாதிருக்க. "என்னில்" - விசிஷ்டத்திலே என்னிற்காட்டிலில்லை யென்னுதல்; நிக்ருஷ்டத்திலே அணுவான ஆத்மாவிலும் விஞ்சின புகழையுடையாரரென்னுதல். இதுக்கு த்ருஷ்டாந்தமருளிச்செய் கிறார் (அலாபத்தில்) இத்யாதி. "என்ன" என்னுடைய, கருஞ்சோதி. மொஞ்சானது ஆளாகப்பெற்று - பெறுகையாலே என்றபடி. 4.

5. பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தைநீ,
மற்றை யாராவாரும் நீ பேசில்,—எற்றேயோ
மாயமாமாயவளை மாயமுலை வாய்வைத்த,
நீ யம்மாகாட்டும் நெறி.

* திருவாய்மொழி (4-7-1).

பதவுரை :—மாய—ஆச்சரிய சக்தியையுடையவனே !, அம்மா—என் ஸ்வாமியே !, பேசில்—(நீ செய்கின்ற உபகாரங்களைப்) பேசப்புக்கால், பெற்ற தாய் நீயே—ஈன்றெடுத்த தாயைப்போலே ப்ரியத்தைச் செய்பவனும் நீயே, பிறப்பித்த தந்தை நீ—உண்டாக்கின தகப்பனைப் போல் ஹிதத்தைச் செய்பவனும் நீயே, மற்றையார் ஆவாரும் நீ—(ஆத்மாவுக்கு நன்மையைச் செய்யுமவர்களான) மற்றுள்ள ஆச்சார்யர்களும் நீயே ; மா மாயவனே மாய—பெரிதான வஞ்சனையையுடைய பூதனை முடியும்படி, முலை வாய் வைத்த—(அவளுடைய) முலையை வாயிலே வைத்தருளிய, நீ—ஸர்வேச்வரனான் நீ, காட்டும் நெறி—(என் விரோதிகளைப்போக்குவதற்குக்) காண்பித்த வழி, எற்றேயோ—எவ்வளவு ஆச்சரியமானது !

அவ :—ஐந்தாம் பாட்டில் ; (பெற்ற) “ அயோக்யன் ” என்றகன்று. (16) “ असन्नेव स भवति ” (அஸந்நேவ ஸ பவதி) என்று முடியப்புக்கவென்னை ஸத்தையுண்டாக்கினையென்கிறார்.

வ்யா :—(பெற்றதாய் நீயே) ப்ரஜையுண்டாகைக்கு நோன்பு நோற்று, வயிற்றிலே தரித்தால் ப்ரஜைக்குப் பாங்காக போஜநாதிகளை நியமித்து, பிறந்தால் அமுதுசிப்ரஸ்ரவாதிகளைத் தொட்டிலோந்து, வளர்த்து, இதனுடைய ஹிதங்களையே சிந்திக்கும் தாயாவாயும் நீ, (பிறப்பித்த தந்தை நீ) ஒரு பாத்ரத்திலேயிட்டுவைக்குமவைபோலே தரிக்குமளவிறே இவளது, உத்பாதகன் பிதாவிறே. ஹிதமே சிந்தித்திருக்கும் பிதாவுமெனக்கு நீ. (மற்றையாராவாரும் நீ) (17) “ शरीरमेव मातापितरौ जनयतः ” (ஶரீரமேவ மாதாபிதரௌ ஜநயத:) என்று இருவருங்கூட சரீரத்துக்கு உத்பாதகரித்தனையிறே ; ஆத்மாவுக்கு நன்மை பார்க்கும் ஆசார்யனுமாயும் நீ. (பேசில்) நீ செய்யுமவை பேசப்புகாதிறே. (எற்றேயோ) என்னே ! (மாய) ஆஶ்சர்ய சக்தியுக்தனே ! செய்யப்போகாதவையுஞ் செய்யுமவனே ! (மாமாயவனை இத்யாதி) மஹாஜன மாயத்தையுடைய பூதனை முடிய முலையை வாயிலே வைத்த. (நீயம்மா காட்டும் நெறி எற்றேயோ) அயோக்யனென்றகன்ற என்னுடைய விரோதத்தைத் தவிர்த்தபடி பூதனையால் வந்த இடரை நீக்கினாற்போலேயிறே. 51.

அரு:—ஐந்தாம் பாட்டு. (செய்யப்போகாதவை) அயோக்ய னென்ற என்னை அகலாதபடி பண்ணுகை (மாமாயவனே மாய முலை வாய்வைத்த அம்மா நீ காட்டும் நெறி, எற்றேயோ) என்றந்வயம். 5.

6. நெறிகாட்டிநீக்குதியோ, நின்பால்கருமா
முறிமேனிகாட்டுதியோ, மேனாளறியோமே
என் செய்வா னெண்ணினாய் கண்ணனே, ஈதுரையாய்
என் செய்தாலென்படோம்யாம்.

பதவுரை:—கண்ணனே — க்ருஷ்ணனாய் அவதரித்த என் ஸ்வாமியே!, நெறி காட்டி—(வேறு) உபாயங்களைக் காண்பித்து, நின்பால் நீக்குதியோ—உன்னிடமிருந்து (என்னை) நீங்கச் செய்வாயோ; (நின்பால்) கரு மா முறி மேனி—கரியதாய் மாந்தளிர் போன்றதான உன்னுடைய திருமேனியை, காட்டுதியோ—காண்பிப்பாயோ; மேல்நாள்—அநாதிகாலமாக, அறியோமே—(உன்னை) நாங்கள் அறியவில்லை; என் செய்வான் எண்ணினாய்—எங்களை என்ன செய்ய எண்ணியிருக்கிறாய்; ஈது உரையாய்—["மா ஶுச:" (வருந்தாதே) என்னும்] வார்த்தையை எங்களுக்குச் சொல்லுவாயாக; என் செய்தால்—நீ என்ன நன்மைகளைச் செய்தாலும், யாம் என் படோம்—(எங்கள் கையில் எங்களைக் காட்டித்தந்தால்) எந்தத் துன்பத்தைத்தான் விளைத்துக்கொள்ளமாட்டோம்.

அவ:—ஆறாம் பாட்டில்; (நெறி) "நம்பக்கலிலே ருசியைப் பிறப்பித்து அயோக்யனென்றகன்ற தம்மைச்சேரவிட்டோமாகில் மேலுள்ள கார்யம் தாமே ப்ரவர்த்திக்கிறார்" என்று ஈஶ்வரனிருந்தானாகக்கொண்டு வெறுத்துச்சொல்லுகிறார்.

வ்யா:—(நெறிகாட்டி நீக்குதியோநின்பால்) நெறிகாட்டுகை யென்றும் நீக்குகையென்றும் பர்யாயம். (15) "मद्याजी मां नमस्कुरु" (மத்யாஜீ மாம் நமஸ்குரு) என்ன, அர்ஜுநனுக்கு ஶோகவிஷயமாயிற்றிறே. நீ உன் கார்யத்தைச் செய்யென்பது விட நினைத்தாரையிறே. (18) "एष पन्था विदर्भाणामेष याति हि कोसलान्" (ஏஷ பந்தா விதர்ப்பாணாமேஷ யாதி ஹி கோஸலாந்) என்று தன்னுடனே கிடந்த தமயந்தியை உடுத்த புடவையிலே ஒருதலையையறுத்து "வழியிது, இங்ஙனேபோ" என்று விட்டாற்போலேயிறே தன்பக்கலிலே ந்யஸ்தபரனானவனை "உன் ஹிதத்துக்கு நீயேகடவை" என்கை. (நின்பால் கருமா

முறிமேனி காட்டுதியோ) என்றுமாம். (19) "**विवृणुते**" (விவ்ருணுதே) என்னுமாபோலே. (கருமாமுறிமேனி) அஞ்சநத்திற்புழுதிபடைத்த புறவாயைநீக்கி முறித்தமுறிபோலே திருமேனி நெய்த்திருக்கிறபடி. (மாமுறி) - மாந்தளிரென்று ஸௌகுமார்யத்தைச்சொல்லி, அதிலே கறுப்பையுங்கூட்டி ஶ்யாமமாய் ஸுகுமாரமான திருமேனியை நீயே காட்டியநுபவிப்புதியோ? (மேனாள் கருமாமுறிமேனிகாட்டுதியோ) என்றுமாம். (மேனாளறியோமேயென்செய்வானெண்ணினாய்) என்றுமாம். (மேனாளித்யாதி) பழையதாக அறியாதே போருகிறவென்னை. ஒருத்தனுக்கு திங்மோஹம் பிறந்தால், வழியறியுமவன் "நீயேபோ" என்னக்கடவதோ? வழிகாட்டிவிடக்கடவனே? (20) "**पथः स्खलितं**" (பதஸ்ஸ்கலிதம்) என்னும்படியிறே என்னுடைய அவஸ்த்தை. (என்செய்வானெண்ணினாய்) (15) "**मन्मना भव**" (மந்மநா பவ) என்னப் பார்த்தாயோ? (21) "**मामेकं शरणं व्रज**" (மாமேகம் சரணம் வ்ரஜ) என்னப்பார்த்தாயோ? (கண்ணனேயீதுரையாய்) (21) "**मा शुचः**" (மாஶுச:) என்று சொல்லுகைபரமிறே. (என்செய்தாலென்படோம்யாம்) எல்லாவுயர்த்தியையுஞ்செய்து பரமபதத்திலேகொடுபோய் வைத்தால், நீ தவிர்த்த ப்ராதிகூல்யத்திலேபோய் நில்லேனே என்னை என்கையிலேகாட்டித்தந்தால்.

அரு:—ஆறும் பாட்டு. உபாயாந்தரம் நீங்குகைக்குடலோ என்ன அருளிச்செய்கிறார் (மத்யாஜீமாம்) இத்யாதி. "நின்பால்" என்றத்தைக்கீழே கூட்டுதல்: "மாமுறி" - ஶ்லாக்யமான நீலரத்நமுறி என்னுதல்; மாமரத்தின தளிரென்னுதல். "மேல்நாள்" - பழையதாய், அஸாதாரணமான் திருமேனி. "மாஶுச:" என்ற உனக்குச் சொல்லுகைபரமன்றோ என்றபடி. "உரையாய்" என்பானென், * மயர்வறமதிநலம் முதலான நன்மைகளைப் பண்ணினோமே என்ன அருளிச்செய்கிறார் (என்செய்தாலென்படோம்யாம்) என்று. நீ எல்லாநன்மைகளையுஞ்செய்து பரமபதத்திலேவைத்தாலும் என்னை என்கையிலேகாட்டித்தந்தால் அந்தப் பரமபதத்தையும் விட்டுப் பழைய ப்ரக்ருதியிலே வந்துநிற்பனென்று தாத்பர்யம் § மேல்வாக்யம் பிழை.

6,

---

§ இந்த அருப்பதத்துக்கு வ்யாக்யாநத்தில் இன்னும்சில வாக்யங்களுண்டு.

7. யாமே யருவினையோம் சேயோம், என்னெஞ்சினார்
தாமே யணுக்கராய்ச் சார்ந்தொழிந்தார்,—பூமேய
செம்மாதை நின்மார்பில் சேர்வித்துப், பாரிடந்த
அம்மாநின் பாதத் தருகு.

பதவுரை :—பூ மேய செம் மாதை—தாமரைப் பூவிலே பொருந்தியவளாய் செந்நிறத்தையுடைய பெரிய பிராட்டியை, நின் மார்பில்—உன்னுடைய திருமார்பில், சேர்வித்து—(அம்ருதமதந காலத்தில்) வஹிக்கச்செய்து, பார் இடந்த—(பிரளயகாலத்தில்) பூமியைக் குத்தி எடுத்த, அம்மா—எம்பிரானே!, நின்—ஸ்வாமியான உன்னுடைய, பாதத்து அருகு—திருவடிகளுக்கு ஸமீபத்தில், என் நெஞ்சினார்—என் மநஸ்ஸானது, தாமே—(என் அநுமதி இல்லாமல்) தானாகவே, அணுக்கராய்—(எம்பெருமானுக்கு) அந்தரங்கராய், சார்ந்து ஒழிந்தார்—கிட்டிவிட்டது; அரு வினையோம்—கொடிய பாபத்தையுடைய, யாமே—நாமே, சேயோம்—வெகுதூரத்திலுள்ளோம்.

அவ:—ஏழாம் பாட்டில், (யாமே) அயோக்யனென்றகன்ற தம்மைச்சேரவிட்டானென்று நின்றதுகீழ்; சேரவிட்டாலும் டர்வதபரமாணுக்களுடைய சேர்த்திபோலேயிறே.

வ்யா :-(யாமேயித்யாதி) மஹாபாபியாயிருந்த நாம் தூரியோம். ஸம்ஸாரிக்கு பகவல்லாபமென்கிறதோரர்த்தமோ? என் நெஞ்சினாரித்யாதி) என்னுடைய நெஞ்சினார் பண்ணின உபகாரமிறே. தன் ஸ்வரூபமறியாதே மேல்விழுந்து செய்வதொன்றிறே. (பூமேயவித்யாதி) அயோக்யரென்ற பிற்காலிக்கைக்கும் மேல்விழுகைக்கும் ஹேதுசொல்லுகிறது. (பூமேயசெம்மாதைநின்மார்பில்சேர்வித்து) என்ற லக்ஷ்மீபதித்வமும், (பாரிடந்த) என்ற ஆதிமாநுஷசேஷ்டிதத்வமும், (அம்மா) என்ற ஸர்வேச்வரத்வமும் பிற்காலிக்கைக்கும் ஹேது. பெரியபிராட்டியார் திருமார்பிலேயிருக்க நமக்கிழுக்க வேணுமோ? என்றும், "பாரிடந்த" என்றத்தால் தளர்ந்தார்தாவளமென்றும், "அம்மா" என்று வகுத்தவனென்றும் மேல்விழுகைக்கும் இவைதானே ஹேதுக்கள். (அம்மாநின்பாதத்தருகு-என்னெஞ்சினார் தாமேயணுக்கராய்ச்சார்ந்தொழிந்தார்.)

அரு :—ஏழாம்பாட்டு. இதுக்கு, "பெற்றதாய்" என்ற பாட்டோடே ஸங்கதி. இவனுக்கு பகவத்விஷயர்தூரமோவென்ன

அருளிச்செய்கிறார் (ஸம்ஸாரிக்கு) இத்யாதி. (அர்த்தமோ)-பொருளோ. அதுகிடைக்குமோவென்றபடி. தாம் தூரஸ்த்தராகில் நெஞ்சுகிட்டக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (தன் ஸ்வரூபம்) இத்யாதி. 7.

8. அருகும் சுவடும் தெரிவுணரோம், அன்பே
பெருகு மிகவிதுவென் பேசீர்,—பருகலாம்
பண்புடையீர் பாரளந்தீர் பாவியெம்கண் காண்பரிய
நுண்புடையீர் நும்மை நுமக்கு.

பதவுரை:— பருகலாம் பண்பு உடையீர்—(த்ரவ பதார்த்தத்தைப் போல்) பானம் பண்ணத்தக்கவையான குணங்களை உடைய பிரானே!, பார் அளந்தீர்—உலகையெல்லாம் அளந்தவரே!, பாவி எம்—மிகுந்த பாபத்தையுடையவர்களான எங்களுடைய, கண் காண்பு அறிய—கண்களாலே பார்க்கவொண்ணாதபடியான, நுண்பு உடையீர்—ஸூக்ஷ்மத்தன்மையையுடையவரே!, நும்மை—உம்மை, அருகும் சுவடும்—அணுகுவதையும் (அதற்கு) உபாயத்தையும், தெரிவு உணரோம்—ஆராய்ந்து அறியமாட்டோம்; நுமக்கு—உமக்கோவெனில், அன்பு—எங்களிடம் ப்ரீதியானது, மிக பெருகும்—மிகவும் வளரா நின்றது; இது என்—இதற்குக் காரணம் என்ன? பேசீர்—(நீரே) சொல்லுவீராக.

அவ:—எட்டாம் பாட்டில்; (அருகும்) நீர் கைக்கெட்டாதேயிருக்கச்செய்தே கைபுகுந்தாற்போலேயிராநின்றன; இதுக்கடி சொல்லீரென்கிறார்.

வ்யா:—(அருகும்சுவடும்தெரிவுணரோம்) பன்னீராண்டு கலந்த பிராட்டியைப்போலே உம்மோடே கலந்து உம்முடைய சுவடறிகிறிலோம். நீர் வருகைக்குச் சுவடறிகிறிலோமென்றுமாம். (அன்பீத்யாதி) ஆனாலுமக்கு அன்புமிகாநின்றது; இதுக்கடி சொல்லீர். (பருகலாம்பண்புடையீர்) "பருகலாம்" என்று ஒரு த்ரவத்ரவ்யத்தைச் சொல்லுமாபோலே சொன்னபடியென்! பருகலாம் நீர்மையையுடையீர்! (பாரளந்தீர்) சொன்ன நீர்மைக்கு உதாஹரணம். (பாவியெம் கண்ணித்யாதி) பாவியோமாயிருந்த எங்கள் கண்ணுக்குக் காணப்போகாத வைலக்ஷண்யத்தையுடையீர்! (நும்மை - நுமக்கு). [நும்மை-அருகும் சுவடும்தெரிவுணரோம் - நுமக்கு அன்பே பெருகும் மிக இதுவென்

பேசீர்]. இது ஜீயர் பிள்ளைதிருநறையூரரையர் பக்கல் கேட்டதாகப் பிள்ளையருளிச்செய்தார். 18.

அரு:—எட்டாம் பாட்டு. "அடையாளமுமறியோம்" என்கையாலே கைக்கெட்டாமையும், "அன்பேபெருகும்" என்கையாலே கைபுகுந்தமையுந்தோற்றுகிறது. அருகுஞ்சுவடுப்கலந்து, அத்தால் வருமடையாளமறியோமென்னுதல்; கிட்டுகைக்கடையாளமறியோமென்னுதல். "நுண்பு" நுண்மைபாய் அத்தால்வைலக்ஷண்யம்.

§ இவையறிவனென்றவாக்யந்தெரியாது. பிழையும். 18.

9. நமக்கடியோ மேன்றென்று நொந்துரைத்தேன், மாலார்
தமக்கவர்தாம் சார்வரிய ராணல்,—எமக்கினி
யாதானு மாகிடுகாண் நெஞ்சே, அவர்திறத்தே
யாதானும் சிந்தித் திரு.

பதவுரை:—நெஞ்சே—மநஸ்ஸே!, அவர்தாம்—ஸர்வேச்வரரான அவர்தாம், சார்வு அறியர் ஆனல்—கிட்டவொண்ணாதவரானல், "நமக்கு அடியோம்—ஸ்வாமியான உமக்கு நாங்கள் தாஸபூதர்களன்றோ?" என்று என்று—என்று பலகாலும், நொந்து—வருந்தி, மாலார் தமக்கு—மிகப்பெரியவரான அவருக்கு, உரைத்து என்—சொல்லி என்ன பயன். எமக்கு—(அவன் உடைமையான) நமக்கு, இனி—இனிமேல், யாதானும் ஆகிடுகாண்—எதுவாகிலும் உண்டாகட்டும்; அவர் திறத்தே—அவர் விஷயத்தில், யாதானும்—ஏதாவதொன்றை, சிந்தித்து இரு—நினைத்திருப்பாயாக.

அவ:—ஒன்பதாம் பாட்டில்; (நமக்கித்யாதி) பல்பன்னிரண்டும் காட்டினாலும் ப்ரயோஜநமில்லையென்கிறது.

வ்யா:—நமக்கடியோமென்கிறதே போரும் அவனிரங்குகைக்கு. (என்றென்று) அதுக்குமேலே அத்தைப்பலகால் சொல்லுகையும் திருவுள்ளத்தைப் புண்படுத்துகைக்குடல். (நொந்துரைத்தேன்) (22) "आर्तो वा यदि वा दृप्तः परेषां शरणागतः" (ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: பரேஷாம் சரணாகத:) என்றதுவும் பொய்போலே. (மாலார் தமக்கு) பண்டிவையெல்லாஞ்செய்து வர்த்தித்தவருக்கு. (அவர்தாம் சார்வரியரானல்) கையாளாய் வர்த்தித்தவர்தாம் கிட்டவரியரானல். அவர்

---

§ இந்த அரும்பதத்திலெடுத்த வாக்யம் வ்யாக்யான ஸ்ரீகோசங்களில் காணவில்லை.

"செப்வோம்" என்று நினைத்தவன்றுபோலே காணுமிங்குச் சொன்னவையெல்லாம் பலிப்பது. (எமக்கித்யாதி) இனி நமக்குப் பேறிழவிரண்டு மொக்கும். பசித்தபோது கிடையாத சோறென்செய்ய? விஶ்லேஷத்தில் உஜ்ஜீவிப்போமாகிலன்றோ ஆறியிருக்கலாவது. (23) "ईर्ष्यारोषौ" (ஈர்ஷ்யாரோஷௌ) இத்யாதி. "அதிலே துஷ்ட ஸத்வங்களும் ராக்ஷஸருமுண்டு; ஸுகுமாரையாயிருக்கிற உன்னைக் கொடுபோகவொண்ணாது" என்று பெருமாளருளிச்செய்ய, ப்ரணய ரோஷத்தாலே பிராட்டி விண்ணப்பம் செய்கிறாள்; உம்முடைய பின்னே போந்தேனென்று எனக்கொரு உயர்த்தியுண்டாங்காட்டி உமக்கு இத்தனை பொறுமையும் சீற்றமும் வேணுமோ? "பிதாவினுடைய வசநத்தை அநுவர்த்தித்துக் காடேறப்போனார்" என்று உமக்கொரு உயர்த்தி தேடுகிறவோபாதி உம்முடையபின் போந்தேனென்று எனக்கொரு உயர்த்தியுண்டானாலாகாதோ? அநுவர்த்த நீயரை அநுவர்த்திக்கலாவது உமக்கேயோ? அல்லாதார்க்கு ஆகாதோ? (23) "ईर्ष्यारोषौ बहिष्कृत्य भुक्तशेषमिवोदकं" (ஈர்ஷ்யாரோஷௌ பஹிஷ்க்ருத்ய புக்தசேஷமிவோதகம்) வஸிஷ்ட ஶிஷ்யராய் ஜ்ஞாநவான்களானால் த்யஜிக்கப்படுமவை த்யஜிக்கவேணுங்காணும். (23) "नय मां" (நய மாம்) அஸூயையும் கோபமும்போனால் பரஸம்ருத்தியேயிறேயுள்ளது; ஆனபின்பு என்னைக்கொடுபோகீர். (23) "वीर" (வீர) பரஸம்ருத்தியுண்டானால் கொடுபோகாதொழிகைக்கடி வீர்யத்தில் கொத்தையிறே; அதில்லையிறே உமக்கு. (23) "विस्रब्धः" (விஸ்ரப்த:) உம்மைநீரறிவீர்; என்னை விஶ்வஸித்துக் கொடுபோம். (23) "पापं मयि न विद्यते" (பாபம் மயி ந வித்யதே) உம்மைப் பிரிந்து ஜீவிக்கைக்கடியான பாபமெனக்கில்லைகாணும். பாபமாவது க்லேசஹேதுவிறே; உம்மைப் பிரிந்து க்லேசப்படுமதில்லைகாணும் எனக்கு. (அவர் திறத்தே யாதானும் சிந்தித்திரு) பேறும் இழவும் இரண்டு மொக்குமென்றிருக்கலாமோ? நம்முடைய ஸத்தைக்கு அவன் வேணுமேயென்ன, ஸத்தைக்கிதெல்லாம்வேண்டாகாண்; அவர் நம்மை வேண்டாவென்றத்தை நினைத்திருக்கவமையும். நம்முடைய ஸத்தைக்கு அவர் ஸத்தையிறே காரணம். 9

அரு:—ஒன்பதாம் பாட்டு. "என்றென்று" என்கிற மீமிசையால் (பல்பன்னிரண்டு) என்கிறது. (பண்டிவைபெல்லாம்) நம்மிடத்திலே,

முன்பு அடியோமென்பது, நொந்துரைப்பது, பல்காட்டுவதாய்ச் செய்து வர்த்தித்தவற்கென்றபடி. இரண்டுமொக்குமென்பானென், இழவுக்குநோவுபடவேண்டாவோவென்ன அருளிச்செய்கிறார் (பசித்தபோது) இத்யாதி. அங்கீகரியாமல்வெறுத்த பேருண்டோ வென்ன அருளிச்செய்கிறார் (ஈர்ஷ்யாரோஷௌ) இத்யாதி. (என்னை விஶ்வஸித்து) - நான்சொன்னவார்த்தையை விஶ்வஸித்து. (ஸத்தைக்கிதெல்லாம்) நமஸ்காராதிகளெல்லாம். வேண்டா என்றத்தை நினைக்கப்போருமோமென்ன அருளிச்செய்கிறார் (நம்முடையஸத்தைக்கு) இத்யாதி. [நெஞ்சே! அவர் தாம் சார்வரியராகில் மாலார் தமக்குநமக்கடியோமென்றென்று நொந்துரைத்தென்-இனியெமக்கு யாதானுமாகிடுகாண் - அவர் திறத்தேயாதானுஞ்சிந்தித்திரு.] என்றந்வயம். 19.

10. இருநால்வ ரீரைந்தின் மேலொருவர், எட்டோ
டொருநால்வ ரோரிருவ ரல்லால்,—திருமாற்கு
யாமார் வணக்கமா ரேபாவம் நன்னெஞ்சே
நாமா மிகவுடையோம் நாழ்.

பதவுரை:—நல் நெஞ்சே—நலமுடைய மனஸ்ஸே!, இரு நால்வர்—அஷ்ட வஸுக்கள், ஈரைந்தின் மேல் ஒருவர்—ஏகாதச ருத்ரர்கள், எட்டோடு ஒரு நால்வர்—த்வாதச ஆதித்யர்கள், ஓரிருவர்—ஒப்பற்றவர்களான அச்விநீ தேவதைகள், அல்லால்—ஆகிய இவர்களையொழிய, திருமாற்கு—லக்ஷ்மீநாதனை அடைவதற்கு, யாம் ஆர்—நாம் எவ்வகையில் சேர்ந்தவர்; வணக்கம்ஆர்—(அல்பசக்தியையுடையநாம் செய்யும்) ஆச்ரயணம் எவ்வகையில் சேர்ந்தது; ஏ பாவம்—(நம்முடைய) பாபமிருந்தபடியென்? நாம்—நாமோ!, மிக நாழ் உடையோம்—மிகுந்த வீணாசையையுடையவர்களாயிருக்கிறோம், ஆ—என்ன ஆச்சரியம்!

அவ:—பத்தாம் பாட்டில்; (இருநால்வர்) இதுக்கு மூன்றுப்படியருளிச்செய்வர். விலக்ஷணாதிகாரங்காண்; மதிப்பர்க்கே கிடைக்குமத்தனையல்லது எளியர்க்குக் கிடையாதுகாண்; தன்னையே ப்ரயோஜநமென்றிருப்பார்க்குக் கிடையாதுகாண்; உபாயாந்தரபரிக்ரஹணம் பண்ணினார்க்கு மத்தனைகாண்; தன்னையே உபாயமாகப் பற்றினார்க்குக் கிடையாதுகாண் என்றுமாம்.

வ்யா :—(இருநால்வரித்யாதி) அஷ்டவஸுக்கள், ஏகாதசருத்ரர்கள், த்வாதசாதித்யர்கள், அச்விநிகள். (அல்லால்) இம்மதிப்பர்களையொழிய. (திருமாற்குயாமார் வணக்கமார்) ஸ்ரிய:பதிக்கு நாமார்? அங்குப்பரிமாறுவாரார்? நம்முடைய செயலெது? (ஏபாபம்) அவன் அருகேயிருக்க இழக்கவேண்டினது நம்முடைய பாபம். (நன்னெஞ்சே) லாபாலாபமிரண்டுக்கும் கூட்டான நெஞ்சே! (நாமா இத்யாதி) நாம்நறுவட்டாணித்தனத்தைமிகவுடையோம். ஸ்ரிய:பதியென்றால் நம் ஸ்வரூபத்தைப்பார்த்து அகலவிறேயடுப்பது; ஸ்வரூபத்தைப்பாராதேகிட்டிற்று நம்மளவில்லாமையிறே. 10.

அரு :—பத்தாம் பாட்டு. (மூன்றுபடி) இரண்டு அயோக்யதாநுஸந்தாநம், மூன்றாவது வெறுப்பு. "நாழ்" - நறுவட்டாணித்தனமாய், நிரர்த்தமான வாக்ஸாமர்த்யம். பலிதத்தையருளிச்செய்கிறார் (ஸ்ரிய:பதி) இத்யாதி. [நாமாகில் நாழ்மிகவுடையோம்; ஆகையாலே யாமார்வணக்கமார்] என்றந்வயம்.

11. நாழா லமர்முயன்ற வல்லரக்க னின்னுயிரை,
வாழாவகை வலிதல் நின்வலியே,—ஆழாத
பாருநீ வானுநீ காலுநீ தீயுநீ
நீரும்நீ யாய் நின்ற நீ.

பதவுரை :—ஆழாத பாரும் நீ—(நீரிலே) அழுந்தாதே மிதக்கிற பூமியும் நீயே, வானும் நீ—ஆகாசமும் நீயே; காலும் நீ—வாயுவும் நீயே; தீயும் நீ—நெருப்பும் நீயே; நீரும் நீ—ஜலமும் நீயே; ஆய் நின்ற நீ—(இவையெல்லாவற்றுக்கும்) அந்தர்யாமியாய்நின்ற நீ, நாழால்—அபிமானத்தாலே, அமர் முயன்ற—உன்னுடன் சண்டை செய்த, வல் அரக்கன்—வலிமைபொருந்திய ராக்ஷஸனாகிய ராவணனுடைய, இன் உயிரை—இனிய உயிரை, வாழா வகை வலிதல்—ஜீவிக்காதபடி ஹிம்ஸித்தது, நின் வலியே—(உனக்கு) ஒரு ஸாமர்த்யமாகுமா?

அவ :—பதினோராம்பாட்டில்; "அயோக்யன்" என்றகன்ற நம்மை வென்று சேரவிட்டுக்கொள்ள, "என்னை வென்று சேரவிட்ட உனக்கு ராவணனை வென்றதுவுமொரு பணியோ?" என்றார்.

வ்யா :—(நாழாலித்யாதி) ராக்ஷஸ ராஜனென்கிற அபிமானத்தாலே 'பெருமாளோடெதிரிடுவோமல்லோம்' என்னாதே யுத்தத்திலே

யத்நம் பண்ணி மிடுக்கனை ராவணன்பேணினவுயிரை வாழாவகை உனக்கொரு மிடுக்கோ? அயோக்யனென்றகலுமவர்கள் பிராட்டியைப் பிரித்த ராவணனோடொப்பார்கள். (ஆழாதவித்யாதி) விருத்தமான விபூதிகளைச் சேரவிட்டு அநுபவிக்கிற உனக்கு என்னைச்சேரவிடுகையொருபணியோ? விபூதி ஸாமாந்யங்களுக்கு நிர்வாஹகனுய் அவற்றைச்சொல்லுகிற சப்தம் உன்னளவும் வரும்படி நிற்கிறவுனக்கு, உனக்கே அஸாதாரணமாய் உன்னாலல்லது செல்லாதவர்களைச்சேரவிடுகை பணியோ? என்றுமாம். 11.

அரு:—பதினோராம் பாட்டு. (விருத்தமான) அக்நிக்கும் ஜலத்துக்கும் சேராதாற்போலே பரஸ்பரவிருத்தமான பஞ்சபூதங்களையுங்கொண்டு காரியங்கொள்ளுகிறவுனக்கு என்றபடி. 11.

12. நீயன்றே யாழ்துயரில் வீழ்விப்பான் நின்றுழன்றாய்
போயொன்று சொல்லியென் போநெஞ்சே—நீயென்றும்
காழ்த்துபதேசந்தரினுங் கைக்கொள்ளாய் கண்ணன்தாள்
வாழ்த்துவதே கண்டாய் வழக்கு.

பதவுரை:—நெஞ்சே—மனமே!, ஆழ் துயரில்—ஆழ்ந்த துன்பத்தில், வீழ்விப்பான்—(என்னைத்) தள்ளுவதற்காக, நின்று உழன்றாய்—நிரந்தரமாக முயற்சிசெய்தது, நீ அன்றே—நீயேயல்லவா; போய்—மேலும் மேலும், ஒன்று சொல்லி—ஒரு வார்த்தை சொல்லுவதனால், என்—என்ன பயன்? போ—இதை விட்டு விடு; உபதேசம் தரினும்—(எம்பெருமானுடைய நீர்மையைப்பற்றி) நான் உபதேசித்தாலும், நீ—நீ, காழ்த்து—(என்மேல்) கோபங்கொண்டு, என்றும் கைக்கொள்ளாய்—(அவ்வுபதேசத்தை) ஒருபோதும் அங்கீகரிக்கிறாயல்லை; கண்ணன் தாள்—க்ருஷ்ணனுடைய திருவடிகளை, வாழ்த்துவதே—மங்களாசாஸநம் செய்வதே, வழக்கு கண்டாய்—நமக்குத் தகுந்தது கிடாய்.

அவ:—பன்னிரண்டாம் பாட்டில்; (நீயன்றே) கிட்டினவாறே போன நாளைக்குக் கரைகிறார்.

வ்யா:—(நீயன்றே யித்யாதி) ஆழ்துயரென்றது - அயோக்யரென்றகன்ற க்லேசமாகவுமாம்; விஷயப்ராவண்யமாகவுமாம். (போயித்யாதி) நெஞ்சு "நீரன்றோ ஆழ்துயரிலே விழும்படி பண்ணினீர்" என்று சொல்ல, "நீ யொன்றைச் சொல்ல நானொன்றைச் சொல்லு

கிறதென், அத்தைப்பொகடு" என்கிறார். (நீயித்யாதி) ஸர்வேச்வர னுக்கு ஐச்வர்யமேயன்றோகாண் விஞ்சியிருப்பது; நீர்மையும் விஞ்சி யிருக்குங்காணென்று நான் சொன்னாலும் அழன்று அத்தைக்கொள் ளாய். (கண்ணனித்யாதி) "ஆகிலினிச்செய்வதென்" என்று நெஞ்சு கேட்க அவன் ஆபிமுக்யம் பண்ணிநிற்க நாம்வைமுக்யம் பண்ணலா காதுகாண்; அவன் திருவடிகளுக்கு மங்களாசாஸநம் பண்ணுகை ந்யாயம். 12.

அரு:—பன்னிரண்டாம் பாட்டு. "போய்" - மிகவும். "ஒன்று சொல்லியென், - போ" பொகடு, சொல்லவேண்டா வென்றபடி. உபதேசம்தரினும் என்றும் காழ்த்துகைக்கொள்ளாய். (அழன்று) சீறி. 12.

13. வழக்கோடு மாறுகோ ளன்றடியார் வேண்ட
இழக்கவுங் காண்டு மிறைவ—இழப்புண்டே
எம்மாட்கோண் டாகிலும் யான்வேண்ட வென்கண்கள்
தம்மாற்காட் டுன்மேனிச் சாய்.

பதவுரை:—இறைவ—ஸர்வேச்வரனே!, ஒடு—(ஸம்ஸாரிகளு டன்) ஒட்டுவதும், வழக்கு அன்று—(உனக்குத்) தகுந்ததல்ல; மாறு கோள் வழக்கு அன்று—(அவர்களிடம்) ஒரு கைம்மாறுகொள்வதும் தகுந்ததல்ல; அடியார் வேண்ட—உன்னுடைய பக்தர்கள் வேண்டிய போதிலும், இழக்கவும் காண்டும்—அவர்கள் விரும்பியதைப் பெறா மல் இழந்து போவதையும் பார்க்கிறோம்; இழப்பு உண்டே—(அநந்ய ப்ரயோஜநனை) நானும் அப்படியே இழந்துபோகலாமா? ஆகிலும்— எங்களிடம் கைம்முதல் கொள்ளவேண்டுமேயாகிலும், யான் வேண்ட —நான் ப்ரார்த்திக்க, எம் ஆள் கோண்டு—(அந்த உக்தி மாத்ரத் தாலேயே) என்னை அடிமையாகக் கொண்டு, என் கண்கள் தம்மால்— என்னுடைய இவ்வூனக்கண்களாலேயே, உன் மேனி சாய்—உன் திருமேனி அழகை, காட்டு—காண்பிப்பாயாக.

அவ:—பதின்மூன்றாம் பாட்டில்; (வழக்கொடு) "அகலவொட் டாயாகில் கிட்டி அநுபவிக்கும்படி பண்" என்கிறார்.

வ்யா:—(வழக்கொடித்யாதி) ஸம்ஸாரியினுடைய முன்னே நிற் கையும் வழக்கன்று; ஸாதநாநுஷ்டாநம் பண்ணினாரைப்போலே உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் கொள்ளுகையும் வழக்கன்று; ஆயில்

நீர் சொல்லுகிறதென்னென்னில், (அடியாரித்யாதி) அடியாரானவர்கள்வேண்ட ஸ்வாமி இழக்கக்கண்டோம். (இறைவ) நீரடியாராக வேணுமேயென்ன, என்பக்கலுள்ளதழிந்தாகிலும், உன்பக்கலுள்ள தழியாதிறே; உன் ஸ்வாமித்வமுண்டாக என் சேஷத்வம் தன்னிடையே கிடவாதோ? (இழப்புண்டே) நாட்டடியார்க்கு இழப்புண்டாகிலும் உன்னடியார்க்கிழப்புண்டோ? (எம்மாட்கொண்டித்யாதி) இழப்பின்றிக்கேயொழியும்போது உமக்கடிமையிலே சிறிது அந்வயம் வேணுமேயென்ன, என்னுடைய உக்திமாத்ரத்தையே பரிபூர்ண கைங்கர்யமாகக்கொண்டு செய்யவேணும். (என்கண்கள் தம்மாற் காட்டுன் மேனிச்சாய்) செய்யவேண்டுவதென்னென்ன, ஒருத்தன் பட்டினிவிட ஒருத்தனுண்டால் பசிகெடாதிறே. (24) "गात्रैः शोकाभिकर्शितैः" (காத்ரைஶ்ஶோகாபிகர்ஶிதை:) என்னும்படியே தேஹாந்தரே தேஶாந்தரே காணவொண்ணாது; விடாய்த்த கண்களாலே காணவேணும். 13.

அரு:—பதின்மூன்றாம் பாட்டு. ஈச்வரனைப்பார்த்துச் சொல்லுகிறார் (அகலவொட்டாயாகில்) இத்யாதி. * ஓடுவழக்கன்று மாறுகொள்வழக்கன்று என்றுகூட்டி அருளிச்செய்கிறார் (ஸம்ஸாரி) இத்யாதி வாக்யத்வயத்தாலே. ஒன்றுமறியாத ஸம்ஸாரிகள் முன்னே அவதரித்துநிற்கையும் "நீ ஒன்றைச்செய் நான் ஒன்றைத்தருகிறேன்" என்கையும் உனக்குவழக்கன்று; ப்ரயோஜநமில்லை என்றபடி. வழக்கேதென்று ஶங்காபிப்ராயம். அடியார்க்கபேக்ஷாமாத்ரத்தாலே கார்யஞ்செய்கை வழக்கென்று உத்தரம். அதுகாணும். (அடியாரானவர்கள்) இத்யாதி. (நாட்டடியார்)-இதரசேஷபூதர். உன்மேனிச்சாயை-நிறத்தை, யான்வேண்ட, என்கண்கள் தம்மால்காட்டு-கண்கள் தனக்குக்காட்டு என்றபடி. 13.

14. சாயால் கரியானை யுள் ளறியாராய் நெஞ்சே
பேயார் முலைகொடுத்தார் பேயராய்—நீயார்போய்த்
தேம்பூண் சுவைத்தூ னறிந்தறிந்தும் தீவினையாம்
பாம்பார்வாய் கை நீட்டல் பார்த்தி.

* ஓடு என்று ஸம்பந்தமாய், ஸம்ஸாரிகள் என்று அத்யாஹரித்துக் கொண்டு ஸம்ஸாரிகள் முன்னிற்கை என்று பலித்த தாத்பர்யம்.

பதவுரை :—நெஞ்சே — மனஸ்ஸே !, சாயால் கரியானை—நிறத்தால் கரியவனான க்ருஷ்ணனை, உள் அறியாராய்—உள்புகுந்து அநுபவிக்க அறியாதவளாய், பேயார்—பேயாகிய பூதனை, பேயராய் முலை கோடுத்தாள் —பேயாயிருக்கையாலே (விஷங்கலந்த) முலையைக் கொடுத்தாள் ; போய்—பலதடவை சென்று, தேம் பூண் சுவைத்து—ஆத்மாவைத் தேயச்செய்யும் சப்தாதி விஷயங்களைப் பூசித்து, ஊன் அறிந்து அறிந்தும்— அதனுடைய பலனை அறிந்து வைத்தும், தீவினையாம் பாம்பார் வாய்—கெடுதியை விளைவிக்கக்கூடிய (ஸம்ஸாரமாகிற) பாம்பின் வாயிலே, கை நீட்டல் பார்த்தி—கை நீட்டப்பார்க்கிறாய் ; நீ யார்— (பூதனைக்கு ஒப்பிடும்போது) நீ எவ்வளவு தாழ்ந்தவன் ?

அவ :—பதினொராம்பாட்டில் ; (சாயால்) காட்டவேணுமென்றார் கீழ் : ஆரை யென்கண்களாலே காண்கிறதென்றகன்றும், திரியட்டும் தம்முடைய அயோக்யதையைச் சொல்லுகிறார். பூதனைகிட்டினவோபாதியிறே நான் கிட்டுகை யென்கிறார்.

வ்யா :—(சாயால்கரியானை) நிறத்தால் கரியனாயுள்ளவனை. (உள்ளறியாராய்) ஆழவநுபவிக்கவறியாராய் ; ஸர்வேச்வரனென்று உள்ளபடியறியாராயென்றுமாம். (நெஞ்சேயித்யாதி) பூதனை மனிச்சியாய் வஞ்சித்தாளன்றே ; பேயாகையாலே வஞ்சித்தாளத்தனையிறே ; உன்னைப்பார்த்தால் பூதனை நித்யஸூரிகளோடொக்குமிறே. (தேம்பூண் சுவைத்தித்யாதி) ஆத்மா தேயும்படிக்கீடாக சப்தாதிகளை புஜித்து அதினுடைய விபாகத்தை யறிந்தறிந்து, அநர்த்தத்தைப் § பலிக்கக் கடவதாயிருக்கிற பாம்பினை வாயிலே கை நீட்டுவாரைப்போலேயிருக்கிற நீ பூதனைக்கார் ? உனக்கண்ணியளோ பூதனை ? அயோக்யனென்றகலுகிற பக்ஷத்தில் - ஈச்வரனுக்கு அவத்யம் பிறக்கைக்கீடாக வளைந்து "உன்னணைவு பொல்லாது" என்னுமிடத்தை யறிந்தறிந்தும் கிட்டுகிறாயன்றோ ? என்றுமாம். 14

அரு :—பதினொராம் பாட்டு. (ஆழ அநுபவிக்க) - பிள்ளைத் தனத்தைக்கண்டுபடாமல் வஞ்சித்தாளென்னுதல். * சாஸ்த்ரவச்யமான

---

§ பலிப்பிக்க என்றாவது அநர்த்தபதம் ப்ரதமாந்தமாயாவது பாடமிருக்கலாம்.

* இங்கு மற்றொரு பக்ஷத்துக்கும் உபபாதகமான பங்க்தி இருக்க வேண்டும்.

உன்னைப்பார்த்தால், அறிவுகெட்டு ஈச்வரனையழித்தாளவள், நீ சாஸ்த்ரவஶ்யமாயிருக்கச்செய்தேயும் விஷயங்களிலே யாத்மாவை மூட்டி ஈசிப்பிக்கையாலே உனக்கு ஸமனென்றென்றபடி. அன்றியே "தேம்பூண்" - ஈச்வரனுக்கு அவத்யம் வரும்படி. "சுவைத்து": அவனையணைந்தென்று ஈச்வரபரமாகவுமாம். அப்போது, தீவினையா மென்றறிந்தறிந்து - பொல்லாதென்றறிந்திருக்கச்செய்தேயும், பாம்பின் வாயிலே கைநீட்டுமாபோலே, நாமவனைக்கிட்டுகையவத்யமென்றறிந்திருக்கச்செய்தேயும் கிட்டுகிற உனக்குப் பூதனை ஸமனோ? என்றபடி. [நெஞ்சேபோய் என்று தொடங்கி, நீட்டல்பார்த்தி, அவனுக்கு நீயார்] என்றந்வயம். 14.

15. பார்த்தோ ரெதிரிதா நெஞ்சே படுதுயரம்
போர்த்தோதப் பீடழிவாம் பேச்சில்லை—ஆர்த்தோதம்
தம்மேனித் தாள்தடவத் தாங்கிடந்து தம்முடைய
செம்மேனிக் கண்வளர்வார் சீர்.

பதவுரை:—நெஞ்சே—(அயோக்யன் என்று அகலும்) மநஸ்ஸே!, ஓதம்—கடலானது, ஆர்த்து—சப்தித்துக்கொண்டு, தம் மேனி தாள் தடவ—தம்முடைய திருமேனியையும் திருவடிகளையும் தடவும்படியாக, தாம் கிடந்து—தாம் சயனித்துக்கொண்டு, தம்முடைய செம் மேனி கண் வளர்வார்—தம்முடைய சிவந்த நிறத்தையுடைய திருக்கண்களை மூடிக்கொண்டு யோகநித்ரை செய்கிறவருடைய, சீர்—கல்யாணகுணங்களை, படுதுயரம் போர்த்து—நாம் படுகிற துன்பங்களை நினையாமல், ஓத—அநுஸந்தித்தால், பீடு அழிவாம் பேச்சு இல்லை—அப்பெருமானுடைய பெருமை அழிந்து விடும் என்னும் வார்த்தை சரியல்ல; எதிரிதா—முதன் முதலில், பார்த்து ஓர்—(இதை) அறிந்து ஆராய்வாயாக.

அவ:— பதினைந்தாம் பாட்டில்; (பார்த்தோர்) உன்னுடைய பூர்வ வ்ருத்தத்தை நினைத்தாலகலவேணும்; அவனுடைய பூர்வ வ்ருத்தத்தை ஸ்மரித்தால் கிட்டலாமென்கிறது.

வ்யா:—(பார்த்தித்யாதி) அணுகியெதிரிதாப்பார்த்து ஓர்-முன்னிட்டுப் பார்த்து விசாரி. (ஆர்த்தோதமித்யாதி) கடலானது ஆர்த்துக்கொண்டு தம்முடைய சிவந்த திருவடிகளை வருட அவஸரப்ரதீக்ஷையாய்க் கண்வளருகிறவருடைய குணங்களை; (படுதுயரமித்யாதி)

தான்படுகிற துயரத்தைப் போகட்டு அக்குணங்களை ஓத, அவனுடைய பெருமைக்கு அழிவென்னும் பேச்சில்லை. இத்தை முன்னிட்டறிந்து விசாரி. 15.

அரு:—பதினைந்தாம் பாட்டு. [ஓதமார்த்துத்தம்மேனியையும் தம்முடைய செம்மேனித்தாளையும் தடவத்தாங்கிடந்துகண்வளருகிற வருடைய சீரை - படிதுயரம்பேர்க்கோதப் பீடழிவாம்பேச்சில்லை, நெஞ்சே எதிரிதாப்பார்த்தோர்] என்றங்வப். 15.

16. சீரால் பிறந்து சிறப்பால் வளராது
பேர்வாம ஞகாக்கால் பேராளா—மார்பாரப்
புல்கி நீ யுண்டுமிழந்த பூமி நீரேற்பரிதே
சொல்லுநீ யாமறியச் சூழ்ந்து.

பதவுரை:—பேராளா—ஸர்வேச்வரனே!, சீரால் பிறந்து—ஐச்வர்யத்துடன் பிறந்து, சிறப்பால் வளராது—சிறப்பாக வளராமலும், பேர் வாமன் ஆகாக்கால்—வாமனன் என்ற பெயரைதரிக்காமலும் இருந்தால், நீ—நீ, மார்பு ஆரபுல்கி—(வராஹாவதாரத்தில்) மார்புறத் தழுவியும், உண்டு—(பிரளயகாலத்தில்) விழுங்கியும், உமிழ்ந்த—(ஸ்ருஷ்டிகாலத்தில்) வெளிப்படுத்தியும் போந்த, பூமி—இவ்வுலகத்தை, நீர் ஏற்பு அறிதே—தானம வாங்கமுடியாதோ? நீ—நீ, சூழ்ந்து—ஆராய்ந்து, யாம் அறிய—நாங்கள் அறியும்படி, சொல்லு—சொல்லாய்.

அவ:—பதினாறும் பாட்டில்; (சீரால்பிறந்து) அவஸர ப்ரதீக்ஷணயிருக்கிறவளவேயோ? இத்தைப் பெறுகைக்கு அர்த்தியாயன்றோ நிற்கிறதெனகிறார்.

வ்யா:—(சீரால்பிறந்து) (25) "**महता तपसा राम महता चापि कर्मणा**" (மஹதா தபஸா ராம மஹதா சாபி கர்மணா) சக்ரவர்த்தி தான் தேடின அர்த்தமும் பண்ணின தபஸ்ஸுமழிய மாறிப் பெற்றாற் போலேயாதல், ஸ்ரீவஸுதேவர் அநந்தவ்ரதமநுஷ்டித்துப் பெற்றாற் போலேயாதல் பிறந்தாலாகாதோ? (சிறப்பால் வளராது) ஸ்ரீஸுமித்ரையாரும் வஸிஷ்டாதிகளும் பேணி வளர்க்க வளர்ந்தாற்போலேயாதல், அநுகூலர்தேடின வெண்ணெயும் ப்ரதிகூலருடைய உயிரும் மாள வளர்ந்தாற்போலேயாதல் வளர்ந்தாலாகாதோ? (பேர்வாமனாகாக்கால்) நாட்டில் வாமனர்களெல்லாம் வளர்ந்தருளினவோபாதியாக

வாமனனுக்கவேணுமோ? ஸ்ரிய:பதியென்றொரு பேராளுலாகாதோ? ஒரு ருஷிபத்நி பக்கலிலே பிறந்து, பேணுவாரின்றிக்கே வளர்ந்து, பேரும் வாமனனாவிட்டால், உன்கையிலே பருத்திபட்டபன்னிரண்டும்பட்டு, அணைவது உண்பது உமிழ்வதான இந்த பூமி நீரேற்பரிதாய்ப்பட்டாயோ? (பேராளா) கார்யஞ் சொல்லுவதுக்கு முன்னே "எத்திறம்" என்கிறார். உன்னுடைமையிலுனக்குக்கிடக்கிற † ஓரத்துக்கெல்லை காண்கிறிலோமீ! (மாற்பித்யாதி) நீ இப்படி எளியையாய் அதரிக்கைக்கடி சூழ்ந்துசொல்லு-புத்திபண்ணி யருளிச்செய்ய வேணும். ஸர்வேச்வரன்தானும் தன்னுடைய அவதாரத்தைப்பேசப் புக்கால், (26) "जन्म कर्म च मे दिव्यं" (ஜந்ம கர்ம ச மே திவ்யம்) என்னுமத்தனை. வேதமும் பேசப்புக்கால் (27) "तस्य धीराः परिजानन्ति योनिं" (தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்) எனனும். 16.

அரு:—பதினாறும்பாட்டு. (அநந்தவ்ரதப்) - சாடு. "சூழ்ந்து" - விசாரித்து. ஸர்வஜ்ஞனைச்சூழ்ந்துசொல்லு என்பானென்னென்ன, அருளிச்செய்கிறார் (ஸர்வேச்வரன்) இத்யாதி. 16.

17. சூழ்ந்தடியார் வேண்டினக்கால் தோன்றாது விட்டாலும்
வாழ்ந்திடுவர் பின்னும்தம் வாய்திறவார்,—சூழ்ந்தெங்கும்
வாள்வரைகள் போலரக்கன் வன்தலைகள்தாமிடியத்
தாள்வரைவில் லேந்தினார்தாம்.

பதவுரை:—(1) எங்கும் சூழ்ந்து—எல்லாப் புறங்களிலும், சுற்றிக்கொண்டு, வாள் வரைகள் போல்—ஒளி பொருந்திய மலைகளைப்போல், அரக்கன் வன்தலைகள் தாம் இடிய—ராவணனுடைய பலம்பொருந்திய தலைகள் சிதைந்து விழும்படி, தாள் வரைவில்—மலைபோன்ற தாளை யுடைய வில்லை, ஏந்தினர் தாம்—ஏந்தின பகவான், சூழ்ந்து—பல அவதாரங்களும் செய்து, அடியார் வேண்டினக்கால்—தமக்கு அடிமைப்பட இசைபவர்களைத் தேடினபோது, தோன்றாது விட்டாலும்—அடியார் ஒருவரும் கிடைக்காவிடினும், வாழ்ந்திடுவர்—உகந்தேயிருப்பர்; பின்னும்—(பரமபதம் சென்ற) பின்பும், தம் வாய் திறவார்—(பிராட்டியோடும்) இதைத் தம் வாய் திறந்தும் சொல்லார்.

பதவுரை:—(2) எங்கும் சூழ்ந்து .... ஏந்தின பகவானுடைய, அடியார்—பக்தர்கள், சூழ்ந்து வேண்டினக்

† ஓரம்-பக்ஷபாதம்.

கால்—இடைவிடாமல் உபாஸித்தபோது,—தோன்றுது விட்டாலும் (அந்த பகவான்) காட்சியளியாவிடினும், வாழ்ந்திருப்பர்—நெஞ்சால் வெறுக்கமாட்டார்கள்; பின்னும் தம் வாய் திறவார்—மேலும் தம் முடைய வாயாலும் (பகவானை) இகழ்ந்துபேசமாட்டார்கள்.

அவ:—பதினேழாம் பாட்டில்; (சூழ்ந்து) அவன்கிட்டப்புக்கால் இவர்கள் பண்ணும் வைமுக்யம் அவன் நெஞ்சிற்படாதென்கிறது.

வ்யா:—(சூழ்ந்தடியாரித்யாதி) * "எதிர்சூழல்புக்கு" என்னும் படியே இவர்களைச் சூழ்ந்து "அடியார்வேணும்" என்றபேக்ஷித்தால் இவர்கள் தோன்றுவிட்டாலும் "இவர்களுக்குறுப்பாகப் பெற்றோ மிறே" என்று வாழ்ந்திருப்பதுஞ் செய்வர். "வைமுக்யம் பண்ணி னார்" என்று தனியிருப்பிலே பிராட்டிக்கு வாய்திறவார். ப்ரஜைகள் குற்றஞ்செய்யத் தாய்க்கிறே சொல்லுவது; அவளுக்குச் சொல்லார். (சூழ்ந்தெங்குமித்யாதி) "பார்த்தவிடமெல்லாம் ராமமயம்" என்னும் படி சூழ்ந்து ஒளியையுடைய மலைபோலேயிருந்துள்ள ராக்ஷஸ னுடைய தலைகளிடியும்படி திண்ணிய வில்லையேந்திய ஸர்வரக்ஷகர் ஶக்தராயிருக்கச்செய்தே அஶக்தரைப்போலே யிருப்பர். "இவர் களுபேக்ஷித்தார்" என்று பிராட்டிக்கும் வாய்திறவார்.

அடியாரானவர்களுபாஸித்தாலும் தோன்றிற்றிலராகில் சேஷ பூதன் சேஷிசெய்தபடிகண்டிருக்குமத்தனையன்றோ? என்று வெறார் கள். (பின்னும் தம்வாய்திறவார்) பகவத்குணஹாநி சொல்லுமவர் களுக்கும் வாய்திறவார். (சூழ்ந்தெங்குமித்யாதி) தோன்றுமவர் நமக்குத் தோன்றிற்றிலரென்றுவெறார்கள்.

அரு:—பதினேழாம் பாட்டு. தோன்றுவிடுகை - ஆபிமுக்யம் பண்ணுவிடுகை. "தாள்வரையில் - வளைந்து மலைபோலேயிருக்கிறவில். ஈச்வரன்வெறுனென்றதுகீழ்;" "தோன்றுதவிட்டாலும்" - ஈச்வரன் முகங்காட்டாவிட்டாலும், அடியார்வெறுரென்று அடியார்பரமாக்கி யருளிச்செய்கிறார் (அடியாரானவர்கள்) இத்யாதி. "அடியார் சூழ்ந்து வேண்டினக்கால்" - புத்திபண்ணி உபாஸித்தால். (தோன்று மவர்) - ராமாவதாரமாய்த்தோன்றுமவர். 17.

---

* திருவாய் (2-7-6).

18. தாம்பா லாப்புண்டாலு மத்தழும்பு தானிளகப்
பாம்பா லாப்புண்டு பாடுற்றுலும்—சோம்பாதிப்
பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா உன்
தோல்லுருவை யாரறிவார் சோல்லு.

பதவுரை:—தாம்பால்—(யசோதைப்பிராட்டியுடைய) கயிற்றால், ஆப்புண்டாலும்—கட்டுண்டாலும், அத்தழும்புதான் இளக—அந்தத் தழும்பும் சிறிதாகும்படி, பாம்பால் ஆப்புண்டு பாடுற்றுலும்—(காளியன் என்னும்) பாம்பால் கட்டுண்டு துன்புற்றாலும். சோம்பாது—(இத்துன்பங்களை நினைத்து) பின்வாங்காமல், இ பல். உருவும்—தேவன், மநுஷ்யன் முதலிய பலபடிப்பட்ட உருவங்களையுடைய இச் சேதநரை, படர் வித்த—தோற்றிப்பரவச்செய்த, வித்தா—ஜகத் காரணபூதனே!, உன் தோல் உருவை—பழையதான உன்னுடைய வடிவை, யார் அறிவார்—யார் அறிய முடியும்? சோல்லு—நீயே சொல்லுவாயாக.

அவ:—பதினெட்டாம் பாட்டில்; (தாப்பால்) உகந்தும் உகவாதும் ஸம்ஸாரிகள்பண்ணும் பரிபவத்தைக்கண்டு தன் ரக்ஷணத்திலே நெகிழுதில்லானென்கிறது.

வ்யா:—(தாம்பித்யாதி) "என் மகனிறே, நானிவனுக்கு நல்லள்" என்று யசோதைப்பிராட்டி தாம்பாலே கட்டினாலும். அவர்கள் கட்டினகட்டு அபிமதவிஷயத்தில் ஸம்ஸ்லேஷசிஹ்நம் போலேயிறே. அத்தழும்பு ஏதுமில்லாதபடி காளியனாலே படாதது பட்டாலும். (சோம்பாதித்யாதி) "இப்படி ஸம்ஸாரிகள் வைமுக்யம் பண்ணினார்கள்" என்று சோம்பாதே "நம் கார்யஞ்செய்கை நமக்கு எளிவரவோ?" என்று, காளியனிற்காட்டில் தோலாதாராயிருக்கிற ப்ரஜைகளையெல்லாம விஸ்த்ருதமாக்கின காரணத்வப்ரயுக்தமான * குடற்றுடக்கையுடையவனே! பழையதான உன்னுடைய வடிவை வேறுசிலரறியப்போமோ? நீயேசொல்லு. பரிபவம் பண்ணின போதோடு, பண்ணாத போதோடு வாசியற ஏகரூபமான உன்னுடைய ஸ்வரூபத்தை வேறு சிலரறியப்போமோ? நீயே சொல்லு. 18.

அரு:—பதினெட்டாம் பாட்டு. "தானிளக" - தழும்புதானில்லாதபடி. (வடிவை) - ஸ்வரூபத்தை. 18.

* குடல் துடக்கு-சரீஸம்பந்தம்

19. சொல்லில் குறையில்லை சூதறியா நெஞ்சமே
எல்லிப் பகலென்னு தெப்போதும்—தொல்லைக்கண்
மாத்தானைக் கெல்லா மோரைவரையே மாறாகக்
காத்தானைக் காண்டுநீ காண்.

பதவுரை :—சூது அறியா நெஞ்சமே—நன்மை, தீமை அறியாத மனமே!, சொல்லில்—அவன் குணங்களைப் பேசப்புகில், குறையில்லை—அவற்றிற்கு ஓர் அளவில்லை; தொல்லை கண்—பழையதான பூமியிலிருந்த, மா தானைக்கு எல்லாம்—(துரியோதனாதியருடைய) பெரிய சேனைகளுக்குக்கெல்லாம், ஓர் ஐவரையே—துணையற்ற பஞ்சபாண்டவர்களையே, மாறாக—எதிரிகளாகச் செய்து, எல்லி பகல் என்னாது எப்போதும்—இரவு, பகல் என்று நினையாமல் எல்லாக்காலத்திலும், காத்தானை—ரக்ஷித்தவனை, காண்டும்—காண்போம்; நீ காண்—நீ பார்.

அவ:—பத்தொன்பதாம் பாட்டில்; (சொல்லில்) கீழ்பருவம் நிரம்புவதற்கு முன்பு செய்தபடி சொல்லிற்று; வளர்ந்தபின்பு செய்தபடி சொல்லுகிறது.

வ்யா:—(சொல்லில் குறையில்லை) பகவத்விஷயத்தைப் பேசப்புக்கால் பேச்சில் குறையில்லை. (சூதறியா நெஞ்சமே) "பகவத்விஷயம் நன்று" என்றும், "விஷயப்ராவண்யமனர்த்தம்" என்றும், விடவும் பற்றவுமறியாத நெஞ்சே! (தொல்லையித்யாதி) பழையதான பூமி நெளியும்படியான மஹாஸேனைக்கெல்லாம், ‡ தானே காத்தானென்னில் தங்களுக்குத்தோல்வி என்று அவர்களிசையாரென்று, பாண்டவர்களைந்துபேரும் எதிராக. (காத்தானைக்காண்டுநீகாண்) காண்போமென்று காணப்புக்கால் அவர்கள் பகல் யுத்தப்பண்ணி இரவுறங்கினாலும் இரவும் பகலுமுறங்காதே அர்ஜுனன் தோள் பிடிப்பதும் வெல்லும்படி மநோரதிப்பதுஞ்செய்துகொடு நின்று காத்தவனை. (காண்டுநீகாண்) காண்போமென்று காணப்புக்காலுள்ளபடியே காணலாங்காண். 19.

அரு:—பத்தொன்பதாம் பாட்டு. (பேச்சில்குறையில்லை)-பேசிமுடியாது; எத்தனைபேசினாலும் விஷயத்தைப் பரிச்சேதிக்கப்போகாதென்றபடி. "சூது" விரகு. "கண்" என்று - இடமாய்; பூமி. "தானை" - ஸேனை. (காண்போம் என்று காணப்புக்கால்.) காணலாங்

‡ இது "ஓர்" என்பதின் தாத்பர்யம். இவ்வாக்கியம் ஸந்திக்தம்.

காணென்றபூரிப்பது. [சூதறியாநெஞ்சமே சொல்லில் குறையில்லை- தொல்லைதொடங்கி- மாருக எல்லிப்பகலென்னுதெப்போதும் - காத் தானைக்காண்டும்- நீகாண்] என்றந்வயம். 19.

20. காணப்புகி லறிவு கைக்கோண்ட நன்னெஞ்சம்
நாணப்படு மன்றே நாம்பேசில்—மாணி
யுருவாகிக் கோண்டுலகம் நீரேற்ற சீரான்
திருவாகம் தீண்டிற்றுச் சென்று.

பதவுரை :— மாணி உருவாகிக்கோண்டு—ப்ரஹ்மசாரி வேஷத் தையுடையவனுய்க்கொண்டு, உலகம்—லோகமெல்லாம், நீர் ஏற்ற சீரான்—தானம்வாங்கிகொண்ட மஹாகுணத்தையுடையவனுடைய, திரு ஆகம்—அழகிய திவ்யமங்கள விக்ரஹத்தை, சென்று—அணுகி, தீண்டிற்று—(உலகமெல்லாம்) ஸ்பர்சித்தத்தை, நாம் காணப்புகில்— நாம் விசாரித்தாலும், பேசில்—சொல்ல ஆரம்பித்தாலும், அறிவு கைக்கோண்ட நல் நெஞ்சம்—ஞானத்தையுடைய மேலான மனஸ் ஸு, நாணப்படுமன்றே—வெட்கப்படவேண்டாவோ.

அவ :— இருபதாம் பாட்டில்; (காணப்புகில்) நான் "காண்" என்று சொன்னுல் தன்னை யறிந்து நாண [(பா) கிட்ட] வேண்டா வோ? என்கிறுர்.

வ்யா :—(காணப்புகிலித்யாதி) நாமறியாதே காணப்புகுதல், அர்த்ததத்வமிருந்தபடியே பேசப்புகுதல் செய்தால், அறிவுக்கு வாய்த் தலையான நெஞ்சுக்கு நாண வேண்டாவோ? (மாணியித்யாதி) இத் தைத்தீண்டுகைக்கு அவன் ப்ரவர்த்தித்தபடி. (திருவாகமித்யாதி) தன்னையறிந்தால் விலக்ஷணமான வடிவைச் சென்று தீண்டக்கட வதோ? 20.

அரு :- இருபதாம்பாட்டு. "தீண்டிற்று" "நாணப்படுமென்றே?"- நாணவேண்டாவோ? என்று அவதாரிகைக்குத் தாத்பர்யம். (இத் தைத்தீண்டுகை)-இது தீண்டுகைக்கு. ஸர்வவிஷயமாக அவன் தீண்டு கையாலே இதுவும் லஜ்ஜியாமல் தீண்டிற்றென்றபடி. இத்தைத் தீண்டுகைக்காக. அவன் செய்த வ்யாபாரமாகையாலே இதுவுங் கூசாமல் தீண்டிற்றென்னவுமாம். [காணப்புகில்- நாம்பேசில் - அறிவுகைக்கொண்ட நன்னெஞ்சம் - மாணியுருவாகி-நீரேற்று உலகங் கொண்ட - சீரான் திருவாகம்சென்றுதீண்டிற்று - நாணப்படும்] என்றந்வயம். 20.

21. சென்றங்கு வெந்நரகில் சேராமல் காப்பதற்கு,
இன்றிங் கென்னெஞ்சா லிடுக்குண்ட—அன்றங்குப்
பாருருவும் பார்வளைத்த நீருருவும் கண்புதையக்
காருருவன் தான் நிமிர்த்தகால்.

பதவுரை :—கார் உருவன் தான்—மேகம்போன்ற வடிவையுடைய பகவான், அன்று—மஹாபலியஜ்ஞம் செய்த அக்காலத்தில், அங்கு—அவனுடைய யஜ்ஞபூமியில், பார் உருவும்—பூமியின் உருவமும், பார் வளைத்த நீர் உருவும்—பூமியைச் சுற்றியுள்ள ஜலத்தின் உருவமும் கண்புதைய—மறையும்படி, நிமிர்த்த—வளரச்செய்த, கால்—திருவடிகள், அங்கு சென்று—அந்தந்த உலகங்களில் போய், வெம் நரகில்—கொடிய நரகம் போன்ற ஸம்ஸாரத்தில், சேராமல் காப்பதற்கு—அழுந்தாமல் ரக்ஷிப்பதற்காக, இன்று—இப்போது, இங்கு—இவ்வுலகிலேயே, என் நெஞ்சால்—என்னுடைய மனத்தால், இடுக்குண்ட—நெருக்கப்பட்டன.

அவ: — இருபத்தோராம் பாட்டில்; (சென்றங்கு) ஓரிடத்திற் போகாதபடி நிஶ்ஶேஷமாக க்ரஹிக்கப்பார்த்தால் அவகாசம் பெற்றன்றோ க்ரஹிப்பதென்கிறது.

வ்யா :—(சென்றித்யாதி) வெந்நரகென்று - அகலுகைக்குப்பேர், ஸம்ஸாரத்துக்கும் பேர். அறிவார்க்கு நரகமாவது-ஸம்ஸாரமிறே. (இன்றித்யாதி) நினைவின்றிக்கே என்னுடைய நெஞ்சிலே நெருக்குண்டது. (அன்றித்யாதி) இன்றிங்கென்னெஞ்சாலிடுக்குண்டது - பூமியும் பூமியடையச் சூழ்ந்த ஜலங்களும் மறையும்படி பரம்பினமேகம் போலே ஶ்யாமமான வடிவையுடையவனுடைய திருவடிகளென்னெஞ்சிலே இடுக்குண்டது. 21.

அரு :—இருபத்தோராம் பாட்டு. "இடுக்குண்ட" என்றத்தைப் பற்ற அவதாரிகை யருளிச்செய்கிறார் (ஓரிடத்தில்) இத்யாதி. என் நெஞ்சிலே அகப்படுகையாலே புறப்பேபோகத்திருவடிகளுக்கவகாசமில்லாமையாலேஸம்ஸாரிகள்ஓரிடத்திற்போகாதபடி நிஶ்ஶேஷமாகத் திருவடிகளை உள்ளே க்ரஹிக்கின்றோமென்றாலும் இனிப்போகாதென்றபடி. [அன்றங்குப்பாருருவும் பார்வளைத்த நீருருவும் கண்புதைய - தான்நிமிர்த்தகாருருவன் கால்அங்கு சென்றுவெம்நரகில் சேராமல் காப்பதற்கு இன்றிங்குஎன்னெஞ்சாலிடுக்குண்ட] என்றந்வயம். 21.

22. காலே போதத் திரிந்து † கற்றுவரா மினநாள்
மாலார் குடிபுகுந்தா ரென்மனத்தே—மேலால்
தருக்குமிடம் பாட்டினேடும் வல்வினையார் தாம் வீற்
றிருக்குமிடம் காணு தினைத்து.

பதவுரை :— மாலார்—மிகப்பெரியனான ஸர்வேச்வரன், என் மனத்தே—என்னுடைய மனஸ்ஸிலே, குடிபுகுந்தார்—பரிகரங்களோடு வந்து சேர்ந்தார்; மேலால்—முன்காலத்தில், தருக்கும்—தன்புறத்தி வந்த, இடம்பாட்டினேடும்—செல்வச்செருக்குடன், வல்வினையார்—மிகக்கொடூரமான பாபமானது, தாம் வீற்றிருக்கும் இடம் காணது—தான் ஸுகமாக வஸிக்கைக்கு இடம் அறியாமல், இளைத்து—பலமற்றதாய், காலே போத திரிந்து—கால் வெடிக்கும்படி அலேந்து, இன நாள்—இக்காலத்தில், கற்றுவராம்—கூப்பிடாநின்றது.

அவ:— இருபத்திரண்டாம் பாட்டில்: (காலே நம்முடைய ப்ராப்திப்ரதிபந்தகமான கர்மங்கள் கால் பொதும்படி தடுமாறிக் கூப்பிட்டுத்திரியுமத்தனையிறே இனநாளென்கிறர்.

வ்யா:—(மாலாரித்யாதி) ＊"அரவத்தமளியினேடும்" இத்யாதிப்படியே ஸர்வேச்வரன் என்மநஸ்ஸிலே புகுந்தான். (மேலாலித்யாதி) பண்டு நம்மை ஹிம்ஸித்துப்போந்த அளவுடைமையோடே கூட வல்வினையார் விஸ்த்ருதமாக இருக்குமிடங்காணுதே இளைத்துக் கால் தேயும்படி தடுமாறிக் கூப்பிட்டுக்கொடு திரியுமத்தனையிறே இனநாள்.

அரு :— இருபத்திரண்டாம் பாட்டு. (பொதும்படி) - வெடிக்கும்படி. முள்ளுத் தைக்கையுமாம். தருக்குகை-நெருக்குகையாய், ஹிம்ஸிக்கை. [என்மனத்தேமாலார்குடிபுகுந்தார் - வல்வினையார்தாம் மேலால் தருக்குமிடம்பாட்டினேடுவ்வீற்றிருக்குமிடங்காணுதிளைத்து கால்பொதத்திரிந்து இனநாள்கற்றுவராம்] என்றந்வயம். 22.

23. இளைப்பா யிளையாப்பாய் நெஞ்சமே சொன்னேன்
இளைக்க நமன்தமர்கள்பற்றி—இளைப்பெய்த
நாய்தந்து மோதாமல் நல்குவான் நல்காப்பான்
தாய்தந்தை யெவ்வுயிர்க்கும் தான்.

பதவுரை :—நமன் தமர்கள்—யமதூதர்கள், இளைக்கபற்றி—பற்றும்போதே பலமற்றவர்களாகும்படி பிடித்து, இளைப்பு எய்த—மேலும்

---

† (பா) கத்துவராம். ＊ பெரியாழ்வார் திரு (5-2-10).

பலம் இழக்கும்படி, நாய் தந்து மோதாமல்—நாய்களைவிட்டு (நம்மைத்) துன்புறுத்தாதபடி, நல்குவான்—ரக்ஷிக்கிறனாகிலும் சரி; நல்காப்பான்—ரக்ஷியாதொழிவானாகிலும் சரி; எவ்வுயிர்க்கும்—எல்லாப் பிராணிகளுக்கும், தான் தாய் தந்தை—தானே தாயும் தந்தையுமாவான்; நெஞ்சமே—மனஸ்ஸே, இளைப்பாய்—(அவனையடையாமல்) தளர்ந்து போனாலும் போ; இளையாப்பாய்—(அவனையடைந்து) தளராமலிருக்கிலும் இரு; சொன்னேன்—(இவ்விரும் பொருளை உனக்கு) உபதேசித்தேன்.

வ்யா:—இருபத்துமூன்றும் பாட்டில்; (இளைப்பாயித்யாதி) பற்றுவாய், பற்றுதொழிவாய். அவனைப்பற்றிலும் பற்று, விஷயத்தைப்பற்றிலும் பற்று. (நெஞ்சமே சொன்னேன்) "ஈச்வரனே ஸர்வவிதபந்து" என்னுமிடமொருத்தருக்குஞ் சொல்லுமதன்று. அத்தையுனக்குச் சொன்னேன். (இளைக்கவித்யாதி) பற்றும்போதே இளைக்கும்படிக் கிடாகப்பற்றி. (இளைப்பித்யாதி) இளைக்கும்படிக்கிடாக நாய்களைவிட்டு மோதாதபடி. (நல்குவான் நல்காப்பான்) ரக்ஷிக்கிலும் ரக்ஷிக்கிறான், ரக்ஷியாதொழியிலு மொழிகிறான். (தாய் தந்தைஎவ்வுயிர்க்குந்தான்) ஸர்வரக்ஷகனவன்; "ரக்ஷகன் ரக்ஷணத்திலே நெகிழநின்றான்" என்று அரக்ஷகரைப்பற்றவொண்ணாதே. *"களைவாய்துன்பம் களையாதொழிவாய்" என்னுப்படியே. 23.

அரு:—இருபத்துமூன்றும் பாட்டு. அவனைப்பற்றி இளையாமையும், விஷயங்களைபற்றி இளைக்கையும். நல்காவிட்டால் தாய்தந்தையானபடி எப்படியென்ன அருளிச்செய்கிறார் (ரக்ஷகன்) இத்யாதி. 23.

24. தானேதனித் தோன்றல் தன்னளப் பொன்றில்லாதான்
தானே பிறர்கட்கும் தற்றோன்றல்—தானே
இளைக்கிற்பார் கீழ்மேலாம் மீண்டமைப்பானானல்
அளக்கிற்பார் பாரின்மேலார்.

பதவுரை—தனித்தோன்றல் தானே—ஒப்பற்ற அவதாரங்களையுடையவன் தானே, தன் அளப்பு—தனக்கு உபமாநமாக, ஒன்றும் இல்லாதான் தானே—ஒரு வஸ்துவையும் உடைத்தாயிராதவனும் தானே, பிறர்கட்கும் தற்றோன்றல் தானே—மற்றவர்களுக்கும் ஸ்ப்ர

---

* திருவாய் (5-7-8).

ஸித்தமான அந்தர்யாமியும்தானே; தானே இளைக்கில்—இப்படிப் பட்டவன் தானே (ரக்ஷணத்தில்)கைவாங்கிநின்றால், பார் கீழ் மேலாம் —பூமி கீழ்மேலாக நிலைகலங்கிவிடும்; மீண்டு அமைப்பானானால்— மறுபடியும் அதை ரக்ஷிப்பானாகில், அளக்கிற்பார்—(ரக்ஷணத்தில் அவனுக்குள்ள பாரிப்பை) அளவிட்டுச் சொல்லவல்லவர், பாரின் மேல் ஆர்—பூமியின்மேல் யாருளர்.

அவ:—இருபத்துநாலாம் பாட்டில்; (தானே) அந்வயவ்யதிரே கங்களிரண்டாலும் அவனே ரக்ஷகனென்கிறது.

வ்யா:—(தானே தனித்தோன்றல்) ஒரு ஹேத்வந்தரத்தாலே தோற்றுமவனல்லன். (தன்னளப்பொன்றில்லாதான்) உபமாநரஹி தன். (தானே பிறர்கட்கும் தற்றோன்றல்) அல்லாதார்க்கும் ஸத்தை அவன். (தானேயித்யாதி) அவன் ரக்ஷணத்திலே நெகிழ நிற்கில் பூமி அதரோத்தரையாம். (மீண்டமைப்பானானால்) அவன்றானே திரியட்டும் ரக்ஷிப்பானானால், (அளக்கிற்பார் பாரின் மேலார்) பூமியிலவனைப் பரிச் சேதிக்க வல்லாருண்டோ? 24.

அரு:— இருபத்துநாலாம் பாட்டு. "இளைக்கில்" என்றது - வ்யதிரேயம். மீண்டமைக்க - அந்வயம். ஹேத்வந்தரம் - கர்மம். அதடியாகப்பிறக்குமவனன்றென்றபடி. "தற்றோன்றல்" - தச்சப்தம் (28) "अन्तर्याम्यमृतः" (அந்தர்யாம்யம்ருத:) என்ற ப்ரஸித்தியைப் பற்ற. 24.

25. ஆரானு மாதானும்செய்ய அகலிடத்தை
ஆராய்ந்தது திருத்தலாவதே—சீரார்
மனத்தலைவன் துன்பத்தை மாற்றினேன் வானோர்
இனத்தலைவன் கண்ணனால் யான்.

பதவுரை:—ஆரானும்—யார்வேண்டுமாயினும், ஆதானும் செய்க —எது வேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும்; அகல் இடத்தை— விசாலமான பூமி முழுவதும், ஆராய்ந்து—தேடி, அது—அவர் களுடைய செயல்களை, திருத்தல் ஆவதே—நம்மால் சீர்திருத்தமுடியு மோ? யான்—நான், வானோர் இனம் தலைவன்—நித்யஸூரிகளின் ஸமூஹத்திற்கு ஸ்வாமியாயிருந்து, கண்ணனால்—க்ருஷ்ணனாய் அவதரித்த எம்பெருமானைத் துணைகொண்டு, சீர் ஆர்—(பகவானிடத் தில் அன்பாகிற) நன்மை நிறைந்த, மனம் தலை வன்துன்பத்தை—

மனஸ்வின் மேலே கிடக்கிற வலிய ஸம்ஸாரதுக்கத்தை, மாற்றினேன் --போக்கடித்தேன்.

அவ :—இருபத்தைந்தாம் பாட்டில்; (ஆரானும்) "பூமியிலுள்ளாரை யெல்லாம் நம்மாலே திருத்தப்போமோ? நாம் முன்னம் பகவத்விஷயத்தில் அவகாஹிக்கப்பெற்றோமிறே" என்று ஹ்ருஷ்டராகிறார். வழிபறிக்குமிடத்தே தப்பிப்போனவன் கிழிச்சீரையை யவிழ்த்துப் பார்த்து "இது தப்பப்பெற்றோமே" என்று உகப்பானைப் போலே.

வ்யா :—(ஆராநுமித்யாதி) எல்லாருமேதேனுஞ்செய்க; பூமிப் பரப்பையெல்லாம் நம்மாலே ஆராய்ந்து திருத்தப்போமோ? (வானோரித்யாதி) நித்யஸூரிகளுக்குத் தலைவனுய்வைத்துத் தன்னை இதர ஸஜாதீயனாக்கி ஸுலபனான க்ருஷ்ணனாலே பகவத்ஸம்பந்தமாகிற ஐச்வர்யத்தை யுடைத்தான மநஸ்ஸின் தலையிலே கிடக்கிற ஸம்ஸார து:கத்தை மாற்றினேன்; 'எல்லாரையுந் தம்மாலே திருத்தப்போமோ?' என்கிறார். 25.

அரு :—இருபத்தைந்தாம் பாட்டு. [வானோரினத்தலைவன் கண்ணனால் யான் சீரார்மனத்தலைவன் துன்பத்தைமாற்றினேன் - ஆராநுமாதானும் செய்ய அகலிடத்தை ஆராய்ந்ததுதிருத்தலாவதே] என்றந்வயம். 25.

26. யானு மென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம் வல்வினையைக்
காநும் மலையும் புகக்கடிவான்—தானோர்
இருளன்ன மாமேனி யெம் மிறையார்தந்த
அருளென்னும் தண்டா லடித்து.

பதவுரை :—ஓர் இருள்தான் அன்ன— இருள் தானே ஒருவடிவு கொண்டாற்போலுள்ள, மாமேனி—மேலான திருமேனியையுடைய, எம் இறையார்—எம்பெருமான், தந்த—கொடுத்த, அருள் என்னும் தண்டால்--(அப்பெருமானுடைய) க்ருபை என்னும் தடியாலே, அடித்து—புடைத்து, வல் வினையை—(எங்களுடைய) கொடிய பாபத்தை, காநும் மலையும் புக—காட்டிலும் மலையிலும் நுழையும் படி, கடிவான்—ஓட்டுவதற்காக, யானும் என் நெஞ்சும்—நானும் என் மனஸ்ஸும், இசைந்தொழிந்தோம்—ஸம்மதித்துவிட்டோம்.

அவ :—இருபத்தாறும் பாட்டில்; (யானும்) "மாற்றினேன்" என்று கர்த்ருத்வந் தோற்றச்சொன்னார், அந்த கர்த்ருத்வமாவது - அவன்மேல்விழ, என்னுடைய விலக்காமையென்கிறார்.

வ்யா :—(யானுமித்யாதி) இத்தலையில்குறைவற்றது. பொருந்தாததலையும் பொருந்திற்று; பொருந்துமவன் பொருந்தச்சொல்ல வேண்டாவிறே. (தானேரிருளித்யாதி) மற்றொன்றுகாணாமல், ஸ்ரமஹாரமான வடிவையுடைய என் ஸ்வாமியுடைய ப்ரஸாதமாகிற தண்டாலே ஹிம்ஸித்து. (வல்வினையித்யாதி) அவன்பிரிவாகிற மஹாபாபத்தைக் காட்டிலும் மலையிலும் புகும்படி ஓட்டும்படிக்கீடாக யானுமென்னெஞ்சமிசைந்தொழிந்தோம். 26.

அரு :—இருபத்தாறும் பாட்டு. (மற்றொன்றுகாணாமல்) - வினையைப்போக்குகைக்கு வேறொரு உபாயங்காணாமல். அவனருளாலே போக்கினேனென்றபடி. 26

27. அடியால் படிகடந்த முத்தோ அதன்றேல்
முடியால் விசும்பளந்த முத்தோ—நெடியாய்
செறிகழல்கள் தாள்நிமிர்த்துச் சென்றுலக மெல்லாம்
அறிகிலமால் நீயளந்த வன்று.

பதவுரை :—நெடியாய்—ஸர்வாதிகாரிகனே!, நீ—நீ, செறி கழல்கள்—நெருங்க அணிந்த, தண்டைச்சிலம்புகளையுடைய, தாள்—திருவடிகளை, நிமிர்ந்து—வளரச்செய்து, உலகமெல்லாம் சென்று—எல்லாவுலகங்களுக்கும் போய், அளந்த அன்று—திருவுலகளந்தருளிய அக்காலத்தில், அடியால்—ஒரு திருவடியினால், படி கடந்த முத்தோ—பூமி முழுவதையும் அளந்ததனாலுண்டான ஸந்தோஷமோ (இப்போது உன் திருமுகமண்டலத்தில் நான் காண்பது)? அது அன்றேல்—அது அல்லவாகில், முடியால்—உன் திருமுடியாலே, விசும்பு அளந்த முத்தோ—ஆகாசத்தை அளந்ததனாலுண்டான ஸந்தோஷமோ (நான் காண்பது)? அறிகிலம் ஆல்—நாம் அறிகிறிலோம்; என்ன ஆச்சரியம்!

அவ :—இருபத்தேழாம் பாட்டு. (அடியால்) "இசைந்தொழிந்தோம்" என்கிறவித்தாலே தந்தலையில் குறையற்றது. "அருளென்னுந்தண்டால்" என்கையாலேபெறுவதும் அவன்ப்ரஸாதத்தாலே

என்னுமிடம் சொல்லிற்று. இனி அவர்க்கநுபவத்திலேயிறேபக்வயம்; ஆகையாலே அநுபவிக்கிறார்.

வ்யா :—(அடியித்யாதி) முத்தென்று - மௌக்த்யமாய், அத்தாலே லக்ஷணையாலே அழகாய், அடியாலே பூமியையளந்தவழகோ? திருமுடியாலே ஆகாசத்தையளந்தவழகோ? என்னவுமாம். † "செறிகழல்" என்கையாலே திருவடிகளிலே முத்துண்டாகையாலும், ‡ "நீண்முடி வெண்முத்த வாசிகைத்தாய்" என்கையாலே, திருமுடியிலேமுத்துண்டாகையாலும், அடியாலே படியையளந்தன முத்துக்களோ? முடியாலே விசும்பையளந்தன முத்துக்களோ? † "சிலம்பும் செறிகழலும்" என்று இதுக்குள்ளீடான முத்து ப்ரகாசமாதல், சாத்தினமுத்தாதல். (அறிகிலமால்) அறிகிறிலோம். இப்போதுனக் கோடுகிற * ஹர்ஷம் திருவடிகளில் கீழே பூமியையிட்டுக்கொண்ட ஹர்ஷமோ? திருமுடியாலே ஆகாசாவகாசத்தையெல்லாம் வ்யாபித்த ஹர்ஷமோ? வென்றுமாம். [நெடியாய்செறிகழல்கள் தாள்நிமிர்த்துச்சென்றுலகமெல்லாம் நீயளந்தவன்று - அடியால் படிகடந்தமுத்தோ-அன்றேல் முடியால்விசும்பளந்த முத்தோ-அறிகிலமால்] 27.

அரு :— இருபத்தேழாம் பாட்டு. அடியாலும் முடியாலுமோ என்னுதல். அவற்றிலுண்டான முத்தாலேயோவென்னுதல். முத்தென்றது - அழகாதல், முத்துத்தானாதல், ஹர்ஷமாதல். அறிகிலம். ஆல் - ஆச்சர்யம். 27.

28. அன்றே நங் கண் காணு மாழியான் காருருவம்
இன்றேநாம் காணா திருப்பதுவும்—என்றேனும்
கட்கண்ணால் காணாத வவ்வுருவை நெஞ்சென்னும்
உட்கண்ணேல் காணு முணர்ந்து.

பதவுரை :— கண் கண்ணால்—கண் என்று பெயரையுடைய புறக்கண்ணால், என்றேனும் காணாத—எக்காலத்திலும் காணமுடியாத, அவ்வுருவை—அத்திருமேனியை, நெஞ்சு என்னும்—மனம் என்னும், உள் கண்—உள்ளேயுள்ள கண், காணுமேல்—ஸாக்ஷாத்கரிக்குமாகில், அன்றே—அப்பொழுதே, ஆழியான் கார் உருவம்—திருவாழியைக்கையிலுடையவனுடைய கறுத்த திருமேனியை, நம் கண் காணும்

‡ திருவிருத்தம் 50. † மூன்றாம் திருவந்தாதி 90.
* 'முத்' என்னும் வடசொல் ஹர்ஷம் என்னும் பொருளையுடையது.

—நம்முடைய வெளிக்கண்ணும் காணும்; நாம் காணுதிருப்பதுவும்—நாம் எம்பெருமானைப் பார்க்காமலிருப்பதுவும், இன்றே—(நெஞ்சால் அவனைக் காணுத) இப்பொழுதே.

அவ:—இருபத்தெட்டாம் பாட்டில்; (அன்றே) திருவுலகளந்தருளின வடிவை அநுஸந்திக்கையாலே அவனைக்காணவாசைப்பட்டு, அது கிடையாமையாலே வெறுத்தவர், அவன்பக்கல் குறையுண்டோ? நம்முடைய குறையிறேயென்று த்ருப்தராகிறுர்.

வ்யா:—(அன்றேயித்யாதி) ஸர்வேச்வரன் கறுத்த திருமேனியை நம்முடைய கண் அன்றேகாணும். (என்றேனும் இத்யாதி) ஒருநாளும் பகவத்விஷயத்தைக் காணுமையாலே "பீலிக்கண்" என்னுமோபாதி கண்ணென்று பேரான கண்ணுல் காணப்போகாத அவனுடைய திருமேனியை நெஞ்சாகிற உட்கண்ணுணர்ந்து காணுமாகில் அன்றே நங்கண்காணுமாழியான்காருருவம். (இன்றே நாங்காணுதிருப்பதுவும்) நெஞ்சாகிற உட்கண்ணுணர்ந்து காணுதவின்றே நாம் காணுதிருப்பது; உணர்ந்து காணுமன்று நங்கண்காணும். "யானுமென்னெஞ்சுமிசைந்தொழிந்தோம்" என்றுசொன்னுராகில், உட்கண் காணுதொழிகையாவதென்னென்னில்; பரமபக்தி பிறந்து அவ்வஸ்துவையொழியச் செல்லாமை யாதொரு போது பிறக்கும், அப்போதுகாணும் நங்கண்; அவ்வஸ்துவையொழியச் செல்லுமின்று காணப்போகாதென்கிறது. கட்கண்ணென்றது - பீலிபோலேயான புறக்கண்.

அரு:—இருபத்தெட்டாம் பாட்டு. த்ருப்திசொல்லுகையாலே வெறுப்பு அர்த்தாத்வந்தது. நெஞ்சென்னுமுட்கண்ணுலே உணர்ந்தால் இன்றுங்காணலாம், அதில்லாமையாலே காணப்போகாது, ஆகையாலே அவன்பக்கல் குறையுண்டோ நம்மதன்றேகுறையென்று த்ருப்தராகிறுரென்றபடி. "கட்கண்" - மீமிசையாலே கண்ணென்று பேராயிருக்கிற கண்ணென்றபடி. ஜ்ஞாநமுண்டாகில் காணலாம். இல்லாதபோது காணப்போகாதென்றபடி. [நெஞ்சென்னுமுட்கண்ணேல் காணஉணர்ந்தவன்று நங்கண்காணும். உணராதஇன்றே நாங்காணுதிருப்பதுவும்] என்றந்வயம். 28.

29. உணர வொருவர்க் கெளியனே செவ்வே
இணரும் துழாயலங்க லெந்தை—உணரத்
தனக்கெளிய ரெவ்வளவ ரவ்வளவ ராஞல்
எனக்கெளிய னெம்பெருமா னிங்கு.

பதவுரை:—இணரும்—மலர்ந்த, துழாய் அலங்கல் எந்தை—துழாய் மாலையையுடைய எப்பிரான், ஒருவர்க்கு செவ்வே உணர எளியனே—(ஸ்வயத்நபரரான) எவருக்கும் நன்ருக அறிய ஸுலபனே? (அல்லன்), தனக்கு எளியர்—தன் அடியார்கள், எவ்வளவர்—எவ்வளவு அன்பையுடையவர்களோ, அவ்வளவர்—அவ்வளவு அன்பையே அவர்களிடம் தான் உடையனுயிருப்பன்; ஆஞல்—ஆகையாலே, எனக்கு—(அவனிடம் பேரன்புகொண்ட) எனக்கு, எம்பெருமான்—என் ஸ்வாமியாகிய அவன், இங்கு உணர எளியன்—இவ்வுலகத்திலேயே அறிந்து காணும்படி ஸுலபனுவான்.

அவ:—இருபத்தொன்பதாம் பாட்டில்; (உணர) எல்லார்க்குமிவ்வவஸ்த்தை பிறக்கையரிது; எனக்கிவ்வவஸ்த்தை பிறந்ததென்கிருர்.

வ்யா:—(உணரவித்யாதி) ஒருத்தருக்கும் ஸ்த்ருக்தயா இயத்தயா உணரப்போகான். (29) "यस्यामतं तस्य मतं अविज्ञातं विजानतां" (யஸ்யாமதம் தஸ்ய மதம் அவிஜ்ஞாதம் விஜாநதாம்) (இணருந்துழாயலங்கலெந்தை) அபரிச்சிந்நவஸ்துவினுடைய லக்ஷணம் தோளில் திருத்துழாய்மாலையையுடையவனுகை. (இணரும) தன்னிலத்திலும் இவன் தோளில் விகஸியாநிற்கும். தேவர்கள்தோளில் மாலைவாடாது; ஸர்வாதிகனுகையாலே இவன் தோளிலிட்டது அரும்பியாநிற்கும். (உணரவித்யாதி) தனக்கு நல்லவர்களுணர எவ்வளவர், அவ்வளவனுய் நிற்கும். (30) "प्रियो हि ज्ञानिनोऽत्यर्थं" (ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம்) * "தம்மையுகப்பாரைத் தாமுகப்பர்" என்னும்படியே. (ஆஞலெனக்கெளியனெம்பெருமானிங்கு) தனக்கு நல்லவர்கள் நினைத்தவளவிலேயமைக்குமாகையாலே என்ஸ்வாமி எனக்கெளியன். 29.

அரு:—இருபத்தொன்பதாம் பாட்டு. "எனக்கெளியன்" என்கையாலே (எனக்கிவ்வவஸ்த்தை) என்கிறது. (ஸ்த்ருக்தயா)-த்ருஷ்

* நாச்சியார் திரு (11-10).

டாந்ததயா. (இயத்தயா) - இவ்வளவென்றுபரிச்சேதித்து. எளியர்-ஸ்நேஹிகள். 29.

30. இங்கில்லை பண்டுபோல் வீற்றிருத்தல் என்னுடைய
செங்கண்மால் சீர்க்கும் சிறிதுள்ளம்—அங்கே
மடியடக்கி நிற்பதனில் வல்வினையார் தாம் மீண்
டடியெடுப்ப தன்றோ வழகு.

பதவுரை :—இங்கு—(என்னுடைய கர்மங்களுக்கு) இந்த மனஸ்ஸில், பண்டு போல்—முன்போல், வீற்றிருத்தல் இல்லை—பரவி உட்கார்ந்திருக்க இடமில்லை; என்னுடைய செங்கண்மால்—என்ஸ்வாமியாய் சிவர்ந்தகண்களையுடையவனான ஸர்வேச்வரனுடைய, சீர்க்கும்—திருக்குணங்களுக்கும் (இடமில்லாதபடி), உள்ளம் சிறிது—என் நெஞ்சு மிகச்சிறியதாயிருக்கிறது. வல்வினையார் தாம்—என்னுடைய கொடிய பாபம்தான், அங்கே—(முன் அரசுசெலுத்திய) அவ்விடத்திலேயே, மடி அடக்கி நிற்பதனில்—புடவையை ஒதுக்கிக்கொண்டு ஒடுங்கிக்கிடப்பதைக் காட்டிலும், மீண்டு—அங்கு நின்றும் போய், அடி எடுப்பதன்றோ அழகு—கால்வாங்குவதன்றோ அழகு?

அவ :—முப்பதாம் பாட்டில்; (இங்கில்லை) அவனருமையும் பெருமையுங்கிடக்கிடீர், நம்மை நலிந்து போந்த பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தகமான கர்மங்களுக்கு நம்முடைய பக்கலிருப்பிடமில்லை யென்கிறார்.

வ்யா :—(இங்கித்யாதி) பண்டுபோலிங்கு விஸ்த்ருதமாக இருக்கவொண்ணாது — வீற்றிருக்கவோண்ணாது. (என்னுடையவித்யாதி) வகுத்த விஷயத்துக்குமிடம் போராது. ஐஸ்வர்யவாத்ஸல்யஸூசகமான கண்களையுடைய ஸர்வேச்வரனுடைய குணங்களுக்கு என்னுள்ளஞ்சிறிது. (அங்கேமடியித்யாதி) அங்கேயொரு மூலையிலே ஒதுங்கித்திரிந்தாலோவென்னில்; முதன்மைசெய்தவூரிலே புடைவையை ஒதுக்கிக்கொடு திரிவதில் அங்குநின்றும் சடக்கெனக் கால்வாங்குகையன்றோ அழகு! 30.

அரு :—முப்பதாம் பாட்டு. "சீர்க்கும்" - குணங்களிருக்க இடமொழிய பாபத்துக்கிடமில்லையென்றபடி. குணஸ்மரணத்தாலே பாபம்போமென்று தாத்பர்யம். மடி - முன்றானை. 30.

31- அழகு மறிவோமாய் * வல்வினையைத் தீர்ப்பான்
நிழலு மடிதாறு மானோம்—சுழலக்
குடங்கடலை மீதெடுத்துக் கொண்டாடி அன்றத்
தடங்கடலை மேயார் தமக்கு.

பதவுரை :—வல் வினையை—கொடிய பாபத்தை, தீர்ப்பான்—போக்கடிக்கைக்காக, அழகும் அறிவோமாய்—(அவனே நமக்கு உபாயம் என்னும்) அழகிய அறிவையுடையோமாய், குடங்கள் தலைமீது எடுத்துக்கொண்டு சுழல ஆடி—(க்ருஷ்ணாவதாரத்தில்) குடங்களைத் தலை மேலே தரித்துக்கொண்டு, (அவை ஆகாசத்தில்) சுழன்றுவரும்படி கூத்தாடி, அன்று—அதன் பிறகு, அ தடம் கடலை—அந்த விசாலமான திருப்பாற்கடலை, மேயார் தமக்கு—(குடமாடின ச்ரமபரிஹாரத்திற்காக) அடைந்த எம்பிரானுக்கு, நிழலும் அடிதாறுமானோம்—நிழல் போலவும் பாதுகைகள் போலவுமானோம்.

அவ :—முப்பத்தோராம் பாட்டில்; (அழகும்) ஸர்வேச்வரனைக் கொண்டே விரோதியையும் போக்கி அங்குத்தைக்குக் கைங்கர்யம் பண்ணும்படியுமானோமென்கிறார்.

வ்யா :—(வல்வினையித்யாதி) புதுப்புடைவை அழுக்குக் கழற்றுமாபோலே, ‡ எலியெலும்பரான நாம் கர்மத்தாலே நம்முடைய பாபத்தைப்போக்குகையன்றிக்கே, ஸர்வேச்வரனைக்கொண்டு நம் பாபத்தைப்போக்குமழகையுடையோமாய், ஸர்வேச்வரனுக்குச் சாயை போலவும், பாதுகை, பாதரேகைபோலவுமானோம். அடிதாறு-அடிக்களவாயிருக்குமது. (சுழல இத்யாதி) ஆகாசத்திலே சுழலும்படிக் கீடாகக்குடங்களையெடுத்தாடி, தன்னை § மன்றிலே ஸர்வஸ்வதாநம் பண்ணிக் குடமாடின வேர்ப்புப்போகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற இவனுக்குச் சாயைபோலவுமானோம். இளையபெருமாள் படைவீட்டிலும் காட்டிலுமொக்க அடிமைசெய்தாற்போலே க்ருஷ்ணாவதாரத்திலும் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளுகிறவிடத்திலுமொக்க அடிமைசெய்யும்படியானோம். 31.

அரு :—முப்பத்தோராம் பாட்டு. [வல்வினையைத் தீர்க்கைக்காக அழகறிந்தோம்.] அவனைக்கொண்டே பாபத்தைப்போக்கிக்கொள்ள

* வல்வினையும் என்றும் பாடம் காண்கிறது.
‡ எலியெலும்பர் - அல்ப சக்திகர். § மன்றிலே—நாற்சந்தியிலே.

வேணுமென்கிற ஜ்ஞானத்தையுடையோமென்றபடி. "அடிதாறு" - பாதுகையாதல், பாதரேகையாதல். பாதுகையானதெப்படியென்ன அருளிச்செய்கிறார் (அடிதாறுவது) இத்யாதி. "குடங்கடலை" - குடங்கள்தலை. ஆடினவன்றென்கையாலே (வேர்ப்புப்போக) என்கிறது. 31.

32. தமக்கடிமை வேண்டுவார் தாமோதரனார்
தமக்கடிமை செய்யென்றால் செய்யாது—எமக்கென்று
தாம்செய்யும் தீவினைக்கே தாழ்வுறுவர் நெஞ்சினார்
யான்செய்வ திவ்விடத்திங் கியாது.

பதவுரை :—அடிமை — (ஆசாலேசமுடையார்க்கு) அடிமைப் படுகையை, தமக்கு வேண்டுவார்—தமக்கு விருப்புகிறவராய், தாமோதரனார் தமக்கு—(அதைக் காட்டுவதற்காக யசோதையினால் கட்டுண்டதினாலேற்பட்ட தழும்பையுடைய) தாமோதரனுக்கு, அடிமை செய் என்றால்—கைங்கர்யம் செய்வாயாக என்று சொன்னால், செய்யாது—செய்யாமல், நெஞ்சினார்—என்னுடைய மனமானது, எமக்கு என்று—எனக்கு பிரியத்தையே செய்யக்கடவேன் என்று பிடிவாதம் கொண்டு, தாம் செய்யும்—தான் (அநாதிகாலமாக) செய்துவரும், தீவினைக்கே —பாபச்செயலுக்கே, தாழ்வுறுவர்—செல்லும். இவ்விடத்து—இப்படி இருக்குமிடத்தில், இங்கு—இவ்வுலகத்தில், யான் செய்வது யாது —நான் செய்யக்கூடியது என்ன இருக்கிறது.

அவ :—முப்பத்திரண்டாம் பாட்டில்; (தமக்கு) தாமடிமைசெய்ய நிச்சயிக்க நெஞ்சு ப்ரக்ருதிஸம்பந்தத்தை உணர்ந்துபிற்காலியா நின்றதென்கிறார்.

வ்யா :—(தமக்கடிமைவேண்டுவார்) "கைத்ததுஉகப்பார், புளித்ததுஉகப்பார்" என்னுமாபோலே தமக்கடிமையை யுகக்குமவர். அதெங்கே கண்டோமென்றால், (தாமோதரனார்) அநுகூலையான தாயார்க்கடியுண்பது கட்டுண்பதானவிடத்திலே கண்டோம். (எமக்கித்யாதி) எம்மைவிட்டுத் தமக்கென்னவேயொரு நினைவுடையராய். (தாம்செய்யும் தீவினைக்கே தாழ்வுறுவர் நெஞ்சினார்) முதலியார். (யான்செய்வதிவ்விடத்திங்கு யாது) நம்முடைமையான நெஞ்சுக்காவோமோ? நம்மையுடையவர்க்காவோமோ? 32.

அரு :—முப்பத்திரண்டாம் பாட்டு. "தமக்கு அடிமைவேண்டுவார்" - தாம் ஆஸ்ரிதர்க்கடிமைசெய்கையைவேண்டியிருப்பாரென்றபடி . கீழ்மூலத்திலே அர்த்தமாக்கி, "எமக்கென்று" என்றத்தைப் பற்ற அருளிச்செய்கிறார் (எம்மைவிட்டு) இத்யாதி. தமக்கு ஆஸ்ரிதரை அடிமைகொள்ளவேண்டியிருப்பரென்று அர்த்தமாக்கி "தமக்கடிமைசெய்யென்றாற்செய்யாது" என்கிறது. 32.

33. யாதானுமொன்றறியில் தன்னுகக்கி லேன்கோலோ
யாதானும் நேர்ந்தணுகாவாறுதான்—யாதானும்
தேறுமாசெய்யா வசுரர்களை நேமியால்
பாறுபாருக்கினால் பால்.

பதவுரை :—யாதானும்—எவ்விதத்திலும், தேறுமா செய்யா—(பகவானுக்கு) நம்பிக்கையை விளைக்கும் செயலைச்செய்யாத, அசுரர்களை—அஸுரர்களை, நேமியால்—சக்ராயுதத்தால், பாறு பாறு ஆக்கினான் பால்—துண்டு துண்டாக ஆக்கின ஸர்வேச்வரனிடம், யாதானும் நேர்ந்து—(தன்னுடையதல்லாத) ஏதேனுமொன்றைக்கொடுத்தாவது, அணுகா ஆறு தான் என் கோலோ—அவனைக்கிட்டாமலிருப்பது ஏன்? யாதானுமொன்றுஅறியில் (என் கோலோ)—(அவனுக்கு சரீரபூதமான வஸ்துக்களில்) ஏதேனுமொன்றை (உள்ளபடி) அறிந்தால்தான் என்ன? தன் உகக்கில் (என் கோலோ)—(இச்சேதநன்) தன்னிடமாவது அன்புகொண்டால் என்ன?

அவ :—முப்பத்துமூன்றாம் பாட்டில்; (யாதானும்) அறிவுடைத்தாகிலவனைப்பற்ற வேண்டாவோ? வென்கிறது.

வ்யா :—(யாதானுமொன்றறியில்) ஏதேனுமொருபதார்த்தத்தையறியில். * ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்னும்படியே, ஏதேனுமொன்றினுடைய ஜ்ஞாநத்துக்குமவனைமுன்னிட்டறிய வேண்டுகையாலே அவனையறிந்ததாய்விடும். (தன்னுகக்கில்) ஒன்றையறியாவிட்டாலும் தன்னையுகக்கவேணுமே; தன்னை யுகக்கையாவது - அவனை யுகந்ததாய்விடும்; அவனுகப்பொழிபத்தனக்கொரு நன்மையில்லாமையாலே. (என்கொலோவித்யாதி) அவனதையவனுக்குக் கொடுத்தேயாகிலும் அவனைக்கிட்டவேண்டா

* முதல் திருவந்தாதி (67).

வோ? "நேர்ந்து" என்பானென்னென்னில்; ப்ராந்திதசையிலே கண்டதெல்லாம் "எனக்கு" என்னுமத்தனை; ஸ்வதந்த்ரனாகவுமிறே நினைத்திருப்பதும்; இத்தையெல்லா மழிக்கிறானாகையாலே "நேர்ந்து" என்னலாமிறே. * "தோள்களையார" என்று தொடங்கி * "கண்களாயிரத்தாய்" என்று உபகாரஸ்ம்ருதியாலே இவரவனுடைமையைத் தம்மது என்று கொடுக்க, அவனும் தன்னதல்லாததைபெற்றாற் போலே விஸ்த்ருதனானானிறே; ஆகையாலத்தலைக்கு அவத்யத்தை விளைத்தேயாகிலும் கிட்டவேண்டாவோ? (யாதானுமித்யாதி) தன் விரோதியைத் தான் போக்கிக்கொள்ளத் தானுங்கையிலே திருவாழியைப்பிடித்தானே? (யாதானுமித்யாதி) அஸுர வர்க்கத்திலே ஒருத்தன் அநுகூலிக்குமாகிலும் அவ்வர்க்கமாகநோக்கும். இவனுக்கொருபடியும் விநாவலிக்கப்போகாதபடி செய்த அஸுரர்களைத் திருவாழியாலே துணிந்தாற்போலே தன் விரோதியைப் போக்கினவன் பக்கலில் எல்லாம் நேர்ந்தாகிலும் கிட்டவேண்டாவோ? அசக்தனுக்கு ஸர்வசக்தியைப் பற்றவேணும்; ஆகையாலவனையே பற்றவேணும். 33.

அரு:—முப்பத்துமூன்றும் பாட்டு. "யாதானுமொன்றறியில்"- "இதம்" என்று புரோநிட்ட பதார்த்தங்களிலே ஒன்றையறியும் போதும் ஸர்வ சப்தவாச்யனவனாகையாலே இத்தையறிகிற ஜ்ஞாநம் அவனளவும்போமென்றபடி. இவற்றையறிகிறஜ்ஞாநம் அவனளவும் போகிறபடி எப்படியென்ன அருளிச்செய்கிறார் (ஒண்டாமரையாள்) இத்யாதி. தன்னையுகந்தால் அவனையுகந்ததாப்படி எப்படியென்ன அருளிச்செய்கிறார் (அவனுகப்பெழிய) இத்யாதி. நேர்கை-கொடுக்கை. அவனதை அவனுக்காக்கினால் நேர்ந்தென்று கணக்கச்சொல்லுவானென்ன என்று சங்காபிப்ராயம். அவனதைத்தன்னதாக்கிக் கொடுத்தவிடமுண்டோவென்ன அருளிச்செய்கிறார் (தோள்களை) இத்யாதி. (அவத்யம்) - அவன் தன்னாத்மாவைத் தன்னதாக்கிக் கொடுக்கை. ப்ராந்திதசையிலே அவத்யத்தைவிளைத்துக் கொடுக்க வேணுமென்றபடி. [ஒன்றையறியவே தன்னையறியப்படுமவனாய், ஒன்றையுகக்கவே தன்னையுகக்கப்படுமவனாய், விரோதிநிரஸநத்தைப் பண்ணுவானுமாயிருக்கிறவன்பக்கலிலே யாதானும் நேர்ந்தனுகாவாறு என்கொலோ] என்றந்வயம். 33.

---

* திருவாய்மொழி (8-1-10).

34. பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம்கேட்டேயும்
காலாழும் நெஞ்சழியும் கண்சுலலும்—நீலாழிச்
சோதியா யாதியாய் தோல்வினையெம்பால் கடியும்
நீதியாய் நிற்சார்ந்து நின்று.

பதவுரை :—நீல ஆழி—கறுத்த கடல் போன்ற, சோதியாய்—ஒளிஉள்ளவனே !, ஆதியாய்—காரணபூதனே !, எம் பால்—எம்மிடத்திலுள்ள, தோல் வினை கடியும்—அநாதியான பாபத்தைப் போக்குவதையே, நீதியாய்—ஸ்வபாவமாய் உடையவனே !; நின் சார்ந்து நின்று—உன்னைப் பற்றி நின்று, நீ பால் ஆழி கிடக்கும் பண்பை—நீ திருப்பாற்கடலில் கிடக்கும் அழகை, யாம் கேட்டேயும்—நாம் கேட்கும்போதே, காலாழும்—என்னுடைய கால் தளர்ந்து விழும்; நெஞ்சு அழியும்—மனஸ்ஸு நிலைகலங்கும் ; கண் சுழலும்—கண் ப்ரமிக்கும்.

அவ :—முப்பத்துநாலாம் பாட்டில்; (பாலாழி) ஏதேனும் நேர்ந்தாகிலும் அவனையே பற்றவேணுமென்றார்; ஆகிலவனைக்கிட்டவொண்ணாதென்கிறார்.

வ்யா :—(நீலாழிச்சோதியாய்பாலாழிநீகிடக்கும்) ஒருவெள்ளைக்கடலிலே யொரு கருங்கடல் சாய்ந்தாற்போலேயிருக்கிறபடி. (நீ கிடக்கும் * "கிடந்ததோர் கிடக்கை" என்னுமப்படியே. (பண்பையாம் கேட்டேயும்) அழகைக் கேட்டும். ஶ்ரவணமாத்ரத்திலே இப்படி அழிகிறவர், ஸாக்ஷாத்கரித்தாலென்படுகிறாரோ? (காலாழுமித்யாதி) வடிவழகேயாய் ப்ராப்தியின்றிக்கேயிருக்கிறதோ? இதுக்குக்காரணமானவனே! (தொல்வினை யித்யாதி) உபகாரகனுமானவனே! என்னுடைய விரோதியை என் பக்கலில் நின்றும்போக்குகையே ஸ்வபாவமாக வுடையவனே ! (நிற்சார்ந்து நின்று) உன்னைப்பற்றி நின்று, பாலாழிநீ கிடக்கும்பண்பை யாங் கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும். 34.

அரு :—முப்பத்துநாலாம் பாட்டு. (ஆகில்) கிட்டவேணுமாகில். மூலத்திலே அர்த்தமாக்கி அருளிச்செய்கிறார் (வடிவழகேயாய்) இத்யாதி. விரோதியைப்போக்குகை - உபகாரம். 34.

---

* திருமாலை (23).

35. நின்று மிருந்தும் கிடந்தும் திரிதந்தும்
ஒன்று மோவாற்ற னேன் னெஞ்சகலான்—அன்றங்கை
வன்புடையால் பொன்பெயரோன் வாய்தகர்த்து மார்விடந்தான்
அன்புடைய னன்றே யவன்.

பதவுரை :—நின்றும் இருந்தும் கிடந்தும் திரிந்தும்—(என்னைப் பெறுவதற்காக திவ்யதேசங்களில்) நின்றும், வீற்றிருந்தும், சயனித்தும், உலாவியும், (ஆக இப்படி இவ்வளவு செய்தும்), ஒன்றும் ஆற்றான்—ஒன்றும் செய்யாதவனாயிருக்கிறான்; என் நெஞ்சு அகலான்—என்னுடைய நெஞ்சைவிட்டுப் பிரியான்; அன்று—ந்ருஸிம்ஹாவதார காலத்தில், அம் கை வன் புடையால்—அழகிய கையைக்கொண்டு (கொடுத்த) வலிய அடியினால், பொன் பெயரோன் வாய் தகர்த்து—ஹிரண்யனுடைய வாயை நசுக்கி, மார்வு இடந்தான்—மார்பைக் கிழித்தவனாகிற, அவன்—அப்பெருமான், அன்புடையனன்றே—(அடியாரிடத்தில்) அன்புடையவனல்லவா ?

அவ :—முப்பத்தைந்தாம் பாட்டில்; (நின்றும்) இவன் செவி தாழ்த்தால் அவன் படும்படி சொல்லுகிறது.

வ்யா :—(நின்று மித்யாதி) உகந்தருளின தேசங்களிலே நிற்கிறதும் இருக்கிறதும் கண்வளர்ந்தருளுகிறதும் உலாவுகிறதுமெல்லாம் என்னைப்பெறுகைக்காக. (ஒன்றுமோவாற்றான்) எல்லாம் செய்துமொன்றும் செய்யாதானாயிருக்கும். "ஓ" என்று ஆஸ்சர்யத்திலே அசைச் சொல்லாய்க் கிடக்கவுமாம். (என்னெஞ்சகலான்) என்னெஞ்சுக்குப் புறம்பு காட்டுத் தீயோடொக்கும். (அன்றித்யாதி) பிராட்டிபக்கல் பரிமாறும்போது கூசிப் பரிமாறவேண்டும்படியான கையைக்கொண்டு, முரட்டு ஹிரண்யனுடைய, பண்ணின ப்ரதிஜ்ஞையை "இல்லை" என்றவாயை நெரித்து அவன்மார்பைக் கீண்டவன் அன்புடையனன்றோ? பிதா பகையாக அவனிலண்ணிய உறவாய் வந்து உதவினவன் அவனோ அன்புடையான்? அயோக்யனென்றகலுகிற நாமோ அன்புடையோம்? 35.

அரு :—முப்பத்தைந்தாம் பாட்டு. "அங்கைவன்புடையால்" - புடையென்று - வழியாய், வலியஸாதனமான அழகியகையாலே என்றபடி. 35.

36. அவனு மிவனு முவனும் மற்றும்ப
ரவனு மவனென்றிராதே—அவனும்
அவனேயெனத் தெளிந்து கண்ணனுக்கே தீர்ந்தால்
அவனே யெவனேலுமாம்.

பதவுரை :—அவன்—அந்த பகவான், அவனும்—துர்லபனுயிருப்பனே, இவனும்—ஸுலபனுயிருப்பனே, உவனும்—இரண்டு படியாயுமிருப்பனே, உம்பர் அவனும்—(எல்லாவற்றுக்கும் மேலுள்ள) ஒரு தேசத்திலேயிருப்பனே, என்று இராதே—என்று ஸந்தேஹப்பட்டுக் கொண்டு இருக்காமல், அவனும் அவனே என தெளிந்து—அவன் ஆச்ரித பாரதந்த்ரியத்தையுடையவனே என்று தெளிந்து, கண்ணனுக்கே தீர்ந்தால்—க்ருஷ்ணனுய் அவதரித்த அவனுக்கே அடிமையானல், அவனே எவனேலும் ஆம்—அக்கண்ணனே எல்லாவிதமான ரக்ஷகர்களாகவும் ஆவான்.

அவ :—முப்பத்தாறும் பாட்டில்; (அவனும்) அவனிப்படியிருக்க அவன் பக்கலிலே ஸம்சயத்தை ப்ரவேசிப்பித்துக்கைவாங்குகை கார்யமன்றென்கிறது.

வ்யா :—(அவனித்யாதி) துர்லபனுயிருக்கும், ஸுலபனு யிருக்கும்;—அப்படியே யிருக்கும், இப்படியே யிருக்கும், அதுக்குமேலாயிருக்கும் என்று ஸம்சயித்துக் கைவிடப்பாராதே. (அவனித்யாதி) (31) "आत्मानं नातिवर्तेथाः" (ஆத்மாநம் நாதிவர்த்தேதா:) என்னும்படியே பாரதந்த்ர்யமே அவனுக்கு ஸ்வரூபமென்று தெளிந்து ஸுலபனை க்ருஷ்ணனுக்கேயற்றல். (அவனே யெவனேலுமாம்) (32) "यस्य मन्त्री च गोप्ता च सुहृच्चैव जनार्दनः" (யஸ்ய மந்த்ரீச கோப்தா ச ஸுஹ்ருச்சைவ ஜனார்த்தந:) என்னும்படியே இவனுக்கெல்லாப்படியும் ரக்ஷகனும். 36.

அரு :— முப்பத்தாறும் பாட்டு. (துர்லபன்) - திருப்பாற்கடல் நாயகன். (ஸுலபன்) - அர்ச்சாவதாரம். இவற்றைவிவரிக்கிறுர். (அப்படியேயிருக்கும்) இத்யாதி. "உம்பர்"-மேலாய், பரமபதநாதன். "அவனுமவனே" - அவனே அவனுமென்றுய், அவனுக்காஸ்ரிதபாரதந்த்ர்யமேவடிவு என்றபடி. 36.

37. ஆமாறறிவுடையா ராவதரிதன்றே
நாமேயதுவுடையோம் நன்னெஞ்சே—பூமேய்
மதுகரமே தண்டுழாய் மாலாரை வாழ்த்தா
மதுகரமே யன்பாலமை.

பதவுரை:—நல் நெஞ்சே—அநுகூலமான மனமே!, ஆறு ஆம் அறிவு—நல் வழியிலே செல்லும் புத்தியை, உடையார் ஆவது அரிதன்றே—உடையவர்களாவது கடினமல்லவா; நாமே அது உடையோம்—நாமிருவரும் அவ்வறிவையுடையராயிருக்கிறோம்; பூ மேய் மதுகரம் மே—பூவிலே சேர்ந்திருக்கும் வண்டுகள் பொருந்திய, தண் துழாய் மாலானை—குளிர்ந்த திருத்துழாய் மாலையையுடைய ஸர்வாதிகனை, அன்பால்—ப்ரீதியாலே, வாழ்த்து ஆம் அது—பல்லாண்டு பாடுகையாகிற அதிலே, கரமே அமை—உறுதியாகப் பொருந்து.

அவ:—முப்பத்தேழாம் பாட்டில்; இப்படி யிருக்கை புறம்புள்ளார்க்கரிது, தமக்குண்டாயிற்றென்கிறார்.

வ்யா:—(ஆமாறித்யாதி) வழியான அறிவுடையாராவதரிதன்றே? யுக்தமான அறிவுடையாராகை கிடையாது. (நாமேயதுவுடையோம்) நாம் நல்லவறிவுடையோம். (நல்நெஞ்சே) எல்லாத்துக்குமொருமிடறாகையிறே இது விதித்தது. (33) "மன ஏவ" (மந ஏவ) இத்யாதியாலே பந்தமோக்ஷங்களிரண்டுக்குமடி இதிறே. (பூமேயித்யாதி) பூவிலே பொருந்தும் வண்டு மேவின திருத்துழாய் மாலையை உடைய ஸர்வேஶ்வரனை அன்பாலே வாழ்த்தாகிறவத்தை த்ருடமாக அமை. 37.

அரு:—முப்பத்தேழாம் பாட்டு. "ஆமாறு" - ஆறு வழியாய், (வழியானவறிவு). (ஒருமிடறு)-சாடு. "மே"-மேவி. வாழ்த்தாமது "கரம்" - கர மாய், (த்ருடமாக). "அமை" - சமைவாய், பொருந்தென்றபடி. 37.

38. அமைக்கும் பொழுதுண்டே யாராயில் நெஞ்சே
இமைக்கும் பொழுது மிடைச்சி—குமைத்திறங்கள்
ஏசியே யாயினு மீன்துழாய் மாயனையே
பேசியே போக்காய் பிழை.

பதவுரை:—நெஞ்சே — மனமே!, ஆராயில்—விசாரித்தோமானால், இமைக்கும் பொழுதும்—கண்ணிமைக்கும் காலமும், அமைக்கும் பொழுது உண்டே—ஆறியிருக்கைக்கு போதுண்டோ? இடைச்சி—இடைச்சியான யசோதை, குமை திறங்கள்—(க்ருஷ்ணனை) தண்டித்த விதங்களைச் (சொல்லி), ஏசியே ஆயினும்—பழித்தேயாகிலும், ஈன்

துழாய் மாயனையே—இனிய துழாய்மாலையையுடைய ஆச்சர்ய பூதனையே, பேசியே போக்காய்—அநுஸந்தித்துப் பொழுதுபோக்கு கிறாயல்லை; பிழை—(நீ செய்வது) தவறு.

அவ :—முப்பத்தெட்டாம் பாட்டில்; (அமைக்கும்) தாம் வாழ்த் தச்சொல்ல, நெஞ்சு இருயக்க, அத்தைத் "தப்பச்செய்தோம்" என் கிறார்.

வ்யா :—(அமைக்குமித்யாதி) நெஞ்சே! ஒரு ஆபாதப்ரதீதி யன்றிக்கே உள்ளே ஆராயப்புக்கால். (இமைக்குப்பொழுதும்) ஒரு க்ஷணமாத்ரமும் ஆறியிருக்கப்போதுண்டோ? (இடைச்சி இத்யாதி) பரமபதத்திலே சென்று ஸாக்ஷாத்கரித்தார்க்கன்றோ விச்சேதமின் றிக்கே அநுபவிக்கலாவதென்னில், அதுவேண்டா; தன்னை இதர ஸஜாதீயனுக்கி ஸுலபனுக்க, "என் மகன்" என்று எடுத்தமேத குடி யாக, தாயார் குமைக்கும் திறங்களை, ஏசியேயாயினும் பேசிப்போக்கு கிறிலை. (பிழை) தப்பு. ஈன்துழாய் மாயனையே பேசிப்பிழையைப் போக்காயென்னவுமாம். ஸ்நேஹித்துச்செய்தவற்றை ஸ்நேஹமில் லாத நாம் பேசினுல் அவனுக்கு ஏச்சாகாதோவென்னில், ஏச்சாகி லும் அவனைப் பேசாதேயிருக்கிறவிடம் தப்பு. 38.

அரு :— முப்பத்தெட்டாம் பாட்டு. [நெஞ்சமே ஆராயில் இமைக்கும்பொழுதும் அமைக்குப்பொழுதுண்டே] ஏசுகை-ஸ்நேஹ மின்றிக்கே சொல்லுகை. 38.

39. பிழைக்க முயன்றோமோ நெஞ்சமே பேசாய்
தழைக்குந்துழாய் மார்வன்றன்னை—அழைத்தொருகால்
போயுபகாரம் பொலியக்கொள்ளாது அவன் புகழே
வாயுபகாரங் கொண்டவாய்ப்பு.

பதவுரை :—நெஞ்சமே—மனமே!, தழைக்கும் — தளிர்விடுகிற, துழாய்—திருத்துழாயை, மார்வன் தன்னை—திருமார்பிலேயுடையவ னை அவனை, அழைத்து—கூப்பிட்டு, ஒருகால்—ஒரு காலத்தில், போய்—பரமபதத்திற்குப் போய், பொலிய உபகாரம் கொள்ளாது— மிகவும் உபகாரத்தை ஏற்றுக்கொள்ளாமல், அவன் புகழே—அவ னுடைய குணங்களையே, வாய் உபகாரம் கொண்ட வாய்ப்பு—வாய்க்கு நன்மையாக அங்கீகரித்த இச்செயலை, பிழைக்க முயன்றோமோ— தப்பச்செய்தோமா?, பேசாய்—சொல்லுவாயாக.

அவ :—முப்பத்தொன்பதாம் பாட்டில்; (பிழைக்க) பேசவென்று புக்கவாறே போக்யமாய் நெஞ்சுக்குப் பொருந்தினவாறே "நாம் பார்த்தவிடம் தப்பச் செய்தோமோ நெஞ்சே?" என்கிறார்.

வ்யா :—(தழைக்குமித்யாதி) ஒரு வாடல்மாலையையிட்டாலும் தழைக்கும் துழாய் மார்வையுடையவனை அழைத்து, அவன் கிட்டக் கொண்டு, "பரமபதத்திலே வந்து, அஸங்குசிதமான போகத்தை புஜிப்பிக்கிறேன்" என்னாதே, வாய்க்குபகாரமாகக்கொண்ட விந்த வாய்ப்புத் தப்பமுயன்றோமோ? சொல்லாயென்கிறார். ஜ்ஞாநமுண்டா யிருக்க சரீர * ஸமநந்தரத்திலே கைங்கர்யம்பண்ணுகையாவது - பகவத்விஷயத்தில் ருசியில்லாமையிறே. 39.

அரு :—முப்பத்தொன்பதாம் பாட்டு. (தப்பச்செய்தோமோ? - தப்பச்செய்யவில்லையே, நன்றாகச்செய்தோம் நெஞ்சே என்கிறார். (வந்து) - பரமபதத்திலே போயென்றபடி. நெஞ்சே உன்னை (புஜிப் பிக்கிறேனென்னாதே). பரமபதத்துக் கைங்கர்யமிங்கேகூடுமோ வென்ன அருளிச்செய்கிறார் (ஜ்ஞாநமுண்டாயிருக்க) இத்யாதி. 39.

40. வாய்ப்போ விதுவொப்ப மற்றில்லை வாநெஞ்சே
போய்ப்போய் வெங்நரகில் பூவியேல்—தீப்பால
பேய்த்தா யுயிர்களாய்ப் பாலுண்டு அவளுயிரை
மாய்த்தானை வாழ்த்தே வலி.

பதவுரை :—வா நெஞ்சே—வாராய்! மனமே!, இது ஒப்ப—இதற்கு ஸமாநமான, வாய்ப்பு—ஸமயம், மற்று இல்லை—வேறு கிடையாது, போய் போய்—மிகவும் அகன்று, வெம் நரகில்—(பிரிவாகிற) கொடிய நரகத்தில், பூவியேல்—என்னைப் புகுவிக்காதே. தீப்பால—கொடியதன்மையையுடையவளாய், பேய் தாய்—தாயுருவங்கொண்ட பேயான பூதனையின், உயிர்—பிராணனை, பால் களாய் உண்டு—பாலோடே கலந்து குடித்து, அவள் உயிரை மாய்த்தானை—அவளுடைய உயிரை அழித்தவனை, வாழ்த்தே—வாழ்த்துவதே, வலி—(நமக்கு) பலமாகும்.

வ்யா :—நாற்பதாம் பாட்டில், (வாய்ப்பித்யாதி) இத்தோடொக்கும் நேர்பாடு மற்றில்லை நெஞ்சே! (போயித்யாதி) "அயோக்யன்"

* (பா) ஸமநந்தரத்திலேயிறே.

என்று அகலுகையாகிற கொடிய நரகத்திற் புகுவியாதேகொள். (34) "निरयो यः त्वया विना" (நிரயோ யஸ் த்வயா விநா) (பேய்த்தாய் இத்யாதி) பெற்றதாய் வேஷத்தைக்கொண்டுவந்தபேயினுடைய உயிரைப் பாலோடே கலசியுண்டு அவளுயிரை முடித்தவனை வாழ்த்துகை நமக்கு மிடுக்கு. வாழ்த்துகையிலே துணியென்றுமாம். 40.

அரு:—நாற்பதாம் பாட்டு. அகலுகை நரகமோவென்ன அருளிச் செய்கிறார். (நிரயோ யஸ் த்வயா விநா) என்று. "தீப்பால பேய்த்தாய்" பொல்லாத ஸ்வபாவத்தையுடைய பேய்ச்சி. உயிர் - களாய் - கலசி. 40.

41. வலியமென நினைந்து வந்தெதிர்ந்த மல்லர்
வலிய முடியிடிய வாங்கி—வலிய நின்
பொன்னாழிக் கையால் புடைத்திடுதி கீளாதே
பன்னாளும் நிற்கு மிப்பார்.

பதவுரை:—வலியம் என நினைந்து—நாமே பலமுடையோம் என்று எண்ணி, வந்து—(சண்டை செய்ய) வந்து, எதிர்ந்த—எதிர்த்த, மல்லர்—(சாணூரமுஷ்டிகர்கள் என்னும்) மல்லர்களுடைய, வலிய முடி—பலம் பொருந்திய தலையை, இடிய—இடிந்து விழும்படி, வாங்கி —பறித்து, பொன் ஆழி—அழகிய சக்கரத்தைத் தரித்த, நின்—உன்னுடைய, கையால்—திருக்கையால், கீளாதே—கிழித்துப்போடாதே, புடைத்திடுதி—(கை நோகும்படி) அடித்துவிட்டாய்; (அதனாலேயே) இப்பார் பல் நாளும் நிற்கும்—இந்த பூமி பலகாலும் நிலைபெற்றது.

அவ:—நாற்பத்தோராம் பாட்டில்; (வலியமென) பூதநா ப்ரஸங்கத்தாலே மல்லரை நிரவலித்தபடி சொல்லுகிறது.

வ்யா:—(வலியமித்யாதி) வெல்வோமென்றுநினைத்து வந்தெதிர்த்த மல்லருடைய திண்ணியதான முடியை வாங்கி, மிடுக்கையுடைத்தான திருவாழியைப் பிடித்த கையாலே கேசியைப்போலே வாயைக்கிழியாதே மல்லுக்கீடாகப் புடைத்திடுதி. (பல்நாளும் நிற்குமிப்பார்) தனியே முரட்டு மல்லரை வென்ற வெற்றிக்கு என்றும் ஸாக்ஷி பூமியிறே. அம்மல்லரை ஜயித்த ஜயத்தாலேயிறே பூமி நிலைநின்றதென்றுமாம். (கீளாதே பல்நாளும் நிற்குமிப்பார்) ஸௌகுமாரமான திரு(வடி)க்கைகளைக்கொண்டு முரட்டு மல்லரோடே பொருகிறபடி கண்டால் இப்பூமியில் சேதநர் முடியவேண்டாவோ? அது

கண்டு ஸஹித்திருந்த இவர்களுக்கு நாரேபிராயம். (35) "न समं युद्धमित्याहुः" (ந ஸமம் யுத்தமித்யாஹு:) என்றமாத்ரமும்சொல்லாத இவர்களுக்கு ஒருநாளும் அழிவில்லை என்றுமாம். 41.

அரு:—நாற்பத்தோராம் பாட்டு. "முடியிடிய" முடியிடியும் படி, புடைத்திடுதி. "இப்பார்" - பாரிலுள்ளார். "நிற்கும்" -ஸாக்ஷி நிற்குமென்னுதல், ஸத்தைநிற்குமென்னுதல், ஈடுபட்டழியாதேநிற்கு மென்னுதல். 41.

42. பாருண்டான் பாருமிழ்ந்தான் பாரிடந்தான் பாரளந்தான்
பாரிடமுன் படைத்தானென்பரால்—பாரிட
மாவானுந்தானு லாரிடமே மற்றொருவர்க்
காவான் புகாவா லவை.

பதவுரை:—பார் உண்டான்—(பகவான்) பூமியை விழுங்கினன், பார் உமிழ்ந்தான்—உலகத்தை வெளிப்படுத்தினன், பார் இடந்தான்—ப்ருதிவியைக் குத்தியெடுத்தான், பார் அளந்தான்—நிலம் முழுவதையும் (திருவடிகளால்) அளந்தான், பார் இடம் முன் படைத்தான்—மஹாப்ரளயகாலத்தில் இவ்வுலகையெல்லாம் ஸ்ருஷ்டித்தான், என்பர்—என்று (ஞானிகள்) சொல்லுவர்; (இக்காரணங்களாலேயே) பார் இடம் ஆவானும் தான்—இடமுடைத்தான உலகம் முழுவதுமாகிறவனும் தானே, ஆனல்—இப்படியாகில், ஆர் இடமே—(இவ்வுலகெல்லாம்) யாரைச்சேர்ந்த இடம்? அவை—அந்த உலகங்கள், மற்று ஒருவர்க்கு ஆவான் புகா—வேறொருவர்க்கு சேஷமாக ஆகமாட்டா.

அவ:—நாற்பத்திரண்டாம் பாட்டில், (பாருண்டான்) "ஸர்வேச்வரனே ஆச்ரயமாகவேண்டாமோ? என்கிறது.

வ்யா—(பாருண்டானித்யாதி) ப்ரளயம் வருகிறதென்று தன் வயிற்றிலே வைத்து ரக்ஷித்தும், வெளிநாடு காண உமிழ்ந்தும், அண்டபித்தியில் நின்றும் பூமியை வராஹரூபமாய் ஒட்டுவிடுவித்தும், மஹாபலி அபஹரிக்க எல்லைகடந்தும், கரணகளேபரவிதுரமாய் போகமோக்ஷசூந்யமான இவற்றை ஸ்ருஷ்டித்தும், இப்படி ஆனைத் தொழில்கள் செய்வானென்று நிர்த்தோஷப்ரமாணமும், ப்ரமாணத்தை அங்கீகரித்த ருஷிகளும் சொல்லுகையாலே - ஜகத்தாகிறான் ஈச்வரன். ரக்ஷ்யரக்ஷகபாவாதிஸம்பந்தங்களாலே ஐக்யம்; ஸ்வ

ரூபத: அன்று. (36) "सर्वं खल्विदं ब्रह्म" (ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம) என்று ப்ரபஞ்சத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் ஐக்யத்தைச்சொல்லி (36) "तज्जलानिति" (தஜ்ஜலாநிதி) என்று ஹேது சொன்னாற்போலே. (ஆனாலாரிடமே) இப்படியானால் இஜ்ஜகத்துக்கு ஆஶ்ரயமாவாரார்? (மற்றொருவர்க்காவான்புகாவாலவை) ஜகத்திலிச்சேதநர் வேறொருவனுக்கு சேஷமாவான் புகா. உண்டுமிழ்ந்தென்கிற தொழில்கள் வேறொருவ்யக்திக்காகாவென்றுமாம். 42.

அரு:—நாற்பத்திரண்டாம் பாட்டு. "பாரிடமாவான்" என்று ஸ்வரூபைக்யஞ்சொல்லுகிறதோவென்ன அருளிச்செய்கிறார் (ரக்ஷ்ய ரக்ஷகபாவ) இத்யாதி. "அவை" - சேதநராதல், கீழ்ச்சொன்ன வ்யாபாரமாதல். ஆவான் புகா. ஆல் - அசை. 42.

43. அவயமென நினைந்து வந்த சுரர் பாலே
நவையை நளிர்விப்பான்றன்னைக்—கவையில்
மனத்துயர வைத்திருந்து வாழ்த்தாதார்க் குண்டோ
மனத்துயரை மாய்க்கும் வகை.

பவுரை:— அவயம் என நினைந்து—(நீயே எங்களுக்கு) அடைக்கலம் என்று எண்ணி, வந்த சுரர் பாலே—வந்த தேவதைகளிடத்தில் உள்ள, நவையை—துக்கத்தை, நளிர்விப்பான் தன்னை—நடுங்கிப் போம்படி பண்ணின ஸர்வேச்வரனை, கவை இல் மனத்து—ஸம்சயம் அற்ற மனத்தில், உயரவைத்து—உன்னதமாக வைத்து, இருந்து—நிலையாயிருந்து, வாழ்த்தாதார்க்கு—மங்களாசாஸநம் செய்யாதவர்களுக்கு, மனம் துயரை மாய்க்கும் வகை உண்டோ—மனஸ்ஸிலேயுள்ள துக்கத்தைப் போக்க வழியுண்டோ?

அவ:—நாற்பத்துமூன்றாம் பாட்டில்; (அவயம்) ப்ரபல ப்ரதிபக்ஷங்களைப்போக்குமவனைப் பற்றாதார்க்கு வரும் மநோது:கங்களைப் போக்கவொண்ணாது.

வ்யா:—(அவயமித்யாதி) (37) "परावरेश शरणं" (பராவரேசம் சரணம்) என்னும்படி "அபயம்" என்று நினைத்து வந்த தேவதைகளை அந்த து:கத்தை நடுங்கப்பண்ணிப்போக்குமவன் தன்னை. நவை யென்று து:கஹேதுவான குற்றமாகவுமாம். (கவையித்யாதி) இவ் விஷயங்களைப்பற்றுவோமோ? ஈச்வரனைப்பற்றுவோமோ? அபோக்ய

ரென்றகலுவோமோ? அகலாதொழிவோமோ? என்று இரண்டு மின்றிக்கேயிருக்கிற மநஸ்ஸிலே இவனே உயர வைத்துமங்களாசாஸநம் பண்ணுதார்க்குமுண்டோ மனத்துயர் மாய்க்கும் ப்ரகாரம்? 43.

அரு :— நாற்பத்துமூன்றும் பாட்டு. "நவை" - து:கமாதல், பாபமாதல். 43.

44. வகைசேர்ந்த நன்னெஞ்சும் நாவுடைய வாயும்
மிக வாய்ந்து வீழா வெனிலும்—மிகவாய்ந்து
மாலேத்தாம் வாழ்த்தா திருப்ப ரிதுவன்றே
மேலேத்தாம் செய்யும் வினே.

பதவுரை :—வகை சேர்ந்த—(ஞானம் வெளிப்படும்) வழியாகச் சேர்ந்திருக்கும், நல் நெஞ்சும்—மேலான மனமும், நாவு உடைய—நாக்கையுடைய, வாயும்—வாயும், மிக வாய்ந்து—மிகவும் ஈடுபட்டு, வீழா எனிலும்—(எம்பெருமானே) அடையாவிடினும், மிக வாய்ந்து—மிகவும் ச்ரமப்பட்டு, மாலே—ஸர்வேச்வரனே, தாம் வாழ்த்தா திருப்பர்—ஸம்ஸாரிகள் மங்களாசாஸநம் செய்யாதிருப்பார், மேலே—அநாதிகாலமாய், தாம் செய்யும் வினே—தாங்கள்செய்யும் பாபத்தின்பலன், இது அன்றே—இது வல்லவா.

வ்யா:—நாற்பத்துநாலாம்பாட்டில்;(வகை) இதுக்கு பட்டரொரு படியும் பிள்ளே திருநறையூரரைய ரொருபடியு மருளிச்செய்வர். (வகைசேர்ந்த நல்நெஞ்சும்) சரீரபரிக்ரஹம்பண்ணின ஆத்மாவுக்கு ஜ்ஞானப்ரஸரத்துக்காகச்சேர்ந்தநெஞ்சும். (நாவுடையவாயும்) ஸர்வேச்வரனே ஸ்துதிக்கக்கண்ட வாயும். (மிகவாய்ந்துவீழாவெனிலும்) குணத்ரயவஶ்யராகையாலே ரஜஸ்தமஸ்ஸுக்கள் வர்த்தித்தபோது இவன் பக்கல் வந்தனவில்லேயாகிலும். (மிகவித்யாதி) (38) "सत्वात् सञ्जायते ज्ञानं" (ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்) என்று ஸத்வகார்யமான ஜ்ஞானத்தாலே ரஜஸ்தமஸ்ஸுக்களேத் தள்ளி ஸர்வேச்வரனே வாழ்த்தாதேயிருப்பார்கள். (இதுவித்யாதி) இதுவன்றோ ஸம்ஸாரம் நித்யமாக இவர்கள் பண்ணினபாபம்.

ஈச்வரனுடைய குணங்களிலே சேர்ந்த நெஞ்சும், குணமொன்றையுமே ஏத்தும் வாயும் அல்லாத குணங்களிலும் உள்புக்கதில்லேயாகிலும் எல்லா குணங்களிலும் உள்புகும்படி ஆராய்ந்து ஸர்வேஶ்வரனே ஏத்தாதிருப்பர்கள்; இதுவன்றோ பண்ணின பாபத்தினுடைய பலம் என்று பிள்ளே திருநறையூரரையர்நிர்வாஹம். 44.

அரு :—நாற்பத்துநாலாம் பாட்டு. “மேலை” - மேலைக்கு; (ஸம்ஸாரம் நித்யமாக). அரையர்நிர்வாஹம் (ஈச்வரனுடைய) இத்யாதி. மேலை - பண்டு. “வினை” - பாபமாதல், பாபபலமாதல். 44.

45. வினையார் தரமுயலும் வெம்மையை யஞ்சித்
தினையாம் சிறிதளவும் செல்ல—நினையாது
வாசகத்தா லேத்தினேன் வானோர் தொழுதிறைஞ்சும்
நாயகத்தான் பொன்னடிக்கள் நான்.

பதவுரை :—வினையார்—(பகவானிடமிருந்து) பிரிகையானது, தர முயலும்—தருகைக்கு முயற்சிக்கிற, வெம்மையை அஞ்சி—துக்கத்தை நினைத்து பயப்பட்டு, தினையாம் சிறிது அளவும்—மிகச்சிறிய காலமும், செல்ல நினையாது—பிரிந்து செல்ல நினையாமல், நான்—நான், வானோர்—நித்யஸூரிகள், தொழுது இறைஞ்சும்—மனோவாக்குகளால் வணங்கும், நாயகத்தான்—ஸ்வாமியினுடைய, பொன் அடிக்கள்—அழகிய திருவடிகளை, ஏத்தினேன்—துதித்தேன்.

அவ :—நாற்பத்தைந்தாம் பாட்டில்; (வினை) நீரிதில் செய்ததென்னென்னில், பிரிந்தால்வருமார்த்தத்தைநினைத்து அவன் திருவடிகளை யேத்தினேனென்கிறார்.

வ்யா :—(வினையாரித்யாதி) பிரிவாலே பிறக்கும் வெம்மையை அஞ்சிக்ஷணமாத்ரமும் அவனையொழியக் காலம் செல்லப்பாராதே வாகிந்த்ரியத்தைக்கொண்டு ஏத்தினேன். (வானோரித்யாதி) நித்யஸூரிகள் மநோவாக்காயங்களாலே அடிமைசெய்யும் ஸர்வேச்வரனுடைய விலக்ஷணமான திருவடிகளைப்பெற்று, அதைப் பிழைக்கவொண்ணாதென்று ஏத்தினேன். 45.

அரு :—நாற்பத்தைந்தாம் பாட்டு. “வினையார்” வினையென்று-பாபகார்யமானவிஸ்லேஷம். “தாமுயலும்” - கொடுக்க உத்யோகிக்கிற, இத்தால் (பிரிவாலேபிறக்கும்) என்றபடி. 45.

46. நான்கூறும் கூற்றுவ தித்தனையே நாளும்
தேங்கோத நீருருவன் செங்கண்மால்—நீங்காத
மாகதியாம் வெந்நரகில் சேராமல் காப்பதற்கு
நீகதியா நெஞ்சே நினை.

பதவுரை—தேங்கு ஓதம் நீர் உருவன்—தேங்கின கடலின் நீர் போன்ற நிறத்தையுடையவனாய், செம் கண் மால்—சிவந்திருக்கும்

கண்களையுடையனான ஸர்வேச்வரன், வெம் நரகில்—கொடிய ஸம்ஸாரத்தில், சேராமல்—(நாம்) விழாமல், காப்பதற்கு—ரக்ஷிப்பதற்கு, மாகதியாம்—சிறந்த உபாயமாவான்; நெஞ்சே—மனமே!, நீ—நீ, கதியா—(அவனையே) உபாயமாக, நினை—எண்ணுவாயாக; நான்—(இதையறிந்த) நான், நாள் நாளும்—தினந்தோறும், கூறும் கூற்றாவது—சொல்லும் சொல்லாவது, இத்தனையே—இவ்வளவே.

அவ:—நாற்பத்தாறும் பாட்டில்; (நான்கூறும்) கீழே தேஹயாத்ரை செல்லும்படி சொல்லிற்று; இதில் "ப்ராப்யப்ராபகங்கள் அவனேயென்று நினைத்திரு" என்கிறார்.

வ்யா:—(நான்கூறும் கூற்றாவதித்தனையே). ஒரு நாளேயோ இப்படிச் சொல்லுவதென்னில், (நாணாளும்) என்றுமித்தனையே. (தேங்கோதமித்யாதி) தேங்கின கடல்போலேயிருந்த திருமேனியையும், ஐச்வர்யஸூசகமான கண்களையுமுடைய ஸர்வேச்வரனை, மீட்சியில்லாத ப்ராப்யமாகவுமாம், ஸம்ஸாரத்திலே சேராதபடிக்கீடான ப்ராபகமாகவுமாம், நெஞ்சே! நினை. இத்தால் ப்ராப்யப்ராபகங்களுமவனே என்னுமிடமும் ப்ராப்தாவுக்கு ப்ரதிபத்திமாத்ரமே என்னுமிடமும் ப்ரபந்நனுக்கு இருகால் * மட்டொன்றும் சொல்லவேண்டுவதில்லை யென்னுமிடமும் சொல்லுகிறது. 46.

அரு:—நாற்பத்தாறும் பாட்டு. "நினை" என்கையாலே, ப்ரதிபத்தியும், அதுதான் ஒருகால் என்னுமிடமும் தோற்றுகிறது. 46.

47. நினைத்திறைஞ்சி மானிடவ ரொன்றிரப்ப ரென்றே
நினைத்திடவும் வேண்டாநீ நேரே—நினைத்திறைஞ்ச
எவ்வளவ ரெவ்விடத்தோர் மாலே, அதுதானும்
எவ்வளவு முண்டோ வெமக்கு.

பதவுரை:—மாலே — (அளவிட்டறியமுடியாத) ஸர்வேச்வரனே!, "மானிடவர்—மநுஷ்யர்கள், நினைத்து—நினைத்து, இறைஞ்சி—வணங்கி, ஒன்று இரப்பர்—ஒரு விஷயத்தை யாசிப்பர்கள்", என்று—என்று, நீ—நீ, நினைத்திடவும் வேண்டா—நினைக்கவும் வேண்டா; நேரே நினைத்து—(உன்னை) உள்ளபடி அறிந்து, இறைஞ்ச—வணங்கத்தகுந்தபடி, எவ்வளவர்—(ஸம்ஸாரிகள்) எவ்வளவு ஞானமுடையவர்?, எவ்விடத்தோர்—எந்த தேசத்திலிருக்கிறார்கள்?, அது தானும்

---

* (பா) மற்றொன்றும்.

—(வேறு ப்ரயோஜநத்தையாசிக்கையாகிற) அதுதான், எவ்வளவும்—ஏறிதும், எமக்கு உண்டோ—(உன் கடாக்ஷம் பெற்ற) எங்களுக்கு உண்டோ?

அவ:—நாற்பத்தேழாம் பாட்டில்; (நினைத்து) "நீர் நம்மை ப்ராப்யப்ராபகமாகவும், நம்மையொருத்தரையே தேஹயாத்ரையாகவுமாக இராநின்றீர்; இதுக்கு விபரீதமாயிருப்பானேன் ஸம்ஸாரம்?" என்ன, "உன்கடாக்ஷமில்லாதபடியிருக்கை குற்றமோ?" என்கிறார்.

வ்யா:—(நினைத்தித்யாதி) நம்மை நினைத்து நம்காலிலே விழுந்து உம்மைப்போலே நம்மையே ப்ரயோஜநமாகப்பற்றாதே, ப்ரயோஜநாந்தரத்துக்கும் அடிபொப்பரென்று நினைக்கவேண்டா. (நேரே இத்யாதி) நீயே ப்ராப்யமும் ப்ராபகமும் என்று நினைத்திறைஞ்ச எங்குள்ளார்க்குப்போம்? எவ்வளவிலுள்ளார்க்குப்போம்? (மாலே) உன்னைச் சிலவராலே பரிச்சேதிக்கப்போமோ? (அதுதானுமெவ்வளவுமுண்டோவெமக்கு) உன் கடாக்ஷம் பெற்றவர்களுக்கு ப்ரயோஜநாந்தரத்திலே முதலடியிடவேண்டா; உன் கடாக்ஷமில்லாதார் இப்படிச்செய்தாரென்று உனக்கு வெறுக்கவொண்ணுமோ? 47.

அரு:—நாற்பத்தேழாம் பாட்டு. "எவ்வளவர்"- எவ்வளவிலுள்ளார் எப்படிப்பட்ட ஜ்ஞானத்தையுடையார்? அதுதானும் அந்த ப்ரயோஜநத்தைக்கொள்ளுகை. 47

48. எமக்கியாம் விண்ணாட்டுச் சுச்சமதாம் வீட்டை
அமைத்திருந்தோ மஃதன்றே யாமாறு— அமைபொலிந்த
மென்றோளி காரணமா வெங்கோட்டே றேழுடனே
கொன்றானையே மனத்துக் கொண்டு.

பதவுரை:—அமை பொலிந்த—மூங்கிலைப்போலே விளங்குகிற, மென் தோளி காரணமா—ம்ருதுவான புஜங்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக, வெம்கோடு—கொடிய கொம்புகளையுடைய, ஏழ் ஏறு—ஏழு எருதுகளையும், உடனே—ஒரே ஸமயத்தில், கொன்றானையே—கொன்ற க்ருஷ்ணனையே, மனத்து கொண்டு—உள்ளத்திலே வைத்து, யாம்—நாம், விண்ணாட்டுக்கு உச்சமதாம் வீட்டை—ஸ்வர்க்கம் முதலியவற்றுக்கு மேலிருக்கும் பரமபதத்தை, எமக்கு அமைத்திருந்தோம்—எங்களுக்கு ஆசைப்பட்டிருந்தோம், அஃதன்றே ஆம் ஆறு—அது வல்லவோ காலக்ஷேபம் செய்யவேண்டிய வழி.

அவ :—நாற்பத்தெட்டாம் பாட்டில்; "எமக்கு ப்ரபல ப்ரதிபந்த கம் போக்குமவனை உபாயமாக நெஞ்சிலேகொண்டு அவனால் பெறு வதும் பரமபதமென்று நினைத்திருந்தோம்; இதன்றோ இருக்கும்படி" என்கிறார்.

வ்யா :—நமக்கு நாம் ※ ப்ரஹ்மாதிகளுக்கு மேலான பரமபதத் தைப்பாரித்திருந்தோம். இதுவன்றே செய்யும்வழி. ப்ரஹ்மாதி களுடைய லோகத்துக்கு மேலாய், பரமபதத்துக்குப் புறம்பாயிருக் கும் கைவல்யமோக்ஷத்தை (அமைத்திருந்தோம்) வேண்டாவென் றிருந்தோமென்றுமாம். பெருமாள் குணங்களிலே பழகின உடம் பொழிய பரமபதம் வேண்டாவென்றிருந்தாற்போலே, அஸாதாரணை யாய் வேய்போலே விளங்கி ம்ருதுவான தோளையுடைய நம்பின்னைப் பிராட்டிக்காக வெவ்விய கோட்டையுடைய எருதுகளேழையும் உடனே செற்றவனையே நெஞ்சிலே கொண்டு இவ்வநுபவத்திற்காட் டில் பரமபதம் வேண்டாவென்றிருந்தோமென்றுமாம். 48.

அரு :—நாற்பத்தெட்டாம் பாட்டு. "உச்சமதாம்" - மேலான வீட்டை, "அமைத்திருந்தோம்" அமைவு - சமைவாய், பாரித்திருந் தோமென்னுதல்; அமைவு - அமையுமென்றாய், வேண்டாவென்னு தல்; பரமபதந்தன்னையும் வேண்டாவென்னுதல். இந்தவர்த்தத்தைத் திருவடியை த்ருஷ்டாந்தமாக்கி அருளிச்செய்கிறார் (பெருமாள்) இத்யாதி. "கோடு" கொம்பு. 48.

49. கொண்டல்தான் மால்வரைதான் மாகடல்தான் கூரிருள்தான்
வண்டறுப் பூவைதான் மற்றுத்தான்—கண்டநாள்
காருருவங் காண்டோறு நெஞ்சோடும் கண்ணனார்
பேருருவென் றெம்மைப் பிரிந்து.

பதவுரை :—கொண்டல் தான்—மேகங்களையும், மால் வரைதான் —பெரியமலைகளையும், மா கடல் தான்—பரந்த கடலையும், கூர் இருள் தான்—நெருங்கிய இருளையும்,வண்டு அறு பூவைதான்—வண்டுகள் விட்டுப்பிரியாத பூவைப்பூவையும், மற்று கார் உருவம் தான்—மற்று முள்ள கருநிறத்தையுடைய பொருள்களையும், காண்தோறு—பார்க்கும் போதெல்லாம், நெஞ்சு—என் மனம், கண்ணனார் பேர் உரு என்று—

※ (பா) ப்ரஹ்மாதிகளுடைய

(இது) கண்ணபிரானுடைய அழகிற்பெரிய உருவம் என்று நினைத்து, எம்மை—எங்களை, பிரிந்து ஓடும்—விட்டு (அவனிடம்) ஓடாநின்றது.

அவ:—நாற்பத்தொன்பதாம் பாட்டில்; (கொண்டல்) "அவனே ப்ராபகன்" என்றறுதியிட்டார்க்கு சரீராவஸாநந்தளவும் இருக்கும் படி சொல்லுகிறது.

வ்யா—(கொண்டல்தானித்யாதி) உபமாநங்களைக்கண்டால் உபமேயமென்று நம்மைவிட்டு நெஞ்சு ஓடாநின்றது. மேகத்தை, கறுத்த மலையை, கடலை கூரியவிருளை, வண்டுமாறாத பூவை என்கிற வ்ருக்ஷத்தைக்கண்டபோது. (காருருவங்காண்டோறும்) அநுக்தமான கறுத்த பூங்குவளை நீலம் காயாஇத்யாதி காணுந்தோறும் என்றுமாம். வடிவென்று கண்டால், "இதுக்கு அவனன்றுகாண்" என்று கேட்டறிந்தாலும் பின்னையும் கண்டபோதெல்லாம்; (கண்ணனார்பேருருவென்று) இதின் நெடுவாசியறிகிறதில்லை; பேருருவென்றோடாநின்றது. 49.

அரு:—நாற்பதொன்பதாம் பாட்டு. "மற்றுக்காருருவம்" என்று கூட்டியருளிச்செய்கிறார் (அநுக்தமான) இத்யாதி. (என்றுமாம்) என்றது - அர்த்தாந்தரமன்று, உண்டானாலும் ப்ரதிகோடிகண்டு கொள்வது. வர்த்தமாநத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (வடிவென்று) இத்யாதி. [நெஞ்சானதெய்யைப் பிரிந்து பேருருவென்றே ஓடாநின்றது] என்றபடி. 49.

50. பிரிந்தொன்று நோக்காது தம்முடைய பின்னே
திரிந்துழலும் சிந்தனையார் தம்மை—புரிந்தொருகால்
ஆவா வெனவிரங்கா ரந்தோ வலிதேகொல்
மாவாய் பிளந்தார் மனம்

பதவுரை:—பிரிந்து—தம்மைவிட்டு, ஒன்று நோக்காது—வேறொன்றையும் எண்ணாதே, தம்முடைய பின்னே—தமக்குப் பின்னாலேயே, திரிந்து உழலும்—அலைந்து தடுமாறுகிற, சிந்தனை யார் தம்மை—என் மனஸ்ஸை, ஒரு கால்—ஒருதடவையாவது, புரிந்து—அன்பு புரிந்து, ஆ ஆ என—ஐயோ! என்று, இரங்கார்—கருணை காட்டுகிறாரல்லர்; அந்தோ—ஐயோ!, மா வாய் பிளந்தார் மனம்—குதிரையுருவாய் வந்த கேசியின் வாயைக்கிழித்த எம்பெருமானுடைய மனம், வலிதே கொல்—கடினமானபடியென்?

அவ :—ஐம்பதாம் பாட்டில்; (பிரிந்தொன்று) "உபமானங்களைக் கண்டு உபமேயமென்றிருக்கும்படியான எம்மை இவர் நோக்கா தொழிவதே!" என்று வெறுக்கிறார். ‡ "எதிர்சூழல்புக்கெனைத்தோர் பிறப்பும்" என்னும்படியை எண்ணுகிறிலர். அவன் கொடுத்த சரீரங்கொண்டு ருசி பிறந்த பின்பு * இவனைத்தாழ்த்ததும் குற்றமாய்த் தோன்றாநின்றது. தான்பரிக்ரஹித்த சரீரந்தோறும் அவஸர ப்ரதீக்ஷனாய்த் தம்பக்கல் முகம்பெறாதே திரிந்தது தோற்றுகிறதில்லை. இத்தலையில் அபேக்ஷை பிறந்தால் அவனுக்கு வாராதேயிருக்கை முறையன்றுபோலேகாணும். ப்ரஜை எல்லாத் தீம்புஞ்செய்ததே யாகிலும் பசித்தபோது சோறிட்டிலளாகில் தாய்க்குக் குற்றமாகக் கடவதிறே.

வ்யா :—(பிரிந்தித்யாதி) வேறொன்றை அநுஸந்தியாதே தம்மையே பற்றித்திரிகிற. (சிந்தையார்தம்மை) "தம்மையொழிய வேறொருத்தரில்லை" என்று புரிந்து பார்த்து "ஐயோ" என்றிரங்குகிறிலர். (மாவாய்பிளந்தாரித்யாதி) ஆஶ்ரிதர்க்காக விரோதிநிரஸநம் பண்ணிப் போந்தவருடைய மநஸ்ஸு இப்போது திண்ணிதானபடியென்! மாவாய்பிளந்தாருடைய மனம் அந்தோ! வலிதேகொல். 50.

அரு :—ஐம்பதாம் பாட்டு - (எம்மை) எங்களை. தம்மைப்பெறுகைக்கு யத்நம்பண்ணினவனை வெறுப்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (எதிர்சூழல்) இத்யாதி. தம்முடைய குற்றங்கிடக்க அவன் அல்பந்தாழ்த்ததைக் குற்றமாகக் கொள்ளலாமோவென்ன அருளிச்செய்கிறார் (ப்ரஜை எல்லா) இத்யாதி. 50.

51. மனமாளு மோரைவர் வன்குறும்பர் தம்மைச்
சினமாள்வித் தோரிடத்தே சேர்த்துப்—புனமேய
தண்டுழாயானடியே தாங்காணு மஃதன்றே
வண்துழாம் சீரார்க்கு மாண்பு.

பதவுரை :—மனம் ஆளும்—மனஸ்ஸை வசமாக்கிக்கொள்ளும், வன் குறும்பர்—வலிமையுடையராய் குறும்புசெய்பவராய், ஓர் ஐவர் தம்மை—ஒப்பற்றவரான பஞ்சேந்த்ரியங்களையும், சினம் ஆள்வித்து—(அவற்றிலுள்ள) கோபத்தைப் போக்கடித்து, ஓர் இடத்தே சேர்த்து—ஒப்பற்ற பகவத்விஷயத்திலே ஈடுபடுத்தி, புனம் மேய தண் துழாயான்

‡ திருவாய்மொழி (2-7-6) * (பா) இறை.

—தன்னிலத்தில் சேர்ந்திருந்தாற்போலே மலர்ந்து விளங்கும்குளிர்ந்த திருத்துழாயையுடையவனுடைய, அடியே தான் காணும்—திருவடிகளையே ஸேவிக்கையாகிற, அஃதன்றே — அதல்லவா, வண்துழாம் சீராக்கு—உதாரர்களாய், பரந்த குணங்களையுடையவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, மாண்பு— அழகு.

அவ:—ஐம்பத்தோராம் பாட்டில்;—(மனமாளும்) சேஷபூதன் சேஷி செய்தபடி கண்டிருக்குமத்தனையல்லது, வெறுத்துத்தப்பச் செய்தோமென்கிறார்.

வ்யா:—(மனமாளும்) பள்ளிகள்கலஹம்போலே, ஈச்வரனுக்கு ஆத்மா சேஷமாய், ஆத்மாவுக்கு மநஸ்ஸு சேஷமாய், மநஸ்ஸு போனவழியே போகக்கடவவான இந்த்ரியங்களிருக்கும் முறையன்றிக்கே, மநஸ்ஸை இந்த்ரியங்களாளுப்படியிருக்கை, (வன் குறும்பர்) மநஸ்ஸைத் தாங்கள் போனவழியே கொடுபோகவல்லராயிருக்கை. "இன்னதனை த்ரவ்யத்துக்கு அரசுசெய்வாரைக் கிடைக்கும்" என்னும் வன்னியரைப்போலே. (ஓரைவர் வன்குறும்பர் தம்மைச் சினமாள்வித்து) கர்மபலமான க்ரோதத்தைமுடித்து (39) "कामात् क्रोधोऽभिजायते" (காமாத் க்ரோதோபிஜாயதே) பகவத்வ்யதிரிக்தவிஷயங்களெல்லாம் இந்த்ரியங்களுக்கிரை போராதிறே. எல்லா இந்த்ரியங்களும் அநுபவிக்கப்புக்கால் அநுபாவ்யாம்சம் பெருத்திருப்பது பகவத்விஷயமிறே. * "இன்னங்கெடுப்பாயோ" என்றும் ‡ "பாவியேனைப்பலநீகாட்டிப்படுப்பாயோ" என்றும் ‡ "சிற்றின்பம்" என்றுமிறே இதரவிஷயங்கள். எல்லா இந்த்ரியங்களும் புஜித்தாலும் போக்யதை அளவிறந்திருக்குமென்னுமிடத்தைச் சொல்லுகிறது (புனமேயதண்டுழாயானடி) என்று. (வண்துழாம் சீராக்கு மாண்பு - மனமாளுமோரைவர் வன்குறும்பர் தம்மைச் சினமாள்வித்தோரிடத்தே சேர்த்துப் புனமேய தண்துழாயானடியே தான்காணுமஃதன்றே). ஆத்மகுணோபேதர்க்கு - வண்மை—துழாவின சீரையுடையவர்களுக்கு அழகாவது - இந்த்ரியங்களை ஜயித்து அவ்விந்த்ரியங்களெல்லாவற்றையும் பகவத்விஷயத்திலே சேர்த்து, செவ்வித்திருத்துழாய் மாலையையுடையனாயிருந்துள்ள ஸர்வேச்வரன் திரு

---

* திருவாய் (6-9-8). ‡ திருவாய் (6-9-9).

வடிகளைக் காண்கையன்றோ முறை? "அந்தோ வலிதே கொல்" என்று வெறுக்கக்கடவதோ? 51.

அரு:—ஐம்பத்தோராம் பாட்டு. "வண்டுழாஞ்சீரார்" என்கையாலே சேஷிசெய்தபடி கண்டிருக்கையொழிய வெறுக்கக்கூடாதென்கிறது. "தம்மை" என்றத்தையருளிச்செய்கிறார் (இன்னதனைத்ரவ்ய) இத்யாதி. (அரசுசெய்வார்) கைக்காயிரத்துக்குச் சேவிப்பார். "சினமாள்வித்து"-சினத்தை முடித்து; அத்தால் வந்தக்ரோதத்தைப் போக்க என்றபடி. இதரவிஷயங்கள் அநர்த்தகரமுமாய் அல்பமுமாயிருக்குமோவென்ன அருளிச்செய்கிறார் (இன்னங்கெடுப்பாயோ) இத்யாதி. "மாண்பு"-அழகு-முறையென்றாய், ப்ராப்தமென்றபடி. 51.

52. மாண்பாவித் தஞ்ஞான்று மண்ணிரந்தான் மாயவள்நஞ்
சூண்பாவித் துண்டான தோருருவம்—காண்பான்நங்
கண்ணவா மற்றொன்று காணுற சீர்பரவா
துண்ண வாய்தானுறுமோ வொன்று.

பதவுரை:—அஞ்ஞான்று—அன்றொருஸமயம், மாண் பாவித்து—ப்ர்ஹ்மசாரி வேஷத்தை (நன்றாகப்) பூண்டு, மண் இரந்தான்—(மூவடி) மண்ணை யாசித்தவனாய், மாயவள் நஞ்சு—வஞ்சகியான பூதனையின் (முலையிலுள்ள) விஷத்தை, ஊண் பாவித்து—(ரஸித்து) உண்பதாக பாவித்து, உண்டானது—விஷத்தையும் அவள் உயிரையும் உண்டவனை பெருமானுடைய, ஓர் உருவம்—ஒப்பற்ற திருமேனியை, காண்பான்—ஸேவிக்கையே, நம் கண் ஆவா—எங்களுடைய கண்ணுக்கு ஆசை; மற்று ஒன்று—வேறொன்றையும், காண் உறா—(அது) காண ஆசைப்படாது; வாய் தான்—வாய் தான், சீர் பரவாது—(அவனுடைய) கல்யாணகுணங்களைப் புகழாமல், ஒன்று உண்ண உறுமோ—ஒரு பொருளைப் புசிக்க ஆசைப்படுமோ?

அவ:—ஐம்பத்திரண்டாம் பாட்டில்; (மாண்பாவித்து) பொதுவிலேசொன்னேன்; அதுதானெனக்கு உண்டாயிற்றென்கிறார்.

வ்யா:—(மாணித்யாதி) மாண்பாவிக்கையாவது - மஹாபலி "நான்தருவேனாகில் இன்னுமகல இரக்கமாட்டாயோ?" என்ன; "இரந்ததுக்குமேலே வேண்டா" என்றிக்கிற-பால்யம் பாவித்து. அத்தைப் பொய்யென்கிறதன்று; அத்தையும்மெய்யாக்குகை.

(மாயவலித்யாதி) தாய் வேஷத்தைக்கொண்டு "இவனுக்கு முலை கொடாவிடில் தரியேன்" என்று அவள் முலைகொடுத்தாற்போலே இவனும் "உண்ணாவிடில் தரியேன்" என்று தாரகமாகவுண்டான்; * "பேய்முலை நஞ்சூணாகவுண்டான்" என்னும்படியே. (காண்பான் நங்கண்ணவா) கண்ணுக்கு அவா ஊண்பாவித்துண்டானதோருருவங் காண்பான். (மற்றொன்றுகாணுரு) "அதொன்றும் காண்கை செய்" என்று காண்கை. நாணி வேறொன்று காணுமையேமுடியும். நயநேந்த்ரியத்துக்கேயன்று; இந்த அர்த்தம் வாகிந்த்ரியத்துக்குமொக்கும். (சீர்பரவாதுண்ணவாய்தானுறமோவொன்று) அவனுடைய கல்யாணகுணங்களைச்சொல்லாதே வாக்கு வேறொன்றை உண்ண உறாது. 52.

அரு:—ஐம்பத்திரண்டாம் பாட்டு - (அதொன்றும்) என்ற வாக்யம் பிழை. 52.

53. ஒன்றுண்டு செங்கண்மால் யானுரைப்பது உன்னடியார்க்
கென்செய்வ னென்றே யிருத்திநீ—நின்புகழில்
வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு
வைகுந்த மென்றருளும்வான்.

பதவுரை:—செம் கண் மால்—சிவந்த திருக்கண்களையுடைய ஆச்ரிதபக்ஷபாதியே!, யான் உரைப்பது—நான் (உனக்குச்) சொல்ல வேண்டியது, ஒன்று உண்டு—ஒரு வார்த்தையிருக்கிறது; நீ—நீ, உன் அடியார்க்கு—உன்னிடம் அன்புள்ளவர்களுக்கு, என் செய்வன் என்றே இருத்தி—என்ன உபகாரம் செய்குவாம் என்று நினைத்துக் கொண்டே இருக்கிறாய், மற்று அவர்க்கு—அவர்களுக்கோவெனில், நின் புகழில்வைகும்—உன்னுடைய கல்யாணகுணங்களிலீடுபடும், தம் சிந்தையிலும்—தம் மனத்தைக்காட்டிலும், வைகுந்தம் என்று நீ அருளும் வான்—வைகுந்தம் என்று (மிகப்பெரிதாகச்) சொல்லி நீ கொடுக்கும் பரமபதம், இனிதோ—போக்யமாகுமோ?

அவ:—ஐம்பத்துமூன்றாம் பாட்டில்; (ஒன்றுண்டு) "என்னுடைய இந்த்ரியங்களுமுன்னை யநுபவிக்கும்படியாயிற்று" என்ன; "அவ்வளவேயோ? இன்னும் சிலவுண்டுகாணும் உமக்குச் செய்யக்கடவது" என்ன; "எனக்குச் செய்யாததுண்டோ?" என்கிறார்.

---

* முதல் திருவந்தாதி (11).

வ்யா :— (ஓன்றித்யாதி) ஆரேனுமாகத் தெளிந்தார் கலங்கினார்க்குச் சொல்லக்கடவதிறே. (உன்னடியார்க்கித்யாதி) நிரபேக்ஷர்க்கு "என்செய்வன்" என்றிருக்கிற தர்மந்தான் எப்போதும் ஒரு படிப்பட்டிருக்கும். (40) "ऋणं प्रवृद्धमिव मे" (ருணம் ப்ரவ்ருத்தமிவ மே) பாண்டவர்கள் முடிசூடினவன்றும் த்ரௌபதி குழல் முடித்த பின்பும், பார்த்தாக்கள் ஸந்நிஹிதராயிருக்க, அவர்களை "ரக்ஷகர்" என்று நினையாதே தன்பேர் சொன்னவளுக்குத் திருவுள்ளத்திலே தனிசு பட்டிருக்குமாபோலே, அந்த ஆநுகூல்யமுடையார்க்கு என்றும் "என்செய்வேன்" என்றிருத்தி. (நின்புகழித்யாதி) உன் புகழிலே தங்குகிற சிந்தையிற்காட்டிலினிதோ நீ போரப்பொலியச் சொல்லிக் கொடுக்கிற பரமபதம்? வித்தத்துக்கிடைநிற்குமோ ஸாத்யம்? இதுக்கது § உக்திஸாரமே காரணம். 53.

அரு :—ஐம்பத்துமூன்றாம் பாட்டு. சேஷியைக்குறித்து "சொல்லுகிறேன்" என்னலாமோவென்ன அருளிச்செய்கிறார் (ஆரேனுமாக) இத்யாதி. (தனிசு) - ருணம். பரமபதம் ஶ்லாக்யமன்றோவென்ன அருளிச்செய்கிறார் (இதுக்கது உக்திஸாரம்) இத்யாதி. 53.

54. வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ
காேனோ வொருங்கிற்றும் கண்டிலமால்—ஆனீன்ற
கன்றுயரத் தாமெறிந்து காயுதிர்த்தார் தாள்பணிந்தோம்
வன்துயரை யாவா மருங்கு.

பதவுரை :—ஆன் ஈன்ற கன்று—பசு அன்று பெற்ற கன்றுபோல் வந்த வத்ஸாஸுரனை, தாம் உயர எறிந்து—தானொருவனாகவே உயர வீசியெறிந்து, காய் உதிர்த்தார்—விளவின் காயாயிருந்த கபித்தாஸுரனை விழச்செய்தவனுடைய, தாள் பணிந்தோம்—திருவடிகளை வணங்கினோம்; வன் துயரை—பலம் பொருந்திய பாபத்தை, மருங்கு கண்டிலம்—நம் அருகிலும் கண்டிலோம்; ஆல்—என்ன ஆச்சரியம்!, வான் ஒருங்கிற்றே—ஆகாசத்தில் ஒருங்கியதோ? மறி கடல் ஒருங்கிற்றே—அலையெறிகிற கடலில் கரைந்ததோ? மாருதம் ஒருங்கிற்றே

---

§ துக்கோபவயோக்யமான இந்த ஜந்மத்திற்காட்டில் பரமபதம் ஶ்லாக்யமென்கைக்குக் காரணம் பரமபதம் உக்திஸாரமாயிருப்பதே என்று யதாஶ்ருதபங்க்தி தாத்பர்யம்.

—காற்றில் கலந்ததோ? தீயகம் ஒருங்கிற்றோ—நெருப்பில் சேர்ந்ததோ? கான் ஒருங்கிற்றோ—காட்டில் ஒளிந்ததோ? ஆஅ—அடடா!

அவ:—ஐம்பத்துநாலாம் பாட்டில்; (வானோ) "உம்முடைய ப்ரதிபந்தகம் செய்ததென்?" என்ன, "நானுமறிகிறிலேன்" என்கிறார்.

வ்யா:—(வானித்யாதி) ஆகாசகமனம் பண்ணிற்றோ? கடலிலே புக்கு முடிந்ததோ? காற்றோடே கலந்து போயிற்றோ? அக்நிப்ரவேசம் பண்ணிற்றோ? மஹாப்ரஸ்த்தாநம் பண்ணிற்றோ? (ஒருங்கிற்று) இவற்றிலெங்கே சேர்ந்தது? (மருங்கும் கண்டிலமால்) ஸமீபத்திலே காணாதொழிகையால். "ஒருங்கிற்றுங்கண்டிலமால்" என்றதிலே மருங்கென்றது பொருளின்றிக்கேநிற்கும். (ஆனித்யாதி) ப்ரபலப்ரதிபந்தகங்களைப் போக்குமவர் திருவடிகளிலே பணிந்தோம்: நம்மோடே நெடுநாள் பழகிப்போந்த வலிய துயரை அருகுங்கண்டிலோம். "இவரெங்கே புக்குமுடிந்தார்? ஐயோ! ஐயோ!!" என்கிறார். 54.

அரு:—ஐம்பத்துநாலாம் பாட்டு. (மஹாப்ரஸ்த்தாநம்)-மஹாவிந்த்யம். கண்டிலமென்னவமையாதோ, "மருங்கு" என்று விசேஷிப்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (ஒருங்கிற்றும்) இத்யாதி. என்னருகிற் காணோமென்றபடி. 54.

55. மருங்கோதமோதும் மணி நாகணையார்
மருங்கேவர வரியரேலும்—ஒருங்கே
எமக்கவரைக் காணலா மெப்பொழுது முள்ளால்
மனக்கவலை தீர்ப்பார் வரவு.

பதவுரை:—வரவு—(தம்) வரவாலே, மனம் கவலை தீர்ப்பார்—மனஸ்ஸிலுள்ள துக்கத்தைப் போக்கடிப்பவராய், மருங்கு—அருகில், ஓதம் மோதும்—கடல் மோதும்படியாக, மணி நாகணையார்—மணிகளையுடைய திருவநந்தாழ்வானைப் படுக்கையாகக்கொண்டு சயனித்திருப்பரான எம்பெருமான், மருங்கே வர அரியரேலும்—(நாம்) அவரருகில் செல்லவொண்ணாதவராயினும், எமக்கு—நமக்கு, உள்ளால்—மனஸ்ஸினால், எப்பொழுதும்—எக்காலத்திலும், ஒருங்கே—ஒருபடியாகவே, அவரை காணலாம்—அவரை ஸாக்ஷாத்கரிக்கலாம்.

வ்யா:—ஐம்பத்தைந்தாம் பாட்டில்; (மருங்கித்யாதி) வரவால் என்மனக்கவலை தீர்ப்பார், அருகே கடலில் திரைத்திவலை துடைருத்தத் திருவநந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளுகிறவர் அருகே செல்ல அரியரேலும் நமக்கொருபடிப்பட ஹ்ருதயத்திலே எப்போதுமுளர்.

அரு:— ஐம்பத்தைந்தாம் பாட்டு. [வரவுமனக்கவலைதீர்ப்பார், மருங்கோதம் மோதும்மணிநாகணையார் மருங்கேவரவரியரேலும் - - நமக்கு - ஒருங்கே - உள்ளால் எப்பொழுதும் காணலாம்.] மநஸ்ஸிலே ஒருபடிப்பட எப்போதுங் காணலாமென்றபடி. 55.

56. வரவாறொன்றில்லையால் வாழ்வினிதால் எல்லே
ஒருவாறொருவன் புகாவாறு—உருமாறும்
ஆயவர்தாம் சேயவர்தா மன்றுலகம் தாயவர்தாம்
மாயவர்தாம் காட்டும் வழி.

பதவுரை:—ஒரு ஆறு—ஒரு உபாயத்திலும், ஒருவன்—ஒரு ஜீவனும், புகா ஆறு—நுழையாதபடி, உரு மாறும்—தம்முடைய ஸ்வரூபரூபகுணங்களை அழியமாறும், ஆயவர் தாம்—ஆய்க்குலத்தில் பிறந்த க்ருஷ்ணனாய், சேயவர் தாம்—'துர்யோதநாதிகளுக்கு) வெகு தூரத்திலுள்ளவராய், அன்று —ஒரு காலத்தில், உலகம் தாயவர் தாம்—உலகத்தையெல்லாம் தாவி அளந்தவராய், மாயவர் தாம்—ஆச்சர்ய பூதரான பகவான், காட்டும் வழி—காட்டின உபாயம், வர ஆறு—வந்தவிதம், ஒன்று இல்லை ஆல்—ஒன்றும் தோற்றுகிறதில்லை. வாழ்வு இனிது ஆல்—(நம்) வாழ்வோவெனில் போக்யமாயிருக்கிறது; எல்லே—இது — ஆச்சர்யம்!.

அவ:—ஐம்பத்தாறும் பாட்டில்; (வரவாறு) "எல்லார்க்குமருகும செல்லவரியவன் உமக்கு எளியனானபடியென்?" என்ன; "நானுமறியேன்" என்கிறார்.

வ்யா:—(வரவாறொன்றில்லையால்) அடியில்லையாகில் பலம் சுருங்கியிருக்குமோ வென்னில், (வாழ்வினிதால்) பலமதிகமாயிருக்கும். (எல்லே ஒருவாறொருவன் புகாவாறுருமாறும்) "நமக்கடியில்லை" என்றாராய வேண்டாதபடி ஒருவழியிலொருவனைப் புகாதபடி தன்னுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை அழியமாறும். எல்லா உபாயங்களை

யும் விட்டென்னையே பற்றென்கை. போக்தாவினுடைய உபாயா நுஷ்ட்டாநங்களை அவர்க்காகத் தான் அநுஷ்ட்டிக்குமென்று கருத்து. எல்லாம் விட்டென்னைப் பற்றென்னுமிவர், (சேயவர்தாம்) அர்ஜுநனுக்குக் கையாளாயிருக்கச்செய்தே துர்யோதநாதிகளை அம்புக்கிரையாக்கி அவர்களுக்குத் தூரியாயிருக்குமவர். (அன்றுலகம் தாயவர்தாம்) நினைத்தபோது தாமே வந்து கிட்டுமவர். மாயவர்தாம் காட்டும் வழி) இப்படி ஆஸ்சர்யபூதரானவர் காட்டுமுபாயம், வரவாறென்பில்லையால் வாழ்வினிதால். 56.

அரு :—ஐம்பத்தாறும் பாட்டு. "ஒருவன் ஒருவாறு புகாவாறு" -உபாயாந்தரங்களிலே புகாதப்ரகாரம். "உருமாறும்" - தாமே உபாயமென்று காட்டுகைக்குத் தர்மைபழியமாறி அவதரிக்குமவர்தாம். (அநுஷ்டிக்கை) இவர்களுக்காக அவதரித்துத் தன்னையே உபாயமாகக்காட்டுகை. வாழ்வினிதால்-எல்லை-இதென்ன ஆஸ்சர்யம். 56

57. வழித்தங்கு வல்வினையை மாற்றுனோ நெஞ்சே
தழீஇக்கோண்டு போரவுணன் றன்னைச்—சுழித்தெங்கும்
தாழ்விடங்கள் பற்றிப் புலால்வெள்ளம் தானுகள
வாழ்வடங்க மார்விடந்த மால்.

பதவுரை :—நெஞ்சே—மனமே!, போர்—யுத்தத்திலே, அவுணன் தன்னை—அஸுரனாகிய ஹிரண்யனை, தழீஇக் கோண்டு — கட்டிக் கொண்டு, தாழ்வு இடங்கள் எங்கும் பற்றி—தாழ்ந்திருக்கும் இடங்கள் முழுவதையும் வியாபித்து, புலால் வெள்ளம் தான்—ரக்தப்ரவாஹமானது, சுழித்து உகள—சுழித்துக்கொண்டு புரளும்படியாகவும், வாழ்வு அடங்க—அவனுடைய செல்வச்செறுக்கு அடங்கும்படியாகவும், மார்வு இடந்த—மார்பைப் பிளந்த, மால்—ஸர்வேச்வரன், வழி தங்கு—வேறு வழிகளில் தங்கச்செய்வதாய், வல் வினையை—பலத்தையுடையபதான பாபத்தை, மாற்றுனோ—போக்கடிக்க மாட்டானோ?

வ்யா :— ஐம்பத்தேழாம் பாட்டில்; (வழித்தங்கு) வந்தேறிகளான அவித்யாதிகளையும் ப்ராப்யபாஸங்களையும் போக்கானோ? ஹிரண்யனைப் போக்கினவனுக்கு இதொரு பொருளோ? (நெஞ்சே தழீஇ இத்யாதி) முரட்டு ஹிரண்யனை ஸ்பர்சித்தப் பன்னமெல்

லாம் ருதிரவெள்ளம் சுழிக்கும்படி * "பெருநீரில் மும்மை பெரிது" என்னும்படி ருதிரம் வெள்ளமிட அவனைச்சோர்ய மொடுங்க மார்விடந்த ஸர்வேச்வரன், வழித்தங்கு வல்வினையை மாற்றுனே நெஞ்சே. 57.

அரு:—ஐம்பத்தேழாம் பாட்டு. "போரவுணன்" - யுத்தோந் முகன். 'தாழ்விடம்" - தாழ்ந்தவிடமாய், பள்ளமென்றபடி. "புலால்வெள்ளம்" - ரக்தவெள்ளம். 57.

58. மாலேபடிச்சோதி மாற்றேல் இனியுனது
பாலேபோல் சீரில் பழுத்தொழிந்தேன் —மேலால்
பிறப்பின்மை பெற்றடிக்கீழ்க் குற்றேவ லன்று
மறப்பின்மை யான் வேண்டும் மாடு.

பதவுரை:—மாலே—ஸர்வேச்வரனே!, படிசோதி—திவ்யமங்கள விக்ரஹதேஜஸ்ஸையுடையவனே!, உனது — உன்னுடைய, பால் போல் சீரில்—பால்போல் மிகவினிய கல்யாணகுணங்களில், பழுத்து ஒழிந்தேன்—(குடைந்தாடி) பக்வனாய்விட்டேன்; இனி மாற்றேல்— இனிமேல் அந்த குணாநுபவத்தை மறுக்காதே இரு. மேலால்— மேலுள்ள காலத்தில், யான் வேண்டும் மாடு—நான் வேண்டும் ஐச்வர்யம், பிறப்பு இன்மை பெற்று—பிறப்புகளில்லாமையையடைந்து, உன் அடி கீழ் குற்றேவல் அன்று—உன் திருவடிகளின் கீழ் கைங்கர்யம் செய்வதல்ல; மறப்பு இன்மை—(உன் திருவடியை) மறக்காமையே (நான் விரும்பும் செல்வம்).

அவ:—ஐம்பத்தெட்டாம்பாட்டில்; (மாலே) "இனியுன்னுடைய அநுபவத்துக்கு அவிச்சேதமே வேண்டுவது" என்கிருர்.

வ்யா:—(மாலேபடிச்சோதி) ஸர்வேச்வரத்வத்தையும் ஸ்வாபாவிகமான விக்ரஹத்தையும் சொல்லுகிறது. ஆசாலேசமுடையார் பக்கல் வ்யாமோஹத்தையும் த்வேஷம்பண்ணினுும் விடப்போகாதபடியையும் சொல்லுகிறதென்றுமாம். ஆத்மகுணங்களையும் தேஹகுணங்களையுஞ் சொல்லுகிறதென்றுமாம். (மாற்றேலினி) வைத்த § இறையிலியை மாற்றாதேகொள். இறையிலியேதென்னில், (உனது பாலே போல்சீரில்பழுத்தொழிந்தேன்) இவ்விறையிலியை மாற்றாதேகொள். (மேலாலித்யாதி) ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்வகமாகப் பரமபதத்திலே

* பெரிய திருமொழி (11-4-4). § இறையிலி – அநந்யபோக்யத்வம்.

உன் திருவடிகளிலே அடிமை செய்கையன்று எனக்கு தநம்; பரமபதத்தில் நீயிருக்குமிருப்பை மறவாமை. பரமபதத்திலே போனாலல்லது மறவாமை இல்லாமையாலே பரமபதமும் வேண்டினாராய்ப் பலித்தது. ஸாவித்ரியினுடைய பர்த்தாவை ம்ருத்யுகொடுபோக, "என் பர்த்தாவைத் தரவேணும்" என்று அவனையபேக்ஷிக்க, "இதொன்று மொழிய வேறே சில வேண்டிக்கொள்" என்ன, "இவன் வயிற்றிலே எனக்கொரு ப்ரஜையுண்டாகவேணும்" என்று வேண்டிக்கொண்டாற்போலே. இவர்க்கு மறப்புத்தானுண்டோ வென்னில்; ப்ரக்ருதி ஸம்பந்தமுடையார்க்கு வருமது நமக்கும் வாராதோ" என்று பயப்படுகிறார். ஊரடைய வெந்துகொண்டு வாராநின்றால், "நம்மகமொன்றும் பிழைக்கும்" என்று பயங்கெட்டிருப்பாருண்டோ?

அரு:—ஐயபத்தெட்டாம்பாட்டு — "படிச்சோதி" ஸ்வாபாவிகமான விக்ரஹமென்னுதல், விக்ரஹத்தினுடைய காந்தி என்னுதல். விவரணம் – (ஆத்மகுணங்களையும்) இத்யாதி. மறவாமையமையுமோ, பரமபதம் வேண்டாவோ வென்ன அருளிச்செய்கிறார் (பரமபதத்திலே போனால்) இத்யாதி. இத்தை யபேக்ஷிக்கவே அது பலித்த தெப்படியென்ன அருளிச்செய்கிறார் (ஸாவித்ரி) இத்யாதி. 58.

59. மாடே வரம்பெறுவராமென்றே, வல்வினையார்
காடானு மாதனும் கைக்கொள்ளார்,—ஊடேபோய்ப்
பேரோதம் சிந்துதிரைக் கண்வளரும், பேராளன்
பேரோதச் சித்திக்கப் பேர்ந்து.

பதவுரை:—பேர் ஓதம்—பெரியகடலில், சிந்து—சிதறிய, திரை—அலைகள், ஊடே போய்சிந்து—அருகில் வந்து சிந்தும்படி, கண்வளரும்—யோகநித்திரை செய்கிற, பேராளன், பெருமையையுடையனுடைய, பேர் ஓத—திருநாமங்களைச்சொல்லுவதற்கு, சிந்திக்க—நினைத்தவளவில், வல் வினையார்—வலிமைபொருந்திய பாபமானது, பேர்ந்து—(நம்மை) விட்டுப்போய், காடானும்—காட்டையாவது, ஆதானும்—வேறு எதையாவது, கைக்கொள்ளார்—பற்றுகிறதில்லை; மாடே—(முன் போல்) நம்மருகில், வரப்பெறுவராம் என்றே—வரலாமென்னும் ஆசையினாலோ?

வ்யா:—ஐம்பத்தொன்பதாம் பாட்டில்; (மாடே) (ஊடேபோய்ப் பேரோதம் சிந்துதிரைக்கண் வளரும்பேராளன் பேரோதச் சிந்திக்கப் பேர்ந்து - வல்வினையார் காடானுமாதானுங் கைக்கொள்ளார் - மாட்டே வரப்பெறுவராமென்றே) கடலில் திரைகள் முறிந்து வந்து சிறுதிவலையாய்த் துடைகுத்தக் கண்வளராநின்று ஆஸ்ரிதவிஷயத்தில் ஓரத்துக்கு எல்லையின்றிக்கேயிருக்கிறவருடைய திருநாமம் சொல்ல நினைத்ததறிந்தால், வல்வினையாரிங்கு நின்றும் போந்து தமக்குப் புகலாக மலையாகிலும் கடலாகிலும் ஏதேனுமொன்று கைக்கொள்ளுகிறிலர்; கைக்கொள்ளாதொழிகிறது என்னருகே வரலாமென்றே. 59

அரு:—ஐம்பத்தொன்பதாம் பாட்டு. "ஊடேபோய்" - உள்ளே போய்; திருமேனியண்டையிலேபோயென்றபடி. 59.

60. பேர்ந்தொன்று நோக்காது பின்னிற்பாய் நில்லாப்பாய்
ஈன்றுழாய் மாயனையே யென்னெஞ்சே—பேர்ந்தெங்கும்
தொல்லைமா வெந்நரகில் சேராமல் காப்பதற்கு
இல்லைகாண் மற்றோ ரிறை.

பதவுரை:—என் நெஞ்சே—என் மனமே!, தொல்லை—பழையதாய், மா—பெரிதாய், வெம்—கொடியதான நரகில்—ஸம்ஸாரமாகிற நரகத்தில், சேராமல்—அழுந்தாதபடி, காப்பதற்கு—ரக்ஷிப்பதற்கு, எங்கும் பேர்ந்து—எங்கு புகுந்தாலும், மற்று ஓர் இறை இல்லைகாண்—வேறொரு ரக்ஷகன் இல்லைகிடாய்!, (ஆகையால்) பேர்ந்து—இவனைவிட்டு, ஒன்றும் நோக்காது—வேறொன்றையும் கணிசியாது, ஈன் துழாய் மாயனையே—இனிய துழாயை தரித்த ஆச்சர்யபூதனையே, பின் நிற்பாய்—பின்தொடர்ந்தாலும் தொடரு; நில்லாப்பாய்—அவனைப் பின் தொடராமல் அழிந்துபோவதாயிருந்தாலும் போ.

வ்யா:—அறுபதாம் பாட்டில்; (பேர்ந்தொன்று) வேறொரு பதார்த்தத்தை நோக்காதே அவனை அநுவர்த்திக்கிலுமநுவர்த்தி; உனக்குரியையாய் அநர்த்தப்படிலும் படு. (ஈன்துழாயித்யாதி) ஸம்ஸார ஸம்பந்தமறுமைக்கு எங்குப்புக்காலும் அவனையொழிய ஆஸ்ரயணீயதத்வமில்லை. அவனையநுவர்த்தி; ஸ்வதந்த்ரமாய்க் கெடிலுங் கெடு. 60.

அரு:—அறுபதாம்பாட்டு. [என் நெஞ்சே! தொல்லைமாவெம் நரகில் சேராமல் காப்பதற்கு எங்கும்பேர்ந்துமற்றோரிறையில்லை

காண்-ஆனபின்பு பேர்ந்தொன்று நோக்காது - என் துழாய்மாயனையே -பின்நிற்பாய், நில்லாப்பாய்] என்றந்வயம். 60.

61. இறைமுறையான் சேவடிமேல் மண்ணளந்த வந்நாள்
மறைமுறையால் வானாடர்கூடி — முறைமுறையின்
தாதிலகு பூத்தெளித்தா லொவ்வாதே தாழ்விசும்பின்
மீதிலகித் தான் கிடக்கும் மீன்.

பதவுரை :—இறை முறையான்—ஈச்வரன் என்னும் உறவு முறையையுடையவன், மண் அளந்த—(தன்னுடைமையாகிற) இவ்வுலகத்தை அளந்த, அந்நாள்—அந்த ஸமயத்தில், தாழ் விசும்பின் மீது—பரந்த வெளியான ஆகாசத்தின் மீது, இலகி கிடக்கும் மீன் தான்—ஒளிவிட்டுக்கொண்டு பரந்துகிடக்கும் நக்ஷத்ரங்கள், வானாடர்—தேவர்கள், கூடி—ஒன்று சேர்ந்து, முறை முறையின்—வரிசைவரிசையாயிருந்து, மறை முறையால்—வேதத்தில் சொன்ன வழியாலே, தாது இலகு பூ தெளித்தால் ஒவ்வாதே—தாதுக்களினாலே பிரகாசிக்கும் பூக்களைத் தெளித்திருப்பதுபோல் இருக்கின்றன.

அவ :—அறுபத்தோராம் பாட்டில்; (இறை) லோகயாத்ரையை அநுஸந்திக்கப்புக்கால் அவனை முன்னாகவல்லது காணமாட்டாமை சொல்லுகிறது. சிறியாச்சான், "சப்தாதிவிஷயங்களில் நின்றும் நாம் மீளமாட்டாதாற்போலே ஆழ்வார்கள் பகவத்விஷயத்தில் நின்றும் மீளமாட்டார்கள்" என்று பிள்ளைக்குப்பணித்தான். ப்ரஹ்மாதிகளுக்குப் பரமபதத்திலிருக்குமிருப்பு அநுபவிக்க நிலமன்று; உகந்தருளினவிடங்களிலே அநுபவிக்குமதத்தனை.

வ்யா :—(இறையித்யாதி) ஈச்வரனை முறையாலே திருவுலகளந்தருளினவனுடைய திருவடிகளிலே. (வானாடரித்யாதி) தேவர்கள் வேதம் சொன்ன முறையாலே திருவுலகளந்தருளின திருவடிகளிலே உஜ்ஜ்வலமான புஷ்பங்கள் தெளித்தாற்போலேயன்றோ ஒத்த விசும்பின்மேல் கிடக்கிற நக்ஷத்ரங்களிருக்கிறது. 61.

அரு :—அறுபத்தோராம் பாட்டு. (லோகயாத்ரை) - ஆகாசத்தைப்பார்க்கை. புறம்பே கண்வைக்குப்போதும் அவனையொழியக் கண்வையார்களென்னுமதுக்கு ஸம்வாதமாக அருளிச்செய்கிறார் (சிறியாச்சான்) இத்யாதி. "முறைமுறையின்" - முறைமுறையாக - வரிசையடைவே. [இறைமுறையான் மண்ணளந்த சேவடிமேல் அந்

நாள்வானுடர்கூடி, முறைமுறையின் - முறை முறையாக, தாதிலகு தொடங்கி—கிடக்கும்] என்றந்வயம். 61.

62. மீனென்னும் கம்பில் வெறியென்னும் வெள்ளிவேய்
வானென்னும் கேடிலா வான் குடைக்குத்—தானோர்
மணிக்காம்புபோல் நிமிர்ந்து மண்ணளந்தான் நங்கள்
பிணிக்காம் பெருமருந்து பின்.

பதவுரை:—மீன் என்னும் கம்பில்—நக்ஷத்திரங்களாகிற கம்புகளில், வெறி வெள்ளி என்னும்வேய்—நக்ஷத்திரங்களுக்கு அரசனான சந்த்ரன், சுக்ரன் என்னுமிவ்விரண்டையும் குழல்களாயுடையதாய், வான் என்னும்—ஆகாசம் என்று பெயரையுடையதான, கேடிலா வான் குடைக்கு—அழிவில்லாத பெரிய குடைக்கு, தான்—(த்ரிவிக்ரமனாகிய) தான், ஓர் மணி காம்பு போல் நிமிர்ந்து—ஒப்பற்ற நீலமணித் தடிபோல் வளர்ந்து, மண் அளந்தான்—உலகையெல்லாம் அளந்தவனாய், பின்—அதற்குமேல், நங்கள் பிணிக்கு—(ஸம்ஸாரமாகிய) நம்முடைய நோய்க்கு, பெரு மருந்து ஆம்—பெரிய மருந்து ஆவான்.

வ்யா:—அறுபத்திரண்டாம் பாட்டில்; (மீனித்யாதி) நக்ஷத்ரங்களாகிற கம்புகளையும், "உடுபதி" என்னுமாபோலே நக்ஷத்ரங்களுக்கு ராஜாவான சந்த்ரசுக்ரர்களைக் குழலாக உடைத்தான, நித்யமாய்ப் பெருத்த ஆகாசமாகிற குடைக்கு நீலமணியாலே சமைந்ததொரு காம்புபோலே வளர்ந்து பூமியையளந்தான். (நங்களித்யாதி) திருவுலகளந்து தேவர்களுடைய துக்கத்தைப்போக்கினாற்போலே நம்முடைய ஸம்ஸாரத்துக்கு பரமான ஔஷதம். 62.

அரு:—அறுபத்திரண்டாம் பாட்டு. மண்ணளந்த அபாதானத்தைக்குடையுங் காம்புமாக்கி நிரூபிக்கிறார். (வெறி) சந்த்ரன், தாராபதி. (வெள்ளி) சுக்ரன் இவர்கள். "வேய்" என்று குடையிலடியிலே யிருக்கிற மூங்கில் குழல். 62.

63. பின்துரக்கும் § காற்றிழந்த சூல்கொண்டல் பேர்ந்தும்போய்
வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்தே—அன்று
திருச்செய்ய நேமியான் தீயரக்கி மூக்கும்
† பருச்செவியு மீர்ந்த பரன்

---

§ ப்ராசீந தாளபத்ர மூலவ்யாக்யாந கோசங்களில் காற்றிழந்த என்ற பாடம் வ்யாக்யாநத்துக்கும் சேர்ந்திருக்கும். ஆதுநிககோசங்களில் மாத்ரம் காற்றிழிந்த என்று காண்கிறது.

பதவுரை :—அன்று—ராமாவதாரகாலத்தில், திருசெய்ய நேமியான்—வீரலக்ஷ்மியையுடைய சிவந்த திருவாழியையுடைய ஸர்வேச்வரன், தீ அரக்கி மூக்கும்—கொடிய ராக்ஷஸியான சூர்ப்பணகையின் மூக்கையும், பரு செவியும்—பருத்த காதுகளையும், ஈர்ந்த பரன்—அறுத்த பெருமையையுடையனாயிருந்து, போர்ந்தும் போய்—இவ்வுலகத்திலிருந்தும் சென்று, வன் திரை கண் அணைந்தபடி—வலிய அலைகளையுடைய திருப்பாற்கடலில் வந்து சேர்ந்த (தன்மை), பின் தூரக்கும்—பின்னே இருந்து தள்ளும், காற்று இழந்த—காற்றைவிட்டுப் பிரிந்த தாய், சூல்—நீரை கர்ப்பத்திலே கொண்டதான, கொண்டல்—மேகமானது, போர்ந்தும் போய்—மறுபடியும் சென்று, வன் திரை கண்—வலிய அலைகளையுடைய கடலின் மேலே, வந்து அணைந்த வாய்மைத்து—வந்து பொருந்தியதுபோலிருக்கிறது.

வ்யா :—அறுபத்துமூன்றும் பாட்டில்; (பின் தூரக்குமித்யாதி) பின்னே தூக்கிற காற்றையிழந்த சூல்கொண்டல், திரியட்டும் கடலிலே புக்குக்கிடந்த வாய்மையன்-மெய்யான ஒப்பை உடையன், என்று-வாய்மைத்து என்றத்தை வாய்மையனென்று வசனத்தை மாறுடிக்கொள்ளவுமாம். பருச்செவியுமீர்ந்த பரன் படி என்று அத்யாஹரித்துக்கொள்ளவுமாம். "ஒன்றுக்கு வசநவ்யத்யயம் பண்ண வேணும்; ஒன்றுக்குப் படி என்று அத்யாஹரிக்கவேணும்; இரண்டு மிறுக்குமொழிய உபமானோபமேயங்களை மாறாடாதே நேரே யோஜிக்கப்போம்" என்று ஜீயருக்கு விண்ணப்பம் செய்தபடி. [பின்தூரக்கும் காற்றிழந்த சூல்கொண்டல்-அன்று திருச்செய்ய நேமியான் தீயரக்கி மூக்கும் பருச்செவியுமீர்ந்தபரன்-போர்ந்தும்போய், வன் திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்து] பின்தூரக்கும் காற்றிழந்த சூல்கொண்டல் பெருமாள் ராவணவிஜயம்பண்ணி, திரியட்டும் திருப்பாற்கடலிலே போய்க் கண்வளர்ந்தாற்போலே யிருந்தது. 63.

அரு :—அறுபத்துமூன்றும் பாட்டு. (வசநத்தைமாறுடுகை)-வாய்மைத்தென்ற நபும்ஸகத்தை வாய்மையனென்று புல்லிங்கமாக்குகை. படியென்று ஸ்வபாவமாய், அத்யாஹார்ய பக்ஷத்தில் லிங்கவ்யத்யயம் வேண்டா-நம்பிள்ளைக்கு, மேகத்தின் ஸ்வபாவம்

---

† பரிச்செவியும் என்றுரையில் பாடம். பரி-குதிரையினுடைய செவி போன்ற என்று பொருள்.

போலே யிருக்கிறது பெருமாள்படி என்றால் மிறக்குண்டு; பெருமாளுடைய ஸ்வபாவம்போலே இருக்கிறது மேகத்தின்படியென்றால் மிறக்கில்லையென்று கருத்து. மேகமானது ராவணவதம் பண்ணித் திருப்பாற்கடலிலே அணைந்த வாய்மைத்து - ஸ்வபாவத்தையுடைத்து என்றுபலிதம். 63.

64. பரனாமவனாதல் பாவிப்பராகில்
உரனாலொரு மூன்றுபோதும்—மரமேழன்
றெய்தானைப் புள்ளின்வாய் கீண்டானையே அமரர்
கைதான் தோழாவே கலந்து.

பதவுரை:—அன்று—முன்னொரு காலத்தில், ஏழ் மரம் எய்தானை—ஏழு மராமரங்களின்மேல் அம்பெய்தவனை, புள்ளின் வாய் கீண்டானை—கொக்காகவந்த அஸுரனுடைய வாயைக் கிழித்தவனை, அவன்—அப்பெருமான், பரன் ஆதல்—பரம்பொருளாயிருப்பதை, அமரர்—தேவர்கள், ஒரு மூன்று போதும்—முக்காலங்களிலும், உரனால் பாவிப்பராகில்—மனஸ்ஸாலே நினைப்பர்களாகில், கை தான்—(அவர்களுடைய) கைகள், கலந்து தோழாவே—சேர்ந்து அவனை வணங்காவோ?

வ்யா:—அறுபத்துநாலாம் பாட்டில்; (பரன்) "மநுஷ்யத்வே பரத்வத்தை அநுஸந்தித்தாராகில் பரமபதமென்று வேறே ஆச்ரயணீயஸ்தலம் வேணுமோ?" என்கிறது. (பரனித்யாதி) மநஸ்ஸாலே மூன்றுபோது "அவன்பரன்" என்றநுஸந்திப்பராகில் ஆச்ரிதவிரோதி நிரஸநம் பண்ணினவனையே, அபிமாநிகளான தேவர்களுடைய கையுங்கலந்து தொழுமிறே; அபிமாநத்தாலே தங்களோடு ஸஜாதீயனாக புத்திபண்ணி அநர்த்தப்படுகிறார்களிறே. 64.

அரு:—அறுபத்துநாலாம் பாட்டு. இங்கே பரத்வமநுஸந்தித்தால் பரத்வந்தேடிப் பரமபதத்துக்குப் போகவேண்டாவென்றபடி. உரனென்று-உரஸ்ஸாய், அத்தாலே நெஞ்சைச்சொல்லுகிறது. "பாவிப் பராகில்" என்கையாலே, அநுஸந்தித்தால் தொழுவர்கள்; அநுஸந்தியாமையாலே தொழார்களென்றபடி. 64.

65. கலந்து நலியும் கடுந்துயரை நெஞ்சே
மலங்கவடித்து மடிப்பான்—விலங்கல்போல்
தொன்மாலைக் கேசவனைநாரணனை மாதவனைச்
சொன்மாலை யெப்பொழுதும் சூட்டு.

பதவுரை :—நெஞ்சே—மனமே!, கலந்து நலியும்—நம்முடன் கூடியிருந்து துன்புறுத்துகிற, கடும் துயரை—கொடிய பாபத்தை, மலங்க அடித்து—நடுங்கும்படி புடைத்து, மடிப்பான்—திருப்பிஓட்டு வதற்காக, விலங்கல் போல்—மலைபோன்றவனை, தோல்—பழயவ னை, மாலை — (அடியாரிடத்தில்) அன்புள்ளவனை, கேசவனை— அழகிய திருக்குழல் கற்றைகளையுடையவனை, மாதவனை—லக்ஷ்மீ நாதனாயிருக்கும், நாரணனை—நாராயணனுக்கு, எப்பொழுதும்— எல்லாக்காலமும், சொல் மாலை—சொற்களாலான மாலையை, சூட்டு— சூட்டுவாயாக.

வ்யா :— அறுபத்தைந்தாம் பாட்டில்; (கலந்து) உடனே வந்து கலந்து நலியாநின்ற அநுபவவிநாஶ்யமான பாபத்தை மலங்கவடித் துத் திரியவிடுகைக்காக, அபேத்யனை, அபரிச்சிந்நனை ப்ரசஸ்த கேசனை, ஆஶ்ரிதவத்ஸலனாயிருந்த ஶ்ரிய:பதியை, பரிமளம்மாறுத மாலையை எப்போதும் சூட்டும்படி தன்னைத்தாழ்த்துத்தரும். * 65.

அரு :— அறுபத்தைந்தாம் பாட்டு. ஸ்ரீஸூக்தியாகையாலே மற்றை மாலையை வ்யாவர்த்தித்து (பரிமளம்மாறுத) என்கிறது. 65.

66. சூட்டாய நேமியான் தொல்லரக்க னின்னுயிரை
மாட்டே துயரிழைத்த மாயவனை—ஈட்ட
வெறிகொண்ட தண்டுழாய் வேதியனை நெஞ்சே
அறிகண்டாய் சொன்னே னது.

பதவுரை :—நெஞ்சே—மனமே, சூடு ஆய நேமியான்—சூடத்தக்க ஆபரணமாயிருக்கும் திருவாழியையுடையவனை, தொல் அரக்கன்— பழையவனை ராவணனுடைய, இன் உயிரை—இனிய உயிரை, மாட்டே—அருகே நின்று, துயர் இழைத்த—துன்பப்படுத்தி, மாய வனை—அத்புத சக்தியுக்தனை, ஈட்ட—திரண்ட, வெறிகொண்ட— வாஸனையிருந்த, தண் துழாய்—குளிர்ந்த திருத்துழாய் மாலையை யுடையவனை, வேதியனை—வேதத்தால் சொல்லப்படுமவனை பக வானை, அறி கண்டாய்—அறிந்துகொள்வாயாக; அது சொன்னேன்— இவ்வரும்பொருளை (உனக்கு) உபதேசித்தேன்.

---

* இவ்விடத்தில் பந்திகள் சரியாயில்லை.

வ்யா:—அறுபத்தாறும் பாட்டில்; (சுட்டாயநேமியான்) விரோதி நிரஸநம் பண்ணுகையன்றிக்கே அழகுக்குமான திருவாழியையுடையவன். (தொல்லரக்கனித்யாதி) ராவணன் பேணிப்போந்த உயிரை, அருகே ஸ்ம்ருதிவிஷயமாய் நின்று முடித்த ஆச்சர்யபூதனை. (41) "स्मरन् राघवबाणानां विव्यथे राक्षसेश्वरः" (ஸ்மரந் ராகவபாணாநாம் விவ்யதே ராக்ஷஸேஶ்வர:) ஆண்ட படையெல்லாம் பெருமாளெண்ணெழுத்து வெட்டின திருச்சரங்களை நினைத்துக்கிடந்து குலைக்கும்போது அமுக்குகைக்குடலானதத்தனை. (ஈட்டவித்யாதி) பரிமளம் திரண்ட திருத்துழாயையுடையவனுமாய் வேதங்களாலே ப்ரதிபாத்யனுமானவனை, நெஞ்சே! அறிகண்டாய் சொன்னேனுனக்கு அத்தை. விரோதிநிரஸநப்பண்ணுவானுமாய், போக்யனுமாய், வகுத்தவனுமானவனை அறி என்று சொன்னேன்; இதுசிலர்க்குச் சொல்லுமதன்று; இத்தை புத்திபண்ணு. 66.

அரு:—அறுபத்தாறும் பாட்டு. அப்படி ஸ்ம்ருதிவிஷயமாய் து:க்கப்பட்டானேயென்ன அருளிச்செய்கிறார் (ஸ்மரந்) இத்யாதி. வேதவேத்யனென்கையாலே வகுத்தவனென்கிறது. 66.

67. அதுவோ நன்றேன் றங் கமருலகோ வேண்டில்
அதுவோ பொருளில்லையன்றே—அதுவொழிந்து
மண்ணின்றாள்வேனெனிலும் கூடுமட நெஞ்சே
கண்ணன்தாள் வாழ்த்துவதே கல்.

பதவுரை:—அங்கு அது நன்று என்று—பகவானைப் பரமபதத்தில் அநுபவிப்பது நல்லது என அறிந்து, அமர் உலகு வேண்டில்—நித்யஸூரிகளின் நாடாகிற வைகுண்டத்தை விரும்பினால், அது—அப்பரமபதம், பொருள் இல்லை அன்றே—நமக்கு (கிடைக்கவொண்ணாத) வஸ்துவல்லவன்றோ? அது ஒழிந்து—அப்பரமபதத்தை விரும்புவதை விட்டு, மண் நின்று ஆள்வேன் எனிலும்—இவ்வுலகிலிருந்து போகங்களை அநுபவிப்பேன் என்றாலும், கூடும்—(அதுவும் நமக்குக்) கிடைக்கும்; மட நெஞ்சே—எனக்கு பவ்யமான மனமே!, கண்ணன் தாள்—(அவைகளை விட்டு) கண்ணனுடைய திருவடிகளை, வாழ்த்துவதே—மங்களாசாஸநம் செய்வதையே, கல்—கற்பாயாக.

வ்யா:—அறுபத்தேழாம் பாட்டில்; (அதுவித்யாதி) கண்கண்டதொழியப்போகை அரிது. இது பொல்லாதென்று "பரமபதம்

வேணும்" என்றிருக்கில் அவனுகப்பதாகையாலே அது தருகையிலவனுக்குப் பொருளில்லை. (அன்றேயித்யாதி) அதுவொழிய "பூமியையாள்வோம்" என்று நினைக்கில் அதுவும்தரும். (மடநெஞ்சே இத்யாதி) பவ்யமான நெஞ்சே! அவனுக்கோ அது தருகையில் குறையில்லை, நம்முடைய ஆபிமுக்யமரிது. (கண்ணன்) ஸுலபனானவனுடைய திருவடிகளைக்கற்றாகிலும் வாழ்த்தப் பார். 67.

அரு:—அறுபத்தேழாம் பாட்டு. (அரிது) ஆசைப்பட்டும்போகையரிது. காணுதத்தையாசைப்பட்டாலும் தருமென்றபடி. "அது" என்கையாலே, அதுக்குப்ப்ரதிகோடியாக, "இது" என்று ஸம்ஸாரம் (பொல்லாதென்று பரமபதம் வேணுமென்று இருக்கில்) என்கிறது. அவன் உபயவிபூதியுந்தந்தாலும் நீ அத்தைவிட்டு அவனை வாழ்த்துகையையே கல்லென்றபடி. 67.

68. கல்லும் கனைகடலும் வைகுந்தவானுடும்
புல்லென்றொழிந்தனகொ லேபாவம்—வெல்ல
நெடியான்நிறங்கரியா னுள் புகுந்து நீங்கான்
அடியேன துள்ளத் தகம்.

பதவுரை:—வெல்ல நெடியான் — மிகவும் பெரியவனும், நிறம் கரியான்—நிறத்தால் கரியவனுமான பகவான், உள் புகுந்து—எனக்குள்ளே நுழைந்து, அடியேனது உள்ளத்து அகம்—அடியேனுடைய ஹ்ருதயத்தினுள்ளிருந்து, நீங்கான்—விட்டுப்போகிறானல்லன்;(ஆகையால்) கல்லும்—திருவேங்கடமலையும், கனை கடலும்—சப்தியாநிற்கும் திருப்பாற்கடலும், வைகுந்தம் வான் நாடும்—வைகுந்தம் என்கிற பரமபதமும், புல் என்று ஒழிந்தன கொல்—புல் முளைத்துப்போய் விட்டனவோ? ஏ பாவம்—என்ன பாவம்!.

அவ:—அறுபத்தெட்டாம் பாட்டில்; (கல்லும்) கீழவனுடைய திருவடிகளை வாழ்த்துகையொழிய போகமோக்ஷங்களைவேண்டாவென்றபடி தம்முடைய ஐச்வம்சொல்லுகிறது.

வ்யா:—(கல்லுமித்யாதி) திருமலையை "கல்" என்றும், திருவனந்தாழ்வானை "பாம்பு" என்றும், தன்னை "மாணியாய் மண்ணளந்தாய்" என்றும் சொல்லலாம்படி உறவுடைமையிருக்கிறபடி. திருமலையும் திருப்பாற்கடலும் பரமபதமுமென்கிற தேசங்கள் சில § உள

§ அரும்பதத்துக்கு "அளவாகவுமாம்" என்று பாடமாய் இப்படி சில ப்ரதேசங்கள் விசாலமாக இருக்கவுமாமென்று அர்த்தம்.

வாகவுமாம், அவற்றிலேதனக்கு ருசியுண்டாகவுமாய், தோற்றுப்படி இருக்கிறிலன். என்னோடு கலந்தபின்பு, ஸௌபரி ஐம்பது பெண்களோடே கலந்துபோருகிறவிடத்தில் தன் மக்களைத் தனித்தனியே பிதா "உனக்குக் குறையில்லையே" என்று கேட்க, "என்னுடன்பிறந்தாரை ஒருத்தரையுமறியாதே எப்போதுமென்னோடேயிருக்குமிதுவே வெறுப்பு, வேறொருகுறையில்லை" என்று சொன்னாற்போலே இவரும் "தம்முடைய எல்லா ஸ்தானங்களையும் மறந்து என்னையல்லதறிகிறிலர்" என்கிறார். (ஏபாவம்) பாபத்தினுடைய ப்ராசுர்யத்தைச் சொல்லுகிறது; விவக்ஷிதார்த்தமாக ஒரு சப்தத்தைப்ப்ரயோகியாமையாலே. (வெல்லநெடியான்) கடக்க நெடியான்; இனி நெடியானில்லையென்னும்படி நெடியவன். (நிறங்கரியான்) குணங்களில்லையென்னிலும் விடவொண்ணாத வடிவழகையுடையவன். (உள்புகுந்தித்யாதி) அடியேனுடைய ஹ்ருதயத்தினுள்ளே நீங்குவானாயிருக்கிறிலன். "புறப்படவிவனைக் கிடைபாது" என்னும்படி இரா நின்றான். 68.

அரு:—அறுபத்தெட்டாம் பாட்டு. (ஐக்யம்) - அவன் தம்மிடத்திலே வந்திருக்கையாலே அவனுக்குந் தமக்குமுண்டான ஐக்யமிப் பாட்டிலே சொல்லுகிறதென்றபடி. திருமலையைக் கல்லென்னலாமோவென்ன அருளிச்செய்கிறார் (திருமலை) இத்யாதி. (அளவாகவும், - விசாலமாகவும் - "புல்லென்று" புல்லியதாக, குறையாக நினைத்து. ஆனால் தஸ்தலங்களிலில்லையோவென்ன அருளிச்செய்கிறார் (ஸௌபரி) இத்யாதி. எல்லாஸ்தலங்களையும் விட்டுவிட்டானோ என்கிற வெறுப்பாலே (பாபத்தினுடையப்ராசுர்யம்) என்கிறது. விவக்ஷிதார்த்த வாக்யந்தெரியாது. "வெல்ல" ஜயிக்க என்னுதல், மிகவு மென்னுதல். 68.

69\. அகம்சிவந்த கண்ணினராய் வல்வினைய ராவார்
முகம்சிதைவராமன்றே முக்கி—மிகுந்திருமால்
சீர்க்கடலை யுள்போதிந்த சிந்தனையேன் தன்னை
ஆர்க்கடலாம் செவ்வே யடர்த்து.

பதவுரை:—வல் வினையராவார்—கொடிய பாபமானவர், அகம் சிவந்த கண்ணினராய்—உள்ளே சிவந்த கண்களையுடையவராய், முக்கி—வருந்தி, முகம் சிதைவராம் அன்றே—முகம் வாடிப்போமத்தனை

அன்றே!, மிகும் திருமால்—ஸர்வாதிகனான லக்ஷ்மீநாதனுடைய, சீர் கடலை — கல்யாணகுணக்கடலை, உள்போதிந்த — உட்கொண்ட, சிந்தனையேன் தன்னை—உள்ளத்தையுடைய என்னை, செவ்வே அடர்ந்து —நன்றாக நெருக்கி, ஆர்க்கு அடலாம் — ஆர்தான் துன்புறுத்த முடியும்?

அவ:—அறுபத்தொன்பதாம் பாட்டில்; (அகம்) இவன் பண்ணின ஐகாந்த்யத்தாலே சரீராரம்பத்துக்கடியான பாபமும் போயிற்று என்கிறார்.

வ்யா:—(அகமித்யாதி) முதலியாராய் வர்த்தித்த நம்பாபத்திஞர் கோபத்தினாலே சிவந்தகண்ணையுடையராய், "செருக்காய்த் திரிந்த நாமிப்படிபடுவதோ?" என்று முக்கி முகம் கீழ்ப்பட்டு, இழப்புண்டு சிதைந்தமுகமுமாய்த் திரியுமத்தனையிறே. (மிகுமித்யாதி) (69) "गुणानामाकरो महान्" (குணாநாமாகரோ மஹாந்) என்று அபரிச்சிந்நவிஷயத்தைப் பரிச்சிந்நமாக்கினேன். (சிந்தனையித்யாதி) இனியென்னைப் பரிச்சிந்நர்க்குப் புகுந்து நேரே நலியப்போமோ? 69.

அரு:—அறுபத்தொன்பதாம் பாட்டு. "உள்பொதிந்த" என்கையாலே (பரிச்சிந்நமாக்கினேன்) என்கிறது. "செவ்வேயடர்த்து ஆர்க்கடலாம்?" என்னை ஒருத்தர்க்குமடர்க்கப்போகாதென்றபடி. 69.

70. அடர்பொன் முடியானை யாயிரம்பேரானைச்
சுடர்கொள் சுடராழியானை—இடர்கடியும்
மாதாபிதுவாக வைத்தேனெனதுள்ளே
யாதாகில் யாதேயினி.

பதவுரை:—அடர் பொன் முடியானை—(எதிரிகளைக் கண்டமாத்ரத்திலேயே) அழியச்செய்வதாய், அழகியதான திருமுடியையுடையவனை, ஆயிரம் பேரானை—ஆயிரம் திருநாமங்களையுடையவனை, சுடர் கோள் சுடர் ஆழியானை—தேஜ:பதார்த்தங்கள் எல்லாவற்றையும் தன்னுட்கொண்டிருப்பதுபோன்ற தேஜஸ்ஸையுடைய திருவாழியையுடையவனான ஸர்வேச்வரனை, இடர் கடியும்—(என்) துன்பத்தைப் போக்கும், மாதா பிதுவாக—தாய்தந்தையாக, எனது உள்ளே வைத்தேன்—என் மனஸ்ஸில் இருத்தினேன். இனி—இனிமேல், யாது ஆகில் யாது—எது வந்தால் தான் என்ன?

வ்யா:—எழுபதாம் பாட்டில்; (அடர்பொன்முடியானை) தர்சநீயமாய் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகத்தையுடையவனை. இவ்வழகுக்கு வாசகமான அநேகந்திருநாமங்களையுடையவனை. (சுடர்கொள்சுடராழியானை) விரோதிநிரஸநத்துக்கன்றிக்கே அழகுக்குமான திருவாழியையுடையவனை. (இடரித்யாதி) சரீரத்தைப் பூண்கட்டி இடரைவிளைக்கும் மாதாபிதாக்களிறே அல்லாதார். இவன் சரீரபரிக்ரஹப்பண்ணுகைக்கு நோன்புநோற்குமவர்களிறே அவர்கள். (யாதாகில்யாதேயினி) இனி பாபந்தன்னை யநுபவிக்கிலெனக்கு வந்ததென்? 70.

அரு:—எழுபதாம் பாட்டு. (அடர்பொன்முடி) அடர் - எல்லாரையுமடர்க்கிற முடியென்றபடி. பூண்கட்டுகைக்கு ஜ்ஞாபகமேதென்ன அருளிச்செய்கிறார் (இவன் சரீர) இத்யாதி. "யாதாகில் யாதே" - பாபத்தையநுபவிக்கிலென்? அநுபவியாதொழியிலென்? பாபநிமித்தமாக பயமில்லையென்றபடி. 70.

71. இனிநின்று நின்பெருமை யானுரைப்ப தென்னே
தனிநின்ற சார்விலா மூர்த்தி—பனிநீர்
அகத்துலவு செஞ்சடையா னாகத்தான் நான்கு
முகத்தான் நின்னுந்தி முதல்.

பதவுரை:—தனி நின்ற—(மஹாப்ரளயகாலத்தில்) ஒப்பற்ற காரணமாய் நின்றவனாய், சார்வு இலா—தனக்கொரு ஆச்ரயமற்றவனான, மூர்த்தி—எம்பெருமானே!, பனி நீர் அகத்து உலவு—குளிர்ந்த கங்கை உள்ளே ஸஞ்சரிக்கும்படியான, செம் சடையான்—சிவந்த சடையையுடைய சிவன், ஆகத்தான்—உன் திருமேனியில் ஒரு மூலையில் வஸிக்கிறான்; நான்கு முகத்தான்—சதுர்முகனான ப்ரஹ்மா, நின் உந்தி முதல்—உன்னுடைய திருநாபியைக் காரணமாகவுடையவன்; இனி—இப்படியிருக்கும்போது, யான் நின்று—நானிருந்து, நின் பெருமை—உன்னுடைய பெருமையை, உரைப்பது என்னே—எப்படிச் சொல்லுவது?

அவ:—எழுபத்தோராம் பாட்டில்; (இனி) "ப்ரஹ்மருத்ராதிகளுக்குகப்பட உடம்புகொடுத்தான்" என்கிற நீர்மையைச் சொல்லிற்றாகவுமாம்; "அவர்களுக்கு ஸத்தாஹேதுவானான்" என்கிற ஐச்வர்யத்தைச் சொல்லுகிறதென்றுமாம்.

வ்யா:—(இனியித்யாதி) உன்னைஶ்வர்யத்தை நான்தானே சொல்லுவதுண்டோ? என்னவுமாம்; உன்னுடைய நீர்மையை நான் சொல்லுவதுண்டோ? என்னவுமாம். (தனியித்யாதி) கார்யஜாதமெல்லாமழிந்து காரணாவஸ்த்தமாய், நாமரூபவிபாகாநர்ஹமாய், "தான்" என்கிற சொல்லிலேயடங்கித் தனக்கு வேறொரு அபாஶ்ரயமின்றிக்கே நின்றவனே! (43) "**पतिं विश्वस्य**" (பதிம் விஶ்வஸ்ய) என்று, (43) "**आत्मेश्वरं**" (ஆத்மேஶ்வரம்) என்னுமாபோலே. (44) "**रुद्रं समाश्रिता देवा रुद्रो ब्रह्माणमाश्रितः**" (ருத்ரம் ஸமாஶ்ரிதா தேவா ருத்ரோ ப்ரஹ்மாணமாஶ்ரித:) என்றித்யாதிப்படியே. தனக்குச் சேர்த்துச்சொல்லலா மொப்பையுடையனல்லனென்றபடியாம். (பனிநீரித்யாதி) கங்கையை ஜடையிலே தரித்தானாயிருக்கிறருத்ரன், * "ஏத்தனன்" என்னுமாபோலே உன்னுடைய திருமேனியில் ஏகதேசத்திலானான். (நான்கித்யாதி) சதுர்முகன் உன்னுடைய திருநாபியைக் காரணமாகவுடையவன். இனிநின்பெருமை யானுரைப்பதென்னே! 71.

அரு:—எழுபத்தோராம் பாட்டு. "சார்வு" ஆச்ரயமாதல், ஒப்பாதல். 71.

72. முதலாம் திருவுருவம் மூன்றென்பர் ஒன்றே
முதலாகும் மூன்றுக்கு மேன்பர்—முதல்வா
நிகரிலகு காருருவா நின்னகத்த தன்றே
புகரிலகு தாமரையின் பூ.

பதவுரை:—திரு உருவம் மூன்று—அழகிய உருவத்தையுடைய (பிரமன், விஷ்ணு, ருத்ரன் ஆகிய) மூவரும், முதலாம் என்பர்—ஜகத்காரணர்கள் ஆவர் என்று (சிலர்) சொல்லுவர்; மூன்றுக்கும்—இம்மூன்று மூர்த்திகளுக்கும், ஒன்றே முதலாகும் என்பர்—(மேலான) ஒருவஸ்துவே காரணம் என்று (மற்றும் சிலர்) சொல்லுவர்; முதல்வா—ஜகத்காரணபூதனே!, கார் நிகர் இலகு உருவா—மேகத்தையொத்து விளங்கும் உருவத்தையுடையவனே!, புகர் இலகு—(ஜகத்காரணமாயிருக்கையாலுண்டான) ஒளியினால் பிரகாசிக்கிற, தாமரையின் பூ—தாமரைப்பூ, நின் அகத்தது அன்றே—உன்னுடைய திருமேனியில் உண்டானதன்றோ?

---

* திருவாய்மொழி (1-3-9).

அவ:—எழுபத்திரண்டாம் பாட்டில்; (முதலாம்) கீழ்ப்பாட்டிலே "எல்லார்க்குமாச்ரயணீயன்" என்று சொல்லிற்று; இதிலே, வேறு ஸமாச்ரயணீயராயிருப்பாரும் சிலருமுண்டாயிருக்க "இவனே ஆஸ்ரயணீயன்" என்று சொல்லும்படி எங்ஙனேயென்ன, அல்லாதாருடைய மதங்களை உபஸ்த்தாபித்து தூஷித்து ஸ்வஸித்தாந்தத்தை யருளிச்செய்கிறார்.

வ்யா:—(மூதலித்யாதி) ஜகத்துக்குக் காரணபூதர் மூவரென்பர்கள். (ஒன்றித்யாதி) மூவர்க்குங் காரணபூதன் வேறேயொருவனென்பர்கள். "என்பர்" என்கிற வித்தால் ஸ்வஸித்தாந்தமன்றென்கிறது. (முதல்வா) இதுக்கெல்லாம் காரணபூதனே! (நிகரிலகு காருருவா) மேகமென்று சொல்லலாம்படி வடிவையுடையவனே! (நின்னகத்தவித்யாதி)ப்ரஹ்மாவுக்கு உத்பத்திஸ்த்தாநமான தாமரைப்பூ உன் திருநாபியதன்றே? இத்தால், ப்ரஹ்மருத்ராதிகளிவனுக்கு ஸமரல்லரென்னுமிடமும், அவர்களிலேயொருவன் ஜகத்துக்குக் காரணமென்னுமிடமும், மூவரையுமொழிய வேறென்று ஜகத்துக்குக் காரணமன்றென்னுமிடமும் சொல்லுகிறது. (45) "सृष्टिस्थित्यन्तकरणीं" (ஸ்ருஷ்ட்டிஸ்த்தித்யந்தகரணீம்) இத்யாதி என்னும்படியே. (46) "ब्रह्मविष्णुरुद्रेन्द्रास्ते सर्वे संप्रसूयन्ते" (ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்தே ஸர்வே ஸம்ப்ரஸூயந்தே) என்கிறவிது-அவதார விஷயம். (47) "मध्येविरिञ्चगिरिशं प्रथमावतारः" (மத்யேவிரிஞ்சகிரிசம் ப்ரதமாவதார:) என்னும்படியே. 72.

அரு:—எழுபத்திரண்டாம் பாட்டு. (மூவுரையுமொழிய) மூவரிலும் ப்ரதாநராயிருக்கிற விஷ்ணுவையுமொழிய. மூவரிலுமவனே காரணமென்னுமதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (ஸ்ருஷ்ட்டிஸ்த்தித்யந்தகரணீம்) இத்யாதி. விஷ்ணுவுக்கும் பிறப்புண்டாகச் சொல்லாநிற்க அவன் காரணமானபடி எப்படி என்ன அருளிச்செய்கிறார் (ப்ரஹ்மவிஷ்ணு) இத்யாதி. அவதரித்தானென்றவிடமுண்டோவென்ன அருளிச்செய்கிறார் (மத்யேவிரிஞ்ச) இத்யாதி. 72.

73\. பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவி மலரென்றும் காண்டோறும்—பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
யெல்லாம் பிரானுருவே யென்று.

பதவுரை :—பூவையும்—பூவைப்பூவையும், காயாவும்—காயாம் பூவையும், நீலமும் — கருநெய்தல் புஷ்பத்தையும், பூக்கின்ற— அப்பொழுதே அலர்கின்ற, காவி மலர்—செங்கழுநீர்ப்பூவையும், என்றும் —எப்போதும், காண்தோறும்—பார்க்கும்போதெல்லாம், அவ்வவை யெல்லாம்—அந்தந்த புஷ்பங்களெல்லாம், பிரான் உருவே என்று— எம்பிரானுடைய திருமேனியே என்றுநினைத்து, பாவியேன்—(அவனை நேரே அநுபவிக்கப்பெறாத) பாபத்தையுடைய என்னுடைய, மேல் ஆவி—மிருதுவான மனஸ்ஸூம், மெய்—சரீரமும், மிகவே பூரிக்கும்— மிகவும் பூரித்துப்போகாநிற்கும்.

அவ:—எழுபத்துமூன்றும் பாட்டில்; (பூவை) "இவனே ஆய்ரயணீயன்" என்றறுதியிட்டால்பின்னை அநுபவமிறேயுள்ளது.

வ்யா:—(பூவையித்யாதி) பூவை, காயா, நீலம், பூவாநின்ற காவிமலர் இவை கண்டபோதெல்லாம், பிரானுருவேயென்றறிவுடைய நெஞ்சு பூரிக்கையன்றிக்கே உடப்புமகப்படப் பூரியா நின்றது. 73.

அரு:—எழுபத்துமூன்றும்பாட்டு. "காவி" செங்கழுநீர் - "ஆவி" நெஞ்சு - "மெய்" உடப்பு. 73.

74. என்று மொருநா ளொழியாமை யானிரந்தால்
ஒன்று மிரங்கா ருருக்காட்டார்—குன்று
குடையாக வாகாத்த கோவலனார் நெஞ்சே
புடைதான் பெரிதே புவி.

பதவுரை :—ஒரு நாள் ஒழியாமை—ஒருநாளும் தப்பாமல், என்றும்—எல்லாக்காலத்திலும், யான் இரந்தால்—நான் யாசித்தாலும், குன்றம் குடையாக—கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்து, ஆ காத்த—பசுக்களை ரக்ஷித்த, கோவலனார்—கோபாலன், ஒன்றும் இரங்கார்—கொஞ்சமும் கருணைகாட்டுகிறாரல்லர்; உரு காட்டார்— தன் திருமேனியையும் காண்பிக்கிறாரல்லர்; நெஞ்சே—மனமே!, புவிதான்—இவ்வுலகம்தான், புடைபெரிதே—(அவருடைய கருணை எதிப்பாயாதபடி) மிகவும் மேடாய் இருக்கிறது.

அவ :—எழுபத்துநாலாம் பாட்டில்; (என்றும்) சரீரபரிக்ரஹம் பண்ணி ருசிபிறந்த பின்பு அபேக்ஷித்தது காலமெல்லாமிரந்தாராய்த் தோற்றுகிறபடி.

வ்யா:—(என்று மிதயாதி) காலமெல்லாம் நானிரந்து போர "இருந்தவிடத்திலே யிருந்தாலும் இவன் கார்மை இரவாநின்ருன்" என்று இரங்குவதும் செய்கிறிலர்; தம் வடிவைக் காட்டுவதும் செய்கிறிலர். (குன்றமித்யாதி) இரங்கியுநக் காட்டாதவர் காட்டிற்றிலராகில் தரிக்கலாமிறே; உபகாரமறியாத பசுக்களுக்குமுதவுமவரிவர் நமக்குதவாதொழிகிருர். (நெஞ்சேபுடைதான் பெரிதேபுவி) அவர்க்கு நீர்மையில்லை யென்னப்போகாதிறே, அவர்நீர்மை யேறிப்பாயாததோரிடந்தேடி எங்கே கிடந்தோம். 74.

அரு:—எழுபத்துநாலாம் பாட்டு. "புவிபுடைதான் பெரிது" § புடையென்று குழையாய் அவன் கடாக்ஷகுழையிலே கிடந்தோமென்றபடி. 74.

75. புவியு மிருவிசும்பும் நின்னகத்த நீயென்
செவியின் வழிபுகுந் தென்னுள்ளாய்—அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை யென்பதனை யாரறிவார்
ஊன்பருகு நேமியா யுள்ளு.

பதவுரை:—ஊன் பருகு நேமியாய்—எதிரிகளின் ரத்தத்தைக் குடிக்கிற சக்ராயுதத்தையுடையவனே!, புவியும்—(ப்ராக்ருதமான) இந்த உலகமும், இரு விசும்பும்—மிகப்பரந்ததான அந்த அப்ராக்ருத தேசமும், நின் அகத்த—உன் ஸங்கல்பத்திலே கிடக்கின்றன; நீ—(இப்படிப்பட்ட) நீ, என் செவியின் வழி புகுந்து—என்னுடைய காது வழியாகப் புகுந்து, அவிவு இன்றி—இடையருது, என் உள்ளாய்—என்னுள்ளேயிருந்து ஸத்தை பெறுகிருய்; யான் பெரியன்—(நம் இருவரில்) நான் பெரியவனு? நீ பெரியை—நீ பெரியவனு? என்பதனை—என்கிற விஷயத்தை, யார் அறிவார்—யாரறிய முடியும்? உள்ளு—(நீயே) நினைத்துப்பார்.

அவ:—எழுபத்தைந்தாம் பாட்டில்; (புவியும்) "உமக்கென்றும் உதவிலோமாக நீர் சொல்லுவானென்? உருக்காட்டிற்றில்லையே, என்று வெறுக்கும்படி உம்மைப் பண்ணினோமே" என்ன; அத்தை ப்ரஸங்கித்து "என்னோடொப்பாருண்டோ?" என்கிருர்.

வ்யா:—(புவியுமிரு விசும்பும் நின்னகத்த) உபய விபூதியும் நின் ஸங்கல்பத்திலே கிடக்கின்றன. (நீ இத்யாதி) உபய விபூதி யுக்தனை

§ இந்த அரும்பதம் அநந்விதம்.

நீ என்னுடைய ச்ரோத்ரேந்த்ரியத்தின் வழியே புகுந்து விச்சேதமின்றிக்கே என் ஹ்ருதயத்திலே உளையாகாநின்றாய். (யானித்யாதி) உபயவிபூதியையுடைய நீயோ? விபூதிமானையுடைய நானோ? பெரியாரானென்றறிவாரார்? (ஊனித்யாதி) அப்ரதிஹதசக்தியான நீ அறிவுதியாகிற் சொல்லு. 75.

அரு:— எழுபத்தைந்தாம் பாட்டு. "ஊன்பருகுநேமி" சத்ருசரீரங்களைப்பருகுகிற திருவாழி. 75.

76. உள்ளிலு முள்ளம் தடிக்கும் வினைப்படலம்
விள்ள விழித்துன்னை மெய்யுற்றால்—உள்ள
உலகளவு யானு முளனாவ னென்கொலோ
உலகளந்த மூர்த்தி யுரை.

பதவுரை:—உலகு அளந்த மூர்த்தி—உலகையெல்லாம் அளந்தருளிய எம்பிரானே!, உள்ளிலும்—உன்னை நினைத்தாலும், உள்ளம் தடிக்கும்—என் மனம் பெரிதாகின்றது; வினை படலம்—பாபங்களின் கூட்டம், விள்ள—(என்னைவிட்டு) நீங்குப்படி, விழித்து—(நீ) கடாக்ஷித்து, உன்னை மெய்யுற்றால்—உன்னை (நான்) ஸாக்ஷாத்கரித்தால், யானும்—நானும், உள்ள உலகளவும் உளனாவன்—எங்குமுள்ள உலகங்களெல்லாவற்றிலும் வ்யாபித்து விடுவேன் போல இருக்கிறது; என் கோலோ—இது எப்படி? உரை—(நீயே) சொல்லுவாயாக.

அவ:—எழுபத்தாறும் பாட்டில்; (உள்ளிலும்) ஸ்ரவணஜ்ஞாநாநந்தரபாவியான மநநத்தைச் சொல்லுகிறது.

வ்யா:—(உள்ளிலு முள்ளந்தடிக்கும்) உன்னை பநுஸந்திக்கில் ஸ்த்தூலமான தேஹம்போலே அமூர்த்தமான ஹ்ருதயம் தடியாநின்றது. (வினையித்யாதி) பாபஸமூஹம் விண்டுபோம்படி நீபார்த்து. உன்னை ஸாக்ஷாத்கரித்தென்றுமார். (உள்ள உலகித்யாதி) வ்யாபகதத்வமிரண்டாகிறதுபோலே. (உலகளந்த மூர்த்தியுரை) சிறிய வடிவைக்கொண்டு லோகத்தையெல்லாம் வ்யாபித்திருக்கிற நீயே சொல்லு. 76.

அரு:—எழுபத்தாறும்பாட்டு. "மெய்யுற்றால்" ஸாக்ஷாத்கரித்தால். இங்கே மாநஸஸாக்ஷாத்காரமாதல், அங்கே பாஹ்யஸாக்ஷாத்காரமாதல், ஜ்ஞாநவ்யாப்திஇவரது. இந்தவாஸ்சர்யத்தைநீசொல்லென்றபடி.

77. உரைக்கிலோர் சுற்றத்தா ருற்றாரேன் றாரே
இரைக்குங் கடற்கிடந்த வெந்தாய்—உரைப்பெல்லாம்
நின்னன்றி மற்றிலேன் கண்டாய் எனதுயிர்க்கோர்
சொல்நன்றி யாகும் துணை.

பதவுரை :—உரைக்கில் — சொல்லப்புக்கால், ஓர் சுற்றத்தார்—தாயாதிகள், உற்றார்—மற்ற உறவினர்கள். என்று—என்று சொல்லப்பட்ட பந்துக்கள், ஆரே—உன்னையொழிய வேறு யார் (எனக்கு) உளர்; இரைக்குப்—சப்திக்கிற, கடல் கிடந்த—திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளுகிற, எந்தாய்—என் ஸ்வாமி! எனது உயிர்க்கு—என்னுடைய ஆத்மாவுக்கு, நன்று ஆகும்—நன்மையைக் கொடுக்கும், ஓர் சொல்—ஒப்பற்ற சொல்லாகவும், துணை—துணையாகவும், உரைப்பு எல்லாம்—சொல்லப்படுவது எல்லாம், நின் அன்றி—உன்னைத்தவிர, மற்று இலேன் கண்டாய்—வேறொன்று இல்லாதவனாய் இருக்கிறேன் காண்.

அவ:— எழுபத்தேழாம் பாட்டில்; (உரைக்கில்) அறியாதே "நன்று" என்று ப்ரமித்து வேறே சிலருற்றாரென்றிருக்குமத்தனை யிறே; விமர்த்த ஸஹமான பந்துக்கள் வேறுண்டோவென்கிறது.

வ்யா :—(உரைக்கிலித்யாதி) "ஆரே" என்று கேட்டால் "வேறு சிலரில்லை நானேயுள்ளேன்" என்று அவன் தனக்குச் சொல்ல வேணும்போலே. (இரைக்குமித்யாதி) நித்யஸூரிகள் ஸதாநுபவம் பண்ணுநிற்கச்செய்தே திருப்பாற்கடலிலே அவஸரப்ரதீக்ஷனாய் வந்து கிடக்கிறவனே! (உரைப்பித்யாதி) ஸர்த்தசையில் (21) "மா ஶுச:" (மா ஶுச:) என்று நற்சொல்லு சொல்லுமத்தனை. உரைக்கப் படுவதெல்லாம் உன்னையொழிய வேறொருவரில்லை. 77.

அரு :—எழுபத்தேழாம் பாட்டு. (விமர்த்தஸஹர்) பாதகஸஹர். உன்னையொழிய இல்லையென்றபடி. சுற்றத்தார் ஆரென்று "உரைக்கில் நானுளன்" என்று உன்னை யொழியச்சொல்லுவார் "ஆரென்றபடி. உரைப்பெல்லாம்" துணையாக உரைக்கப்படுவதெல்லாவற்றிலும், உன்னையொழியத்துணையில்லையென்றபடி. 77.

78. துணைநாள் பெருங்கிளையும் தொல்குலமும் சுற்றத்
திணைநாளு மின்புடைத்தா மேலும்—கணைநாணில்
ஓவாத் தொழில்சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே
ஓவாத வூணாக வுண்.

பதவுரை:—துணை நாளும்—(நண்பர்களின்) துணையும் ஆயுஸ் ஸும், பெரும் கிளையும்—பெரிய ஸந்ததியும், தொல் குலமும்—பழைமையான குலத்தில் பிறப்பும், சுற்றத்து இணை—பந்துக்களுடைய சேர்க்கையுமாகிய இவை, நாளும்—எப்பொழுதும், இன்பு உடைத்தாமேலும்—இனியவையாயிருந்ததாகிலும், கணை நாணில் ஓவா தொழில்—(ஆச்ரிதரின் ரக்ஷணத்தின் பொருட்டு) எப்பொழுதும் நாணில் கோர்க்கப்பட்டுள்ள பாணங்களையுடைய, சார்ங்கன்—சார்ங்கமென்னும் வில்லையாள்பவனுடைய, தொல் சீரை—அநாதியான கல்யாண குணங்களை, நல் நெஞ்சே—என் அநுகூலமான மநஸ்ஸே!, ஓவாது—தடையொன்றுமற்று, ஊணாக—போக்ய புதார்த்தமாகக் கொண்டு, உண்—அநுபவிப்பாயாக.

அவ:—எழுபத்தெட்டாம் பாட்டில்; (துணை) கீழ் "உற்றாரில்லை" என்றது; உற்றாருண்டாகிலும்ஸம்ஸார மினிதாகிலும் உன்னநுபவத்தையொழியப் புறம்புண்டோ? என்கிறார்.

வ்யா:—(துணைநாளித்யாதி) துணை, ஆயுஸ்ஸு, பெருங்கிளை, ஆபிஜாத்யம், பந்துக்களோட்டைச் சேர்த்தி, இவை நித்யமுமாய் இனிதாயிற்றேயாகிலும். (கணையித்யாதி) என்றுமாச்ரிதர் கார்யம் மாறாதே செய்துபோருமவருடைய கல்யாண குணங்களை. (நல் நெஞ்சே) ஸோபாதிகபந்துக்களுக்கும் நிருபாதிகபந்துக்களுக்கும் வாசியறியும் நெஞ்சே! "எம்பெருமானைப்பற்று" என்று சொல்லப் பாங்கான நெஞ்சென்னவுமாம். (ஓவாதவூணாகவுண்) விச்சேதமில்லாத போக்யமாக புஜி. 78.

அரு:—எழுபத்தெட்டாம் பாட்டு. "கிளை"-பந்துக்கள். "கணை நாணில்" அம்பானது நாணிலே இடைவிடாதே வ்யாபரிக்கிற வில்லையுடையவன்.

79. உண்ணாட்டுத் தேசன்றே யூழ்வினையை யஞ்சுமே
விண்ணாட்டை யொன்றாக மேச்சுமே—மண்ணாட்டில்
ஆராகி யெவ்விழிவிற் றானாலும், ஆழியங்கைப்
† பேராயற் காளாம் பிறப்பு.

பதவுரை:—மண்ணாட்டில்—இப்புவியில், ஆராகி—மிகக்கீழான சாதியராயினும், எவ்விழிவிற்றானாலும்—மிகக் கீழ்மையான இழி

† 'பேராயர்க்கு' என்னும் பாடம் வ்யாக்யானத்திற்குச் சேரும்.

தொழிலையுடையவராயினும், ஆழி அம் கை பேர் ஆயற்கு—திருவாழியை அழகிய திருக்கையில் ஏந்திய ஸர்வேச்வரனை க்ருஷ்ணனுக்கு, ஆள் ஆம் பிறப்பு—அடிமை செய்யத் தகுதியான ஜந்மம், உள் நாட்டு தேசு அன்றே—(பகவானுக்கு) அந்தரங்கதேசமான பரமபதத்திலிருக்கும் ஒளிபோல் பரிசுத்தமானதன்றோ? ஊழ் வினையை—அநாதியான பாபத்தை நினைத்து, அஞ்சுமே—அஞ்சுமோ? விண் நாட்டை—ஸ்வர்க்கத்தை, ஒன்றுக மெச்சுமே—ஒரு பொருளாக எண்ணுமோ?

வ்யா:—எழுபத்தொன்பதாம் பாட்டில்; (உள்நாடு) (ஆழியங்கை யித்யாதி) ஸர்வேச்வரனை வைத்து இதர ஸஜாதீயனைப் பிறந்தவனுக்குக் கைங்கர்யப் பண்ணுகைக்கு யோக்யமான ஜந்மம், பரமபதத்திலிருக்கும் தேஜஸ்ஸை யுடைத்தன்றே என்றபடி. உள்நாடென்று பரமபதமாகக் கொள்ளுகிறது - பகவதபிப்ராயத்தாலே. பேராயரென்று - அல்லாத இடையர் நித்யஸூரிகளென்னும்படி இவனுடைய இடைத்தனத்தில் முதிர்ச்சிசொல்லுகிறது. (ஊழ்வினையித்யாதி) தான் பண்ணின பாபத்துக்கு அஞ்சுமே? (விண்ணாட்டையித்யாதி) ப்ரஹ்மாதிகள் குடியிருப்பை ஒன்றாக வெண்ணுமே? (48) "सुरपुरी यद्गच्छतो दुर्गतिः" (ஸுரபுரீ யத்கச்சதோ துர்க்கதி:) ஸ்வர்க்கத்துக்குப் போம் வழி தண்ணிதென்கிறது. (49) "न देवलोकाक्रमणं" (ந தேவலோகாக்ரமணம்) பறைச்சேறியிலடியிடுமாபோலே ஸ்வர்க்கத்திலடியிடுகை வேண்டேனென்கிறார். (50) "तस्यान्तरायो मैत्रेय! देवेन्द्रत्वादिकं फलं" (தஸ்யாந்தராயோ மைத்ரேய தேவேந்த்ரத்வாதிகம் பலம்) பகவத்விஷயத்திலே கை வைத்தவனுக்கு அந்தராயமாவது இந்த்ரனாயிருக்குமிருப்பிறே. உள்நாடென்று ஸம்ஸாரமாகக்கொண்ட பக்ஷத்தில், விண்ணாடென்று பரமபதமாகக்கடவது. (மண்ணாட்டி லித்யாதி) ஸம்ஸாரந்தானே தண்ணிது, அதிலே நிஹீந ஜந்மமாகவுமமையும்; எல்லா இழிவையுமுடைத்தாகவுமமையும்; பகவதநுபவ யோக்யமான ஜந்மமே வேண்டுவது. இதுக்குப் புறம்பான ஜந்ம வ்ருத்தங்கள் அப்ரயோஜகங்கள். 79.

அரு:—எழுபத்தொன்பதாம் பாட்டு. "தேசன்றே"-தேசன்றோ? என்றபடி. "உள்நாடு" - பரமபதமாதல், ஸம்ஸாரமாதல். தாமிங்கேயிருக்க அத்தை உள்நாடென்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (உள்நாடென்று) இத்யாதி. "அஞ்சுமே" - அஞ்சானென்றபடி.

"ஆராகி" - எந்த ஜந்மமாகிலுமாம். "எவ்விழிவில்" - எந்த வ்யாபார மாகிலுமாம். [மண்ணாடுதொடங்கி ஒன்றாக வெண்ணுமே] என்ற க்ரியை. 79.

80. பிறப்பிறப்பு மூப்புப் பிணிதுறந்து பின்னும்
இறக்கவு மின்புடைத்தர் மேலும்—மறப்பெல்லாம்
ஏதமே யென்றல்லா லெண்ணுவனே மண்ணளந்தான்
பாதமே யேத்தாப் பகல்.

பதவுரை :—பிறப்பு இறப்பு மூப்பு பிணி துறந்து—பிறப்பது, இறப்பது, கிழத்தனம், வ்யாதி இவைகளைக் கழித்து, பின்னும்—அதற்கு மேல், இறக்கவும் இன்பு உடைத்தாமேலும்—(பகவானை என்றும் பிரிந்திருக்கையாலே) ஆத்மவிநாசதுல்யமான கைவல்யமோக்ஷஸுகம் உண்டாயிற்றாகிலும், மண் அளந்தான்—பூமியை அளந்த ஸர்வேச்வரனுடைய, பாதம்—திருவடிகளை, ஏத்தா—துதி செய்யாத, பகல்—காலத்தில் ஏற்படும், மறப்பு எல்லாம்—(விஸ்ம்ருதியெல்லாம், ஏதமே என்றல்லால் எண்ணுவனே—துக்கரூபமே என்றல்லது வேறொருபடியாக நினைப்பேனோ?

வ்யா:—எண்பதாம் பாட்டில்; (பிறப்பித்யாதி) ஸம்ஸார ஸம்பந்தமற்று அளவிறந்த ஆத்மாநுபவமுண்டாயிற்றாகிலும், (மண்ணளந்தான் பாதமே யேத்தாப்பகல் மறப்பெல்லா மேதமேயென்றல்லா லெண்ணுவனே) திருவுலகளந்தருளின நீர்மையையுடையவன் திருவடிகளை யேத்தாத பகலில் மறப்பெல்லாம் து:க்கமே என்றல்லது மநோரதிப்பனோ? 80.

அரு:—எண்பதாம் பாட்டு. "பின்னுமிறக்கவும்" இறக்கை - அளவிறக்கையாய், மிகவுமென்றபடி. 80.

81. பகலிரா வென்பதுவும் பாவியாதுஎம்மை
இகல்செய் திருபொழுது மாள்வர்—தகவாத்
தொழும்பரிவர் சீர்க்குந் துணையிலரேன் றோரார்
செழும்பரவை மேயார் தெரிந்து.

பதவுரை :—செழும் பரவை மேயார்—அழகிய திருப்பாற்கடலிலே கண்துயில்பவர், 'இவர்—இவ்வாழ்வார், தகவா தொழும்பர்—(நம் கருணைக்குத்) தகுதியற்ற தாழ்மையையுடையவர், சீர்க்கும்—மேலான நம் குணங்களை அநுஸந்திப்பதற்குப், துணை இலர்

—ஸஹாயமற்றவர்', என்று தேரிந்து—என்று விசாரித்து, ஓரார்—ஆராயாதவராய், பகல் இரா என்பதுவும்—பகற்காலமென்பதையும் இராக்காலமென்பதையும் (குணாநுபவத்திற்கு யோக்யதையையும் அயோக்யதையையும்), பாவியாது—விசாரியாமல், எம்மை—அடியேனை, இகல் செய்து—யுத்தம் பண்ணி (ஆட்கொண்டு), இருபொழுதும்—இரண்டுகாலங்களிலும் ஆள்வார்—(தம் குணங்களில்) ஈடுபடுத்துவர்.

வ்யா:—எண்பத்தோராம் பாட்டில்; (பகலித்யாதி) பகற்போது போக்குவதொன்று இராவைகும்போது போக்குவதொன்று என்று பாராதே எல்லாப்போதும் பொருபோகியாகத் தம்முடைய குணங்களாலே ஏப்பும் சாய்ப்புமாக யுத்தம்பண்ணி இரண்டு போதுமாள்வர். அம்புபட்ட புண்ணுக்கு மருந்துண்டு; குணத்தாலே யீடுபட்ட புண்ணுக்கு மருந்தில்லையிறே. (தகவித்யாதி) தம்முடைய க்ருபைக்கும் விஷயமான சிறிதென்றும் தம்முடைய குணங்களைக்கொண்டு (51) "बोधयन्तः परस्परं" (போதயந்த: பரஸ்பரம்) பண்ணுகைக்குக் கூட்டு மில்லையென்றும் விசாரியார். (தெரிந்தித்யாதி) ஆச்ரிதரோடு ஸம்ச்லேஷிக்கும் தேசமாராய்ந்து திருப்பாற்கடலிலே மேவினவர். 81.

அ:—எண்பத்தோராம் பாட்டு. போதுபோக்குவர் போது போக்கமாட்டாரென்று விசாரியாதே என்றபடி. "இகல்": யுத்தம். குணமீடுபடுத்துமோவென்ன அருளிச்செய்கிறார் (அம்புபட்டபுண்) இத்யாதி. [தெரிந்து செழும்பரவைமேயார் - தகவாத்தொழும் பரிவர் சேர்க்கும் துணையிலரென்றோரார் பகலிராவென்பதுவும் பாவியாதெம்மை இகல்செய் திருபொழுதுமாள்வர்] என்றந்வயம். 81.

82. தெரிந்துணர்வொன்றின்மையால் தீவினையேன் வாளா
இருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம்—கரந்துருவின்
அம்மானை யஞ்ஞான்று பின்றொடர்ந்த ஆழியங்கை
அம்மானை யேத்தா தயர்த்து.

பதவுரை:—தெரிந்து உணர்வு—பகவத்விஷயத்தை ஆராயும் ஜ்ஞானம், ஒன்று இன்மையால்—சிறிதும் இல்லாமையால், தீவினையேன்—கொடியபாபத்தையுடைய நான், அஞ்ஞான்று—அக்காலத்தில், கரந்த உருவின்—மறைத்துள்ள (ராக்ஷஸ)வேஷத்தையுடைய, அம் மானை—அந்த மாயமானை, பின் தொடர்ந்த—பின்பற்றியவராய், ஆழி அம் கை அம்மானை—அறுகாழியை அழகிய கையிலேயுடைய பெருமானை,

ஏத்தாது—துதிசெய்யாமல், அயர்த்து—அறிவு கெட்டு, கீழ்நாள்களெல்லாம்—கீழ்க்கழிந்த நாள்களெல்லாம், வாளா இருந்தொழிந்தேன்—பாழாகக் கழித்துவிட்டேன்.

வ்யா :—எண்பத்திரண்டாம் பாட்டில்; (தெரிந்துணர்வு) "அது பத்து இதுஎட்டு" என்னும் ஜ்ஞாநமித்தனையல்லது பகவத்விஷயத்தைப்பாராயும் ஜ்ஞாநமொன்றில்லாமையால். (52) "तत् ज्ञानमज्ञानमतोन्यदुक्त" (தத்ஜ்ஞாநமஜ்ஞாநமதோந்யதுக்தம்) (53) "विद्यान्या शिल्पनैपुणं" (வித்யாந்யா சில்பநைபுணம்) என்னும் ஜ்ஞாநமுண்டாகையால். (தீவினையேன்) பகவதநுபவ யோக்யமான காலத்தைப் பாழே போக்கின பாபத்தைப்பண்ணினேன். (வாளாவித்யாதி) குனியக்குறிணி பற்றுங்காலமெல்லாம் வ்யர்த்தமேயிருந்தேன். (கரந்துருவித்யாதி) கைகேயிவரத்திலகப்படாவிட்டது பெருமாள் திருக்கையில்துகாழியொன்றுமேயாகாதே. வடிவைக்கரந்து வர்த்திக்கிற அம்மாயமானை அன்று தொடர்ந்த, துகாழியைக் கையிலேயுடைய ஸர்வேச்வரனை இளையபெருமாளும் முதலாகத்தசையிலே ஏத்தப்பெறுவது; அறிவுகெட்டுக்கிடந்த நான் பாழே போக்கினேன். "பெருமாள் மாயமானையெய்து மீண்டெழுந்தருளுகிறபோது அடிக்கொதித்து நடக்கமாட்டாமை தளிர்களை முறித்திட்டு அதின்மேலே எழுந்தருளினார்" என்று ஒருவன் கவிபாடவும் எம்பெருமானார் கேட்டருளி, "மாறியிடுகிற திருவடிகளிலே என் தலையை வைக்கப்பெற்றிலேன்" என்றருளிச்செய்தார். 82.

அரு :—எண்பத்திரண்டாம் பாட்டு. (குனியக்குறுணி) அவதரித்து அல்பாநுகூல்யத்திலே விஷயீகரிக்குங்காலம் போயிற்றென்று தாத்பர்யம். ஏத்தாக்-அடிமையாய், இப்படியடிமைசெய்யப் பெற்றிலேனென்றிழவுபட்டபேருண்டோவென்ன அருளிச்செய்கிறார் (பெருமாள்) இத்யாதி. 82.

83. அயர்ப்பா யயராப்பாய் நெஞ்சமே சொன்னேன்
உயப்போம் நெறியிதுவே கண்டாய்—செயற்பால
வல்லவே செய்கிறுதி நெஞ்சமே யஞ்சினேன்
மல்லர்நாள் வவ்வினனை வாழ்த்து.

பதவுரை :—நெஞ்சமே—மனமே!, செயற்பால அல்ல—செய்யத்தகாதவற்றை, செய்கிறுதி—செய்கிறாய்; அஞ்சினேன்—(நான்) பயப்

படுகிறேன் ; மல்லர் நாள்—மல்லர்களுடைய ஆயுளை, வவ்வினனை—போக்கினவனை, வாழ்த்து—வாழ்த்துவாயாக ; உய்ட்போம் நெறி—உஜ்ஜீவிக்கும் வழி, இதுவே கண்டாய்—இதுவன்றோ ? நெஞ்சமே—என் மனஸ்ஸே !, அயர்ப்பாய்—(அவனை) மறந்து கெடுதியைத் தேடிலும் தேடு, அயராப்பாய்—மறவாமல் உஜ்ஜீவித்தாலும் உஜ்ஜீவி ; சொன்னேன்—(உனக்கு நன்மையையே) சொன்னேன்.

வ்யா :—எண்பத்துமூன்றும் பாட்டில்; (அயர்ப்பாயயராப்பாய்) அவனைமறந்து அநர்த்தப்படிலும்படு; நினைத்து வாழிலும் வாழ். (நெஞ்சமேசொன்னேன்) ஒருத்தன் கிணற்றிலே விழாநின்றால் கரையிலே நின்று அவனுக்குக் கூப்பிடவேணுமிறே. அவ்வோபாதி சொன்னேன். (உயப்போம் நெறியிதுவேகண்டாய்) அல்லாதவெல்லாம் விநாசத்துக்குக்கண்ட வழி; உஜ்ஜீவிக்கக் கண்டவழியிதுவே. (செயற்பாலவல்லவே செய்கிறதி) நான்தப்பச் செய்கிறதுண்டோவென்னில், செய்யப்படாதவை செய்யாநின்றாய். செய்யப்படாதவையாவது - அயோக்யனென்றகலுகை ; தேவதாந்தர பஜநங்கள். (நெஞ்சமேயஞ்சினேன்) "புகழ்வோம் பழிப்போம்" என்கிறவித்தையஞ்சினேன். (மல்லரித்யாதி) நம்முடைய விரோதிகள் செய்வதென்னென்னில், மல்லரிற்காட்டில் மிடுக்குண்டோ? அவற்றுக்கு மல்லருடைய ஆயுஸ்ஸை க்ரஸித்தவனை வாழ்த்து. 83.

அரு :—எண்பத்துமூன்றும் பாட்டு. "அஞ்சினேன்", புகழ்வோமோ பழித்தோமாவுதோமென்று அயோக்யதாநுஸந்தாநம் பண்ணினவித்தை அஞ்சினேனென்கையாலே, அயோக்யதாநுஸந்தாநம்பண்ணி அகலவேண்டா ; பயப்படாமல் வாழ்த்தென்றபடி. 83.

84. வாழ்த்தி யவனடியைப் பூப்புனைந்து நின்றலையை
தாழ்த்திருகை கூப்பென்றால் கூப்பாத—பாழ்த்தவிதி
எங்குற்று யென்றவனை யேத்தாதேன் னெஞ்சமே
தங்கத்தா னுமேலும் தங்கு.

பதவுரை :—அவன் அடியை—அந்த ஸர்வேச்வரனுடைய திருவடிகளை, வாழ்த்தி—மங்களாசாஸநம் செய்து, பூ புனைந்து—புஷ்பங்களை சாத்தி, நின் தலையை தாழ்த்து—உன் தலையை (அவன் திருவடிகளிலே) தாழ்த்து, இரு கை கூப்பு என்றல்—இருகைகளையும் கூப்பு என்றால், கூப்பாத என் நெஞ்சமே—கூப்பாத என் மனஸ்ஸே !,

அவனை—அந்த ஸர்வேச்வரனை, எங்குற்றாய் என்று—'எங்கு சென்றாய்' என்று, ஏத்தாது—(அன்புடன்) ஸ்தோத்ரம் பண்ணாமல், தங்கத்தானே மேலும் — தரிக்கக்கூடுமாகில், தங்கு — தரித்திரு. பாழ்த்த விதி — என்னே பாபத்தின் கனம்!

வ்யா :—எண்பத்துநாலாம் பாட்டில்; (வாழ்த்தியித்யாதி - எங்குற்றாயென்றவனை எத்தாதென்நெஞ்சமே தங்கத்தானேமேலும் தங்கு பாழ்த்தவிதி) பகவத்விஷயத்திலொன்றுஞ்செய்யாத நெஞ்சே! அவனை வாழ்த்தி அவன் திருவடிகளிலே பூக்களைப்புனைந்து உன் தலையை யவன் திருவடிகளிலே தாழ்த்து, இரண்டு திருக்கையையுங் கூப்பென்றால் கூப்பாதே, * "எங்குச் சென்றாகிலும்கண்டு" என்னும் படி ஆதரத்தோடே அவனை ஏத்தாத நெஞ்சமே! அவனைப்பற்றாதே கால்பாவலாமாகில் தங்கு. பாழ்த்தவிதியென்று-தம்முடைய அகலுகையைச் சொல்லி வெறுக்கவுமாம். ப்ராப்திப்ரதிபந்தகமான கர்ம வைகல்யத்தைச் சொல்லவுமாம். 84.

அரு :—எண்பத்துநாலாம் பாட்டு. [நெஞ்சமே அவனடியிலே பூப்புனைந்து வாழ்த்தி நின்தலையைத் தாழ்த்து இருகைகூப்பென்றால் கூப்பாதே எங்குற்றாயென்றவனை யேத்தாதே தங்கத்தானேமேலும் தங்கு] என்றந்வயம். 84.

85. தங்கா முயற்றியவாய்த் தாழ்விசும்பின் மீதுபாய்ந்து
எங்கேபுக் கெத்தவம்செய் திட்டனகோல்—பொங்கோதத்
தண்ணம்பால் வேலைவாய்க் கண்வளரும், என்னுடைய
கண்ணன்பால் நன்னிறங்கோள் கார்.

பதவுரை :—பொங்கு ஓதம்—கிளர்ந்த அலைகளையுடைய, தண் அம் பால்—குளிர்ந்து அழகியதான திருப்பாற்கடலில், கண்வளரும்—கண் வளர்ந்தருளுகிறவனாய், என்னுடைய—எனக்கு ஸ்வாமியான, கண்ணன்பால்—கண்ணனிடத்திலுண்டான, நல் நிறம் கோள்—அழகிய நிறத்தைக்கைக்கொண்ட, கார்—மேகங்கள், தங்கா முயற்றியவாய்—(அந்நிறத்தைப் பெறுகைக்கு) விடாத முயற்சியையுடையனவாய்க் கொண்டு, தாழ் விசும்பின்மீது—பரந்த ஆகாசத்திலே, பாய்ந்து—உலாவி, எங்கே புக்கு—எங்கேபோய், எத்தவம் செய்திட்டன கோல்—எப்படிப்பட்ட தபஸ்ஸை அநுஷ்டித்தனவோ?

---

* திருவாய்மொழி (6-8-5).

அவ:—எண்பத்தைந்தாம் பாட்டில்; (தங்காமுயற்றியவாய்) பகவத்விஷயத்திலே எடுப்புஞ்சாய்ப்புமாய் இன்னாதாகா, லோகயாத்ரையை யநுஸந்தித்து அங்குமதுவேயாயிருக்கிறபடியைச் சொல்லுகிறது.

வ்யா:—(தங்காமுயற்றியவாய்) உத்யோகித்த உத்யோகம் மாறாதே ஆகாசாவகாசமெல்லா முலாவி எங்கேபுக்கு என்னதபஸ்ஸு பண்ணிற்றினவோ? (பொங்கியபாற்) கிளர்ந்ததிரையையுடைத்தாய்க் குளிர்ந்திருந்த திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற என் கண்ணனுடைய விலக்ஷண நிறத்தைக்கொள்ளுகிற மேகங்கள் எவ்விடத்தே புக்கு என்ன தபஸ்ஸு பண்ணிற்றினவோ? 85.

அரு:—எண்பத்தைந்தாம் பாட்டு. (இன்னாதாகா) இன்னாதாகா நிற்கச்செய்தே. (லோகயாத்ரை) மேகத்திலே கண்வைக்கை. "தாழ் விசும்பு" - எங்குமொக்க ஒத்து ஏகரூபமாயிருக்கை. 85.

86. கார்கலந்த மேனியான் கைகலந்த வாழியான்
பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான்—சீர்கலந்த
சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையி னாழ்துயரை
என்நினைந்து போக்குவ ரிப்போது.

பதவுரை:—கார் கலந்த மேனியான்—மேகத்தோடொத்த திருமேனியையுடையவனும், கை கலந்த ஆழியான்—திருக்கையிலே பொருந்தின திருவாழியையுடையவனும், பார் கலந்த—(ப்ரளயகாலத்தில்) பூமி பொருந்தி இருக்கும்படியான, வல் வயிற்றான்—வலிமை பொருந்திய திருவுதரத்தையுடையவனும், பாம்பு அணையான்—திருவநந்தாழ்வானைப் படுக்கையாயுடையவனுமான எம்பெருமானின், சீர் கலந்த—மேலான குணங்களுடன் சேர்ந்திருக்கிற, சொல் நினைந்து—திருநாமங்களை அநுஸந்தித்து, சூழ் வினையின்—(நம்மை) சூழ்த்துக்கொண்டிருக்கிற பாபத்தினாலுண்டான, ஆழ் துயரை—மிகுந்த துக்கத்தை, போக்காரேல்—போக்கிக்கொள்ளார்களேயாகில், இப்போது—இந்தக் காலத்தைத்தான், என் நினைந்து—(வேறு) எதை அநுஸந்தித்து, போக்குவர்—போக்கிக்கொள்ளுவார்கள்.

வ்யா:—எண்பத்தாறும் பாட்டில்; (கார்கலந்தமேனியான்) ஸர்வதா ஸத்ருசமான மேகத்தோடொத்த திருமேனியையுடையவன்: (கைகலந்தவாழியான்) திருக்கையிலே வேர்விழுந்த திருவாழியை

யுடையவன். (பார்கலந்த வல்வயிற்றான்) ப்ரளயங்தேடிவந்தாலும் தோற்றுதபடி கலந்தபூமியையுடையவனுமாய்; வயிற்றில் புக்கவற்றுக்கு ரக்ஷகமான வயிற்றையுடையவன். (பாம்பணையான் சீர்கலந்த வித்யாதி) வடிவழகுக்கும் குணங்களுக்கும் வாசகமாய்ப் பசுங்கூட்டான சொற்களை நினைத்து அநுபவவிராச்யமான பாபபலமான து:க்கத்தைப்போக்காராகில். (என்னினைந்து போக்குவரிப்போது) பாபம் போக்கவேண்டாவாகில் காலத்தைச் செல்லவிடும்படி யெங்ஙனே. 86.

அரு:—எண்பத்தாறும் பாட்டு. "இப்போது" இப்போதை - இக்காலத்தை என்றபடி. 86.

87. இப்போது மின்னு மினிச் சிறிது நின்றாலும்
எப்போது மீதேசோல் லென்னெஞ்சே—எப்போதும்
கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவான்
மொய்கழலே யேத்த முயல்.

பதவுரை:—என் நெஞ்சே—எனக்கு அநுகூலமான மனமே!, நம்மேல் வினை கடிவான்—நம் பக்கலுள்ள பாபத்தைப் போக்குகைக்காக, எப்போதும்—எல்லாக் காலங்களிலும், கை கழலா நேமியான்—திருக்கையைவிட்டு அகலாத திருவாழியையுடைய எம்பெருமானின், மொய் கழலே—அழகிய திருவடிகளையே, ஏத்த முயல்—ஸ்தோத்திரம் செய்ய முயலுவாயாக; இப்போதும்—இக்காலத்திலும், இனி—இதுக்குமேல், இன்னும் சிறிது நின்றாலும்—மேலும் சிறிது காலம் சென்றதாகிலும், எப்போதும்—எல்லாக்காலத்திலும், ஈதே சோல்—இத்திருநாமங்களையே சொல்லிப்போருவாயாக.

அவ:—எண்பத்தேழாம் பாட்டில்; (இப்போதும்) "லோகத்தாரைக்கொண்டு கார்யமில்லையிறே, நீ முன்னமெப்போதுமித்தையே சொல்" என்று நெஞ்சுக்குபதேசிக்கிறார்.

வ்யா:—(இப்போது மித்யாதி) இக்காலத்திலும் வருங்காலத்திலும் மற்றுமெல்லாக்காலத்திலும் இதுதனையே சொல்லு. (நல்நெஞ்சே) நான்புக்கவிடத்தே புகக்கடவநெஞ்சே! (எப்போது மித்யாதி) எல்லாக்காலத்திலும் கையைவிட்டகலாத திருவாழியையுடையவன் நம்பக்கல் பாபத்தைப்போக்குவான். (மொய்கழலே யேத்தமுயல்) போக்யமான திருவடிகளை ஏத்தஉத்ஸாஹி. பற்றினாரை விட்டுக்கொடாத திருவடிகளை என்றுமாம். (ஈதேசொல்லு). 87.

அரு:—எண்பத்தேழாம் பாட்டு. "மொய்கழல்" அழகாதல், மிடுக்காதல். 87.

பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்த
பெரிய திருவந்தாதி வ்யாக்யாநம் முற்றிற்று
ஆழ்வார் திருவடிகளே சரணம்.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.
அப்பிள்ளை திருவடிகளே சரணம்.

திருவாசிரியம் பெரியதிருவந்தாதி வ்யாக்யானங்களின் அநுக்ரமணிகை.

அ
அக்ரதஸ்தேகமி 8
அந்தர்யாம்யம்ரு 28
அஸங்நேவஸ 16
அஹம்ஸர்வம்கரி 6
ஆ
ஆத்மாநம்நாதி 31
ஆதித்யவர்ணம் *5
ஆநந்தமய: *11
ஆயுராஸ்தே *14
ஆர்த்தோவாயதி 22
ஆஶயாயதிவா *18
ஈர்ஷ்யாரோஷௌ 23
ருணம்ப்ரவ்ருத்த 40
ஏ
ஏகஸ்மிந்நபி *17
ஏகோஹவை *15
ஏஷபந்தாவிதர் 18
க
கதம்ஙவயம் *22
கதாபுந: *7
கர்மண்யேவாதி 14
கலௌபுந:பாப *1
க்லேஶாதிக *12
காமாத்க்ரோதோ 39
ग
கதிமிச்சேத் *19
காத்ரை:ஶோகா 24
குணநாமாகர: 42
குரோர்நாம 2
கோஸத்ருஶோ 10
ஜ
ஜந்மகர்மச 26
த
தஜ்ஜலாநிதி 36
தத்ஜ்ஞாந 52
தஸ்யதீரா: 27
தஸ்யாந்தரா 50
द
திவிஸூர்ய *2
தீப்தமக்நி 5
த்ருவாஸ்ம்ருதி: *9
ந
நதேவலோகா 49
நஸமம்யுத் 35
நிதித்யாஸி *20
நிரயோயஸ் 34
நூபுராத்யபரி *3
ப
பத: ஸ்கலிதம் 20
பதிம் விச்வ 43
பராவரேஶம் 37
பாவநார்த்தம் *16
ப்ரத்யக்ஷே 1
ப்ராகேவது 4
ப்ரியோஹி 30
ब
பஹூஸ்யாம் *6
போதயந்த: பர 3
ப்ரஹ்மவிஷ்ணுரு 46
ப்ரஹ்மாணம் *23
மத்யாஜீமாம் 15
மத்யேவிரிஞ்ச 47
மந ஏவ 33
மந: பூர்வோ 12
மஹ்யம்நமோ 11
மாஶுச: 21
யதாகப்யாஸம் 13
யதோவாசோ 9
யஸ்யமந்த்ரீச 32
யஸ்யாமதம் 29
யஶோதாஸ்தந *21
ருத்ரம்ஸமா 44&*4
வித்யாங்யா 53
விவ்ருணுதே 19
ஶரீரமேவ 17
स
ஸங்காத்ஸஞ்ஜா *8
ஸத்வாத்ஸஞ்ஜா 38
ஸர்வம்கல்விதம் 36
ஸாராஸாரவிவே *13
ஸூரபுரீயத் 48
ஸூஸூகம் *10
ஸ்ருஷ்டஸ்த்வம் 7
ஸ்ருஷ்டிஸ்தித் 45
ஸ்கந்தருத்ர *24
ஸ்மரந்ராகவ 41

* இக்குறியிட்டவைகளை திருவாசிரிய வ்யாக்யானத்தில் பார்க்கவும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் க்ருஷ்ணஸூரயே நம:

திருவாசிரிய வ்யாக்யாந ப்ரமாணத் திரட்டு.

1. கலௌ புந: பாபரதாபி பூதே................

பக்தாத்மநா........ ஸ உத்பபூவ

[பாபத்திலேயே ஈடுபட்ட மனிதர்கள் நிறைந்த கலிகாலத்தில் அந்த பகவான் பக்தரூபியாகத் தோன்றினார்.]

2. திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய பவேத் யுகபதுத்திதா ।

யதி பா: ஸத்ருஶீ ஸா ஸ்யாத் பாஸஸ் தஸ்ய மஹாத்மந: ॥

[ஆயிரம் ஸூர்யர்களுடைய ஒளியானது ஒரேகாலத்தில் ஆகாயத்தில் தோன்றிற்றாகில் அந்தப் புருஷனுடைய ஒளிக்கு அது ஸமானமாகலாம்.]

3. நூபுராத்யபரிமித திவ்யபூஷண

[நூபுரம் முதலிய கணக்கற்ற திவ்யாபரணங்களை உடையவனே.]

4. ருத்ரம் ஸமாச்ரிதா தேவா ருத்ரோ ப்ரஹ்மாணமாச்ரித: ।

ப்ரஹ்மா மாமாஶ்ரிதோ ராஜந் நாஹம் கஞ்சிதுபாஶ்ரித: ॥

[தேவர்கள் ருத்ரனை அண்டியிருக்கின்றனர்; ருத்ரன் (தன் தகப்பனை)பிரமனை ஆச்ரயித்திருக்கிறான்; பிரமனோவெனில்(அவனையும் பிறப்பித்த) என்னை அடைந்திருக்கிறான். அரசனே! நான் ஒருவனையும் பற்றியிருக்கவில்லை.]

5. வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்

ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் ।

தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி

நாந்ய: பந்தா வித்யதேऽயநாய ॥

---

1. 2. கீதை (11-12). 3. கத்யத்ரயம். 4. பார-ஆச் (118-37).
5. புருஷ ஸூக்தம்.

[(வேதபுருஷனாகிய) நான் (ஸ்வரூபரூபகுணவிபூதிகளில்) பெரியவனும், ஸூர்யன் போல் ஒளிவிடுபவனும், ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டவனுமான இந்தப் புருஷனை அறிகிறேன். அவனை இம்மாதிரி அறிபவன் இப்பிறப்பிலேயே முக்தனாக ஆகிறான்; மோக்ஷத்திற்கு வேறு வழி கிடையாது.]

6. ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி தத் தேஜோऽஸ்ருஜத

[அந்தப் பரப்ரஹ்மம் '(நானே) பலவாக ஆகக்கடவேன்' என்று ஸங்கல்பித்தது; அது தேஜஸ்ஸை ஸ்ருஷ்டி செய்தது.]

7. கதா புந: ஶங்கரதாங்ககல்பகத்வஜாரவிந்தாங்குஶவஜ்ரலாஞ்சநம் ।
த்ரிவிக்ரம! த்வச்சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி ॥

[திரிவிக்கிரமனே! சங்கு, சக்கரம், கல்பகவ்ருக்ஷம், கொடி, தாமரை அங்குசம், வஜ்ராயுதம் இவைகளை அடையாளமாகவுடைய உன் திருவடித்தாமரையிணை என் தலையை எப்போதுதான் அலங்கரிக்கப்போகிறது?]

8. த்யாயதோ விஷயாந் பும்ஸஸ் ஸங்கஸ் தேஷூபஜாயதே ।
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோதோऽபிஜாயதே ॥

[விஷயங்களை இடைவிடாமல் எண்ணும் மனிதனுக்கு அவற்றில் அதிகமான சேர்க்கை (ஸங்கம்) உண்டாகிறது. அந்த ஸங்கத்தினால் காமம் உண்டாகிறது. காமத்தினால் கோபம் ஏற்படுகிறது.]

9. ஆஹாரஶுத்தௌ ஸத்வஶுத்தி: । ஸத்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி: ॥

[உண்ணும் உணவு சுத்தமாயிருந்தால் மனம் சுத்தியடைகிறது. மனம் பரிசுத்தமடைந்த வளவில் 'நிலைநின்ற நினைவு' எனப்படும் பக்தி உண்டாகிறது.]

10. ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ரமிதமுத்தமம் ।
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்த்துமவ்யயம் ॥

[வித்யைகளுக்குள்ளும், ரஹஸ்யங்களுக்குள்ளும் மேலானது இது; பாபங்களைப்போக்கடிப்பவற்றில் உயர்ந்தது; என்னை நேரில் காட்டுவது; இனிதானது; (பலத்தைக் கொடுத்தபின்பும்) அழியாதது.]

---

6. சாந்--உப (6-2-3). 7. ஸ்தோ-ர (31). 8. கீதை (2--62).
9. சாந்-உப (7-26--2). 10. கீதை (9--2).

11. தஸ்மாத் வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத் அந்யோऽந்தர
ஆத்மா ஆநந்தமய:

[அப்படிப்பட்ட இந்த விஜ்ஞானமயனான ஜீவனைக்காட்டிலும், வேறுப்பட்டவனும், (அந்த ஜீவனுக்கு) அந்தராத்மாவாயிருப்பவனும் ஆநந்த மயனான பரமாத்மா.]

12. க்லேசோऽதிகதரஸ் தேஷாமவ்யக்தாஸக்தசேதஸாம் ।
அவ்யக்தா ஹி கதிர் து:க்கம் தேஹவத்பிரவாப்யதே ॥

[அவ்யக்தமெனப்படும் ஆத்மஸ்வரூபத்திலே ஈடுபட்ட மனத்தை யுடையவர்களுக்கு (அதை அடையும் விஷயத்தில்) மிகவும் துக்கமுள்ளது. தேஹாத்மாபிமானிகளுக்கு, ஆத்ம ஸ்வரூபத்தை அடைவது மிகவும் கடினமன்றோ.]

13. ஸாராஸாரவிவேகஜ்ஞா கரீயாம்ஸோ விமத்ஸரா: ।
ப்ரமாணதந்த்ரா: ஸந்தீதி க்ருதோ வேதார்த்தஸங்க்ரஹ: ॥

[ஸாரம், அஸாரம் ஆகிய இவற்றை விவேகித்து அறிபவர்களும் (மிகுந்த கேள்விஞானத்தால்) பெருமை பெற்றிருப்பவர்களும், பிறரிடம் மாத்ஸர்யமற்றவர்களும், ப்ரமாணங்களுக்குக் கட்டுப்பட்டவர்களுமான மஹான்கள் (இக்காலத்திலும்) உளர் என்னும் நிச்சயத்தாலேயே என்னால் வேதார்த்தஸங்க்ரஹம் செய்யப்பட்டது.]

14. ஆயுராசாஸ்தே

[நீண்ட ஆயுளைப் பிரார்த்திக்கிறான்.]

15. ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் । ந ப்ரஹ்மா நேசாந: ।

[நாராயணன் ஒருவனே பிரளயகாலத்திலிருந்தான்; பிரமனுமில்லை; சிவனுமில்லை.]

16. த்ரவீபூதஸ் ததா தர்மோ ஹரிபக்த்யா மஹாமுநே ।
க்ருஹீத்வா தர்மபாநீயம் பதம் நாதஸ்ய துஷ்டயே ॥
க்ஷாளிதம் பரயா பக்த்யா பாத்யார்க்யாதிபிரர்ச்சிதம் ।
ததம்பு பதிதம் த்ருஷ்ட்வா ததார சிரஸா ஹர: ॥
பாவநார்த்தம் ஜடாமத்யே யோக்யோஸ்மீத்யவதாரணாத் ।
வர்ஷாயுதாந்யத பஹூநி ந முமோச ததா ஹர: ॥

---

10. கீதை (9-2). 11. தை-ஆந (5). 12. கீதை (12-5). 13. வேதார்த்தஸங்க்ரஹம் (நிகமநச்லோகம்). 14. யஜு-அஷ்ட (3-5). 15. மஹோபநிஷத் (1). 16. ஈச்வரஸம்ஹிதை.

[மாமுனிவரே! (பகவான் திருவுலகளந்தருளின) அச்சமயம், ஹரியினிடம் பக்தியினால் தர்மம் ஜலமாயிற்று. தர்மமாகிய அந்த ஜலத்தை எடுத்து, ஜகந்நாதனுடைய ஸந்தோஷத்திற்காக (அவனுடைய) திருவடியானது (என்னால்) மேலான பக்தியுடன் விளக்கப்பட்டது; பாத்யம் அர்க்யம் முதலியவைகளாலும் பூஜிக்கப்பட்டது; விழுந்த அந்த ஜலத்தைப் பார்த்து 'நான் (பரிசுத்தப்படுத்தத்) தகுந்தவனாயிருக்கிறேன்' என்று நிச்சயித்து, சிவன் தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்காக ஜடையின் நடுவில் தலையால் தாங்கினான். பிறகு, பல பதினாயிரக்கணக்கான வருஷங்கள், ருத்திரன் அப்படியே (அதை) விடவில்லை.]

17. ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே।
தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும் ப்ருஶம்॥

[பகவானுடைய தியானமில்லாமல் ஒரு முகூர்த்தகாலம் சென்றதாகிலும், இருடர்களால் திருடப்பட்டவன் போல் உரக்கக் கதறுவதே தகுந்தது.]

18. குஹேந ஸார்த்தம் தத்ரைவ ஸ்திதோऽஸ்மி திவஸாந் பஹூந்
ஆஶயா யதி வா ராம: புந: ஶப்தாபயேதிதி॥

['ராமபிரான் மறுபடியும் கூப்பிடுவரோ' என்னும் ஆசையாலே குஹனுடன் கூட அங்கேயே பல தினங்கள் தங்கினேன்.]

19. ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத் தநமிச்சேத் ஹுதாஶநாத்।
ஈச்வராத் ஜ்ஞாநமந்விச்சேத் கதிமிச்சேத் ஜநார்தநாத்॥

[ஆரோக்யத்தை ஸூர்யனிடமிருந்துவிரும்பக்கடவன்; பணத்தை அக்னியிடமிருந்து விரும்பக்கடவன்; ஈச்வரனிடமிருந்து ஞானத்தை விரும்பக்கடவன்; மோக்ஷத்தை ஜநார்த்தனனிடமிருந்து விரும்பக் கடவன்.]

20. ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ
மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:

[கேட்கத்தக்கதும், நினைக்கத்தக்கதுமான ஆத்மா தியானிக்கத் தக்கது; பார்க்கத்தகுந்தது.]

21. யஶோதாஸ்தநந்தயமத்யந்தம் விமுக்தம்

---

17. 18. ரா-அ (59-3). 19. ப்ரஹ்மாண்டம். 20. ப்ருஹ (6-5-6).
21.

[மிகவும் அழகியதான யசோதையின் கைக்குழந்தை]

22. கதம் ந்வயம் ஶிஶு: ஶேதே லோகே நாஶமுபாகதே ।
ஶாகாயாம் வடவ்ருக்ஷஸ்ய பல்லவே து ஶுசிஸ்மித: ॥

[உலகமெல்லாம் நாசமடைந்தபிறகும், ஆலமரக்கிளையிலுள்ள இளந்தளிரில், இனிய புன்முறுவலுடன் கூடிய இக்குழந்தை எப்படிப் படுத்துக்கொண்டிருக்கிறது?]

23. ப்ரஹ்மாணம் நீல (ஶிதி) கண்டம் ச யாஶ்சாந்யா தேவதா: ஸ்ம்ருதா: ।
ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம் ॥

[பிரமனையும், ருத்திரனையும், மற்றும் தேவதைகளாகச் சொல்லப் படும் யாவரையும் ஞானிகள் ஸேவிக்கமாட்டார்கள்; ஏனெனில், அவர்கள் அளிக்கும் பலன் அளவுள்ளது.]

24. ஸ்கந்தருத்ரமஹேந்த்ராத்யா: ப்ரதிஷித்தாஸ்து பூஜநே ।
ஜ்ஞாத்வைவம் பக்திஸாங்கர்யம் ந குர்யாதேவமேவ ஹி ॥

[ஸ்கந்தன், ருத்ரன், இந்திரன் முதலான தேவதைகள் பூஜை செய்யும் விஷயத்தில் (ஞானிகளால்) விலக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி அறிந்து, இம்மாதிரியாகவே பக்திக் கலப்பைச் செய்யாமலிருக்கக் கடவன்.]

-:திருவாசிரிய வ்யாக்யான ப்ரமாணத் திரட்டு முற்றிற்று:-

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத்க்ருஷ்ணஸூரயே நம:

பெரிய திருவந்தாதி வ்யாக்யான ப்ரமாணத் திரட்டு.

1. ப்ரத்யக்ஷே குரவ: ஸ்துத்யா:

[ஆசாரியர்கள் நேரிலேயே துதிக்கத்தகுந்தவர்கள்.]

2. குருபாதாம்புஜம் த்யாயேத் குரோர் நாம ஸதா ஜபேத் ।
குருஸேவாம் ஸதா குர்யாத் ஸோऽம்ருதத்வாய கல்பதே ॥

---

22. பார-ஆர (188-94). 23. பார-சாந்தி (350-36). 24.
1. 2. ப்ரபஞ்சஸாரம்.

[ஆசாரியனின் திருவடித்தாமரையை எப்போதும் தியானிக்க வேண்டும்; ஆசாரியனின் திருநாமத்தை எப்போதும் ஜபிக்கவேண்டும்; குருகைங்கர்யத்தையே எப்போதும் செய்யவேண்டும். இப்படிச் செய்பவன் மோக்ஷத்திற்குத் தகுந்தவனாகிறான்.]

3. மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த: பரஸ்பரம் ।
கதயந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச ॥

[என்னிடம் நிலைத்த மனத்தையுடையவர்களாய் என்னிடமே தங்கள் உயிரை வைத்தவர்களாய், (என்னுடைய குணங்களை) ஒருவருக்கொருவர் அறிவிப்பவர்களாய், என்னை எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பவர்களாய், ஸந்தோஷிக்கிறார்கள்; ஆநந்திக்கிறார்கள்.]

4. ப்ராகேவ து மஹாபாக: ஸௌமித்ரிர் மித்ரநந்தந: ।
பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமசீரைரலங்க்ருத: ॥

[மஹாபாக்யவானும், அநுகூலர்களை உகப்பிப்பவனும், ஸுமித்ரா புத்ரனுமான லக்ஷ்மணன், தமயனுக்குப் பின்செல்லுகைக்காக முன்னமேயே மரவுரிகளால் அலங்கரித்துக்கொண்டான்.]

5. தீப்தமக்நிமரண்யம் வா யதி ராம: ப்ரவேக்ஷ்யதி ।
ப்ரவிஷ்டம் தத்ர மாம் தேவி த்வம் பூர்வமவதாரய ॥

[அம்மா! கொழுந்து விட்டெரியும் அக்னியிலுள்ளாவது, காட்டிலுள்ளாவது ஸ்ரீராமபிரான் நுழைவாராகில், நான் முன்னமேயே அதனுள் நுழைந்திருப்பேன் என்று நீ அறிவாயாக.]

6. பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே ।
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே ॥

[நீர் வைதேஹியுடன் கூட மலைத்தாழ்வரைகளில் விளையாடுவீர். அடியேன் நீர் விழித்துக்கொண்டிருக்கும்போதும் தூங்கும் போதும் எல்லா அடிமைகளையும் செய்வேன்.]

7. ஸ்ருஷ்டஸ் த்வம் வநவாஸாய ஸ்வநுரக்தஸ் ஸுஹ்ருஜ்ஜநே ।
ராமே ப்ரமாதம் மா கார்ஷீ: புத்ர ப்ராதரி கச்சதி ॥

[லக்ஷ்மணா! நீ வனவாஸத்திற்கென்றே ஸ்ருஷ்டிக்கப்பட்டவன். உன்னிடம் அன்புபூண்டவனான ராமனிடம் நீ மிகவும் ப்ரியம் வைத்

---

3. கீதை (10-9). 4. ரா-ஸு (33-28). 5. ரா-அ (21-17). 6. ரா-அ (31-25). 7. ரா-அ (40-5).

திருக்கிறாய். பிள்ளாய்! உன் அண்ணன் ராமன் நடந்து செல்லும் போது (அந்நடையழகிலீடுபட்டு, அவனுக்குத் தீங்குசெய்வோரை கவனியாமலிருக்கையாகிற) தவறைச் செய்து விடாதே.]

8. யதி த்வம் ப்ரஸ்திதோ துர்க்கம் வநமத்யைவ ராகவ ।
அக்ரதஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நதீ குஶகண்டகாந் ॥

[ராகவரே! நீர் செல்லவரிதான வனத்திற்கு இன்றே புறப்பட்டீரானாலும், தர்ப்பைகளையும், முட்களையும் மிதித்து அழித்துக் கொண்டு நானும் உமக்கு முன்னால் செல்வேன்.]

9. யதோ வாசோ நிவர்த்தந்தே । அப்ராப்ய மநஸா ஸஹ ।
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் । ந பிபேதி குதஶ்சநேதி ॥

[எந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து, மனத்துடன் கூடிய வாக்குகள் (அதை) அளவிட்டறியாமல் திரும்புகின்றனவோ, அந்தப் பரமாத்மாவின் ஆநந்தத்தை அறிந்தவன் எதனிடமும் பயப்படமாட்டான்.]

10. கோஸத்ருஶோ கவய: கவயஸத்ருஶோ கௌ:

['கவயம்' என்னும் மிருகம் மாட்டைப் போலுள்ளது; மாடு 'கவயம்' என்னும் மிருகத்தைப்போலுள்ளது.]

11. தத்வேந யஸ்ய மஹிமார்ணவஶீகராணு:
ஶக்யோ ந மாதுமபி ஶர்வபிதாமஹாத்யை: ।
கர்த்தும் ததீயமஹிமஸ்துதிமுத்யதாய
மஹ்யம் நமோऽஸ்து கவயே நிரபத்ரபாய ॥

[எந்த எம்பிரானுடைய மஹிமைக் கடலில் ஒரு திவலையில் அணுவளவுங்கூட, சிவன் பிரமன் முதலியவர்களாலும் உள்ளபடி அளவிட முடியாததோ, அப்பெருமானுடைய பெருமையைப் பற்றிய துதியைச் செய்ய ஆரம்பித்திருப்பவனும், வெட்கமற்றவனும், கவியென்ற பெயர் கொண்டவனுமான எனக்கே நமஸ்காரம் செய்து கொள்ள வேண்டும்.]

12. மந: பூர்வோ வாகுத்தர:

[முதலில் மனஸ்ஸும் அடுத்தபடியாக வாக்கும் ப்ரவர்த்திக்கின்றன.]

---

8. ரா-அ (27-6). 9. தை-ஆந (9-1). 11. ஸ்தோ-ர (7). 12. தைத்-ஸம் (7—5—3).

13. தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ

[(ஸூர்யமண்டலத்தின் நடுவிலுள்ள) அப்புருஷனுக்கு ஸூர்யனால் மலர்ந்த தாமரைபோன்ற இரு கண்கள் உள.]

14. கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந

[முமுக்ஷுவான உனக்கு நித்ய நைமித்திகாதி கர்மங்களைச் செய்வதற்கே அதிகாரம். ஒருபோதும் கர்மபலத்தில் அதிகாரமில்லை.]

15. மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு।
மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோऽஸி மே॥

[என்னிடத்தில் மனத்தை வைத்தவனாகவும், என்னுடைய பக்தனாகவும் என்னை ஆராதிப்பவனாகவும் ஆவாயாக; என்னை நமஸ்கரிப்பாயாக; என்னையே அடைவாய்; இது ஸத்யம்; உனக்கு ப்ரதிஜ்ஞை செய்கிறேன். எனக்குப் பிரியனன்றோ நீ.]

16. அஸந்நேவ ஸ பவதி। அஸத் ப்ரஹ்மேதி வேத சேத்।
அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத। ஸந்தமேநம் ததோ விது:॥

[ப்ரஹ்மம் இல்லையென்று அறிந்தானாகில் அவன் இல்லாதவனாகவே ஆகிறான். ப்ரஹ்மம் இருக்கிறதென்று அறிந்தானாகில் அக்காரணத்தாலேயே இவனை இருக்கிறவனாக (நல்லோனாக) அறிகிறார்கள்.]

17. ஶரீரமேவ மாதாபிதரௌ ஜநயத:। ஸ ஹி வித்யாதஸ் தம் ஜநயதி। தச்ச்ரேஷ்டம் ஜந்ம

[தாய்தந்தையர்கள் சரீரத்தையே உண்டு பண்ணுகிறார்கள். ஆசாரியனோ வித்யையினால் அவனுடைய ஆத்மாவை உண்டு பண்ணுகிறான். ஆத்மாவுக்குப் பிறப்பாகிய அதுவே மேலான பிறப்பு.]

18. ஏஷ பந்தா விதர்ப்பாநாம் ஏஷ யாதி ஹி கோஸலாந்

[இது விதர்ப்பதேசத்திற்குச் செல்லும் வழி; இதுகோஸலதேசத்திற்குச் செல்லும் வழி.]

19. நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ
ந மேதயா ந பஹுநா ச்ருதேந।

---

13. சாந் (1—6—7). 14. கீதை (2—47). 15. கீதை (18—65). 16. தைத்-ஆந (6). 17. ஆப-ஸூ (1—1—6). 19. கட (1-2-23).

யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ॥

[இந்தப் பரமாத்மா (பக்தியற்ற) ச்ரவணத்தினாலும், மனனத்தினாலும், தியானத்தினாலும் அடையத்தக்கவனல்லன். எவனை இப்பரம புருஷன்வரிக்கிறானோ அவனாலேயே அடையத்தக்கவன். அவனுக்கு இப்பரமாத்மா தன் திருமேனியைக் காட்டுகிறான்.]

20. அவிவேககநாந்ததிங்முகே
பஹுதா ஸந்ததது:க்கவர்ஷிணி ।
பகவந் பவதுர்த்திநே பத:
ஸ்கலிதம் மாமவலோகயாச்யுத ॥

[ஜ்ஞாநசக்த்யாதி குணங்கள் நிறைந்தவனே! அடியவரைக் கைவிடாதவனே! விவேகமின்மையாகிற மேகங்களாலே இருளடைந்த திசைகளையுடையதும், பலவிதமாக இடைவிடாமல் துன்பங்களைப் பொழிகின்றதுமான ஸம்ஸாரமாகிய மழைகால இருளிலே நல்வழியிலிருந்து தவறிய அடியேனைக் கடாக்ஷித்தருள்வாயாக.]

21. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ॥

[(மோக்ஷஸாதனமான) எல்லா தர்மங்களையும் வாஸனையுடன் விட்டு என்னை ஒருவனையே உபாயமாக அடை: நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன். துக்கிக்காதே.]

22. ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: பரேஷாம் ஶரணாகத: ।
அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா ॥

[எதிரிகளுள், சரணமடைந்த சத்துருவானவன், (வருத்தத்தாலே சரணமடைந்த) ஆர்த்தனாயினும், (அரைமனதாகச் சரணமடைந்த) த்ருப்தனாயினும், பண்பட்ட மனத்தையுடைய புருஷனாலே, தன் ப்ராணனை விட்டு ரக்ஷிக்கத்தக்கவன்.]

23. ஈர்ஷ்யா ரோஷௌ பஹிஷ்க்ருத்ய புக்தஶேஷமிவோதகம் ।
நய மாம் வீர விஸ்ரப்த: பாபம் மயி ந வித்யதே ॥

---

20. ஸ்தோ-ர (49). 21. கீதை (18-66). 22. ரா-யு (18-28).
23. ரா-அ (27-8).

[வீரனே! அஸூயை, கோபம் இவ்விரண்டையும், குடித்து மிகுந்த ஜலத்தைப் போல் தள்ளிவிட்டு, (என் வார்த்தையை) நம்பி என்னை அழைத்துச்செல்வீராக. (உம்மைப் பிரிந்திருக்கைக்குக் காரணமான) பாபம் எனக்கு இல்லை.]

24. யதா தம் புருஷவ்யாக்ரம் காத்ரை: ஶோகாபிகர்ஶிதை: ।
ஸம்ஸ்ப்ருஶேயம் ஸாகமாஹம் ததா குரு தயாம் மயி ॥

[(ராமபிரானிடம்) பேரன்பு மிகுந்த யான், புருஷச்ரேஷ்டரான அவரை துக்கத்தால் இளைத்த இந்தஎன் அவயவங்களாலேயே தொடத் தக்கவளாகும்படி என்னிடத்தில் நீ கருணைபுரிவாயாக.]

25. மஹதா தபஸா ராம மஹதா சாபி கர்மணா ।
ராஜ்ஞா தஶரதேநாஸி லப்தோऽம்ருதமிவாமரை: ॥

[ராமபிரானே! தேவர்கள் அம்ருதத்தைப்பெற்றது போல் பெருந் தவத்தாலும், பெருங்காரியங்களாலும் தசரதமஹாராஜனால் நீர் அடையப்பெற்றிருக்கிறீர்.]

26. ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத: ।
த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந ॥

[அர்ஜுநா! என்னுடைய அப்ராக்ருதமான பிறப்பையும், சேஷ்டிதங்களையும் எவன் இப்படி உண்மையாக அறிகிறானோ, அவன் தேஹத்தை விட்டு மறு ஜன்மம் அடையான்; என்னை அடைகிறான்.]

27. அஜாயமாநோ பஹுதா விஜாயதே
தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்

[பிறப்பற்றவனாயிருந்தும் பலபடியாகப்பிறக்கிறான் (பரமபுருஷன்). அவனுடைய அவதாரரஹஸ்யத்தை புத்திமான்களே நன்கு அறிகிறார்கள்.]

28. ஏஷ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத:

[ஸர்வாந்தர்யாமியான இப்பரமபுருஷனே (இயற்கையான) அம்ருதத்வத்தையுடையவனாய், உனக்கு ஆத்மாவாய் விளங்குபவன்.]

---

24. ரா-ஸு (40-3) 25. ரா-ஆர(66-3). 26. கீதை (4-9). 27. புருஷ ஸூக்தம். 28. ப்ருஹ (5-7).

29. யஸ்யாமதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத ஸ:।
அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதமவிஜாநதாம்॥

[எவனுக்கு ப்ரஹ்மம் (அளவிட்டு) அறியப்படவில்லையோ, அவனுக்கு (அது) அறியப்பட்டதாகிறது. எவனுக்கு (ப்ரஹ்மம்) அறியப்பட்டதாகிறதோ அவன் (அதை) அறியவில்லை. (அளவிட்டு) அறிந்தவர்களுக்கு அறியப் படாததாகவும், (அளவிட்டு) அறியாதவர்களுக்கு அறியப்பட்டதாகவுமாகிறது (பரப்ரஹ்மம்).]

30. தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த: ஏகபக்திர் விஶிஷ்யதே।
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:॥

[(என்னுடன்) எப்போதும் சேர்ந்திருப்பவனும், என்னிடம் மட்டும் அன்பு செய்பவனுமான ஞானி அந்த நால்வருள் மேலானவன். நான் ஞானிக்கு மிகவும் பிரியனன்றோ. (அப்படியே) அவனும் எனக்குப் பிரியமானவன்.]

31. பரதஸ்ய வச: குர்வந் யாசமாநஸ்ய ராகவ।
ஆத்மாநம் நாதிவர்த்தேதா: ஸத்யதர்மபராக்ரம॥

[ராகவனே! ஸத்யமான தர்மத்தையும் பராக்ரமத்தையும் உடையவனே! யாசிக்கும் பரதனுடைய வார்த்தைப் படி செய்வதன் மூலம் உன்னுடைய ஸ்வரூபமான ஆச்ரிதபாரதந்த்ர்யத்தை மீறுமலிருப்பாயாக.]

32. யஸ்ய மந்த்ரீ ச கோப்தா ச ஸுஹ்ருச்சைவ ஜநார்தந:।
ஹரிஸ்த்ரைலோக்யநாதஸ்ஸ கிந்நு தஸ்ய ந நிர்ஜிதம்॥

[மூவுலகங்களுக்கும் நாதனாய், ஜநார்த்தனன் என்றும், ஹரி என்றும் சொல்லப்படுமவனான அந்த பகவான், எந்த தர்மபுத்ரனுக்கு மந்திரியாகவும், ரக்ஷகனாயும், ஸ்நேஹிதனாயும் இருக்கிறானோ,- அந்த தர்மபுத்ரனால் ஜயிக்கப்படாதது யாது?]

33. மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:।
பந்தாய விஷயாஸங்கி முக்த்யை நிர்விஷயம் மந:॥

[மனிதர்களுக்குஸம்ஸாரத்திற்கும் மோக்ஷத்திற்கும் மனதுதான் காரணம். சப்தாதிவிஷயங்களில் ஈடுபட்ட மனம் ஸம்ஸாரஹேதுவாகிறது- விஷயங்களில் பற்றற்ற மனம் முக்திஹேதுவாகிறது.]

---

29. கேந (2-3). 30. கீதை (7-17). 31. ரா- அ (111-7). 32. பார-ஆ (49-20) ஸஞ்ஜயவசநம். 33. வி-பு (6-7-28).

34. யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ்த்வயா விநா।
இதி ஜாநந் பராம் ப்ரீதிம் கச்ச ராம மயா ஸஹ॥

[ராமபிரானே! உம்முடனிருப்பதுவே எனக்கு ஸ்வர்க்கம்; உம்மைவிட்டுப்பிரிந்திருப்பதுவே எனக்கு நரகம். (என்னுடைய) மேலான அன்பை இம்மாதிரி அறிந்து என்னுடன் கூட (வனத்திற்குச்) செல்வீராக.]

35. பூமௌ ஸ்திதஸ்ய ராமஸ்ய ரதஸ்தஸ்ய ச ரக்ஷஸ:।
ந ஸமம் யுத்தமித்யாஹுர் தேவகந்தர்வதாநவா:॥

['பூமியிலிருக்கும் ராமனுக்கும், ரதத்திலிருக்கும் ராக்ஷஸனுக்கும் யுத்தம் ஸமமானதல்ல' என்று தேவர்களும், கந்தர்வர்களும், அஸுரர்களும் சொன்னார்கள்.]

36. ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாநிதி ஶாந்த உபாஸீத

['ப்ரஹ்மத்தினிடமிருந்து உண்டானதாலும் ப்ரஹ்மத்தினிடம் லயிப்பதாலும், ப்ரஹ்மத்தால் உயிர்வாழ்கையாலும், இவை எல்லாம் ப்ரஹ்மமேயாகும்' என்று (நினைத்துக்கொண்டு) சாந்தனாக உபாஸிக்கக்கடவன்.]

37. யதாவத் கதிதோ தேவைர் ப்ரஹ்மா ப்ராஹ தத: ஸுராந்।
பராவரேஶம் ஶரணம் வ்ரஜத்வமஸுரார்த்தநம்॥

[தேவர்களால் தங்கள் துன்பங்களை நன்கு அறிவிக்கப்பட்ட பிரமன் "மேலானவர்களோடு, கீழானவர்களோடு வாசியற எல்லாருக்கும் ஈச்வரனாயிருப்பவனும், அஸுரசத்ருவானவனுமான பகவானை சரணமடையுங்கள்" என்று தேவர்களிடம் சொன்னான்.]

38. ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் ரஜஸோ லோப ஏவ ச।
ப்ரமாதமோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞாநமேவ ச॥

[ஸத்வகுணத்திலிருந்து ஞானமுண்டாகிறது. ரஜோகுணத்திலிருந்து (ஸ்வர்க்கம் முதலியபலன்களில்) ஆசைஉண்டாகிறது. தமோகுணத்திலிருந்து கவனமின்மையினாலேற்படும் அஸத்கர்மப்ரவ்ருத்தியும், விபரீத ஜ்ஞாநமும், அஜ்ஞானமும் ஏற்படுகின்றன.]

39. திருவாசிரிய ப்ர-தி (8)

---

34. ரா-அ (30-18). 35. ரா-யு (103-5). 36. சாந்தோக்யம் (3-14-1). 37. வி-பு (1-9-35). 38. கீதை (14-17).

40. கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம் ।
ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந் நாபஸர்ப்பதே ॥

[த்ரௌபதியானவள் வெகு தூரத்திலிருந்த என்னைக் குறித்து 'கோவிந்தா' என்று கூக்குரலிட்டது (வட்டியினால்) வ்ருத்தியடைந்த கடனைப் போல் என் ஹ்ருதயத்திலிருந்து அகலுகிறதில்லை.]

41. ப்ரஹ்மதண்டப்ரகாஶாநாம் வித்யுத்ஸத்ருஶவர்ச்சஸாம் ।
ஸ்மரந் ராகவபாணாநாம் விவ்யதே ராக்ஷஸேஶ்வர: ॥

[ப்ரஹ்மதண்டத்தைப் போன்ற ஒளியுள்ளவையும், மின்னலைப் போன்ற தேஜஸ்ஸைப் பெற்றவையுமான ராமபாணங்களை நினைத்து ராக்ஷஸாதி பதியான ராவணன் மிக வருந்தினான்.]

42. தாதூநாமிவ ஶைலேந்த்ரோ குணாநாமாகரோ மஹாந்

[ஒரு சிறந்த மலை தாதுக்களுக்கெல்லாம் இருப்பிடமாயுள்ளது போல், ஸ்ரீராமபிரானும் குணங்களுக்கெல்லாம் பெரியதோர் இருப்பிடமாவர்.]

43. பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்

[உலகிற்குப்பதியாகவும், தனக்குத்தானே ஈச்வரனாகவும், நித்யனாகவும், மங்களகரனாகவும், அடியவர்களை நழுவவிடாதவனாகவுமிருப்பவன் (நாராயணனே)]

44. திருவாசிரிய ப்ர-தி (4)

45. ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம் ।
ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்தந: ॥

[படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்யும் பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் பெயர்களை ஜநார்த்தனனெனப்படும் அந்த பகவானே அடைகிறான்.]

46. ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ் தே ஸர்வே ஸம்ப்ரஸூயந்தே

[பிரமன், விஷ்ணு, ருத்ரன், இந்திரன் ஆகிய இவர்களெல்லாரும் பிறக்கிறார்கள்.]

47. மத்யே விரிஞ்சகிரிஶம் ப்ரதமாவதார:
தத்ஸாம்யத: ஸ்தகயிதும் தவ சேத் ஸ்வரூபம் ।

---

40. பார- உத் (47-22). 41. ரா-யு (60-3). 42. ரா-கி (15-21) தாரா வாக்யம். 43. தை-நா (11). 45. வி-பு (1-2-66). 46. அதர்வசிகை (2-15). 47. ர-ஸ்த (2-51).

கிம் தே பரத்வபிஶுநைரிஹ ரங்கதாமந்
ஸத்வப்ரவர்த்தநக்ருபாபரிபாலநாத்யை: ||

[ஸ்ரீரங்கநாதரே! பிரமருத்திரர்களின் நடுவில் உமக்கேற்பட்ட முதலவதாரம், அவ்விருவருடன் ஒன்றாயிருப்பதைக்காட்டி உம்முடைய ஸ்வரூபத்தை மறைத்துக் கொள்வதற்காகவாகில், ஸத்வகுணத்தை நிர்வஹிப்பது, க்ருபையாலே (பிரமன் ருத்ரன் முதலியவர்களை) ரக்ஷிப்பது முதலான மேன்மையைகாட்டும் காரியங்களால் உமக்கு என்ன பிரயோஜனம்?]

48. யத்தூரே மநஸோ யதேவ தமஸ: பாரே யதத்யத்புதம்
யத்காலாதபசேளிமம் ஸுரபுரீ யத்கச்சதோ துர்க்கதி: |
ஸாயுஜ்யஸ்ய யதேவ ஸூதிரதவா யத்துர்க்ரஹம் மத்கிராம்
தத் விஷ்ணோ: பரமம் பதம் தவ க்ருதே மாத: ஸமாம்நாஸிஷு: ||

[தாயே! எவருடைய மனத்திற்கும் எட்டாததாய், ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டதாய், மிக அற்புதமாய், காலத்தால் மாறுபடாததாய், தன்னை அடையவிரும்புமவர்களை தேவலோகத்தையும் துர்க்கதியாக நினைக்கச்செய்வதாய், ஸாயுஜ்யத்தை அளிப்பதாய், என்னுடைய வாக்கிற்கு எட்டாததாய், விஷ்ணுவினுடையதான யாதொரு பரமபதம் உள்ளதோ, அது உனக்காகவே விளங்குகிறது என்று (வேதங்கள்) விளம்புகின்றன.]

49. ந தேவலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே |
ஐச்வர்யம் வாऽபி லோகாநாம் காமயே ந த்வயா விநா ||

[நித்யஸூரிகள் வாழும் உலகான ஸ்ரீவைகுண்டத்தில் வாழ்ச்சியையும், கைவல்யத்தையும், உலகங்களிலுள்ள ஐச்வர்யத்தையும் உன்னைப் பிரிந்த நான் விரும்பமாட்டேன்.]

50. வாஸுதேவே மநோ யஸ்ய ஜபஹோமார்ச்சநாதிஷு |
தஸ்யாந்தராயோ மைத்ரேய! தேவேந்த்ரத்வாதிகம் பத(ல)ம் ||

[மைத்ரேயனே! ஜபம், ஹோமம், அர்ச்சனம் முதலியவைகளில் எவனுடைய மனம் வாஸுதேவனிடம் லயித்திருக்கிறதோ, அவனுக்கு தேவேந்திரனாயிருக்கை முதலிய பலங்கள் இடையூறாகவே ஆகின்றன.]

---

48. ஸ்ரீகுணரத்நகோசம் (21). 49. ரா-அ (3-5). 50. வி-பு (2-6-41).

1. 3-வது ப்ரமாணத்தைப் பார்க்கவும்.

2. ஸம்ஜ்ஞாயதே யேந ததஸ்ததோஷம்
ஶுத்தம் பரம் நிர்மலமேகரூபம் ।
ஸந்த்ருஶ்யதே வாப்யதிகம்யதே வா
தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யதுக்தம் ॥

[எந்த அறிவினால், தோஷமற்றதும், சுத்தமானதும், மிகவும் மல மற்றதும், ஒரு படிப்பட்டதுமான அப்பரவஸ்து அறியப்படுகிறதோ, காணப்படுகிறதோ, அடையப்படுகிறதோ, அதுவே ஜ்ஞாநம்; அதைக் காட்டிலும் வேறானது அஜ்ஞாநம்.]

53. தத் கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே ।
ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா ஶில்பநைபுணம் ॥

[எந்தக் கர்மம் பந்தத்திற்குக் காரணமல்லவோ, அதுவே கர்மம்; எது முக்திக்குக் காரணமோ அதுவே வித்யை. மற்ற கர்மம் சிரமத்திற்கே, மற்ற வித்யை சில்பபாண்டித்யம் போன்றதே.]

—:ஆழ்வார் திருவடிகளே சரணம்:—

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

பெரிய திருவந்தாதி வ்யாக்யாந ப்ரமாணத் திரட்டு முற்றிற்று.

---

2. வி-பு (6-5-87). 53. வி-பு (1-19-41).

பிழை திருத்தம்

திருவாசிரிய வ்யாக்யானம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	7	தாழ்வாழ	தாம்வாழ
3	10	யாத்ரையிருக்கிற	யாத்ரையாயிருக்கிற
4	20	மில்லாதொரு	மில்லாதவொரு
6	16	கிறபடியே,	கிறபடியே.
11	12	மங்கித்தாயிற்று.	மங்கிற்றாயிற்று.
12	25	விவேகஜ்ஞ:	விவேகஜ்ஞா
14	22	அஸாதாரண	தன்னளவில் அஸாதாரண
,,	32	அவனுடைய	அவனுடைய சடாக்ஷமாத்ரத்
		[லே கடல் குளிர்ந்தபடி; குமுறுகபடி நடுங்கவென்னுத	
		(படவரவாசு) ஒரு சேதநனைப்பற்றிக்கடையச்செய்தேய	
18	18	உண்டாக்கி	உண்டாக்கி.
,,	23	அவனொருவனுமே	அவனொருவனுமே
22	22	லோகமான	லோகமானது

பெரிய திருவந்தாதி வ்யாக்யானம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
9	11	தாம்.	தாம்
10	32	விழித்தது	விழிந்தது
11	10	இறைவனே	இறையவனே
12	30	மற்தை	மற்றை
13	13	கன்று.	கன்று'
20	8	போருமோமென்ன	போருமோவென்ன
21	4	ஏபாபம்	ஏபாவம்
,,	30	என்றார்	என்கிறார்
22	1	வாழாவகை	வாழாவகை நினைக்கை
,,	7	அஸாதாரணமாய்	அஸாதாரணராய்
25	24	வணைந்து	அணைந்து
27	7	என்றங்வம்	என்றங்வயம்
28	7	மாற்பித்யாதி	மார்பித்யாதி
29	24	வரையில்	வரைவில்
30	19	யதோதை	யசோதை
31	2	பகலெண்ணா	பகலென்றா
,,	24	கண்ணணால்	கண்ணனால்
39	3	மெனக்த்யமாய்	மௌக்த்யமாய்
,,	20	ஆள்	ஆல்
46	25	வானென்ன	வானென்
48	21	திலே	திலே;
60	11	நம்பின்னை	நப்பின்னை
67	12	பணிந்தோம்:	பணிந்திருந்தோம்.
71	19	வரம்	வரப்
72	28	மறுமைக்கு	மறுகைக்கு